# ஊழியம் மற்றும் தலைமைக்கான பயிற்சி

நிலை: BEGINNER

பாடப் புத்தகம் எண்: 1

**நிலைகள்:**



5. ஊழியர்

4. தலைவர்

3. கிறிஸ்தவ தலைவர்

2. சீடர்

1. Beginner

*பக்குவம் அடையும் வரை வளருதல்!*

| |
|---|
| கொள்கை: "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காவும் இருக்கிறது!" (ரோமர் 11:36) |

ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்து, கிறிஸ்துவுக்குள் ஒரு ஊழியக்காரனாக வல்லமை மிக்க, பயன் தரக்கூடிய ஊழியத்தில் வளர்ந்து பெருகுவதற்குரிய வேதாகம பாட திட்டம்.

சுயமாக கற்பதற்கும் பிறருக்கு கற்பிப்பதற்கும் பயன்படும் வகையில் எளிமையாக தயாரிக்கப்பட்டது.

(அறிவில் பெருகுதல்; ஆவிக்குறிய வரங்களை உபகோயகித்தில்)

**ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சிக்கான பாடத்திட்டம்**

**நோக்கம்:**
—மெய்யான ஒரே தேவகை அறிந்து கொள்வதற்கு (வளர்ச்சியடைதல் / முதிர்ச்சியடைதல்

யோசு 1:8, “இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்ட பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய கவனமாய் இருக்கும்படி, இரவும் பகலும் அதை தியானித்துக கொண்டிருப்பாயாக; அப்பொழுது உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்ொழுது புத்திமானாயும் நடந்துக் கொள்ளுவாய்.

2 பேது 3:18, “நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் அவருக்கு இப்பொழுதம் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக ஆமென்.

2 தீமோ 2:15, “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தில் நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

I கொலோ 1:27—28, “கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம், எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.

—அவனை பிறருக்கு அறியப்படுத்துவதற்கு
(பெருகுதல் / விருத்தியாக்குதல் )

2 தீமோ 2:2, “அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி,

2 தீமோ 3:16—17, “வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

எபே 2:10, “ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நான் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறது. அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயுத்தம் பண்ணியிருக்கிறார்.
2 பேது 1:8, “இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும், கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது.”

**அட்டவணை பாட புத்தகம் எண்: 1**

ஒரு விசுவாகிக்கான முதல் படிகள் : கிருபையில் வளருதல் (24 பாடங்கள்)

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.
2. இரட்சிப்பின் நிச்சயம்.
3. உங்கள் புது வாழ்வு
4. ஆவிக்குரிய வளர்ச்சிக்கான மூன்று முக்கிய அம்சங்கள்.
5. வெற்றி நடை.
6. திருச்சபை.
7. திருச்சபையின் இரண்டு சட்ட ஒழுங்குகள்.
8. கொடுப்பதற்கான கிருபை.
9. வீட்டில் ஜீவியம்.
10. நமது அன்றாட அப்பம்.
11. உங்கள் தோற்றமும் பேச்சும்.
12. நம்முடைய குடியிருப்பு.
13. அலுவலகப் பொறுப்புகள் / கடமைகள்.
14. பணமும் சொத்தும்.
15. சமுதாயக் கடமைகள்.
16. விக்கிரகாராதனை மற்றும் பில்லி சூன்யம்.
17. தெய்வீக சுகம்.
18. பாடுகள்.
19. பரலோகமும், நரகமும்.
20. தேவனை தொழுது கொள்ளுதல்
21. சிலுவை
22. கிறிஸ்துவின் இரத்தம்.
23. சோதனை.
24. ஐக்கியம்.

ஆசிரியருக்கு வேண்டிய கூடுதல் குறிப்புகள்: கிருபையில் வளருதல்

— ஜெப வல்லமை (புதிதாக கற்பவர்களுக்கு ஜெபத்திற்கான 10 பாடங்கள் )

1. தேவனைத் தேடுதல்.
2. உடன்படிக்கையின் ஜெபம்.
3. துதியின் வல்லமை.
4. ஜெபப் பழக்கும்.
5. பரிசுத்த ஆவியானவரும், ஜெபமும்.
6. பரிந்து பேசும் ஜெபம்.
7. அதிகாரமுள்ள ஜெபம்.
8. ஜெபத்தை கவனித்தல்.
9. தேவனுடைய வார்த்தைகளை ஜெபித்தல்.
10. விசுவாசமுள்ள ஜெபம்.

— ஜெபத்திற்கான மற்றொரு சுருக்கமான முறையானப் பாடம்
— சீஷத்துவத்தைக் குறித்த ஒரு அடிப்படை
— நன்னடத்தைகளை பயிற்றுவித்தல்
— நமது வாழ்க்கையில் இசையின் தாக்கம்
— வேதாகமம் ஒரு சுருக்கமான கண்ணோட்டம்

(வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களும், ஒவ்வொரு புத்தகத்திற்குரிய முன்னுரையோடு கூடிய 40 பாடங்களாக சுருக்கபட்டுள்ளன).

— புத்தக விவரனங்களும், உபயோகப்படுத்தப்பட்ட மூலாதரங்களும்

ஒரு விசுவாசிக்கான முதல் படிகள் : கிருபையில் வளருதல்

**பாடம் 1 – கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.**

இந்த முதல் பாடத்தல் நாங்கள் உங்களுக்கு இயேசு என்கின்ற நபரை அறிமுகப்படுத்த விரும்புகின்றோம். இயேசுவே தேவன் என்பதையும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர் மனிதனாக அவதரித்த அந்த அற்புத நிகழ்வையும் குறித்ததான மகத்தான உண்மையை நாம் ஆராய்ச்சி செய்வோம். மனிதர்களோடு ஐக்கியத்தை ஏற்படுத்தி இன்புருவதற்காகவே தேவன் நம்மை உண்டாக்கினார். அவர் நம்மை நேசிக்கிறார் ஆகவே நம்மோடு ஒரு ஆழமான, திருப்தியான உறவை ஏற்படுத்துவதற்கென்று நம்மோடு உரையாட விரும்புகிறார். அவருடைய குமாரனாகிய இயேசுவை ஒரு தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

A. இயேசுவானவர் இப்பூமியில் 33 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் மாம்சமும், இரத்தமும் உடைய ஒரு நபராய் இருந்தபடியால், நாம் சந்திக்கிற அதே விதமான சூழ்நிலையை அவர் கடந்து வந்தார். பசி மற்றும் தாகம் போன்ற தேவைகள் அவருக்கும் இருந்தது. மகிழ்ச்சி, வேதனை போன்ற உணர்வுகள் அவருக்கும் இருந்தன. அவர் பிசாசையும், பாவத்தின் வல்லமையையும் எதிர்த்தார். ஒரு சாதராண மனிதனுக்குரிய விருப்பங்களையும், வாஞ்சைகளையும் பெற்றிருந்தார்.

கீழ்க்கானும் வேதாகம குறிப்புகள் இயேசுவின் மனிதத்தன்மையை வெளிப்படுத்துகின்றன. அவற்றை பார்த்து, கருத்துக்களை புரிந்து கொண்டு கோடிட்ட வெற்றிடங்களை நிரப்புக.

(பிறந்தார்; பசியாய் இருந்தார்; களைப்பாய் இருந்தார்; கண்ணீர் விட்டார்; வளர்ந்தார்; கோபப்பட்டார்; தாகமாய் இருந்தார்; மனதுருகினார்; சரீரபிரகாசமாக காயப்பட்டார்; களிக்கூர்ந்தார்; சோதிக்கப்பட்டார்; வேதனை அடைந்தார்)

| | |
|---|---|
| 1. லூக்கா 2:6—7 | 7. யோவான் 19:1—2 |
| 2. லூக்கா 2:40,52 | 8. யோவான் 15:11 |
| 3. மத்தேயு 4:2 | 9. மத்தேயு 26:37 |
| 4. யோவான் 19:28 | 10. மத்தேயு 9:36 |
| 5. யோவான் 4:6 | 11. மாற்கு 3:5 |
| 6. மத்தேயு 4:1 | 12. யோவான் 11:35 |

B. இயேசுவே தேவன் என்பதையும் கூட நாம் வேதத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். இடதுபக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கு பொருத்தமான வசனத்திற்கு நேராக கோடிட்டு காட்டுக

| | | |
|---|---|---|
| 1. அவருடைய நாமத்துக்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தம். | — | மாற்கு 2:5,7 |
| 2. அவர் ஆதியும், அந்தமுமாயிருக்கிறார் | — | மத்தேயு 1:23 |
| 3. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் இருக்கிறது. | — | யோவான் 20:28 |
| 4. அவர் பாவங்களை மன்னிக்கிறவர் | — | வெளிப்படுத்தின விஷேசம் 1:8 |
| 5. அவர் பரிசுத்தர் — குற்றமற்றவர் | — | ரோமர் 1:4 |
| 6. அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் | — | கொலோசெயர் 2:9 |
| 7. அவர் ஆண்டவர் — கர்த்தர் | — | எபிரெயர் 7:26 |

தேவன் எதற்காக மனிதனானார்? கீழ்க்காணும் வசனங்கள் தேவன் எதற்காக மனிதனானார் என்பதற்கான காரணங்களை விளக்குகின்றன. சரியான வசனத்தை கோடிட்டு காட்டுக.

1. நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக — ரோமர் 5:8
2. நாம் சோதிக்கப்படும்போது உதவுவதற்காக — 2 கொரி 5:19
3. நம் பாவத்திற்கான கிரயம் செலுத்துவதற்காக—ரோமர் 6:23
4. தேவ அன்பை நம்மிடம் காண்பிப்பதற்காக – 1 பேதுரு 1:18,19
5. உலகத்தை தம்மிடம் ஒப்புரவாக்குவதற்காக – எபிரெயர் 2:18
6. நமக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காக — 1 பேதுரு 2:24

மேற்கண்டவற்றிலிருந்து தேவன் எதற்காக மனிதனானார் என்பதை உங்களுடைய இயேசு ஒரு மனிதனாக பாவத்தின் வல்லமையை எல்லா வகையிலும் எதிர்த்தார். அனைத்து நிகழ்வுகளிலும் அவர் வெற்றிப் பெற்றார். அவருடைய கடைச வெற்றி மரணத்தின் மேலாக இருந்தது. உயிர்த்தெழுந்த முதல் காலை வேளையில் சரீரம் காணப்படவில்லை. கல்லறை காலியாக இருந்தது. இயேசு உயிரோடெழுந்தார்! அவர் பிசாசின் மீதும், பாவத்தின் மீதும் முழுமையாக வெற்றிச் சிறந்தார். இயேசு கிறிஸ்து தம் வாழ்க்கையை நம் மூலமாய் வாழும்படி நாம் அனுமதிக்கும் போது, இந்த முழுமையான வெற்றியை நாமும் கூட நம் வாழ்க்கையில் அனுபவிக்க முடியும்.

இயேசு நமக்காக ஏற்படுத்திய சில அற்புதமாக காரியங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. தயவு செய்து வசனங்களை பூர்த்தி செய்க.

1. அன்பு, ‘‘நீர் என்னிடத்தில் வைத்த அன்பு..........................
.........................................................யோவான் 17:26.
2. சந்தோஷம், ‘‘என்னுடைய சந்தோஷம் உங்களில்.................
........................................................யோவான் 15:11.
3. சிநேகம், ‘‘இனி நான் உங்களை......................................
........................................................ யோவான் 15:15.
4. குணமாக்குதல், ‘‘அவர் உன்..........................................
............................................................ சங்கீதம் 103:3.
5. பிசாசின் மீது அதிகாரம், ‘‘விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன..................................... மாற்கு 16:17.
6. பாவமண்ணிப்பு, ‘‘அவருடைய கிருபையின்..........................
............................................................ எபேசியர் 1:7.
7. பரிபூரண ஜீவன், ‘‘திருடன் திருடவும் கொல்லவும்..................
.........................................................யோவான் 10:10.
8. நித்திய ஜீவன், ‘‘ நான் அவைகளுக்கு...............................
.........................................................யோவான் 10:28.

<u>மனப்பாட வசனங்கள்</u> :

1. இரட்சிப்பும் ஜீவனும் இயேசுவில் மட்டும் யோ 10:10 அப் 4:12.
2. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும்
யோ 1:12 வெளி 3:20.

<u>பாடம் 2 — இரட்சப்பின் நிச்சயம்</u>

இப்பொழுது கிறிஸ்துவுக்கு உங்கள் வாழ்க்கையை கொடுத்திருக்கிறீர்கள் உங்கள் எஜமான்களை மாற்றியிருக்கிறீர்கள் நீங்கள் இனி ஒரு போதும் பிசாசின் ஊழியகாரன் அல்ல, நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர் ஆனபடியால் சாத்தான் உங்களுடைய மிகப்பெரிய சத்துருவாகிவிட்டான். ஆகவே தேவனுக்காக நீங்கள் வாழ்வதை நிறுத்துவதற்கு தன் வல்லமையினால் செய்யக் கூடிய அனைத்தையும் செய்வான். உங்களின் இரட்சிப்பைக் குறித்த சந்தேகத்தை உங்களில் ஏற்படுத்துவதே அவனுடைய தாக்குதல்களில்

முதன்மையானது ஆகும். ஆனால் நாம் பயப்படுவதையோ, சந்தேகப்படுவதையோ தேவன் விரும்புவதில்லை அவர் நம்மை விட்டு விலகவுதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை என்று அவருடைய வார்த்தை தெளிவாக கூறுகின்றது. (எபிரேயர் 13:5) இன்று அனேகர் தங்களுடைய இரட்சிப்பை தங்கள் உணர்வுகளால் நியாயம்தீர்க்கும் தவற்றை செய்கின்றனர். நம்முடைய இரட்சிப்பில் நம்முடைய உணர்வுகள் ஈடுபட்டால் நாம் அவற்றை சார்ந்திருக்க முடியாது. ஏனெனில் நம்முடைய உணர்வுகள் அடிக்கடி மாறுகின்றன. ஆனால் ஒரு போதும் மாறாத ஒரு காரியமுண்டு. அது தேவனுடைய வார்த்தையாகும். ஆகையால் தேவனை விசுவாசித்து, அவருடைய வார்த்தையின்படி அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. என்னுடைய இரட்சிப்பிற்காக நான் வேலை செய்ய முடியுமா? ஏன்? எபேசியர் 2:8—9 ………..………………..……………………

……………………………………..…………………………………

2. நித்திய ஜீவனை யாரில் கண்டடைய முடியும்? 1 யோவான் 5:11 ……………………………………………………….……………

3. குமாரனை உடையவர்களுக்கு தேவன் எதை அளிக்கிறார்? I யோவான் 5:11—12 ………………..…………...……………………

4. "என் வசனத்தை கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு …………………….. உண்டு "அவன் ஆக்கினை தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ……………………. உங்களுக்கு சொல்கிறேன் யோவான் 5:24.

5. எனக்கு நித்திய ஜீவன் உண்டென்கிற நிச்சயத்தை நான் அறிந்து கொள்ள முடியுமா? …………….………………………….…

எப்படி? I யோவான் 5:12—13.

6. நாம் தேவபிள்ளைகளாயிருக்கிறோம் என்பதற்கு ஓர் உள்ளார்ந்த நிச்சயத்தை கொடுப்பது யார்? ரோமர் 8:16…………………………..……………………………………..…

7. நம்முடைய உணர்வுகள் அடிக்கடி மாறுவதாயிருப்பதினால் நம்முடைய இரட்சிப்பின் நிச்சயத்திற்கு நாம் எதை சார்ந்திருக்க வேண்டும்? I பேதுரு 1: 25 ……………………….…………......

8. I யோவான் 5:11—12 ஐ மனப்பாடமாக எழுதுக ……………………………..…………………………………………….

<u>மனப்பாட வசனங்கள்</u> :

1. பாவம் ரோமர் 3:23; ரோமர் 6:23.
2. இரட்சிப்பு கிருபையினால் அல்ல எ.பே 2:8—9 தீத்து 3:5—6
3. இரட்சிப்பின் நிச்சயம் I யோவான் 5:13; யோ 5:26.

<u>பாடம் 3 – உங்கள் புது வாழ்வு</u>

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் நடந்து கொள்ளுங்கள் (கொலோசெயர் 2:6) என்று வேதாகமம் கூறுகின்றது. நீங்கள் விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்ட மாத்திரத்தில் மறுபிறப்பு அடைகின்றீர்கள்! இதுவரை பெற்றிராத ஒரு புதிய வாழ்க்கையை உன்னதத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றீர்கள். உங்கள் பெற்றோர் உங்களுக்கு இயற்கையான பிறப்பை கொடுத்தார்கள். ஆனால் தேவன் உங்களுக்கு ஆவிக்குரிய பிறப்பை கொடுத்திருக்கிறார். இந்த புது பிறப்பு தேவனுடைய ஆவியினால் இடம் பெறுகிறது.

1. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் கிறிஸ்துவுடன் இணைந்திருந்தாள்) ……….…………………….. பழையவைகள் …………………………..…… எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17).

2. நான் என் வாழ்க்கையை கிறிஸ்துவிடம் ஒப்படைத்தபோது கலாத்தியர் 5:19—21 ல் கூறப்பட்டுள்ள பழைய காரியங்களில் சில ஒளிந்து போயினால் தயவு செய்து அவற்றை ஜாக்கிரதையாக வாசியுங்கள். என் வாழ்வில் புதிதாக மாறிக்கொண்டிருக்கிற காரியங்களும் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அவை “ஆவியன் கனி” என்றழைக்கப்படுகின்றன. கலாத்தியர் 5:22—23 ஐ வாசித்து, கீறே “ஆவியின் கனி” என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள இடத்தை பூர்த்தி செய்க.

| மாம்சத்தன் கிரியைகள் (கலாத்தியர் 5:19—21) | ஆவியின் கனி (கலாத்தியர் 5:22—23) |
|---|---|
| விபச்சாரம், வேசித்தனம் | 1. …………………………….. |
| காமவிகாரம், அசுத்தம் | 2. ……………………………. |
| விக்கிரகாராதனை | 3. ……………………………. |
| பில்லிசூன்யம் | |
| பகைகள், விரோதங்கள் | 4. ……………………………. |
| வைராக்கியங்கள், கோபங்கள் | 5. ……………………………. |
| சண்டைகள், பிரிவினைகள் | 6. ……………………………. |
| பொறாமைகள், கொலைகள் | 7. …………………………..… |
| வெறிகள், களியாட்டுகள் | 8. …………………………..… |
| | 9……………………………..... |

3. கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக, நான் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் அல்லது வாழ வேண்டும்?

a. 2 பொரிந்தியர் 5:7 …………………………………………………….

b. ரோமர் 6:4…………………………………………………………….

4. யோவான் 6:63 ல் இயேசு அவர்களை நோக்கி, “ ஆவியே …..…………………. மாம்சமானது ……….…………………..” என்றார்.

5. உங்கள் சரீரத்தைக் கொண்டு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்? ரோமர் 12:1 …………………………..

……………………………………………………...…………………………………

………………………………………………………...

6. உங்கள் சரீரம் உங்களுக்குரியதா? ஏன்? 1 கொரிந்தியர் 6:19—20 ………………………..……………………………………..…………………..………

……………………………………………………………

7. கீழ்க்காணும் வசனத்தை பூர்த்தி செய்க, " கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் ………………………………………...…

……………………………………………………………………………...………………………

……………………………………………………………..

8. தேவன் அன்புள்ளவராயிருக்கிறபடியால் நாம் ஒருவரிலொருவர் அன்புக்ககூர வேண்டும் என்று வேதம் கூறுகிறது. எப்படியாக தேவனுடைய அன்பு உங்கள் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது? ரோமர் 5:5

……………………………………………………………………

…………………………………………………………………………………………..

9. தேவனிடத்தில் அன்பு கூருகிறேன் என்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; ……………………………

..…………………………………………………………..1 யோவான் 4:20.

10. இயேசு கொடுத்த புதிய கட்டகை என்ன? யோவான் 13:34

…………………………………………………………………………………………..

11. தேவனுடைய பிள்ளையாக நான் காண்கிறதினால் அல்ல, விசுவாசிக்கிறதினாலேயே வாழ வேண்டும். என்னுடைய விசுவாசம் பெருகுவது எப்படி? ரோமர் 10:17

…………………………………………

12. என்னுடைய விசுவாசத்தை துவக்குகிறவர் யார்? எபிரெயர் 12:2

…………………………………………………………………………………………..

13. "விசுவாசத்தினாலே வராத யாவும் ……………… ரோமர் 14:23.

14. நான் உணர வேண்டியது …………….. இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது ……………. (கூடாத காரியம் / கடினமான காரியம் (சரியான பதிலை கோடிட்டு காட்டுக) எபிரெயர் 11:6.

15. பின்வரும் வசனத்தை பூர்த்தி செய்க:— " ………………………. உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்: 1 யோவான் 5:4

<u>மனப்பாட வசனம்:</u>

1. கிறிஸ்துவுக்கு கீழ்படிதல் : ரோமர் 12:1 ; யோவான் 14:2.
2. புது சிருஷ்டி : 2 கொரி 5:17 ; கலா 2:20.

<u>பாடம் 4 – ஆவிக்குரிய வளர்ச்சிக்கான 3 முக்கிய அம்சங்கள் யு.</u>

A. வேதம் வாசித்தல்

புதிதாக பிறந்த ஒரு குழந்தை சரீரப்பிரகாரமாக வளர்ச்சியடைய ஆகாரம் அவசியமாக காணப்படுகின்றது. அது போலவே நீங்களும் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடைவதற்கு (ஆவிக்குரிய ஆகாரத்தை) உடனடியாகவும், தொடர்ச்சியாகவும் உட்கொள்ள வேண்டும்.

1. சரீரபிரகாரமான ஆகாரத்தைக் காட்டிலும் மேலான ஒன்று மனிதனுக்கு அவசியமாய் இருக்கிறது. அவன் வாழ்வதெற்கென்று தேவன் நியமித்திருக்கிற ஆவிக்குரிய ஆகாரமும்

கூட அவனுக்கு அவசியமாய் இருக்கிறது. அவன் வாழ வேண்டிய விதம் குறித்து இயேசு சொன்னது என்ன? மத்தேயு 4:4
……………………………………………………………………………….

2. தேவனுடைய வார்த்தையைக் குறித்து இயேசு சொன்னது என்ன ? யோவான் 17:17
……………………………………...….
…………………………………………………………………………..……

3. வேதத்தை வாசிக்க வேண்டியது மிகவும் அவசியம் ஏன்? 2 தீமோதேயு 2:15
…………………………………………………………..
…………………………………………………………………………………..

4. வேத வசனங்கள் நமக்கு செய்யக் கூடியது என்ன?
a. 2 தீமோதேயு 3:15 ……………………………………………………….
b. யோவான்15:3 ……………………………………………………………….
c. அப்போஸ்தலர் 20:32 ..……………………………………………………

5. வேத வசனங்கள் எந்த நான்கு காரியங்களுக்கு பிரேயோஜனமாய் இருக்கிறது? 2 தீமோதேயு 3:16
a.…………………………………… b. ………………………………
c.…………………………………… d. ………………………………

6. சங்கீதம் 119:11, “நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதையத்தில் வைத்து வைத்தேன். “ இந்த வசனத்தில் இருந்து, நம் தேவனுடைய வசனத்தை மனப்பாடம் செய்வது ஏன் அவசியமென்றுக் கூறுக
………………………………………….…
…………………………………………………………………………...

7. தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பதோ, கேட்பதோ நம்முடைய விசுவாசம் பெருகுவதற்கு துாண்டுதலாக அமைகின்றதா? ரோமர் 10:17
…………………………………………………………………………………..

B. ஜெபம்

புதிதாக பிறந்த ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு ஆகாரம் மட்டும் போதுமானதல்ல. சுவாசிப்பதற்கு காற்றும் அவசியமாய் நம் சரீரத்தை ஜீவனோடு வைப்பதற்கு காற்று அவசியமாய் இருப்பன போல, ஆவிக்குரிய வாழ்க்கை ஜீவனோடு இருப்பதற்கு ஜெபம் மிகவும் அத்தியாவசியமாய் இருக்கிறது. ஜெபம் என்பது தேவனோடுள்ள ஐக்கிய மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையின் சுவாசமும் ஆகும்.

1. இயேசு ஜெபத்தை குறித்து சொன்னது என்ன? லூக்கா 18:1
……………………………………………………………………………….

2. நீங்கள் எப்பொழுதாவது ஜெபிப்பதை நிறுத்திருக்கின்றீர்களா? அல்லது விட்டிருக்கிறீர்களா?
I தெசலோனிக்கேயர் 5:17 …………………………………………….

3. நாம் எதற்காக கேட்கவோ அல்லது ஜெபிக்கவோ வேண்டும்? யோவான் 16:24. ..............................................................

4. தேவன் நம்முடைய ஜெபத்தை கேட்கிறார் என்கின்ற நிச்சயம் உங்களுக்கு எப்படி உண்டாகும்? I யோவான் 5:14 ..................

.......................................................................................

5. நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?

a. யோவான் 14:13 .................................................................

b. I யோவான் 5:14 .............................................................

c. மாற்கு 11:24 ..................................................................

6. தேவன் நமது ஜெபத்திற்கு பதிலலிக்கும் முன்பு நாம் நிறைவேற்ற வேண்டிய தேவன் கூறும் இரண்டு நிபந்தனைகள் எவை?

a. யோவான் 15:7 .................................................................

b. I யோவான் 3:22 .............................................................

7. சோதனையை மேற்கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும. என்று இயேசு கூறும் இரண்டு காரியங்கள் எவை? மத்தேயு 26:41.

a. ..........................................

b. ..........................................

C. சாட்சியாயிருத்தல்

நம்முடைய உடல் ஆரோக்கியமாய் இருப்பதற்கு உடற்பயிற்சி மிகவும் அவசியமாய் இருப்பதைப் போல சாட்சி உள்ள வாழ்க்கை நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகும். நாம் வேதம் வாசித்து ஜெபிப்பதின் மூலமாக ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர ஆரம்பிக்கும் போது கற்றுக் கொண்ட காரியங்கள் நடைமுறைப் படுத்த பயில வேண்டும். இந்த பயிற்சியில் நீங்கள் சாட்சியாக இருப்பது அடங்கும். நீங்கள் வாழும் விதம் மற்றும் பேசும் வார்த்தை இவற்றின் மூலம் உங்கள் சாட்ச வெளிப்படும்.

1. மாற்கு 16:15 ல் நாம் என்ன செய்ய வேண்டும் இயேசு கூறுகிறார்? .......................................................................

2. மத்தேயு 5:14ல் நாம் யாரென்று அழைக்கப்படுகிறோம்? .......................................................................................

3. நம்முடைய வெளிச்சத்தை எதற்காக பிரகாசிக்க செய்ய வேண்டும்? மத்தேயு 5:16 ..................................................

4. கிறிஸ்துவற்றவர்களுக்கு நம்முடைய செய்தி என்ன?

a. ரோமர் 3:23 ..............................................................

b. ரோமர் 6:23 ..............................................................

c. ரோமர் 14:12 ..............................................................

d. ரோமர் 10:9 ..............................................................

5. அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் சுவிஷேசத்தை குறித்து வெட்கப்பட்டாரா? ஏன்? ரோமர் 1:16

…………………………………………………………………………………..

6. நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று தேவன் வாக்கு பண்ணிருக்கிறார் (எபிரேயர் 13:5) பரிசுத்த ஆவி நம்மிடத்தில் வந்து அவருக்காக சாட்சிகளாகும்படி செய்வார் என்று இயேசு கூறினார். (அப்போஸ்தலர் 1:8). ஆகவே ஆண்டவரான இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிறரிடம் கூறுவதற்கு நாம் பயப்படலாமா.

…..……………………………………………………………………

……………………………………………………………………………….

7. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுத்திருக்கிறாரா? 2 தீமோதேயு 1:7

……………………………………………………………..

8. நம் இருதயங்களில் பயத்தை கொண்டு வருபவன் சாத்தான் (பிசாசு) இந்த பயத்தை வெளியே விரட்டுவது எது? I யோவான் 4:18

…………………….……………………………………………………………

……………..……………………………………………………………

<u>மனப்பாட வசனங்கள்:</u>

1. வேதாகமம் 2 தீமோதேயு 3:16 ; யோசுவா 1:8
2. ஜெபம் யோவான் 15:7 ; பிலி 4:4—7
3. சாட்சயாய் இருத்தல் மத்தேயு 4:19 ; ரோமர் 1:16
   ……………………………………………………………….….

<u>பாடம் 5 – வெற்றிநடை</u>

ஒரு குழந்தை நடக்கத் தொடங்கும் போது பெற்றோர் களிகூறுகின்றனர் தொடக்கத்தில் ஒரு வேளை அக்குழந்தை தடுமாறி விழலாம். ஆனால் வெகு விரைவில் அவன் பலனடைந்து நன்றாக நிற்கவும், தைரியமாக நடக்கவும் தொடங்குகிறான். ஆகவே ஆவிக்குரிய வாழ்க்கையிலும் தேவன் தம்முடைய பிள்ளைகள் வெற்றி நடை போட வேண்டுமென்று எதிர் பார்க்கிறார்.

1. கிறிஸ்தவர்களின் மிகப்பெரிய சத்துரு யார்? I பேதுரு 5:8

……………………………………………………………………………….

2. சத்துரு உங்களைவிட்டு ஓடிப்போவதற்கு நீங்கள் செய்ய வேண்டிய 2 காரியங்கள் எவை? (யாக்கூபு 4:7)

a. ………………..………………………………………………..

b. ………………..………………………………………………..

3. நீங்கள் தீமை செய்ய வேண்டுமென்று பிசாசு உங்களை சோதிக்கும் போது, தேவனுடைய உண்மை என்ன செய்கிறது? 1 கொரிந்தியர் 10:13

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

4. சத்துருவின் சோதனையை சந்திபதற்கு நமக்கு பலன் கொடுப்பவர் யார்? பிலிப்பியர் 4:13……………………………………………………..

5. பின்வரும் வசனத்தை பூர்த்தி செய்க: “ தேவனால் பிறப்பதெல்லாம் ……………………………………………………… 1 யோவான் 5:4.

6. மாம்சத்தின் இச்சையை நிறைவேற்றாதபடிக்கு நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? கலாத்தியர் 5:16 …………………….

7. ஆண்டவருக்கென்று சாட்சியாயிருக்கும்படி உங்களுக்கு வல்லமை அல்லது ‘‘திறனை’’ கொடுப்பது யார்? அப்போஸ்தலர் 1:8 ……………………………………………………………………….

8. நமது சத்துருவாகிய பிசாசினுடைய எல்லா வல்லமைக்கும் மேலான ஒரு வல்லமையை நமக்குக் கொடுப்பதாக இயேசு வாக்கு பண்ணினாரா? லூக்கா 10:19 ………………………………… ஆம் / இல்லை.

9. ………………..……..………….. அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் …………………………………… (II கொரிந்தியர் 4:4).

10. சில நேரங்களில் சாத்தான் எப்படியாகத் தோன்றுகிறான் 2 கொரிந்தியர் 11:14.

11. நம்முடைய எதிரியாகிய பிசாசுடன் போரிடுவதற்கு நம்மிடம் எத்தகைய ஆயுதங்கள் இருக்கின்றன? எபேசியர் 6:17 ……………………………………………………………………………….

12. எபேசியர் 6:13—17 வரையிலான வசனங்களை வாசித்து ஒரு கிறிஸ்தவ போர் சேவகனுடைய சர்வாயுதவர்க்கும் ஒவ்வொன்றும் எதை குறிக்கிறது என்ற சரியான பதிலுக்கு நேராக கோடிட்டு காட்டுக.

a. அரைச் கச்சை — நீதி என்னும்
b. மார்க்கவசம் — விசுவாசம் என்னும்
c. பாதரட்சை — தேவ வசனமாகிய
d. கேடகம் — இரட்சண்யம் என்னும்
e. தலைச்சீரா — சத்தியம் என்னும
f. ஆவியின் பட்டயம் — சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம்

13. சாத்தானின் தாக்குதலை எதிர் கொள்ள கிறிஸ்து இயேசு பயன்படுத்தியது என்ன? மத்தேயு 4:4,7,10 ………………………….

14. சங்கீதம் 119:11 நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதையத்தில் வைத்து வைத்தேன். பாவத்தின் மேல் ஜெயம் கொள்வதற்கு வேண்டிய தேவ வசனம் எப்பொழுதும் நம்மிடம் இருக்க வேண்டுமெனில் நாம் செய்ய வேண்டியதென்ன?

……………………………………………………………………………….

15. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வந்ததின் நோக்கம் என்ன? 1 யோவான் 3:8 …………………………………

……………………………………………………………………………….

16. கடைசியாக சாத்தானுக்கு நேரிடப் போவதென்ன? வெளி 20:10 ……………………………………………………………………………

………………………………………………………………………………….

தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு ஜெயத்தை வாக்கு பன்னியிருக்கிறார். இப்பொழுதே அந்த ஜெயத்தை உரிமையாக்கிக் கொண்டு ஒரு வெற்றியுள்ள கிறிஸ்துவ வாழ்க்கையை வாழத் தொடங்குங்கள்.

இயேசு நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது <u>பரிபுரணப்படவும்</u> வந்தேன் என்றார் (யோவான் 10:10) வெறுமனே தேவனுடைய வார்த்தையை நம்பி, அதை செயல்படுத்தும் போது ஒரு பரிபூரணமான ஜீவனை நீங்கள் பெறமுடியும்.

<u>மனப்பாட வசனங்கள்</u> : பிசாசுக்கு எதிரான வெற்றி –

எபிரெயர் 2:18; சங்கீதம் 119:9—11;

1 யோவான் 3:8; ஏசாயா 54:17

<u>பாடம் 6 – திருச்சபை</u>

சபை என்பது உங்களுடைய ஆவிக்குரிய இல்லம். ஆதில் ஆவிக்குரிய ஆகாரமும் பாதுகாப்பும் பயிற்சியும் ஐக்கியமும் உண்டு. “திருச்சபை” என்னும் சொல் “எக்ளிசியா” என்னும் கிரேக்கப் பதத்திலிருந்து பெறப்பட்டதாகும். பொருள்: “அழைக்கபட்ட” உலகத்தின் அமைப்பை விட்டு “கிறிஸ்துவுக்குள்” வாழும் படி அழைக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டில் திருச்சபை என்கிற வார்த்தை முதலாவதாக அனைத்து விசுவாசிகளின் சரீரத்தை குறித்தது; இரண்டாவதாக ஆராதிக்கும், ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் சேபிக்கும் நோக்கத்திற்காக ஒன்றாகக் கூடும் விசுவாசிகளின் தனிப்பட்ட கூடுகையையும் குறிக்கிறது.

1. முழு சபையும் ……………………………. க்கு ஒப்பிடப் பட்டிருக்கிறது. அதற்கு கிறிஸ்துவே ……………. ஆகவும், விசுவாசிகள் …………… ஆகவும் இருக்கின்றனர். கொலோசெயர் 1:18 ; 1 கொரிந்தியர் 12:27.

2. சபைக்கு தலையாயிருக்கிற கிறிஸ்துவிடம் நாம் அன்பாயிருப்பதற்கு ஆதாரம் என்ன? யோவான் 14:21 ………….

……………………………………………………………………………………………………

……………………………………………….

3. அப்போஸ்தலர் 2:41—42 ல் அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்ட கிறிஸ்வர்கள் செய்த 5 காரியங்களை வரிசைப்படுத்துக.

a. ………………………………………………………………………..

b. ………………………………………………………………………..

c. ………………………………………………………………………..

d. ………………………………………………………………………..

e. ………………………………………………………………………..

4. தேவனுடைய பிள்ளையாக, நீங்கள் எதை விட்டுவிடக் கூடாது? எபிரேயர் 10:25 ………………………………………………………

5. ரோமர் 8:34 ன் படி :

a. கிறிஸ்து இப்பொழுது எங்கே இருக்கிறார்? ……………………..

b. அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? ……………………..

6. சபையின் எவ்விரு காரியங்களுக்காக கிறிஸ்து ஜெபித்தார்?

a. யோவான் 17:15 ........................................................

b. யோவான் 17:17 ........................................................

7. சபையின் நோக்கம் அல்லது ஊழியம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது சரியான வசனத்திற்கு நேராக கோடிட்டு காட்டுக.

a. தேவனை மகிமைப்படுத்துவதற்காக — கலாத்தியர் 6:10

b. விசுவாசிகள் பக்தி விருத்தியடைவதற்காக – எபேசியர் 4:11—12

c. பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்காக — ரோமர் 15:5

d. சுவிசேஷத்தை எங்கும் பிரசங்கிப்பதற்காக — எபேசியர் 5:25—27

e. நன்மை செய்வதற்காக — மாற்கு 16:15

மனப்பாட வசனங்கள்:

ஐக்கியம் / கூடிவருதல் மத்தேயு 18:20 ; எபிரேயர் 10:24—25

பாடம் 7 – திருச்சபையின் 2 கட்டளைகள் / சட்டங்கள்

திருச்சபையின் சட்டம் என்பது சபையில் கடைபிடிப்பதற்காக கிறிஸ்துவால் நியமிக்கப்பட்ட ஒரு வெளிப்படையான சடங்கு என்று வரையறுக்கலாம். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் குறிப்பாக கட்டளையிடப்பட்ட 2 சட்டங்கள் திருமுழுக்கு / ஞானஸ்தானம் மற்றும்

கர்த்தருடைய பந்தி ஆகும்.

I. ஞானஸ்தானம்

"பாப்டிஸ்ஸோ" என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து "பாப்டிஸம்" என்கிற ஆங்கில வார்த்தை வந்தது. அதின் அர்த்தம்; நனைக்க, மூழ்கடிக்க, அல்லது முழுவதுமாக நனைக்க என்பதாகும். ஞானஸ்தானம் என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டு, அறிக்கையிட்ட ஒரு விசுவாசியை தண்ணீரில் முழுவதுமாக மூழ்கச் செய்தல் ஆகும்.

1. மாற்கு 1:4,5 வசனங்களை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

a. யோவான் மனதிரும்பியவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்த இடம் எது? (வசனம் 4) ..............................................

..........................................................................................

b. யோவான் எந்த ஞானஸ்தானத்தை குறித்து பிரசிங்கித்தார்? ..........................................................................................

c. யோவான் தன்னிடம் வந்தவர்களுக்கு எந்த நதியில் ஞானஸ்தானம் கொடுத்தான்? ..............................................

2. மத்தேயு 3:13—17 வரை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:

a. இயேசு எதற்காக யோவானிடம் வந்தார்?..............................

..........................................................................................

b. இயேசு பெற்ற ஞானஸ்தானம் தெளிப்பு, மூழ்குதல், ஊற்றுதல் (சரியான விடையை கோடிட்டு காட்டுக)

c. இயேசு ஞானஸ்தானம் பெற்றதில் தேவன் பிரியப்பட்டாரா? ..........................................................................................

d. தேவன் தம்முடைய குமாரன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து கூறியதென்ன? ..............................................

..........................................................................................

3. மத்தேயு 28:19 ல் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு இட்ட கட்டளை என்ன?.................................................................

………………………………………………………………………………..

4. கீழ்க்காணும் வசனங்களில் மூலமாக நாம் ஞானஸ்தானத்தின் அர்த்தத்தை விளங்கிக் கொள்கிறோம்: (ரோமர் 6:11,18 ; ரோமர் 6:3—6 ; மத்தேயு 3:13—17 ; மத்தேயு 28:19) தயவு செய்து சரியான வசனங்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க.

a. கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிதல் …………………………….

b. கிறிஸ்துவின் முன்மாதிரியை பின்பற்றுதல்…………………………. c. பாவத்திலிருந்து மரணத்தின் மூலம் பிரிக்கப்படுதல் ………………

d. தேவனுக்கும், நீதிக்கும் பிழைக்கும்படி ஒரு வெளியரங்கமான சாட்சி ………………………………………………………..

<u>முக்கியமான குறிப்பு:</u>

உங்கள் கிறிஸ்துவ வாழ்க்கையில் ஞானஸ்தானம் என்பது ஒரு முக்கியமான படியாகும்! நாம் ஞானஸ்தானம் பெற வேண்டுமென்று இயேசு கட்டளை கொடுத்தார். நீங்கள் ஞானஸ்தானம் எடுக்க மறுக்கும் போது கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படியாமல் போகிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா? ஞானஸ்தானம் பெறுவதற்கு வேண்டிய ஒரே தகுதி நீங்கள் கர்த்தராகிய இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனுக்காக உங்கள் பழைய பாவ வாழ்க்கையை விட்டு விட வேண்டியது மட்டுமே. கிறிஸ்துவின் முன்மாதிரியை பின்பற்றி ஞானஸ்தானம் பெறுவதற்கு நீங்கள் இப்பொழுதே ஏன் தீர்மானிக்கக் கூடாது.

<u>கர்த்தருடைய பந்தி:</u>

கிறிஸ்துவானவர் தாம் காட்டி கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே இந்த கட்டளையை / சடங்கினை தொடங்கி வைத்தார். (மத்தேயு 16:26—30; மாற்கு 14:22—26; லூக்கா 22:17—20) ஞானஸ்தானத்தை போன்றே இதுவும் விசுவாசிகளுக்கு மட்டுமே உரியது. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கான நிபந்தனை என்னவெனில் நீங்கள் மறுபடியும் பிறந்த விசுவாசியாகவும், கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து வாழும் வாழ்க்கை நடத்துபவராகவும் இருக்க வேண்டு.

1. கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்பட்ட 2 சாரம்சங்கள் அப்பமும் திராட்சைரசமுமாம்.

a. அப்பம் எதற்கு அடையளமாய் இருக்கிறது? (மத்தேயு 26:26)

……………………………………………………………………………….

b. திராட்சை ரசம் எதற்கு அடையளமாய் இருக்கிறது? (மத் 26:27—28)……………………………………………………………….

2. 1 கொரிந்தியர் 11:23—34 வரையிலான வசனங்களை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:

a. இயேசு ஸ்தோத்திரம் பண்ணின பின்பு அப்பத்தை எடுத்து என்ன செய்தார்? ………………………………………………………

b. இயேசு எதற்காக அப்பத்தை பிட்டார்? ……………………………

……………………………………………………………………………….

c. 25 ம் வசனத்தின் படி கர்த்தருடைய பந்தியின் நோக்கம் என்ன?

…………………………………………………………………………………….

d. கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும் போது நாம் எதை நினைவு கூறுகிறோம்?

…………………………………………………………………………………….

e. இராபோஜனத்தின் போது அப்பத்தை புசிப்பதற்கு முன்பும், ரசத்தை பானம் பன்னுவதற்கு முன்பும் ஒரு நபர் செய்ய வேண்டியது என்ன? (வசனம் 28).

…………………………………………………………………………………….

f. இராபோஜனத்தில் (கர்த்தருடைய பந்தியில்) பங்கெடுப்பதற்கு முன்பு நீங்கள் தேவனோடும், மற்றவர்களோடும் உங்களை ஏன் சரிபார்க்க வேண்டும்? (வசனம் 29).

…………………………………………………………………………………….

g. ஒருவன் கர்த்தருடைய பந்தியை அபாத்திரமாய் புசிக்கும் போது சம்பவிப்பது என்ன? (குறிப்பு: அவர்கள் நித்திரை அடைந்தார்கள் என்பது மரணத்தைக் குறிக்கும்) (வசனம் 30).

…………………………………………………………………………………….

h. நாம் நியாயம் தீர்க்கப்பட கூடாதெனில் என்ன செய்ய வேண்டும்?

…………………………………………………………………………………….

2. கர்த்தருடைய பந்தி ஸ்தல சபையில் மட்டுமே பங்கெடுக்க வேண்டுமாய் அல்லது வீட்டிலோ, சிறைச்சாலையிலோ, மருத்துவ மனையிலும் கூட பங்கெடுத்துக் கொள்ளலாமா? (அப்போஸ்தல 2:46)……………………………………………………………………

<u>முக்கியமானது:</u>

கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பதற்கு முன்பு உங்களை நீங்களே சோதித்தறிவதற்கு கீழ்க்காணும் கேள்விகளை பயன்படுத்தலாம்:

1. உண்மையாகவே நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்றேனா?

2. என்னுடைய வாழ்க்கையில் அறிக்கை செய்யப்படதா பாவம் ஏதெனும் உண்டா? சுய பரிதாபம்? பெருமை? பொருளாசை? நிர்பிச்சாரம்? கீழ்படியாமை? உலகத்தின் இச்சை? என் எண்ணங்களும், ஜுவியமும் தூய்மையாக உள்ளனவா? நான் கிறிஸ்துவிற்காக தொடர்ந்து சாட்சியாக இருக்கின்றேனா? நான் வேதம் வாசிப்பதிலும் ஜெபத்திலும் உண்மை உள்ளவனாக இருக்கின்றேனா?

3. நான் என் முழு இருதயத்தோடும் முழு ஆத்மாவோடும், முழு பலத்தோடும், முழு மனதோடும் அன்பு கூறுகிறேனா?

4. நான் என்னை நேசிப்பது போல பிறனை நேசிக்கின்றேனா?

<u>மனப்பாட வசனங்கள் :</u>

- ஞானஸ்தானம் அப்போஸ்தலர் 2:38 ; மத்தேயு 28:19
- குர்த்தருடைய பந்தி 1 கொரிந்தியர் 11:26—27 ; யோவான் 6:51,63

<u>பாடம் 8 – கொடுக்கும் கிருபை</u>

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்த படியே கொடுக்க கடவன்: உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார். (2 கொரிந்தியர் 9:7)

உலகம் கேட்பது: அவன் எதை கொடுக்கிறான்?
கிறிஸ்து கேட்பது: அவன் அதை எப்படி கொடுக்கிறான்?
உலகம் கேட்பது : அவனுக்கு சொந்தமானது என்ன?

கிறிஸ்து கேட்பது : அவன் அதை எப்படி உபயோகக்கின்றான்?
உலகம் கேட்பது : அவன் எவ்வளவு கொடுக்கிறான்?
கிறிஸ்து கேட்பது : அவன் எவ்வளவு வைத்திருக்கின்றான்?

1. நீதிமொழிகள் 23:26 ல் தேவன் என் மகனே உன் இருதயத்தை எனக்கு தா என்கிறார். தேவன் நம்மிடமிருந்து பெற விரும்புகிற முதல் காரியம் என்ன?

..........................................................................

2. உங்களுடைய சரீரம் யாருக்கு சொந்தமானது? 1 கொரிந்தியர் 6:19—20

..................................................................

3. நம்முடைய சரீரத்தை என்ன செய்ய வேண்டுமென்று அப்போஸ்தலமாகிய பவுல் கூறுகிறார்? ரோமர் 12:1

..........................................................................

4. லூக்கா 10:27ன் படி தேவன் நம்மிடத்திலிருந்து எதை பெற்றுக் கொள்ள விரும்புகிறார்?

..........................................................................

5. எப்பொழுதுமே அன்பானதுதான் எந்த அளவுக்கு செய்ய முடியும் என்பதை பார்க்கிறது. வேதம் கூறுகிறது, ‘‘அன்பு தர்பொலிவை நாடாது’’. கொடுப்பதை குறித்து இயேசு என்ன சொல்லியிருக்கிறார். அப்போஸ்தல 20:35

..........................................................................

6. கொடுப்பவர்களுக்கென்று இயேசு பன்னியிருக்கிற வாக்குதத்தம் என்ன? லூக்கா 6:38

..........................................................................

7. உங்களிடம் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணலாமா?

..........................................................................

8. ‘‘தரித்தரருக்கு கொடுப்பவன் தாழ்ச்சியடையான் (நீதிமொழிகள் 28:27) என்று வேதம் கூறுகறது தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படும் வாக்குதத்தம் யாருக்காக கொடுக்கப்பட்டது? வாங்குபவருக்கா அல்லது கொடுப்பவருக்கா? பிலிப்பியர் 4:18—19

..........................................................................

9. நாம் எப்படி கொடுக்க வேண்டும்? மத்தேயு 10:8

..........................................................................

10. எப்படியாக கொடுப்பவனிடத்தில் தேவன் பிரியப்படுகிறான்? 2 கொரிந்தியர்9:7

..........................................................................

நமக்குள்ளதெள்ளாவற்றிலும் 10 ல் 1 பங்கு தேவனுக்குரியதென்றும் அதை நமக்கென்று வைத்துக் கொள்வோமானால் தேவனுடையதை கொள்ளையிடுகிறவர்களாய் இருக்கிறோம் என்றும் வேதம் போதிக்கிறார். மல்கியாவின் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம்: மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்கை வஞ்சிக்கிறீர்கள், எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும், காணிக்கையிலும்தானே என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்: அப்பொழுது நான் வானத்தின் பல கணிகளை திறந்து இடம் கொள்ளாமல் போகுமட்டும் உங்கள் மேல் ஆசிர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோ என்று அதினால் என்னை சோதித்து பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 3:8—10)

இயேசுவும் கூட தசம பாகம் செலுத்துவதை அங்கிகரித்தார். (மத்தேயு 23:23 : லூக்கா 11:42) நம்முடைய தசம பாதம் என்பது நமக்கு உள்ளதில் 10 ல் 1 பாகம். அதற்கு மேற்பட்டது தேவனுக்கு காணிக்கையாகும். நம்முடைய முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் உண்மையாக அன்பு கூர்ந்தால் நம்முடைய தசம பாகங்களையும் காணிக்கைகளையும் அவருக்கு கொடுக்க விரும்புவோம்.

நினைவில் கொள்ள வேண்டியவை:

1. நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதை விட எவ்வளவு வைத்திருக்கிறோம் என்பதை பொறுத்தே பரிசை தேவன் அளிக்கிறார் (மாற்கு 12:41—44)
2. பரிசின் அளவை விட கொடுப்பவரின் மனதை தேவன் பார்க்கிறார்.(2 கொரி 9:7)

நமக்கு ஜீவனை கொடுத்து இரட்சகருக்கு நன்றி நிறைந்த அன்பின் இருதயத்தோடு கொடுக்க முன்வருவோம்!

மனப்பாட வசனம்:

கொடுத்தல் : 2 கொரி 9:6—8 ல் : லூக்கா 6:38

பாடம் 9 – வீட்டில் ஜீவியம்

நீங்கள் கிறிஸ்தவ ஜீவயத்தை வெளிப்படுத்தும் முதல் இடம் உங்களுடைய வீடு ஆகும். இங்கேதானே ஆண்டவருக்காக உங்கள் முதல் நடையை எடுக்க வேண்டும். இது கடினமாக இருக்கலாம், விசேஷமாக கர்த்தரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாத உறுப்பினர்கள் இருக்கும் போது கடினமாக இருக்கக் கூடும். அனேகமாக சில எதிர்ப்புகளையும், சில உபத்திரங்களையும் கூட சந்திக்க நேரிடும். ஆனாலும் ‘‘நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை’’ (எபிரேயர் 13:5) என்ற கர்த்தராகிய இயேசுவின் வார்த்தையை நினைவு கூறுங்கள். நமது முதல் கடமையை தேவனுக்குரியதே ‘‘நாம் மனுஷருக்கு கீழ்ப்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிவதே அவசியமாய்’’ காணப்படுகின்றது. (அப்போஸ்தலர் 5:29)

1. நாம் எல்லா மனுஷரோடும் எவ்விதம் வாழவேண்டும் என்று வேதம் கூறுகிறது? (ரோமர் 12:18) ………………………………...

…………………………………………………………………………………….

2. இயேசு நம்மை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு சகலமும் நலமாக நடக்கும் என்று வாக்கு பண்ணவில்லை. சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு இருக்கும் என்று அவர் அறிந்தபடியினாலே அவர், ‘‘பூமியின் மேல்

……………………………………..……………………

………………………………….;……………………………………….

அனுப்ப வந்தேன்’’. என்றார் (மத்தேயு 10:34)

3. மத்தேயு 10:35—36 ஐ வாசித்து பின்வரும் வசனத்தை பூர்த்தி செய்க : ‘‘ஒரு மனுஷனுக்கு சத்ருக்கள் …………………………..’’

4. நாம் யாரை அதிகமாக நேசிக்க வேண்டும்? (மத்தேயு 10:37) (சரியான விடையை கோடிட்டு காட்டுக)

a. நம் தகப்பன், தாய் மீது

b. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீது

c. நம் மகன்கள், மகள்கள் மீது

d. நம் சகோதர சகோதரிகள்

5. வாலிப பிராத்தியத்திலே நாம் யாரை நினைக்க வேண்டும்? (பிரசிங்கி 12:1) …………………….………………………………..

…………………………………………………………………………………….

6. பிள்ளையனவனை சரியான முறையிலே நடத்துவது அவசியம் ஏன்? (நீதி 22:6)

……………………………………………………………………………………

7. பெற்றோர் பிள்ளைகளை நேசித்தால் அவர்கள் தவறு செய்யும் போது அவர்களை தண்டிக்க வேண்டுமா? (நீதி 13:24)

.........................................................................................

8. பிள்ளைகள் தவறு செய்யும் போது பெற்றோர் கண்டித்து தண்டிக்கவில்லையெனில் அவர்கள் உண்மையாக பிள்ளைகளை உண்மையாக நேசிக்கிறார்கள்? (நீதி 13:24)

.........................................................................................

9. ஒழுக்கத்திற்குள் கொண்டு வராமல் தன் இஷ்டத்திற்கு பிள்ளையை விடும் தாய்க்கு நேரிடுவது என்ன? (நீதி 29:15)

.........................................................................................

10. பிள்ளைகளை சிட்சித்து நடக்கும் பெற்றோருக்கு கிடைக்கும் இரண்டு வெகுமதிகள் (நீதி 29:17)

a. பிள்ளைகள் அவர்களுக்கு ........................ தருவார்கள்

b. பிள்ளைகள் அவர்கள் ஆத்மாவுக்கு ........................ உண்டாக்குவார்கள்.

11. பிள்ளைகளுக்கு தேவனை குறித்து போதிப்பது பெற்றோரின் கடமையாகும். எந்த நான்கு சமயங்களில் பெற்றோர் தேவனை குறித்து பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது? (உபா 6:7)

"நீங்கள் ................................................... போதும்......

"நீங்கள் ................................................... போதும்......

"நீங்கள் ................................................... போதும்......

"நீங்கள் ................................................... போதும்......

11. பிள்ளைகள் ஏன் பெற்றோருக்கு கீழ்படிய வேண்டும்?

a. எபேசியர் 6:1 ................................................

b. கொலோசெயர் 3:20 ................................................

13. பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் பெற்றோரின் கட்டளை கர்த்தர்க்குரிய காரியங்களுக்கு விரோதமாக இல்லாத பட்சத்தில் அவர்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும். கர்த்தருடைய சித்தத்துக்கு விரோதமானது என்று நான் அறிந்த காரியத்தை பெற்றோர் கூறும் போது ஒரு பிள்ளையோ அல்லது ஒரு வாலிபனோ செய்ய வேண்டியது என்ன? (சரியான விடையை கோடிட்டு காட்டுக)

a. அவன் கர்த்தருடைய சித்தத்துக்கு பதிலாக பெற்றோரின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும்.

b. அவன் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக இருந்தாலும் கர்த்தருக்கே கீழ்ப்படிய வேண்டும்.

c. அவன் கர்த்தருக்கோ, பெற்றோருக்கோ கீழ்ப்படியக் கூடாது.

14. தன்னுடைய தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுகிறவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட இரண்டு வாக்குத் தத்தங்கள் எவை? (எபேசி 6:2—3)

a. ...........................................................................

b. ...........................................................................

<u>மனப்பாட வசனங்கள்:</u>

பயிற்சி : நீதிமொழிகள் 22:6

கீழ்படிதல் : எபேசியர் 6:1

## <u>பாடம் 10 – நம் அன்றாட அப்பம்</u>

நாம் அன்றாட வாழ்க்கையில் புசிப்பதும், குடிப்பதும் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். இப்பாடத்தில் தேவன் நமக்காக வாழ்பவர்களிடம் எதை எதிர்பார்க்கிறார் என்று காண்போம்.

A. புசிப்பதற்கு முன் ஸ்தோத்திரம் செய்தல்

1. கிறிஸ்து இயேசுக்குள் உங்களை குறித்து தேவனுடைய சித்தம் என்ன? (1 தெச 5:18)

...............................................................................

2.இயேசு நமக்கு ஒரு முன் மாதிரியை வைத்தார். "உணவை புசிப்பதற்கு முன்பு அவர் என்ன செய்தார்? (யோவான் 6:11)

...............................................................................

3. தேவனுக்கு நன்றி கூறுவதில் பவுலின் உதாரணம், நாம் பொது இடங்களில் ஸ்தோத்திர ஜெபத்தை ஏறெடுக்க வெட்கப்படக் கூடாது என்பதை குறிக்கிறது. பவுல் வெட்கப்படாதவனாய் இருந்தான் என்பதைக் குறிக்கும் 5 வார்த்தைகள் என்ன? (அப்போஸ்தலர் 27:35)

...............................................................................

4. உணவு எப்படி ஏற்றுக் கொள்ளபட வேண்டும். (1 தீமோ 4:4)

...............................................................................

B. புசித்தலும் குடித்தலும்

1. என்னத்தை உண்போம் என்னத்தை குடிப்போம் என்று கவலைப் படக் கூடாது ஏன்? (மத்தேயு 6:31—32).

...............................................................................

2. சரியான விடையை கோடிட்டு காட்டுக "என்னத்தை உண்போம்"? அல்லது "என்னத்தை குடிப்போம்"? என்று கவலைப் படுவோமானால் நாம:

a. அக்கரையுடையவர்களாக தேவனை பிரியப்படுத்துகிறோம்.

b. தேவனுடைய நன்மைகளையும், நாம் தேவைகளை சந்திக்கும் அவருடைய திறமைகளையும் சந்தேகிக்கிறோம்.

c. "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்" (உணவு) என்று ஜெபிக்குமாறு இயேசு சீசர்களுக்கு கற்றுக் கொடுத்தார். இவ்விதமான ஜெபத்தின் மூலம் அவர்கள் முற்றிலும் தேவனை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும் என்று காண்பிக்கிறார். கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய சரியான விடையை கோடிட்டு காட்டுக,

a. நாம் தேவனிடத்தில் ஆகாரத்தை கேட்க வேண்டும் :

1. ஒரு நேரத்தில் ஒரு நாளுக்காக.
2. முழு வாரத்திற்கு போதுமான அளவு.
3. வரப்போகும் வருடங்களுக்கு தேவையானது.

b. நாம் தேவனிடம் கேட்க வேண்டியது :

1. நாம் விரும்பும் அனைத்தும்.
2. சுகபோகமான வாழ்க்கை.
3. வாழ்க்கையின் தேவை.

4. எம்மூன்று உணவிற்கு நாம் விலகி இருக்க வேண்டும்? (அப் 15:29)

a. .....................................

b. .....................................

c. .....................................

5. நம்முடைய இருதயம் புசிப்பதிலும் குடிப்பதிலும் இருக்கலாமா? (1 கொரி 10:13)

...............................................................................

6. நீதிமொழிகள் 23:20- லிருந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளி (குறிப்பு : போஜனப்பிரியன்)

a. மதுபானம் அருந்துவது தவறா? ............................

b. அதிகமாக உண்பது தவறா? ............................

7. மதுபானத்தினால் வெறி கொள்ளுகிறவர்களுக்கு சம்பவிக்கும் காரியங்களை பட்டியலிடுக. (நீதி 23:29—30)

a. ஐயோ ............................

b. .....................................

c. .....................................

d. .....................................

e. .....................................

f. .....................................

8. மதுபானத்தினால் ஒரு மனிதருக்குள் ஏற்படும் விளைவுகளாக நீதி 23:32 விளக்குவது என்ன?

9. குடியனும் போஜனப்பிரியனுமாய் இருக்கிறவர்களுக்கு வரக்கூடிய 3 காரியங்கள் என்ன? (நீதி : 22:21)

a. .....................................

b. .....................................

c. .....................................

10. எபேசியர் 5:18 –ல் விடுபட்ட வார்த்தைகளை நிரப்புக, ........................................................... வேறிகொள்ளாமல், ............................. நிறைந்து;"

C. உபவாசம்

உபவாசம் என்றால் "தன்னை தானே வெறுத்தல்". ஒரு ஆவிக்குரிய நோக்கத்திற்காக சரீரப் பிரகாரமான ஆகாரத்தை தவிர்த்தல் அல்லது கிறிஸ்துவுடன் உள்ள ஒரு நெருக்கமான தனிப்பட்ட உறவில் குறுக்கிடும் அனைத்தையும் தவிர்த்தல்.

1. தேவன் கூறும் உபவாசத்தின் 8 குறிக்கோள்கள் யாவை? (ஏசாயா 58:6—7)

a. ............................

b. ............................

c. ............................

d. ............................

e. ............................

f. ............................

g. ............................

h. ............................

2. தேவனுடைய பிள்ளைகள் உபவாசித்த வெவ்வேறு நிகழ்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சரியான வசனத்தை கோடிட்டு காட்டுக.

| | |
|---|---|
| a. தேவனுடைய நியாயத் தீர்ப்பு வரும் போது | – 2 சாமுவேல் 12:15—16 |
| b. வியாதியின் வேலையில் | – அப்போஸ் 13:2—3 |
| c. பாவத்திலிருந்து மனம் திரும்பும் போது | – அப்போஸ் 14:23 |
| d. பிசாசுகளை துரத்தும் போது | – அப்போஸ் 27:14—20, 29—34 |
| e. வழிநடத்துதல் தேவைப்படும் போது | – எஸ்றா 10:6 |
| f. ஆபத்து வேலையில் | – யோ 3:1—10 |
| g. மூப்பர்களை நியமிக்கும் போது | – மத்தேயு 17:14—21 |

3. உண்மையான உபவாசத்தினால் வரும் ஆசிர்வாதங்களளவை? (ஏசாய 58:8—11)
"............................................... உன் வெளிச்சம் எழும்பும்;

உன் சுகவாழ்வு ..................................;

உன் நீதி ............................................;

கர்த்தருடைய மகிமை ...................................;

கர்த்தர் நித்தமும் ........................................;

மகா வரட்சியான காலங்களில் ................................. ;

உன் எலும்புகளை ................................................ ;

4. மாயக்காரர் உபவாசத்திற்காக கூறும் காரணம் என்ன? (மத் 6:16)

..........................................................................................

5. உபவாசத்தின் போது நாம் யாரை பிரியப்படுத்த வேண்டும்? (மத் 6:18)

..........................................................................................

6. நம்முடைய உபவாசமும், ஜெபமும் மனிதனுக்கு முன்பாக காண்பிக்கலாமா? ............... ஆம் / இல்லை.

7. அந்தரங்கத்தில் உபவாசித்து ஜெபிப்பதினால் வரும் பலன் என்ன? (மத் 6:18)

..........................................................................................

<u>மனப்பாட வசனங்கள் :</u>

அன்றுள்ள அப்பம் 2 கொரி 9:10; மத் 6:31—32

உபவாசம் மத்தேயு 6:14; யோவேல் 2:12—13

<u>பாடம் 11 – உங்கள் தோற்றமும், பேச்சும்</u>

ஒரு மனிதனுடைய குணாதியத்தை அவனுடைய பேச்சு, உடை மற்றும் சுத்தத்தைக் கொண்டு நிர்ணயிக்கிறோம். கிறிஸ்துவின் ஸ்தானதிபதிகளாக (2 கொரி 5:20) ராஜாதி ராஜாவின் பிரதிநிதிகளாக, கிறிஸ்துவை பிரியப்படுத்தும் வகையில் நாம் பேச்சும், உடையும் அமைய வேண்டும்.

A.தூய்மை

1. உங்கள் சரீரம் என்னவாக இருக்கிறது என்று வேதம் கூறுகிறது? (கொரி 6:19)

..........................................................................................

2. ஒரு கிறிஸ்தவன் தன் சரீரத்தை எப்படி பயன்படுத்த வேண்டும்? (கொரி 6:20)

..........................................................................................

3. ஒருவன் தன் சரீரத்தை (தேவனுடைய ஆலயம்) கெடுத்தால் தேவன் என்ன செய்வார்? (கொரி 3:17)

..........................................................................................

4. தேவன் தம்முடைய ஜனங்கள் எதற்காக தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்? (லேவி 20:26)

..........................................................................................

5. எண்ணாகம்கமம் 8:21—22 ல் தேவனுடைய மக்களாகிய லேவியர்களை குறித்து பார்க்கிறோம் (சரியான பதிலை கோடிட்டு காட்டுக)

a. தேவனை சந்திப்பதற்கு முன்பு தூய்மையான வஸ்திரங்கள் தேவைப்பட்டது.

b. தூய்மைக்கும் தேவ பக்திக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

6. தேவனாகிய கர்த்தர் மோசேயிடம் ஜனங்கள் எல்லாரும் தங்கள் வஸ்திரங்களை தோய்க்கும்படி கூறியது ஏன்? (யாத்திராகமம் 19:10—11)

……………………………………………………………………………………

7. எபிரேயர் 10:22 ல் தேவனிடத்தில் நெறுங்குவதற்கான 4 நிபந்தனைகளை பார்க்கிறோம், கீழே பதில்களை பூர்த்தி செய்க:

a. ……………………... நீங்கள் தெளிக்கப்பட்ட் இருதயம் உள்ளவர்களாயும்.

b. ……………………... சரீரம் உள்ளவர்களாயும்

c. ……………………... இதயத்தோடும்.

d. ……………………... நிச்சயத்தோடும்.

8. எவ்விரண்டு காரியங்களை நம்மிலிருந்து நீக்க வேண்டும்? (2 கொரி 7:1)

……………………………………………………………………………………

B.உடை

உடையனிதல் என்பது மனிதருடைய கருத்து கருத்து தானே ஒழிய அவசியமானது அல்ல என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இதைக் குறித்து வேதாகமத்தில் தேவன் என்ன கூறி இருக்கிறார் என்று பார்ப்போம்.

1. ஆதியிலே மனிதன் தேவ மகிமையினாலே மூடப்பட்டிருந்தான் ஆதமும், ஏவாலும் பாவம் செய்த போது மகிமையின் சாயலை இழந்து தாங்கள் நிர்வாணிகளாயிருப்பதை உணர்ந்தனர். தேவன் ஆதமுக்கு அவன் மனைவிக்கும் என்ன செய்தார்? (ஆதி 3:21)

……………………………………………………………………………………

2. ஆதியிலே ஒரு மறைவுக்காகவும், பாதுகாப்புக்காகவும் உடை வழங்கப்பட்டது. ஆனால் உடைகள் உண்டாக்கப்பட்டதற்கான நோக்கத்தையே மனிதன் மாற்றிவிட்டான். தற்போது ஆடைகள் கவனத்தை நம் பக்கம் ஈர்க்கும் வண்ணம் வடிவமைக்கபட்டும், எதிர்பாலர் இடையே பாலியல் இச்சைகளை தூண்டுவதாகவும் அமைக்கப்படுகிறது. நீங்கள் உடுத்துகின்ற விதம் ஒழுக்க கேடுகளை கொண்டு வரக் கூடும். மத்தேயு 5:27—28 – ஐ வாசித்து, கீழ்வரும் கூற்றுகள் சரியா அல்லது தவறா என்று குறிப்பிடுக:

a. ஒரு ஸ்திரீயானவள் ஒரு மனிதனை வசப்படுத்துவதற்காக வெளிப்படையாக உடுத்துகிறாள் எனில் அவள் ஒழுக்கமற்றவள் என்று குற்றஞ்சாட்டப்படத்தக்கவள். (…………………)

b. ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை பார்த்தாள், இருதயத்திலே அவளோடு விபச்சாரம் செய்ததாயிற்று. (…………………)

c. ஒரு மனிதன் ஒர ஸ்திரீயை இச்சையோடு பார்த்தாள், இருதயத்திவே அவளோடு விபச்சாரம் செய்ததாயிற்று. (………………)

d. இயேசுவை பொருத்தவரை செயல்படுத்துவதை போன்றே இருதயத்தில் நினைப்பதும் மோசமானது. (…………………)

3. ஸ்திரீகள் புருஷருடைய உடைகளையும் புருஷர்கள் ஸ்திரிகளின் உடைகளையும் அணியலாமா? (உபா 22:5)

……………………………………………………………………………………

4. அப்படி செய்கிறவர்களை குறித்து தேவன் என்ன நினைக்கிறார்? (உபா 22:5)

……………………………………………………………………………………

5. நீளமாக முடி வளர்க்கும் ஆண்களை குறித்து வேதம் என்ன கூறுகிறது? (1 கொரி 11:14)

……………………………………………………………………………………

6. பெண்களுக்கு நீளமான மயிர் எதை குறிக்கிறது? (1 கொரி 11:15)

……………………………………………………………………………………

7. தற்போதைய நாகரீகம் மற்றும் பழக்கவழக்கங்களை பின்பற்றுவதில் ஒரு கிறிஸ்துவன் எப்படி இருக்க வேண்டும்? (ரோமர் 12:2)

…………………………………………………………………………………

8. “என்னத்தை உடுப்போம்” என்று கவலைப்படாதிருங்கள், “என்று கூறினார் இயேசு, (மிகவும் சரியான பதிலை கோடிட்டு காட்டுக)

a. நம் தோற்றத்தை குறித்து மிகுந்த ஜாக்கிரதை உடையவர்களாய் இருந்து, நம்முடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்கு தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்.

b. நம் உடைகளில் கவனம் செலுத்தக் கூடாது.

c. நாம் என்னத்தை உடுப்போம் என்று கவலை கொள்ள வேண்டும்.

C.உரைநடை:

தினசரி வாழ்க்கையில் பேச்சு மிக முக்கியமான பகுதியாக காணப்படுகின்றது. வார்த்தைகளை உபயோகிப்பதின் மூலம் நாம் ஒருவரோடுவொருவர் பேசிக் கொள்கிறோம்.

1. நம் சரீரத்தின் அவயங்களில் எதை அடக்குவது கடினம் என்று வேதம் குறிப்பிடுகின்றது? (யாக் 3:8)

…………………………………………………………………………………

2. வேதம் கூறுகிறது, “……………………, ……………………. ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. (யாக் 3:10)

3. ஒரு கிறிஸ்தவனுடைய வாயிலிருந்து இவ்விரண்டும் புறப்படலாமா? (யாக் 3:10) .

…………………………………………………………………………………

13. நாம் மரணபரியந்தம் உண்மையாக இருந்தால் தேவன் என்ன தருவார்? (வெளி 2:10—11).

<u>**மனப்பாட வசனம் :**</u> மரணம் 1 கொரி 15:55; 2 கெரி 5:1;வெளி 2:10—11

<u>**பாடம்: 20 பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு தேவனை சேவித்தல்**</u>

நாம் அவரை சேவிக்கும்படியாகவே இரட்சிக்கபட்டிருக்கிறோம். இது நம்முடைய சிலாக்கியம் மட்டுமல்ல, கர்த்தருக்காக சாட்சியாக வாழ்வது நமது கடமையாககம் நாம் சேர்நதமாக இந்த இலட்சித்தை அடைய முடியாது என்றார். (யோ 15:5). ஆனால் என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு.'' (பிலி 4:13) என்பதற்காக கர்த்தரை துதியுங்கள். இயேசு நம் பெலவீனங்களை அறிந்திருக்கிறார். ஆகவே தான் ஊழியஞ் செய்வதற்கேற்ற பெலனை அருளும் பரிசுத்த ஆவியானவருக்காக காத்திருக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார். இந்த வல்லமையே திடனற்றவர்களாய், வல்லமையற்றவர்களாய் கிறிஸ்துவை பின்பற்றிய சீஷர்களை, உறுதியான பயமற்ற சாட்சிகளாய் மாற்றியது நாமும் கர்த்தருக்காக ஒரு வல்லமையுள்ள சாட்சிகளாய் மாற வேண்டுமெனில் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டியது அவசியம்.

ய) ஞானஸ்நானம் அல்லது பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவதற்கான நோக்கம் என்ன.

1. <u>**அப்போஸ்தலர் 1:8—ல் பரிசுத்த ஆவியை பெறுவதற்கான இரண்டு காரணங்களைப் பார்க்கிறோம.**</u>

ய) ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள்——————————

டி)நீங்கள்———————————

<u>**2. ஞானஸ்நானம் அல்லது பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவதற்கு முதன்மையான நோக்கம்,**</u>

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையை சுத்திகரித்து வல்லமையடைய செய்வதேயாம். வேதாகமத்தில் தேவ ஆவியானவரைக் குறிக்க 'பரிசுத்த' என்கிற உரிச்சொல் 90 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் செய்யும் வேறு சில காரியங்கள் என்ன?

ய) ரோமர் 5:5, ''பரிசுத்த ஆவியினாலே——————————நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது.''

டி) யோவான் 14:26'' அவரே எல்லாவற்றையும் உங்களுக்கு ——————————

உ) யோவான் 16:13'' அவர் வரும்போது உங்களை ——————————“

ன) யோவான் 16:13'' வரப்போகிற காரியங்கள் உங்களுக்கு ——————————“

ந) யோவான் 16:14'' அவர் ————————————"

**3. இயேசு பரிசுத்த ஆவியினாலே பிறந்தார் என்று வேதம் கூறுகிறது( மத் 1:18—20)**
அவருடைய வாழ்க்கை முழுவதும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டது. அவருடைய ஞானஸ்தானத்தின் போது தேவ ஆவியானவர் செய்தது என்ன (லூாக்கா 3:21—22).——————————————————————————————

4. **இயேசு ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றவுடனே,** "பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவாய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்திரத்திற்கு கொண்டு போகப்பட்டார் (லூாக்க 4:1) லூாக்கா 4:14 மற்றும் அப்போஸ்தலர் 10:38 ஆகிய வசனங்களில் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து இயேசு பெற்றுக் கொண்டதாக கூறப்படும் நான்கு எழுத்து சொல்லைக் குறிப்பிடுக——————————————————————————————

**டீ) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இன்றைய நாட்களில் காப்படுகிறதா?**
பல நூற்றாண்டுகளாக தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட ஒவ்வொருவருமே உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்பட்டிருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்கிற அனுபவத்திற்க்கு நேராக நடத்தப்படும் நான் வரை ஃபின்னி, பிரெய்னாட், மூடி மற்றும் அநேகர் தங்களால் இயன்ற மட்டும் சிறப்பானதை செய்தனர். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெற்ற மாத்திரத்தில் ஆராதனையின் குணாதியத்தையே முற்றிலுமாக உருமாற்றக் கூடிய ஒரு புதிய வல்லமை அவர்களுடைய ஊழியத்தில் வந்தது.
"ஆவியின் பிரசன்னத்தையும் அவருடைய கிரியைகளையும் நம் இருதயத்தில் பெறுவது முற்றிலும் சாத்தியமானதே. ஆயினும் வேதத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அல்லது நிறைவாக அறியப்படும். அந்த விசேஷமான நிறைவு மற்றும் கிரியையில் குறைவுப்படுகிறோம். என்று கூறுகிறார். சு.யு. (வுழசசநல) டோர்ரி.
"பெந்தேகொஸ்தேயின் ரகசியங்களில் ஒன்றை பரிசுத்த ஆவியை வலியுறுத்தும் முக்கியமான சபைகள் கற்றுக் கொள்ள முடியாதது எனக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கிறது. பரிசுத்த ஆவியானவருக்கு சரியான நேரத்தைக் கொடுக்கும் வேளை வந்துவிட்டது.'' என்கிறார் டாக்டர். பில்லி கிராஹாம்..

**பரிசுத்த ஆவியின் ஞானஸ்நாத்தைக் குறித்து கற்றுக் கொள்வது அவசியம்.**
பவுல் "ஆவியில் நிறைந்து'' என்று எழுதும் போது எதை குறிப்பிட விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பும் சொல்பதத்தைக் கொடுக்கலாம். ஆதிதிருச்சபை பெற்றிருந்த அதே வல்லமை நமக்கிராதபடியால் எதையாகிலும் பெறும்படி நாம் ஏற்றுக் கொள்வது அவசியம்.

1. யோவேல் தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக பரிசுத்த ஆவியானவர் தங்கள் மீது ஊற்றப்பட்டதை பேதுரு விளக்குகிறார். பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஜனங்கள் செய்ய வேண்டுமென பேதுரு கூறும் இரண்டு காரியங்கள் எவை?(அப் 2:38).
ய)—————————————————————————————————
டி)—————————————————————————————————

2. அடுத்த வசனத்தில் யோவேலின் வாக்குதத்தம் யாருக்காக கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வசனத்தைப் பூர்த்தி செய்க:— (யோவேலின்) வாக்குத்தத்தமானது ——————————————————(நிகழ்கால சந்ததி)——————————(அடுத்த சந்ததி) நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும்—————————————(வருங்கால சந்ததி)''(அப் 2:39).

3. எபேசியர் 5:18ல் நிகழ்கால தெடர்வினையில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளை யாது?

**முக்கியமான குறிப்பு:**

கவனிக்க வேண்டிய முக்கியமான குறிப்பு என்னவெனில், இயேசுவானவர் ஆவியினாலே பிறந்து, ஆவியினாலே ஒரு பூரணமாக்கப்பட்ட பரிசுத்தமான ஜீவியம் செய்து, அதுமட்டுமினி தம்முடைய மூன்று வருட ஊழியத்திற்கு அதே ஆவியினுடைய அபிஷேகத்தைப் பெற்றார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும், அபிஷேகததையும் பெறும் வரை அவர் அற்புதங்கள் செய்யத் தொடங்கவுமில்லை. சமுதாயத்தில் உண்மையான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவுமில்லை. (அப்போஸ்தலர் 10:38: லூக்கா 4:15—15).

**ஊ) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பிலிருந்து வேறுபட்ட ஒரு அனுபவமா?**

வேதாகமத்தில் மூன்று ஞானஸ்நானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாகும்படி ஆவியினாலே ஞானஸ்நானம் இரட்சிக்கப்படுகிற வேளையில் இடம் பெறுவது (1 கெரி 12:13). இரண்டாவதாக, பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைக்கிறீர்கள் என்பதின் வெளிப்படையான அடையாளமாக பெறும் திருமுழுக்கு (தண்ணீர் ஞானஸ்நானம்) (ரோமர் 12:13). மூன்றாவதாக, கர்த்தருக்கென்று ஒரு வல்லமையுள்ள சாட்சியாக மாறும்படி பரிசுத்த ஆவியானவருக்குள்ளே குமாரன் மூலமாய் பெறும் ஞானஸ்நானம். (அப்பே 1:8; (யோவ1:33)

**1. சரியான விடையை கோடிட்டு காட்டுக:—**

ய)முதலாம் ஞானஸ்நானம் ஆராதனை ஃசுத்திகரிப்புஃஇரட்சிப்பு இவற்றோடு தொடர்புடையது.

டி)இரண்டாம் ஞானஸ்நானம் ஆராதனைஃசுத்திகரிப்புஃஇரட்சிப்பு இவற்றோடு தொடர்புடையது.

உ)மூன்றாம் ஞானஸ்நானம் ஆராதனை ஃசுத்திகரிப்புஃஇரட்சிப்பு இவற்றோடு தொடர்புடையது.

2. **தண்ணீரை வைத்து பரிசுத்த ஆவியானவர்** என்ன செய்கிறார் என்பதற்கு எளிமையான உதாரணம். நீங்கள் இரட்சிக்கப்படுவது தண்ணீர் குடிப்பதை போன்றது. **உங்கள் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறீர்கள்.** தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவது தண்ணீரால் கழுவுவதற்கு ஒப்புமைப்படுத்தாலம். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டிருக்கிறீர்கள் என்பதற்கான ஒரு அடையாளம். பரிசுத்த ஆவியானவரால் ஒரு நீச்சல் குளத்தினுள் குதிப்பதை போன்றது. நீங்கள் இனி ஒருக்காலும் தண்ணீரை பற்றிக் கொள்வதில்லை. இப்பொழுது தண்ணீரானது உங்களை பற்றிக் கொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் உங்களைப் பெற்றுக் கொள்கிறார்(கட்டுப்படுத்துகிறார்). வேதத்திலுள்ள இம்முறையை கவனியுங்கள்.

**சரியான வசனத்திற்கு நேராக கோடிட்டு காட்டுக:**

ய).இயேசு ஆவியினாலே பிறந்தார் ——— மத் 3:16

டி) பவுல்(சவுல்) தமஸ்குவுக்கு போகிற வழியிலே இரட்சிக்கப்பட்டான்——— அப் 9:18

உ)இயேசு யோர்தானிலே ஞானஸ்நானம் பெற்றார் ——— மத் 1:20

ன)பவுல் பரிசுத்த ஆவியினாலே நிறைந்திருந்தர் ——— அப் 9:5—6

ந)இயேசு பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார் ——— மத் 3:13

க) பவுல் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார் ——— அப் 9:17

**வேதத்திலுள்ள இம்முறையை கவனித்து, சரியான வசனத்திற்கு நேராக கோடிட்டு காட்டுக.**

ய).சமாரியாவிலுள்ள ஜனங்ள் இரட்சிக்கப்பட்டார்கள் ——— அப் 8:17

டி)எபேசுவில் சிஷர்களில் சிலர் இருந்தனர் ——— அப் 19:6
உ)சமாரியாவின் ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றார் ——— அப் 8:14
ன)சமாரியாவின் ஜனங்கள் பரிசுத்த ஆவியை பெற்றனர் ——— அப் 8:16
ந)சிஷர்கள் பரிசுத்த ஆவியியை பெற்றனர் ——— அப் 8:16

<u>ஞானஸ்நானம் அல்லது பரிசுத்த ஆவியின் நிறைவை பெறுவது எப்படி?</u>

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது நீங்கள் பெற்ற இரட்சிப்பை போல விசுவாசத்தைக் கொண்டு பெறக்கூடிய ஒரு வரம் ஆகும். (அப் 2:38).

1. பரிசுத்த ஆவியின் இவ்வரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய சில படிகள் என்ன? (ஒரிரு வார்த்தைகளில் விடையளி)

ய) அப் 2:38——————————————
டி) அப் 5:32——————————————
உ) அப் 7:37——————————————
ன) அப் 7:38—39——————————————
ந) அப் 11:13——————————————

பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றுக் கொண்டதற்கான ஆதாரங்கள் சிலவற்றை கூறு?( சொந்த வார்த்தைகளில் விடையளி)

ய) அப் 1:18——————————————
டி) ரோமர் 5:15——————————————
உ) அப் 4:31——————————————
ன) அப் 19:6——————————————
ந) யோவான்16:14——————————————

3. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அல்லது நிறைவின் ஆரம்பத்தை நம்மில் பெற வேண்டியது மிகவும் அவசியம். இந்த அனுபவம் மட்டுமே நம்முடைய பாதையின் முடிவு அல்ல என்பதை நாம் உணர வேண்டும. ஆவியில் ஒரு நிறைவான திருப்தியான வாழ்க்கையை பெற இது ஒரு படிக்கல் மட்டுமே ஆகும். தினந்தோறும் பாவத்தை சுத்திகரித்தல், வேத வசனத்தை உட்கொள்ளுதல், கர்த்தரோடு ஐக்கியம் கொள்வதல், ஆவியின் உருவாக்குதலுக்கு கிழ்ப்படிதல், ஆபியினால் நிரப்பப்படுதல் ஆகிய இவையெல்லாம் ஆவிக்குள்ளான கிறிஸ்தவ நடக்கையில் அடங்கும். ஆவியின் நிறைவோ நடத்தும் வாழ்க்கை குறித்த வெவ்வேறு கண்ணோட்டங்களை வெளிப்படுத்தும் பின்வரும் வசனங்களை பூர்த்தி செய்க:—

ய) **அன்றாட சுத்திகரிப்பு—** “என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி,——————————————————————————“(சங்கீதம் 51:2).

டி) **அன்றாட வேதவாசிப்பு—** “இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டு பிரியாதிருப்பதாக;இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி—————————————————————— அப்பொழுது நீ உன் ———————————————————————அப்பொழுது ————————————————————————— “(யோசுவா 1:8).

உ) **அன்றாட ஐக்கியம்—** “ஒருவன்———————————————நான் அவனிலும்——————————————அவன்————————————————கொடுப்பான்;“(யோவான் 15:5).

ன) **அன்றாட கீழ்ப்படிதல்—** “தேவன் நமக்கு,————————————————தந்தருளின பரிசுத்த ஆவியும்———————————“( அப்போஸ்தலர் 5:32).

ன) **அன்றாட நிறைவு—** “துன்மார்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ,——————————————————————————“(எபேசியர் 5:18).

**<u>மனப்பாட வசனம்:</u>**

**பரிசுத்த ஆவியின் வல்லமையோடு தேவனை சேவித்தல்:**

1. அப்போஸ்தலர் 1:8
2. லூக்கா 11:11—13
3. அப்போஸ்தலர் 2:38

<u>பாடம்— 21</u>

இயேசு கிறிஸ்துவை ஒரு மரச்சிலுவையில் ஆணியடித்து தரணததிற்குட்படுத்திய போது, துன்மார்க்கர் தங்கள் வாழ்க்கை பாதையில் குறுக்கிட்ட ஒரு மனிதனுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டோம் என்று எண்ணினார். உலக தோற்றத்துக்கு முன்னதாகவே சிலுவை என்பது தேவனால் திட்டம் பண்ணப்பட்டது என்பதை அவர்கள் உணராதவர்களாய் இருந்தார்கள்.

**<u>1) தேவன் எல்லா பாவங்களையும்(கையாள்கிறார்) தீர்த்து வைக்கிறார்.</u>**

சிலுவையில் தம்முடைய குமாரனின் மரணத்தின் மூலம் சிருஷ்டிகராகிய மாதேவன் ஒவ்வொருவருடைய பாவத்தையும், பாடுகளையும், துக்கங்களையும் சிலுவையில் நமக்காக நிறைவேற்றியதைப் பெற்றுக் கொள்ளும்போது நம்முடைய அனைத்து தேவைகளுக்கு பதில் கிடைக்கிறது.

2. **<u>சிலுவையின் மூலம் தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார்.</u>**

"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது"( 1 கொரி 1:18) ரோமர் 1:16—ஐ பார்க்கவும்.

3. **<u>சிலுவையில் தேவன் தமது அன்பைக் காண்பிக்கிறார்</u>**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்"(ஏசா 53:4).

4. **<u>சிலுவையிலே இயேசு நம் பாவங்களுக்கான தண்டனையை ஏற்றார்.</u>**

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்: நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்..... நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணிார். (ஏசா 53:5—டு) 1 பேதுரு 2:24—ஐ பார்க்கவும்.

**<u>சிலுவையினாலே தேவனோடுள்ள உறவு புதுப்பிக்கப்பட்டது</u>**

தேவன் பரிசுத்தமும், நீதியுமுள்ளவராகயைால் பாவம் நம்மை அவரிடம் இருந்து பிரிக்கிறது. தங்களுடைய இருதயத்தில் பாவமுள்ள ஒருவரும் அவருடைய பிரசன்னத்தில் இருக்கமுடியாது. ஆகவே சிலுவையில் மரித்ததினால் இயேசு நம் பாவங்களை சுமந்தது மட்டுமில்லாமல், தேவனை தனிப்பட் முறையில் அறிந்துக் கொள்ளவும், அவரோடு ஐக்கியம் கொள்வதினால் வரும் அன்பு, சமாதானம் மற்றும் சந்தோஷத்தை அனுபவிக்கவும் வழி வகுத்திருக்கிறார்.

1.**<u>சிலுவையினாலே நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படதக்கவர்களானோம்.</u>**

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.(2 கொரி 5:21).

2. **<u>சிலுவையினாலே மன்னிப்பை பெற்றுக் கொள்கிறோம்.</u>**

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறேம். அவருக்குள் பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."(கொலோ 1:13—14) 1 யோவான் 2:1—2 பார்க்கவும்.

**<u>3. சிலுவையினாலே தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக்கபட்டிருக்கிறோம்.</u>**

“பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமிமத்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்து பாடுவேன்.”(எபி 2:11—12) யோவான் 1:12—ஐ காண்க.

4. <u>சிலுவையினாலே மனித வர்கத்த்தில் காணப்பட்ட தடைகள் உடைக்கப்பட்டன.</u>

“முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமிபமானீர்கள், எப்படியெனில் அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையம் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணததைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படி சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.(எபே 2:13—16).

ஊ. <u>சிலுவையினால் விடுதலை</u>

இயேசுவின் சிலுவை மரணம் நமக்கொரு மாபெரும் வெற்றியாகும். ஏனெனில் தேவன் தாமே சிலுவையில் நம் பாவங்களைத் தீர்த்தார். அப்படியெனில் பாவத்தின் பலனாகிய வேதனையும், பாடுகளும் கூட தீர்க்கப்பட்டன. நமக்கு சிலுவை ஒரு பெரிய விடுதலையைப் பெற்றுத் தந்திருக்கிறது.

<u>1. சாத்தானிடமிருந்து விடுதலை</u>

“துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்.”(கொலோ 2:15) கொலோ 1:13—ஐ பார்க்கவும்.

<u>2. கடந்த கால பாவங்களிலிருந்து விடுதலை</u>

“ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்”(யோவான் 8:36) கொலோ 2:13—ஐ பார்க்கவும்.

<u>3. தற்கால பாவங்களிலிருந்து விடுதலை.</u>

“நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.”(ரோமர் 6:14).

<u>4. நோயினின்று விடுதலை</u>

“அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.”(மத்தேயு 8:17).

<u>5. சாபத்தினின்று விடுதலை</u>

“மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்”(கலா 3:13 உபா 28:15—68).

<u>6. நியாயத்தீர்பினின்று விடுதலை</u>

“உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம பாடுபட வேண்டியதாய் இருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத் தாமே பிலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார். அன்றியும், ஓரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது”(எபி 9:26—27).

<u>7. நித்திய மரணத்தினின்று விடுதலை</u>

“தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்க, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலத்தில் அன்புகூர்ந்தார்”(யோவான் 3:16).

**னு. சிலுவையிலே அன்பும், நியாயமும் ஒன்றெயொன்று சந்திக்கின்றன.**

பாவத்திற்கு பரிகாரமான மரணத்தை தேவனுடைய அன்பும், நீதியான நியாயத்தீர்ப்பும் இரத்தஞ்சிந்துதலினாலே சிலுவையில் செலுத்தி தீர்க்கப்பட்டன. அவருடைய அன்பே அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றியது. தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து நமக்கு பதிலாக மரித்தார்.

ஆனால் தேவனோ நம்மேல் வைத்த அன்பை இவ்விதமாக வெளிப்படுத்தினார்;''நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துரக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணததினாலே அவருடனே ஒப்புரவாக்ககப்பட்டோமானல், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மை பாராட்டுகிறாம் (ரோமர் 5:8—11).

**நு. சிலுவையே சரித்திரத்தின் மையமாக காணப்படுகிறது.**

பூமியிலே மனித குலத்தின் வாழ்க்கைக்கு மையப்புள்ளி இயேசு கிறிஸ்துவின் சிலுவையே ஆகும். முதல் மனிதனும், மனுஷியும் பாவம் செய்த அந்தகூஷமே இயேசு சிலுவையில் மரிக்க வேண்டுமென்பதை தேவன் முன்கூட்டியே திட்டமிட்டிருந்தார். (ஆதி 3 பார்க்கவும்) அந்நேர முதல் ஜனங்கள் இரட்சிக்கும்படி சிலுவையில் நிறைவேற்றப்பட போகின்றவைகளாக தேவன் வாக்கு பண்ணினவைகளை மக்கள் எதிர்நோக்கிப் பார்த்தனர். இன்று நாமோ சிலுவையில் இயேசு நமக்காக செய்தவற்றை பின்னோக்கிப் பார்த்து, விசுவாசித்து மன்னிப்பையும், புது வாழ்வையும் பெற்றுக் கொள்கிறோம.

**எனது அர்ப்பணிப்பு**

இயேசு சிலுவையில் மரித்த போது தேவன் எனக்காக செய்தவைகளை இன்று நான் முழுமையாக நம்புகிறேன். என்னுடைய பாவங்களுக்கு அவர் தண்டனையை ஏற்றார் என்பதையும், அதினிமித்தமாக தேவன் அளிக்கும் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டேன் என்பதையும் விசுவாசிக்கிறேன். அதனால் இன்று அவரோடு ஏற்படுத்தப்பட்டிருக்கிற உறவுக்காக நன்றி செலுத்துகிறேன். தேவனோடு ஏற்படுத்தப்பட்ட இந்த தனிப்பட்ட உறவில் நாடோறும் நிலைத்திருக்கவும், இந்த சத்தியத்தை மற்றவர்களோடு பகிர்வதற்கு என்னை அர்ப்பணிக்கவும் இன்று தீர்மானிக்கிறேன்.

## பாடம் 22— கிறிஸ்துவின் இரத்தம்

நாம் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவும், தேவ சமூகத்தில் பிரவேசிப்பதற்கும் முக்கியமான காரணி இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தம் ஆகும். ''இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை''(எபி 9:22)

**யு. இரத்தத்தில் உயிர் இருக்கிறது.**

''மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்கு பரிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே''(லேவி 17:11)

நாம் பாவம் செய்யும்போது மரணத்தை சம்பாதிக்கிறோம். ''பாவத்தின் சம்பளம் மரணம்''(ரோம 6:23) இயேசு தம்முடைய இரத்தத்தைச் சிந்தி பரிகாரத்தைச் செலுத்தினார். (நம் சார்பாக மரித்தல்) பாவநிவிர்த்தி ஆங்கிலத்தில் ***யுவழநெஅநவெ*** (***அட்டோன்மெண்ட்***) என்று கூறப்படுகிறது. அதாவது ***யுவ—ழநெ—அநவெ*** என்றால் (***யுவ ழுநே றவைா புழன***) தேவனோடு ஒன்றாகுதல் என்று அர்த்தமாகும். இயேசு நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு நம்மை ஒன்றாக்கம்படி சிலுவையில் தம் ஜீவன் விட்டார். (தம் இரத்தத்தைச் சிந்தினார். நாம் தேவனோடு ஒன்றாகி ஐக்கியம் கொள்வதற்கு வழி வகுத்தார். இயேசுவின் இரத்தம் என்றால் நாம் இனி அருடைய சத்துருக்களாயிரமல், அவருக்கு சிநேகிதராகவும், குமாரர்,

குமாரத்திகளாகவும் இருக்கிறோம். விசுவாசதினால் அவர் நமக்காக செய்தவற்றை பெற்றுக் கொள்கிறோம்.

**டீ. பாவம் ஏன் வாழ்க்கையில செய்தது என்ன?**

**1. தேவனிடமிருந்து பிரிக்கிறது.**

" உங்கள் அக்கிரமங்களை உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசா 59:2).

**2. நம்முடைய குற்றத்தைச் சுமையாக்குகிறது.**

"என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப் போல என்னால தாங்கக் கூடாத பாரமாயிற்று" (சங்கீ 38:4).

**3. சாத்தான் நம்மை குற்றப்படுத்துவதற்கு அனுமதிக்கிறது.**

" இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் .."(வெளி 12:10).

**4. மரணத்தை பரிகாரமாக வாங்குகிறது.**

"பாவசெய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே 18:4).

கிறிஸ்துவினுடைய இரத்தம் நம்முடைய எல்லா தேவைகளையும் சந்திக்கிறது:

ஊ**. இரத்தம் தேவனுக்காக சிந்தப்பட்டது.**

கிறிஸ்துவின் இரத்தம் நியாயப்பிரமாணத்தை மீறுவதினிமித்தம் பரிகாரத்தை எதிர்பார்க்கிற தேவனுடைய பிரமாணத்தை முழுமையாக திருப்தியாக்குகிறது. "நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்" என்று 1 யோவான் 3:4) ல் கூறுகிறது.

நியாயப்பிரமாணத்தை மீறுவதினால் உண்டாகும் பரிகாரத்திலிருந்து (மரணம்) இரத்தம் நம்மை பாதுகாக்கின்றது. யாத்திராகமம் 12—ம் அதிகாரத்தில் தலைச்சன் பிள்ளைகளை சங்காரம் பண்ணும்படி வந்த சங்கார தூதனிடமிருந்து இஸ்ரவேல் புத்திரரை காக்கும்படிக்கு தேவன் அவர்களுடைய வீட்டு நிலைக்கால்களில் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை பூசும்படி கட்டடையிட்டார்.

இந்த ஆட்டுக்குட்டியானது பின்னர் வரப்போகிற ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை காண்பிக்கிறது.".. அந்த இரத்தத்தை நான் கண்டு உங்களை கடந்து போவேன....."(வச 13)

**1. ஐக்கியம் மீண்டும் பெறப்பட்டது.**

"நாம் பாவிகாளயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக் நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே"( ரோமர் 5:8—9).

**2. நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் (அடிமைத்தனத்திலிருந்து விலை கொடுத்து வாங்கப் பட்டிருக்கிறோம்)**

"அவருடைய கிருபையின் ஐசுவர்யத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்டு இவருக்குள் நமக்கு உணடாயிருக்கிறது. (எபே 1:7).

னு. இரத்தம் மனிதனுக்காக சிந்தப்பட்டது.

"இரத்தம் தேவனை திருப்திப்படுத்திவிட்டது; இப்பொழுதோ நம்முடைய குற்ற மனசாட்சியை கழுவி சுத்திகரித்து நமக்கு திருப்தியளிக்க வேண்டும்.

**1. இரத்தம் குற்றங்களை சுத்திகரிக்கிண்றது.**

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியைகாளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபிரேயர் 9:14).

**2. இரத்தம் நம்மை பரிசுத்தமாக்குகிறது.**

“அந்தப்படியே இயேசுவும் தம்முடைய இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்” (எபி 13:12)

**3. இரத்தம் நம்மை தேவனோடு ஒப்புரவாக்குகின்றது.**

“அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்க் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும். குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் நமக்கு முன் நிறுத்தும்படியாக ............ இப்பொழுது ஒப்புரவாக்கினார். (கொலே 1:20,22).

4. **இரத்தம் தேவ சமூகத்தில் பிரவேசிப்பதற்கு தைரியத்தைக் கொடுக்கிறது.** “ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தல்தில் பிரவேசிப்தற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்......துர் மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்ளாயும், சுமத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி 10:19—22).

**5. இரத்தம் நம்மை தேவனுடைய பார்வையில் பூரணப்படுத்துகின்றது.**

“ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரண்படுத்தியருக்கிறார்.“(எபி10:14).

**ஙு. இரத்தம் பிசாசினிமித்தம் சிந்தப்பட்டது.**

இக்காலத்தில் சாத்தானுடைய மிக தந்திரமான செயல் சகோதரர்களைக் குற்றப்படுத்துவது ஆகும். (வெளி 12:10). கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே...... அவனை எதிர்த்தார். (எபி 9:11—14)

**1.இரத்தம் பிசாசுக்கு எதிராக தேவனை மனிதனுக்கருகில் கொண்டு வருகிறது.**

“இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நனக்கு விரோதமாய் இருப்பவன் யார்? தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. (ரோமர் 8:31—33—34).

கிறிஸ்து சிந்திய இரத்தத்தினாலுண்டான கிரியைகளைப், பெற்றவர்களை குற்றஞ்சுமத்துவதற்கு பிசாசுக்கு யாதொரு காரணமும் இல்லை.

2**. சாத்தான் சொந்தங் கொண்டாடக்கூடிய அனைத்து சட்டப்பூர்வமான அனைத்து உரிமைகளையும் இரத்தம் பறித்து விடுகிறது.**

“.... நம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை” (அப் 20:28) 1 கொரி 6:19—20; 1 தீமோ 2:6—ஐ பார்க்கவும்.

**கு. கிறிஸ்துவினுடைய இரத்தம் நமக்கு எதை கொடுக்கிறது?**

“அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனகாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.”( 1 யோவான் 1:7).

**2. நித்திய ஜீவன்**

“அதற்கு இயேசு அவர்களை நோக்கி; நீங்கள் மனுஷக்குமாரனுடைய மாம்சத்தைப் பசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறறேன்.

“என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்”(யோவான் 6:53—54).

**3. தேவனிடம் சேருதல்.**

“முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்” (எபே 2:13).

**என் அர்ப்பணிப்பு**

இயேசு சிந்திய இரத்தம் தேவனுக்கம், சாத்தானுக்கும், எனக்கும் எதை செய்தது என்பதை இப்பொழுது புரிந்து கொண்டேன். கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்து பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கு என்னை அர்ப்ப ணிக்கிறேன். என் பாவங்களை மன்னிக்கும்படியாகவும், என்னை சுத்திகரித்து பிசாசின் தீமையினின்று என்னை காக்கும்படியாகவும் தேவன் என்னோடு ஏற்படுத்தின உடன்படிக்கையை அடிக்கடி நினைவுக்கூருவேன்.

**பாடம்—23 சோதனை**

**யு. சாத்தானின் தாக்குதல்கள்**

சாத்தான் பெரும்பாலும் ஒரு கிறிஸ்தவனை சோதனையின் மூலமாகவே தாக்குகிறான். இவன் இரண்டு பகுதிகளில் கடுமையாக தாக்கும்படி குறி வைக்கிறான்.

**1.உலகத்தின் இச்சை**

ஒரு விசுவாசி உலக அமைப்புகளினால் ஈர்க்கப்படும்படி சோதிக்க முற்படுவான்.

சூ உலகம் கொடுக்கிற பொருளாதர ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பிரதான விருப்பம்.

சூ உலகத்தால் அங்கீகரிப்படவும், கனப்படுத்தப்படவும் வேண்டும் என்கிற முக்கியமான குறிக்கோள்.

சூ பாதுகாப்பான வாழ்க்கைக்க அடித்தளமாக உலகத்தில் ஒரு வசதியான வாழ்க்கையை ஏற்படுத்தி கொள்ளுதல்.

சூ உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் ; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. (1 யோவான் 2:15) யாக்கோபு 4:14; 1 தீமோத்தேயு 6:6—11

**2. மாம்சத்தின் இச்சை**

கிறிஸ்துவானவர் சிலுவையில் நிறைவேற்றின கிரியையினால் ஒரு மெய்யான கிறிஸ்தவன் பாவத்தின் விளைவுகளிலுந்தும்., பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான் (ரோம 6:6—14). ஆனாலும் அவன் இயற்கையான விருப்பங்களும், வாஞ்சைகளும் அடங்கிய சரீரத்ததோடே வாழ்கிறான். ஆகையால் ஒரு கிறிஸ்தவன் தனக்குள்ளே கிரியை செய்கிற பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், சரீரப்பிரகாரமான காரியங்களுக்கே முக்கியத்துவம் கொடுப்பவர்களாக மாற்றும்படி முயற்சிக்க சாத்தான் சரீர சம்பந்தமான காரியங்களைப் பயன்படுத்துறிான்.(ரோமர் 8:5—9), யாக்கோபு 1:14; எபேசியர் 2:3 இவற்றைக் காண்க.

**டீ சாத்தானுடைய உண்மையான வெற்றி**

முதல் மனிதனையும், முதல் மனுஷியையும் சோதனைக்குட்படுத்தி சாத்தான் பெற்ற ஜெயமானது உலகம் மற்றும் மாம்சம் சம்பந்தமான பகுதிகளில் மட்டுமே இன்றைய உலகிலும் அவன் பயன்படுத்தும் தந்திரங்கள் இவைகளே.

"ஏனெனில் **<u>மாம்சத்தின் இச்சையும்</u>**(சிற்றின்பத்திற்காக பேராசை கொள்தல்), **<u>கண்களின் இச்சையும்</u>**(மனதில் பேராசையான ஏக்கங்கள்), **<u>ஜீவனத்தின் பெருமையுமாகிய</u>** (ஒருவன் தனது சொந்த ஆதாரங்கள் அல்லது உறுதியான பூமிக்குரிய காரியங்களைக் குறித்த நிச்சயம் உடையவனாயிருத்தல் உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்"(1 யோவான் 2:16).

**ஏவாளின் சோதனையை இவ்வசனத்தோடு ஒப்பிடுக;**

**ஆதியாகமம் 3:6 1 யோவான் 2:16**

—புசிப்புக்கு நல்லது — "மாம்சத்தின் இச்சை"

— கண்களுக்கு பிரியமானது — "கண்களின் இச்சை"

— ஞானத்தை பெற்றுக் கொள்ள இச்சிக்கப்படதக்கது — "ஜீவனத்தின் பெருமை"

ஆதாம், ஏவாள் வீழ்ச்சியடைந்தது முதற்கொண்டு மனித வர்க்கம் முழுவதும் தங்களின் மாம்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றன. (மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள்)

பாவ சுபவத்தினால் மாம்சம் கெட்டுப் போய்விட்டது (கால 5: 19—21)

**<u>ஊ. கிறிஸ்து பெற்ற வெற்றி</u>**

**<u>1. நமது ஜீவனின் மூலமாக</u>**

இயேசு எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், "பாவமில்லாதவராய் இருந்தார்."(எபி 4:15).

**<u>இயேசுவின் சோதனையை இவ்வசனத்தோடு ஒப்பிடுக</u>**

லூக்கா 4:1—13 1 யோவான் 2:16

கல்லுகள் அப்பமாக்குவது —"மாம்சத்தின் இச்சை"

பூமியின் ராஜ்யங்கள் — "கண்களின் இச்சை"

தேவாலயத்து உப்பரிகை —"ஜீவனத்தின் பெருமை"

**<u>2. தமது மரணம் மற்றும் உயிர்தெழுதலின் மூலம்</u>**

ஒரு கிறிஸ்தவனை பாவ பிடியிலிருந்தும், வல்லமையிலிருந்தும் விடுவிப்பது கிறிஸ்துவின் கிரியையை உரிமையாக்கிக் கொள்வதும் விசுவாசமே ஆகும் (ரோம 8:9).

இப்பொழுது அவன் தேவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதை தேர்ந்தெடுத்து விடுதலையாயிருக்கிறான் (ரோம 6:8—14).

"அதெப்படியெனில் மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை வேனே செய்யும்படிக்க, பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாய்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார் (ரோமர் 8:3—4).

**<u>னு. கிறிஸ்துவின் தொடர் வெற்றி</u>**

கிறிஸ்து நமக்காக மாபெரும் வெற்றி அமைகின்றது. ஆகவே இப்போது ஒரு கிறிஸ்தவன் சத்துருவினால் வரும் எந்த தாக்குதலையும் தோற்க்கடிக்க முடியும். தொடர் வெற்றிக்கு அடிப்படையான ஏழு காரியங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

**<u>1. ஜெயம் பெற்றாயிற்று என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும்.</u>**

பிசாசானவன் சிலுவையில் தோற்கடிக்கப்பட்டிபடியினாலே இப்பொழுது அவனுக்கு இருக்கக்கூடிய ஒரே பலம் கிறிஸ்தவர்களின் அறியாமையை கண்டறிவது தான்.(ஓசியா 4:6). ஆனால் ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்வில் சிலுவை மற்றும் உயிர்தெழுதலின் முழுமையான கிரியையை அறிந்துகொள்ளும் போது தனக்கு எதிராக பிசாசு தொடுக்கும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.

**<u>2. ஆவியோடு நடக்க வேண்டும்.</u>**

ஒரு கிறிஸ்தவனுக்குள்ளே பரிசுத்த ஆவியாகிய ஒரு புதிய வல்லமை இடம் பிடிக்கிறது. ஒவ்வொரு நாளும் அவரது உள்ளான கிரியைக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். (கால 5:22—25)

**2. சோதனை எதற்காக என்பதை கண்டறிய வேண்டும்.**

சோதிக்கப்படுவது ஒரு **பாவமல்ல.** ஆனால் சோதனைக்குட்படுவதே பாவம் ஆகும்.(யாக் 1:15) ஆதியாகமம் 4:6—7—ஐ பார்க்கவும்.

**4. தப்பிச் செல்வதற்கான வழி உண்டென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்ல. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு 'அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.'' (1 கொரி 10:13) தப்பித்துக் கொள்ளும் வழியை யாக்கோபு 4:7 விவரிக்கிறது; தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது உங்களை விட்டு ஓடிப்போவான்.

**5. சரியான கண்ணோட்டத்துடன் வாழ்க்கையைப் பார்க்க வேண்டும்.**

''நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலு பாரிசத்தில் வீற்றிருக்கம் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்வைளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்''(கொலோ 3:1—2; பிலிப் 3:8; 1 தீமோத்தேயு 6:11—12; 2 பேதுரு 3:11—13 காண்க.

**6.சோதனைக்குட்படும் தெளிவான பகுதிகளுக்கு விலகியிருக்க வேண்டும்.** ''தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்க மாட்டேன்''(சங் 101:3; 1 தீமோத்தேயு 6:9—11—ஐ காண்க)

**7. சாத்தானின் திட்டங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.**

நம்முடைய சத்துருவால் தோற்க்கடிக்கப்படாதபடிக்கு நமக்கெதிராக அவன் பயன்படுத்தும் தந்திரங்களை அறிந்திருப்பது மிகவும் முக்கியம். (2 கொரி 2:11).

ய). அவன் ஒரு பொய்யன்(யோவான் 8:44)
டி) அவன் ஒரு குற்றஞ்சாட்டுகிறவன், குற்றஞ்சுமத்துகிவன் (வெளி 12:10).
உ). அவன் மோசம்போக்குகிறவன்(வெளீ 12:9)
ன). அவன் ஒரு சோதனைக்காரன்(மத்தேயு 4:1—11)
ந). அவன் பிறரை நெருக்குகிறன்(அப் 10:38)
க). அவன் தடைபண்ணுகிறவன்(1 தெச 2:18)
ப). அவன் ஒரு கெர்ச்சிக்கிற சிங்கம் (1 பேதுரு 5:8)
ா). அவன் தானே ஒளியின் தூதனுடைய வேஷததை தரித்துக் கொள்கிறவன் (2 கொரி 11:14)

கிறிஸ்தவர்களாகஃவிசுவாசிகளாக ஒரு ஜெயமுள்ள வாழ்க்கை வாழும்படியாகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்! கிறிஸ்துவின் மூலமாக வரும் இந்த வெற்றி நம்முடையதே...

சூ உலகத்தின் மீது (1 யோவான் 5:4)
சூ மாம்சத்தின் மீது (கலா 5:16)
சூ சத்துருவின் மீது (எபேசி 6:11,13)

**என் அர்ப்பணிப்பு**

சோதனைக் காலத்தில் என்னை தப்புவிப்பதற்காக தேவன் அளித்த வாக்குதத்தத்தங்களுக்காக நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். நான் வெற்றியுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு உதவி செய்யும்படி எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிற அவருடைய உதவியை ஏற்றுக் கொள்ள என்னை அர்ப்பணிக்கிறேன். இந்த சத்தியத்தை நான் பிறரோடு பகிர்ந்துக் கொள்வேன்.

**பாடம் 24 – ஐக்கியம்**

**4. ஐக்கியத்தின் நோக்கம்**

கிறிஸ்தவர்கள் ஒன்றாக ஐக்கியம் கொள்வது மிக முக்கியமானது. ஏனெனில் நாம் ஒன்றாயிருப்பதினால்....

**1. ஒரு விசுவாசி ஊக்குவிக்கப்பட்டு கிறிஸ்துவில் வளருகிறான்.**

"நீங்கள் ஸ்திரப்படுதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்கு கொடுக்கும்படிக்கும், உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடே கூட நானும் ஆறுதலடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறேன்..."(ரோ 1:10,11)

**2. இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை உலகம் அறிந்துக் கொள்கின்றது.**

"நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும் என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும், நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்" (யோவான் 17:22—23).

**டீ. ஐக்கியத்தின் நிபந்தனைகள்**

1. ஒருவரிடத்தில் ஒருவர் காண்பிக்க வேண்டிய அடிப்படை அர்ப்பணிப்பு "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்"(ரோமர் 12:10). ஒரு அடிப்படையான நம்பிக்கையின்றி எந்த ஐக்கியமும் இருக்க முடியாது. அர்ப்பணிப்பின் ஆழத்தைப் பொறுத்து ஐக்கியத்தின் ஆழம் அமைகின்றது.

**2. நம் அர்ப்பணிப்பு 'அகாப்பே'(அன்பை) அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும்.**

'அகாப்பே' என்பது ஒரு வழி அன்பு ஆகும். "எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், எந்தவொரு காரணத்தையம் எதிர்பார்க்காமல் நேசிக்க கூடியது. இன்னொரு விதத்தில் கூற வேண்டுமானால் தியாகமான, பிரதிபலன் எதிர்பார்க்காமல் கொடுக்கும் அன்பு. இப்படிப்பட்ட அர்ப்பணிப்பே மற்ற நபர்களின் நடத்தைக் குறைபாட்டினால் பாதிக்கப்படாமல் இருக்கும்.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்"(யோவான் 13:34).

**3. உண்மையான ஐக்கியம் கிறிஸ்துவை மையாக கொண்டிருக்கும்.**

கிறிஸ்துவோடு நம்முடைய பொதுவான அர்ப்பணிப்பு எப்படி இருக்கின்றதோ அதை வைத்தே நாம் ஒருவரோருவர் கொண்டிருக்கும் ஐக்கியம் கண்டறியப்படுகின்றது.

"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது."(1 யோவான் 1:3). பிலி2:1—2 – ஐ காண்க.

**4. வெளிச்த்தில் நடத்தல்**

நம்முடைய ஐக்கியம் ஒருவரோடொருவர் திறந்த மனதோடும் நேர்மையோடும், உண்மையுடனும் நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. சில சமயங்களில் ஐக்கியம் என்பது:

a) நாம் பாவங்களை பிறரிடம் அறிக்கை செய்தல் அல்லது இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போமம. அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்.(1 யோவான் 1:6—7) மத்தேயு 18:15ஐயும் காண்க.

b) வெளிச்சத்திற்கு கீழ்ப்படிதல்— பொதுவான மற்றும் திட்டவட்டமான கட்டளைகள் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

c) எந்த முகமூடியையும், தவறான மறைப்புகளையும் அகற்றுதல் உலகத்தல் காணப்படும் அநேக ஐக்கியங்கள் மாய்மால மானதாகவும், — ஒரு கதபாத்திரத்தில் நடிப்பது போலவும், உண்மையற்றதாகவும் காணப்படுகின்றது.

ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும் ஆவியனாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடு ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள் (1 பேதுரு 1:22).

**5. பிறர்நலனில் உண்மையான ஆர்வம் காட்டுதல்**

சுய ஆதாயத்திற்காக மறைமுகமான உள்நோக்கங்கள் எதுவும் இருக்க கூடாது. நம் வாஞ்சை பெறுவதாய் அல்ல, கொடுப்பதற்காக மட்டுமே இருக்க வேண்டும். “ஒன்றையம் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தன்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி 2:3—4).

**5.தன் ஜீவனை இழப்பதற்கு விருப்பம் காண்பித்தல்**

“நான்உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாய் இருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.”(யோவான் 15:12,3)

வாழ்க்கை என்பது சரீரப்பிரகாரமான வாழ்க்கையை காட்டிலும் அதிகமானவற்றை உட்படுத்துகிறது. அதில் உலகப்பிரகாரமான ஆஸ்தி, தனிப்பட்ட ஆர்வங்கள் மற்றும் முதன்மைத்துவம் கொடுக்கப்படும் காரியங்கள் ஆகியவையம் அடங்கும். (யாக்கோபு 2:15.16) இதன் பொருள் தன்னைக் குறித்து பிறரிடம் திறந்த மனதோடு பகிர்ந்துக் கொள்வதற்கான வாஞ்சை உடையவானயிருத்தல் என்பதாகும். ஜனங்கள் எந்த அளவுக்கு தங்களை வெளிப்படுத்த ஆயத்தமாயிருக்கின்றனரோ அந்த அளவுக்கு மட்டுமே நாம அவர்களைக் குறித்து அறிந்துக் கொள்ள முடியும்.

**ஊ. சபையயல் ஐக்கியம் என்பது.....**

**1.சகலவற்றையும் பகிர்ந்து கொள்வது**

அப் 4: 32 ல் அவர்களுடைய ஐக்கியத்தின் வளர்ச்சியல் மூன்று படிகள் காணப்பட்டன. முதலாவது அவர்கள் ஒரே இருதயமுடையவர்களாய் (ஆவி ) இருந்தனர். பின் ஒரே ஆத்துமா(மனம்) உடையவர்களாய் இருந்தனர். அதற்கு பின் சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவிக்கும் இயல்பான வெளிப்பாட்டை பீன்பற்றினர்.” விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய்வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்” (அப் 2:44—45).

**2. தங்கள் ஜீவனைக் கொடுப்பது**

“கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தை கொடுத்தவர்கள்; அவர்களைப் பற்றி நான் மாத்திமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.”(ரோமர் 16: 3—4).

**3. சகோதரருக்கு ஊழியஞ்செய்யும்படி அர்ப்பணிப்பது.**

“ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே.”( 1 கொரி 16:15).

**4. பிறருடைய தேவைக்கு உதவும் ஒரு வாய்க்காலாக இருப்பது.**

“சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக. (2 கொரி 8:15). 1 கொரி 16:17 ஐ காண்க.

**5. உபத்திரவத்தில் உடன்படுவது**

“ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் உன்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது.”( பிலி 4:14).

**6. தியாகத்தோடு கொடுப்பது**

“அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாய் இருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். (2 கொரி 8:2—3).

**7. பிறரை உபசரிப்பதை பழக்கமாக்கி கொள்வது.**

“பிரியமானவனே, நீ சகோதரருக்கும், அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய்.”(3 யோவான் 5, எபி 13:2—ஐயம் காண்க

**8. ஒருவரையொருவர் கட்டி எழுப்பி உற்சாகப்படுத்துவது**

“நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம் 1 தெச 2:8, 2 தீமோத் 3:10—14—ஐயும் காண்க.

**னு. ஐக்கியத்தினால் கிடைக்கும் பலன்கள்**

ஆதி திருச்சபையில் ஐக்கியத்தினால் உண்டான பலன்கள் என்னவெனில்:

சூ தேவனைக் குறித்த பயம் (அப் 2:43);
சூ மகிழச்சி (அப் 2:46);
சூ ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு (அப் 2:47);
சூ புதிய விசுவாசிகளின் சேர்க்கை (அப் 2:47);
சூ அனைத்து தேவைகளும் சந்திக்கப்பட்டன (பிலி 4:19);
சூ தலைமைத்துவத்தின் நெருக்கடி (1 கொரி 16:15—16);

## என் அர்ப்பணிப்பு

இந்த பாடத்தின் மூலம் மற்ற கிறிஸ்தவர்களோடு தொடர்ந்து ஐக்கியம் வைத்துக் கொள்ள வேண்டியதின் முக்கியத்துவத்தை இப்பொழுது கற்றுக் கொண்டதினால் என்னுடைய நேர்மையையும், அன்பையும், ஊழியத்தையும் பகிர்ந்துக் கொள்வதற்கு ஒரு விசுவாசக் கூட்டத்தில் ஒரு அங்கமாயிருப்பதற்கு இன்று என்னை அர்ப்பணிக்கிறேன்.

## ஆசிரியர்களுக்கான கூடுதல் குறிப்புகள்: கிருபையில் பெருகுதல்

## பாடம் 1ூ 2 க்கான குறிப்புகள்.

ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இரட்சிப்பின் நிச்சயம் என்பது தெவனுடைய வார்த்தையை அடிப்படையாக கொண்டது மற்றும் அவர்களுடைய பாதுகாப்பு தேவனுடைய செயல் மட்டுமெ என்ற நம்பிக்கையை விசுவாசிகளுக்கு வழங்குவதெ இப்பாடத்தின் குறிக்கோள் ஆகும்.

விசுவாசிகளும் கூட தங்கள் இரட்சிப்பைக் குறித்து சந்தேகப்படு வதற்கான சில காரணங்கள் என்னவெனில்:

1) அவர்களுடைய உணர்ச்சிகள் அவ்வப்போது மாறக்கூடியவை: சில வேளைகளில் ஆவிக்குரியவர்களாக உணர்வார்கள், சில வேளைகளில் அப்படியிருக்கமாட்டார்கள். அப்படிட அவர்கள் 'சோர்வாக' இருக்கும்பொது சிலர் தங்கள் இரட்சிப்பைக்குறித்து சந்தேகப்படுகின்றனர்.
2) அவர்களுடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்கவில்லை எனில்; சில சமயங்களில் பதிலளிக்கப்படாத ஜெபங்கள் கிறிஸ்தவர்களை தங்கள் விசுவாசத்தை இழக்கும்படியாகவும், தங்கள் இர்சிப்பை சந்தெகப்படும்படியாகவும் செய்து விடுகின்றன.
3) அவர்களுடைய ஜீவியம் பூரணப்படாதினால் தாங்கள் இரட்சிக்கப்படவில்லை என்று உணர்கின்றனர்.
4) கஷ்டங்களின் வழியாக கடந்து செல்லும்பொது தங்கள் விசுவாசத்தை இழக்கின்றனர்.

**இச்சந்தெகங்களுக்கான பதில் என்னவெனில்:**

நம்முடைய இரட்சிப்பு என்பது நம்முடைய "கிரியைகளையோ" அல்லது உணர்வுகளையோ பொறுத்து கிடைப்பது அன்று இரட்சிப்பு என்பது முதாலாவது கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நிறைவேற்றினதையும் பாவத்தைக் குறித்த உணர்வைக் கொடுக்கும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையையும் தெவனுடைய கிருபையை புரிந்துடிகாள்ளவதையும், மனந்திரும்பி விசுவாசிப்பதினால் நம்முடைய பொறுப்பயையும், அடிப்படையாக கொண்டிருக்கிறது. இரட்சிப்பு என்பது தேவனுடைய செயல் ஆனால் நம்முடைய கடமை, விசுவாசத்தோடு நம் வாழ்க்கையில் அவருடைய கிரியையை ஏற்றுக் கொள்வதாகும்.

வழக்கமாக ஜெபங்கள் பதிலளிக்கப்படாமல் பொவதற்கு காரணம் என்னவெனில் ஒன்று நாம் தவறான நோக்கத்தோடு கெட்டிருக்ககூடும் அல்லது நாம் கேட்ட காரியம் நமக்கு நன்மை பயக்கக்கூடியது இருந்திருக்காது. சிலவேளை ஜெபத்திற்க்கான பதில் தாமதாக வரக்கூடும். பதில் அளிக்கப்படாத ஜெபங்கள் என்ற தலைப்பு முழுமையாக போதிக்கப்பட வேண்டிய ஒரு பாடமாகும். இப்பாடத்தில் மிக முக்கியமாக கவனிக்கப்பட வெண்டிய குறிப்பு என்னவென்றால், ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமல் போகும்போது தேவன் நம்மை நேசிக்கவில்லை என்றோ, நாம் இரட்சிக்கபடவில்லை என்றோ, தேவன் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிற தேவன் அல்ல என்றோ ஒரு தவறான முடிவுக்கு வரக்கூடாது.

"மீட்கப்படும் நாளுக்கொன்று முத்திரையாகப் பெற்ற பரிசுத்த ஆவியானவர் இரட்சிப்பின் நிச்சயமாய் இருக்கிறார்(எபே 4:30)."

''இப்பொழுது பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனுக்கு நாம் குமாரரும் குமாரத்திகளுமாய் சேர்க்கப்பட்டிருக்கிறோம்.
பாடம் 2—க்கு ஆயத்தப்படும்படி கீழ்க்காணும் வேதபகுதிகள் உங்களுக்கு உதவியாக கொடுக்கப்பட்டிருக்கின்றன.
ரோமர் 8:28—39
எபேசியர்: 14: 13—14
1 யோவான் 1:9
பிலிப்பியர் 1:3—6
யாக்கோபு 1:2—4
சங். 23,91,103.

**<u>பாடம் 3—க்கான குறிப்புகள்</u>:**

இப்பாடத்தின் குறிக்கோள் என்னவெனில் கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்று முக்கிய நிலைகளான அன்பு, விசுவாசம் மற்றும் நீதியான வாழ்க்கை இவற்றை புதிய கிறிஸ்தவர்களுக்கு அறிமுகப்படுத்துதல் ஆகும்.
கிறிஸ்துவுக்குள் ஒரு கிறிஸ்தவனுடைய ஸ்தானம் மற்றும் கிறிஸ்துவுக்குள் அவன் நடக்கை இவ்விரண்டுக்கும் இடையேயான வேற்றுமையையே இப்பாடத்தின் அமைப்பு ஆகும். ஒருவன் மறு பிறப்படையும்போது அவன் கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டியாகிறான், என்பதை இப்பாடத்தின் மூலம் கற்றுக் கொள்கிறோம். ஒருவடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது அவன் தேவனுடைய சுவிகார புத்திரனாகிறான். இதுவே கிறிஸ்துவுக்குள் ஒரு கிறிஸ்தவனுடைய ஸ்தானம் ஆகும்.

இதற்கு முரண்பாடாக, தன் இரட்சிப்பை பின்தொடரும் ஒரு கிறிஸ்தவனுடைய அன்றாட வாழ்க்கை, கிறிஸ்துவில் அவனுடைய நடக்கையை காண்பிப்பது ஆகும். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் நடக்கும்போது அன்பிலும், விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளருவதின் முக்கியத்துவத்தை இப்பாடம் வலியுறுத்துகின்றது.

இரண்டாவது கேள்வி நாம் மறுபிறப்படைவதற்கு முன்பு நம்மை ஆட்கொண்டிருந்த ''மாம்சத்தின் கிரியைகள்'' அல்லது மாம்சீக சுபாவங்களுக்கும், ஆவியின் கனிக்கும் இடையேயான வித்தியாசத்தை எடுத்துரைக்கின்றது. நாம் மறுபிறப்படையும்போது பரிசுத்த ஆவியானவர் வாழ்க்கையில் நமக்குள்ளே வந்து வாசம்பண்ணுவதினால் அவருடைய கட்டுப்பாட்டில் நாம் வாழவேண்டும். இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான குறிப்பு ''கனி'' என்கிற பதம் ஆவியானவருடைய கட்டுப்பாட்டில் வாழும்போது வெளிப்படும். பல்வேறு விசேஷமான

குணங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயற்கையான பழங்கள் வளர்ந்து பழுக்க நேரம் எடுப்பதைப் போலவே ஆவிக்குரிய கனிகள் வெளிப்படுவதற்கு நேரம் தேவைப்படுகின்றது. நாம் மறுபிறப்படைந்த உடனே கிறஸ்தவ குணாதிசயம் தோன்றிவிடாது. அதற்கு தினசரி வாழ்க்கையில் நம்முடைய சித்தங்களை (விருப்பங்களை) பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்படைத்து, கிறிஸ்தவ குணாதிசயத்தில் வளரவேண்டும் என்பதை புதிய விசுவாசதிகளுக்கு எடுத்துரைக்க வேண்டியது மிக முக்கியம்.

கேள்விகள் 5, 6 மற்றும் 7 பரிசுத்த வாழ்க்கைக்கு நம்முடைய சரீரங்களைக் குறித்து நம் மனப்பான்மை இங்கு அடிப்படையான விஷயம். நம்முடைய சரீரங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாய் இருக்கிறபடியினாலே, நம் சரீரங்கள் பாவத்திற்கு விலகியிருக்க வேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்பதே ஆகும். ரோமர் 12:1 நம்முடைய சரீரங்களைத் தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்

என்று வலியுறுத்துகின்றது. 5,6,7 மற்றும் 7 கேள்விகளை முடித்தபின்னர் மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது சால பொருந்தும்.

1) வாழ்க்கை முறையில் பிரதிபலித்து, அவசியமானல் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்.
2) தங்களுக்குள்ள வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்குள் வாழும்படி தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

கேள்வி 8 முதல் 10: பிறரிடம் அன்புகூறுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அன்பைக் குறித்து பிறரிடம் அன்புகூறுவதில் காணப்படும் வெவ்வேறு நடைமுறை கண்ணோட்டங்களை எடுத்துரைப்பதற்கு 1 கொரி. 13—ஐயும் தெரிந்து கொள்ளலாம்.

கேள்வி 11: முதல் 15 விசுவாத்தைக் குறித்தது. இந்த கேள்விகளின் பின்னணியாக, கிறிஸ்து கல்வாரியில் நிறைவேற்றின கிரியையின் மூலமாக நமக்கு இரட்சிப்பை பெற்றுத்தந்த விசுவாசமாகிய 'இரட்சிக்கும் விசுவாசத்தையும்' தினந்தோறும் நாம் வாழ்வதற்கென்று கடந்து வரவேண்டிய பலதரப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியில் கிறிஸ்துவின்மேல் வைக்கும் 'விசுவாசம்' என்றழைக்கப்படுகிற நம்பிக்கையையும் வேறுபடுத்தி காண்பது பிரயோஜனமுள்ளதாயிருக்கும். ஒரு முதிர்ச்சி யடைந்த கிறிஸ்தவனிடம் காணப்படவேண்டிய மிக முக்கியமான விசேஷமான குணங்களுள் ஒன்று கிறிஸ்துவின் நம் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் வளரும்படி அழைக்கப்பட்டிருப்பதே ஆகும்

## பாடம் 4—க்கான குறிப்புகள்

இப்பாடத்தின் குறிக்கோள் ஜெபம்: வேத வாசிப்பு மற்றும் ஒரு தனி நபரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சாட்சியாக இருத்தல், ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதே ஆகும்.

இந்தப்பாடம் புரிந்துகொள்வதற்கு மிக எளிமையாகவும், எந்தவொரு விளக்கங்களும் இந்த குறிப்புகளின்மூலம் தேவைப்படாததாகவும் காணப்படுகின்றது.

எனினும் கீழ்வருவனவற்றை தயவாய் கவனிக்கவும்:

1) தவறாமல் வேதம் வாசிப்பதற்கும், கற்பதற்கும், தவறாமல் ஜெபிப்பதற்கும் ஒரு ஒழுங்கும் அர்ப்பணிப்பும் தேவைப்படுகின்றது. சபை உறுப்பினர்கள் இதை முயற்சிப்பதறகும், அர்ப்பணிப்பதற்கும் உற்சாகப் படுத்தப்பட வேண்டும்.

2) ஒருநடைமுறை கண்ணோட்டத்தின்படி வேத வாசிப்பிற்காகவும், தனிப்பட்ட ஜெபத்திற்காகவும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்குவது மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். சபையின் அங்கத்தினர்கள் தாங்களுக்கு பொதுவாக தொந்தரவு செய்யப்படாத ஒரு பொருத்தமான நேரத்தைக் குறித்து,வைத்து, ஒவ்வொரு நாளும் தங்களுடைய 'தியான நேரத்திற்காக' தேவனோடு தனித்து இருப்பதற்காக அந்த குறித்த நேரத்தை ஒதுக்கி வைக்கும்படி உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.

3. ஒரு தனிப்பட்ட அந்தரங்க ஜெப நேரத்திற்கு, கூடுதலாக உறுப்பினர்கள் குழு ஜெபங்களில் பங்கு கொள்ளவும், சபை ஜெபக் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொள்ளவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

4. சாட்சி அறிவித்தல் குறித்து கூறவேண்டுமெனில் அநேகர் இதை கடினமானதென்றே எண்ணுகின்றனா. இது மனிதருக்குப் பயமாக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு மனந்திரும்புதலும், தேவனுடைய அபிஷேகத்திற்கான ஜெபமும் அவசியமாக காணப்படுகிறது. தேவ அபிஷேகம் அவர்கள் சாட்சி கூறுவதற்கு வேண்டிய தைரியத்தை அளிக்கும்.

5. இப்பாடத்தின் ஒரு பகுதியாக சபை ஆராதனையில் தவறாமல் கலந்துகொள்வதில் முக்கியத்துவத்தை குறித்து கற்பதும் கூட பிரயோஜனம் உள்ளதாய் இருக்கும் (எபி. 10:25)

வினாக்கள் 1,9 மற்றும் 10 தனித்துவம்:

1) கிறிஸ்தவர்களின் மிகப்பெரிய எதிரி சாத்தான்.
2) நமக்கு ஆவிக்குரிய குருட்டாட்டை உண்டாக்கும்படி சாத்தான் முயற்சிக்கின்றான்.
3) சில வேளைகளில் சாத்தான் ஒளியின் தூதனாக தோன்றி நம்மை வஞ்சிக்கிறார். இது சாத்தான் நம்மை வெளிப்படையாக சோதிப்பது மட்டுமல்லாமல் நம்மை வீழ்த்துவதற்கு வஞ்சனையான, தந்திரமான காரியங்களை பயன்படுத்த முயற்சிக்கிறான் என்னும் உண்மையையும் காண்பிக்கிறது.

வினாக்கள் 2:8 மற்றும் 11—14 ஆகியவை தேவனுடைய போஷாக்கும், நாம் வெற்றியுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய படிகளும் கொடுக்கப்படடுள்ளன.
தேவன் அளிக்கும் ஆசீர்வாதங்கள்.

1) கர்த்தர் பெலன் கொடுக்கிறார் — பிலி. 4:13, லூக்கா 10:19
2) தேவன் நம்மை திராணிக்கு மேலாக சோதிக்காமல், தப்பிச் செல்வதற்குண்டான போக்கையும் ஏற்படுத்துவதற்கு உண்மையள்ளவராய் இருக்கிறார். (1 கொ. 10:13)
3) பரிசுத்த ஆவியானவர் நமக்கு வல்லமை கொடுக்கிறார் (அப்.1:8)
4) தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம், சாத்தானின் தாக்குதல்களை எதிர்த்து யுத்தம் பண்ணுவதற்கு நமக்கு பெலன்கொடுக்கிறது (எபே. 6:17)
5) நமது விசுவாசம் — 1 யோவான் 5:4

நாம் பின்பற்ற வேண்டிய படிகள்:

1) தேவனுக்கு கீழ்ந்படிந்து பிசாகுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்: யாக்கோபு 4:7
2) ஆவிக்கேற்றப்படி நடக்க வேண்டும் — கலாத் 5:16:
3) தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை திாத்து கொள்ள வேண்டும். எபே: 6:13,17.
4) தேவனுடைய வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும். மத் 4:47 சங். 119:11

வினாக்கள் 15 மற்றும் 16, சாத்தானின் அழிவைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. சாத்தானுடைய கிரிமைகளை அழிக்கும்படி இயேசு வந்து, கடைசியாக அவனை என்றைன்றைக்கும் வேதனைப் படும்படி அக்கினியும் கந்தகமும் எரிகிற. கடலிலே தள்ளிவடுவார்கள்.

## பாடம் 5—க்கான குறிப்பு

இந்த பாடம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்தது ஆகும். சாத்தான் ஒரு சோதனைக்காரன என்பதை வாசிப்போர் அறிந்துகொள்ள வேண்டும்என்பதை இப்பாடம் ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது. உண்மையாக பிசாசைக் குறித்த காரியங்களையும், ஒவ்வொரு விசுவாசியின், வாழ்க்கையிலும், பாவத்தையும், தோல்விகளையும் கொண்டுவருவதற்கு எடுக்கும் முயற்சிகளையும் குறித்து கற்பது மிகவும் அவசியமானது. புதிய ஏற்பாடு சாத்தானை – பிசாசு என்றும் பெயல்செயூல் என்றும் உலகத்தின் அதிபதி என்றும், (யோவான் 14:30) ஆகாயத்து அதிகாரப் பிரபு என்றும், (எபே 2:20) குறிப்பிடுகின்றது. தேவனுக்கு எதிராக அவருடைய நோக்கங்களை முறியடிக்கும் ஒரு எதிராளியாக சாத்தான் காணப்படுகிறான்.

இயேசு தமது ஊழிய ஆரம்பத்தின்போது பயங்கரமாக சோதிக்கப்பட்டார். மத் 4 மற்றும் லூக்கா 4. அவர் நம்மைப்போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். – எபி. 4:15 பிசாின் கிரியைகளை அழிக்கும் நோக்கத்துடன் இயேசு பூமிக்கு வந்தது குறிப்பிடத்தக்க போராட்டம் ஆகும் 1 யோவான் 3:8

சாத்தான் தேவபிள்ளைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுகிறான். கிறிஸ்தவர்களுக்கு எப்பொழுதும் தொடர்ச்சியான தந்திரமாக கூலி கொடுக்கப்படுகிற ஒரு 8 யுத்தம் உண்டு.

எனினும் பிசாசுக்கு நாம் எதிர்த்து நிற்கும்போது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான் — யாக்: 4:7.

சாத்தான் மனிதனை தொடர்ந்து சோதிக்கிறான். அதற்கு அவன் பயன்படுத்தும் வழிகள் பின்வருமாறு:

1. தேவன் தனக்கு நியமித்த வரையறைக்குள் தனக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குதல் — யோபு 1:12: 2:6 , 1 கொரி. 10:13
2. உபத்திரவம் மற்றும் வேதனையின் வழியாக – யோபு 1:11 — 2:7: 1 பேதுரு 5:9, வெளி. 2:10
3. இயல்பான ஆனதுகளை தவறான முறையில் நிறைவேற்றிக் கொள்ளத் தூண்டுதல் — மத்: 4:3—11, 1 கொரி. 7:5
4. பதட்டமற்ற, அஜாக்கிரதையான சுயநலமுடையவர்களாக மாற்றுதல். கலா: 6:1 எபே: 4:27
5. அவர்களுக்கு தேவனை தவறாக காட்டி, தேவனுடைய சத்தியத்தையும் உண்டாக்குதல் — ஆதி. 3:1:5, 2 கொரி. 11:3, மத்தேயு 4:5, — 11, 1 கொரி. 11:14 எபே. 6:11:

பாவத்திற்கு அடிபணியும் விருப்பம், மரணத்துக்கு வரவழைப்ப தாகும். யாக். 1:13—15 இயேசு தமது சீஷர்கள் தேவனிடம் கேட்கும்போது சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணி, அந்த சோதனையின்று தப்பித்துக் கொள்ளும்படி கேட்கும், போதித்தார் — மத். 6:13, மத். 26:14 சோதனை என்பரு ஒரு பாவமல்ல. ஏனெனில் கிறிஸ்துவும் நம்மைப்போல எல்லாவிதங்களிலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராய் இருந்தார். தீமையான ஆலோசனைகள் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கு கீழ்படியும்போது மட்டுமே சோதனை பாவமாகி விடுகின்றது.

இப்பாடம் சாத்தானுடைய சில செயல்பாடுகளையும், சாத்தானையும் அவனுடைய சோதனைகளையும் மேற்கொள்வதற்கு தேவன் தரும் ஏற்பாடுகளையும் அடையாளங்களும் காட்டுகிறது.

## <u>6—ம் பாடத்திற்கான குறிப்புகள்</u>

இந்த பாடத்தில் 7 கேள்விகள் உள்ளன. அதற்கான பதில்கள் பின்வருமாறு.

கேள்வி:1 சபையானது ஒரு “சரீரம் கிறிஸ்து அந்த சரீரத்திற்கு தலையாகவும், ஒவ்வொரு விசுவாசியும் அதின் அவயவங் களாகவும் இருக்கிறோம்.

கேள்வி: 2 தாய் கிறிஸ்துவின் அன்புகூறுவதின் அடையாளம் அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்படிவதேயாகும்.

கேள்வி: 3 ஆதி திருச்சபையினர் செய்தியை ஏற்றுக்கொண்டபோது ஞானஸ்நானம் பெற்றனர். பின்னர் அப்போஸ்தலர்களுடைய போதனைக்கும், ஐக்கியத்திற்கும் அப்பம் பிட்குதலுக்கும் ஜெபத்திற்கும் கிறிஸ்தவர்கள் அர்ப்பணித்தனர்.

கேள்வி: 4: கிறிஸ்தவர்கள் ஐக்கியத்தில் ஒன்றாக கூடுவதை தவிர்க்கக்கூடாது.

கேள்வி: 5: கிறிஸ்துவானவர் பிதாவின் வலது பாரிசத்திலே நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

கேள்வி 6: தம்முடைய ஜனங்கள் தீமையினின்று காக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படும்படி கிறிஸ்து ஜெபித்தார்.

கேள்வி: 7: இக்கேள்வி சபையின் நோக்கங்களில் சிலவற்றை கண்டறிகின்றது.

இப்பாடத்தின் முகவுரையில் அகில உலக சபைக்கும், ஸ்தல சபைக்கும் இடையேயான வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. இது ஒரு முக்கியமான வித்தியாசம் வேதாகமத்தில் ஸ்தல சபைக்கான சில வசனக் குறிப்புகள்: அப். 5:11, 13:1, 18:22, 1 கொரி. 1:2, 1 தெச. 1:1 அகில உலக திருச்சபைக்கான வசனங்கள் கொலோ. 1:18, எபே. 5:23, 26—28.

மற்றொரு அடிப்படையான மற்றும் முக்கியமான குறிப்பு என்னவென்றால் சபை என்பது கட்டிடம் அல்ல. அது கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் தேவனுக்கு சொந்தமாகும். மக்களையே குறிக்கும் கிறிஸ்துவை கர்த்தராகவும், தங்கள் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட அனைவரும் அவருடைய சபைக்கு சொந்தமானவர்கள் சில

வேலைகளில் கிறிஸ்தவர்கள் சபையில் கலந்துகொள்தல'' குறித்து பேசுவார்கள் — 1 நாங்களே திருச்சபையாக இருப்பதினால் நாங்கள் சபையில் கலந்துகொள்வது கிடையாது. எனினும் ஆராதிக்கவும், அப்பம் பிக்கவும் ஐக்கியத்திற்காகவும், ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்பதற்காகவும் ஒன்றுகூடுகிறோம். ஒன்றாக கூடுதல் என்பது 'சபை' என்று மொழியாக்கச் செய்யப்பட்ட எக்னீசியர் என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்த ஒரு சொல் ஆகும்.

இப்பாடத்திலுள்ள 3வது கேள்வி,, தாம் ஒன்றாக கூடும்போது செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து இயம்புகிறது 4ம் கேள்வி: ஒன்றாக கூடுதல் அல்லது சேருதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

கேள்வி:1 சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிற தென்றும், ஒவ்வொரு விசுவாசிகளும் அந்த சபையின் அங்கத்தினர்களாயி ருக்கிறோம் என்ற முக்கியமான சத்தியத்தை எடுத்துரைக்கின்றது. கேள்வி:2, இயேசுவின் தலைமைத்துவத்தையும், நாம் சபையாகிய சரீரத்தின் அவயவங்களாயிருப்பதையும், தலையாகிய அவருக்குடைய கட்டளைகளுக்கு கீழ்படிய கடமைப் பட்டிருக்கிறோம் என்பதையும் காண்பிக்கிறது: நாம் அவருக்கு கீழ்படிவதே நம்முடைய வாழ்வில் அவருடைய தலைமைத்துவத்தை அங்கீகரிப்பதற்கு அடையாளம் என்பதைக் காட்டுகிறது.

சரீரத்தின் அங்கத்தினர்களாகிய விசுவாசிகளின் செயல்பாடுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. சபை வாழ்க்கைக்கு ஒவ்வொரு உறுப்பினரும் இயங்குவதையும் பங்கெடுப்பதையும் பாராட்டும் வகையில் 1 கொரி. 12 மற்றும் 14 ஆகிய அதிகாரங்கள் வாசிக்கப்பட வேண்டியது அவசியம். அதேசமயம் ஒவ்வொரு உறுப்பினருடைய செயல்பாடுகளும் மற்ற உறுப்பினரோடு வேறுபட்டு காணப்படுகின்றன. ஒவ்வொரு உறுப்பினரும் சபையில் இயங்கும்போது மட்டுமே சபை வலிமைமிக்கதாகவும், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் சபையின் உறுப்பினர்கள் வளருகிறவர்களாகவும் இருப்பர்.

ஒவ்வொரு அங்கத்தினரின் பங்கெடுப்பு பெரும்பாலும், அவர்களின் இயல்பான மற்றும் ஆவிக்குரிய வரங்களைப் பொறுத்தே அமைகின்றதுஃ உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற "வரங்கள்" என்ன என்பதை கண்டறிய முயலுங்கள். பின்னர் அவ்வரங்களும், தாலந்துகளும் சபையினுடைய ஆசீர்வாதத்திற்காக பயன்படுகின்றதா என்பதைக் கண்டறியுங்கள். ஒவ்வொரு நபரும் கூட்டங்களில் கலந்துகொள்ளவும், பங்கெடுக்கவும், மென்மேலும் உற்சாகப்படுத்த வேண்டும் — 1 கொரி. 14:26

சபையின் மற்றொரு குணாதிசயம் சபையில் அனைவருக்கும் சமத்துவம் என்பதாகும். கலா:3:28 அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றே. அனைவரும் கிறஸ்துவுக்குள் சரிசமம்.

கேள்விகள் 5 மற்றும் 6 இயேசு நமக்காக பிதாவின் வலது பாரிசத்திலே பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை சுட்டிக் காட்டு கின்றது. மேலும் சபையானது பரிசுத்தமாக்கப்பட்டு, தீங்கினின்று காக்கப்பட வேண்டுமென்பதே சபைக்காக இயேசு பண்ணிய ஜெபமாக இருந்தது. (யோவான் 17ம் அதிகாரம் முழுவதையும் பார்க்கவும்).

கேள்வி 7: சபையின் நோக்கங்களை எடுத்துரைக்கின்றது. சபை என்ன செய்யவேண்டும் மற்றும் என்னவாக வேண்டும் என்பன.

## <u>பாடம் 7—க்கான குறிப்புகள்:</u>

இப்பாடத்தில் சபையின் இரு சட்டங்களாகிய **<u>ஞானஸ்நானம்</u>** மற்றும் **<u>கர்த்தருடைய பந்தி</u>** ஆகியவை பற்றி கூறப்பட்டுள்ளது.

இப்பாடத்திற்கான குறிப்புகள் இரண்டு பகுதிகளாக உள்ளன. பகுதி 1 ஞானஸ்தானத்தைக் குறித்தும், பகுதி 2 கர்த்தருடைய பந்தியைக் குறித்தும் கூறுகின்றது.

### <u>பகுதி 1: ஞானஸ்நானம்</u>

இப்பாடத்தில் ஞானஸ்நானத்தைக் குறித்து 4 கேள்விகள் மட்டுமே உள்ளன. முதலாவது கேள்வி, யோவானுடைய ஞானஸ்நாத்தைக் குறித்தும், இரண்டாவது இயேசுவின் ஞானஸ்நானத்தைக் குறித்தும், மூன்றாவது இயேசு விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம்

கொடுக்கும்படி கட்டளையிட்டதைக் குறித்தும் நான்காவது ஞானஸ்நானத்தின் அர்த்தத்தைக்குறித்தும், கூறப்பட்டுள்ளது.

மேலும் கற்க வேண்டிய கருத்தில் கொள்ளவேண்டிய குறிப்புகள்:

1.கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்திலும் (கலா. 3:26—27), பாவ நிவர்த்திக்கும், (அப். 2:38) கிறஸ்துவுடனே பாவத்திற்கென்று மரித்து, புது வாழ்வு உயிர்ப்பிக் கப்படுதலில் பங்கெடுப்பதற்கு (ரோ.6:3—5) கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கமாவதற்கும், (ஞானஸ்நானத்தில் வரும் ஆசிர்வாதங்கள் விசுவாசத்தின் மூலமாக பெறப்படுகின்ற (ரோம. 6:8—11) அடையாள மாயிருக்கிறது.

2.ஞானஸ்நானம் என்பது ஒருவன் உலகத்திற்கு முன்பாகவும், துரைத்தனங்களுக்கும், அந்தகார வல்லமைகளுக்கு முன்பாகவும் தேவனுக்கு முன்பாகவும் ஒருவன் பழைய கடந்துபோன வாழ்க்கை
முறைமைக்கு மரித்து, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக மறுபிறப்படைவதை வெளியரங்கமாக பிரகடனப் படுத்துவதாகும்.

3.ஞானஸ்நானம் என்றால் மூழ்குதல். இது ஒரு வேதாகம வழக்கம். மற்றும் கிரேக்க வார்த்தையாகிய ‘‘பாப்டிஸோ் — மூழ்குதல் என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்ட பாப்டிசம் என்னும் ஆங்கிலச்சொல் பழைய மனுஷன் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு , கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனுஷனாக உயிர்ப்பிக்கப்படுவதற்கு அடையாளமாக இருக்கின்றது.

4.ஞானஸ்நானம் என்றால் கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்த விசுவாசிகளுக்குரியது. ஞானஸ்நானம் ஒரு நபரை கிறிஸ்தவ விசுவாசியாக மாற்றமுடியாது. அது ஏற்கனவெ இடம்பெற்ற மாற்றத்தை அடையாளங் காட்டுகிறது. ஆகவே, குழந்தை ஞானஸ்னாம் என்பது அர்த்தமற்றது. ‘‘விசுவாசித்து பின் ஞானஸ்நாம் பெற வேண்டும் என்று வேதம் கூறுகின்றது. அதை நிச்சயமாக குழந்தைகளால் செய்ய முடியாது.

5.ஞானஸ்நானத்தில் ஒரு ஆசீர்வாதம் இருக்கின்றது. ஏனெனில் அது கீழ்படிதலின் ஒரு முக்கியமானபடி ஆகும். அநேக விசுவாசிகள் ஞானஸ்நானத்திற்கு பின்னர் விடுதலையையும், கிறிஸ்துவின் மிகப்பெரிய பொறுப்பையும் பெற்றுள்ளனர். ஞானஸ்நானத்தில் ஒரு ஆவிக்குரிய முக்கியத்துவம் இருப்பதால் வழககமாக ஒருவர் ஞானஸ்நாம் பெறுவதற்கு பிசாசானவன் எதிர்ப்புகளைக்கொண்டு வருகிறான்.

6. ஞானஸ்நானம் கடந்த காலத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்றது. விசுவாசிகளுடைய வாழ்க்கையில் குறிப்பாக கிறிஸ்தவ ரல்லாத பின்னணியிலிருந்து வருகிற விசுவாசிகளுடைய வாழ்க்கையில் ஞானஸ்நானம் ஒரு பெரும் தா்க்கத்தை ஏற்படுத்துகிக்னறது. ஆகவே புதிதாக இரட்சிக்கப்பட்டவரின் தங்களால் முடிந்தவரை வெகு சீக்கிரமாக ஞானஸ்நானம் பெறும்படி, உற்சாகப்படுத்தப்பட வேண்டும். எதிர்ப்புகள் இருப்பின் ஞானஸ்நானம் பெறுபவா் திருமணமாகாதவராயிருப்பின் பெற்றோரின் சம்மதத்தையும், திருமணமானவராயிருப்பின் கணவனின் சம்மதத்தையும் பெறவேண்டும்.

## பகுதி—2 கர்த்தருடைய பந்தி

**பின்வரும் அமைப்புகளை பார்ப்பதின்மூலம் கர்த்தருடைய பந்தியைக் குறித்த நம்முடைய முழுமையான அறிவு வலுவடையும் தனி நபருக்குரியது:**

**கடந்த காலத்தில்:** அ) இயேசு தம் மரணத்தின்மூலம் மனிதனுக்கு
**நினைவுக்கூறு:** செய்தது என்ன?

ஆ) இயேசு கடந்துவந்த பாடுகள்

இ) தேவனுடைய கிருபையின்மூலம் நம் இருதயங்களில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்ட போது நாம் ரட்சிக்கப்பட்ட விதம்.

**நிகழ்காலத்தில்:** — அன்றாட பாவங்களுக்காக மன்னிப்பு கேள்
கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்

- கிறிஸ்துவுக்கு கீழ்படியும்படிக்கு மீண்டும்

- அர்ப்பணி

- விசுவாசத்தைக்கொண்டு கர்த்தருடைய பந்தி யில் பங்கெடுப்பதினால் சரியாக புதுப்பிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுதல்

<u>**எதிர்காலத்தில்**</u> — அவருடைய இரண்டாம் வருகையை எதிர்நோக்கி காத்திரு

<u>**கர்த்தருடைய பந்திக்கு ஆயத்தமாதல்:**</u>

கர்த்தருடைய பந்தியில பங்கெடுக்கும்போது அவருடைய சரீரத்தை உணரும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். அப்பத்தை அடையாளமாக கொண்டிருக்கிற ஒரே சரீத்தில் நாம் பங்கெடுக்கிறோம். கொரிந்து சபையில் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போது தனிநபர்கள் மற்றவர்களைக் கருத்தில் கொள்ளாமல் சுயநலமாக செயல்பட்டபடியினால் நியாயந்த தீர்க்கப்பட்டனர். ஆகவே, கர்த்தருடைய பந்தியும்கூட ஒருவருக்கொருவர் அன்புகூறுவதையும் நல உறவை வளர்த்துக் கொள்வதையும் ஒரு பொதுவான குறிக்கோள் மற்றும் தரிசனத்தை உடையவராக இருப்பதையும் குறிக்கும் சபையின் ஐக்கியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

ஆகையால் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போது சபை அங்கத்தினர்கள் தங்களையும், தங்கள் உறவு மற்றவரோடும் முழு சபையோடும் எப்படி இருக்கிறது என்பதை சோதித்தறிய வேண்டியது மிகவும் முக்கியம்.

நற்பரிசோதனைக்காகவும், தேவனோடு நெருங்கவதற்காகவும், மட்டுமே கர்த்தருடைய பந்தி பயன்படுத்தப்படாமல், கொண்டாட்டத்தின் வேலையிலும், அதாவது அவர் நமக்கு செய்த நன்மைகளையும், நம் வாழ்வில் தேவன் செய்த காரியங்களினால் நாம் பிறர்பால் கொண்டிருக்கும் அன்பையும் கொண்டாடும் வேளையிலும்கூட அதை பயன்படுத்தலாம்.

<u>**மற்றும் சில கேள்விகளும் அதற்கான பதில்களும்:**</u>

1. சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கலாமா?
   ஆம், அவர்களுடைய பெற்றோர் விசுவாசிகளாயிருப்பின், கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் அவர்கள் வளர்க்கப்பட்டிருப்பின் அவர்கள் அதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும் வயதை உடையவர்களாயிருப்பின் பங்கெடுக்கலாம்.
2. திருவிருந்தை நடத்த வேண்டியவர் யார்? – ஆசாரியனா? பொதுமக்களா?
   அனைத்து விசுவாசிகளுமே தேவனுடைய ‘ஆசாரியர்களாய்’ இருக்கின்றார்கள். ஆசாரியர்கள் அல்லது அதற்கென்று நியமிக் கப்பட்டவர்களுக்கும், அதற்காக நியமிக்கப்படாதவர்களுக்கும் இடையே காணப்படும் பாரம்பரிய வேறுபாடு மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. இயேசு கிறிஸ்துவை கர்த்தராகவும், இரட்சக ராகவும் அறிந்த எவரும் திருவிருந்தில் பங்கெடுக்கலாம். தேவைப்பட்டால் திருவிருந்து ஆராதனையை நடத்தவும் செய்யலாம்.
3. நீங்கள் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பங்கெடுக்கலாமா?
   இல்லை. எனினும் திருவிருந்தின் நேரம் மனந்திரும்புவத்கான நேரமாக பயன்படுத்தப்படலாம். மனந்திரும்பிய பின்பு விசுவாசி நிச்சயமாக பங்கெடுக்கலாம்.
4. விசுவாசியல்லாதவர்கள் திருவிருந்தில் பங்கெடுப்பதை தவிர்க்க வேண்டுமா?
5. திருவிருந்து பகிர்ந்தளிக்கப்படும்போது பின்பற்றப்பட்ட பழக்கம் என்னவெனில் இயேசுவை கர்த்தராகவும், ரட்சகராகவும் அறிந்தவர்கள் பங்கெடுக்கலாம் என்றும் அவருடைய கர்த்ததுவதத்தை அனுபவித்திராதவர்கள். அல்லது இந்த அறிவிப்பை புரிந்துகொள்ள கூட முடியாதவர்கள் இதில் பங்குகொள்ள வேண்டாம் என்றும், வேண்டிக் கொள்கிறோம் என்று அறிவிக்கப்படும். மேலும், திருவிருந்தின் கருத்தை அிதகமாக அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் ஆராதனை முடிந்தபின்பு சபை தலைவர்களைஅணுகி விளக்கம் கேட்கலாம் என்ற வேண்டுகோள்

விடுக்கப்பட வேண்டும். இதற்கு பின்பு பங்குபெற வேண்டமா? வேண்டாமா? என்பது தனிநபருடைய பொறுப்பு ஆகும்.

**பாடம் 8—க்கான குறிப்புகள்:**

“கொடுத்தல்” சம்மந்தப்பட்ட முக்கியமான கருத்துகள் உள்ளடக்கி இப்பாடம் நன்றாக எழுதப்பட்டடிருக்கின்றது கேள்விக்கான பதில்கள்:

1. நம்முடைய இருதயங்கள் (நாமே, நம்முடைய பணம் மட்டும் அல்ல)
2. நாம் நமக்கு சொந்தமானவர்களல்ல. தேவனுக்குரியவர்கள், கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறோம். நம் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாய் இருக்கிறது.
3. நம்முடைய சரீரங்களை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இங்கு சரீரங்கள் என்கிற வார்த்தை நம்முடைய மாம்சீக சரீரத்தை மட்டும் குறிப்பிடாமல் நம்முடைய உள்ளான ஆவிக்குரிய சரீரத்தையும் குறிக்கின்றது.
4. நம்முடைய அன்பு
5. வாங்குகிறதை பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.
6. கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்: அமுக்கி,குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவிலானல் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்.
7. இல்லை. (எனினும்) பிறருக்கு கொடுப்பதும், கடனாக கொடுப்பதும் ஒரு கேடான சாந்திருத்தலுக்கு வழிநடத்தும். ஆகையால் இவ்விரண்டும் ஞானத்தோடு பயன்படுத்தப்பட வேண்டும்.
8. கொடுப்பவருக்கு
9. இலவசமாய் கொடுங்கள் ஐஉெழஅிடநவந
10. உற்சாகமாய் கொடுக்கிறவன் — விசனமாயுமல்ல. கட்டாயமாயு மல்ல. மகிழ்ச்சியோடே கொடுக்கும்போது இந்த மனப்பாண்மை உண்டாகிறது.

## கொடுத்தல் குறித்து பொதுவான கேட்கப்படும் சில கேள்விகள்

1. **தசமபாகம் கொடுக்க வேண்டியது அவசியமா?**
பழைய ஏற்பாட்டு பிரமாணம் தசமபாகத்தை வலியுறுத்துகின்றது. நாம் இப்பொழுது கிருபையின்கீழ் இருக்கின்றோமே தவிர நியாயப்பிரமாணத் தின்கீழல்ல. பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் புதிய உடன்படிக்கையில் இயேசு தமக்காக ஏற்படுத்திய தரம் உயர்வானது. ஆகவே பழைய ஏற்பாட்டு காலத்தில் பின்பற்றப்பட்ட தசமபாகம் கொடுத்தல் என்பது மிகக்குறைந்த அளவே கருத்தில் கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்துவுக்குரியவர்களாகிய நாமோ அதைக் காட்டிலும் அதிகமாக கொடுக்க வேண்டும்.

2. **யாருக்கு தசமபாகம் கொடுக்கப்பட வேண்டும்?**
ஒருவன் தான் ஐக்கியம் வைத்திருக்கிற ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை பெறுகின்ற சபைக்கே தசம பாகத்தைக் கொடுக்க வேண்டும். பத்தில் முதலாவது எடுக்கப்படும் பங்கு நிச்சயமாக சபைக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். மற்ற ஊழியங்கள் எவற்றையேனும் தாங்க விரும்பினால் தசமபாகத்தை விட அதிகமான காணிக்கையை அதற்கு பயன்படுத்தலாம். தசமபாகத்தை பல பாகங்களாக பிரித்து வெவ்வேறு ஊழியங்களுக்கும், சபைகளுக்கும் கொடுக்கும் பழக்கம் நிறுத்தப்பட வேண்டும்.
3. தசமபாகம் மற்றும் காணிக்கை கொடுப்பதற்கான காரணம் என்ன?
எவனுடைய ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் இதை முதன்மையாக செய்ய வேண்டுமா?

தேவனுடைய கர்த்தத்துவத்தை உணர்ந்து கொள்வதற்காகவே தசமபாகம் கொடுக்கப்படுகின்றன. சகலவிதமான ஆசீர்வாதங்களும், ஆற்றல்களும் தேவனிடமிருந்துதான் வருகின்றன என்பதே உண்மை. நம்முடையது அனைத்தும் அவருக்குரியது. ஆகவே நாம் சம்பாதிக்கும் அனைத்திலும் பத்தில் முதல் ஒரு பாகம் தேவனுக்குரியது. அதை அவருக்கு நாம் கொடுக்கும்போது அதற்கு பதிலாக தேவன் நம் இருதயத்தின் எண்ணங்களைப் பார்த்து நம்மை ஆசிர்வசீக்கிறார். அப்பொழுது நாம் கொடுத்ததை விட அதிகமாக பெற்றுக் கொள்கிறோம். ஆனால் எப்பொழுதும் பெறும் நோக்கத் திற்காகவே கொடுக்கக்கூடாது. நாம் தேவனிடத்தில் அன்பு கூறுவதினாலும், அவருக்கு நன்றி தெரிவிப்பதினாலும், தேவன் நமக்கு கொடுத்ததிலிருந்து ஒரு சிறு பகுதியை மட்டுமே அவருக்கு கொடுக்கிறோம் என்ற உணர்வினாலும் மட்டுமே நாம் கொடுக்கிறோம்.

**பாடம் 9—க்கான குறிப்புகள்:**

குடும்ப வாழ்க்கை குறித்த இப்பாடம் இரண்டு முக்கியமான காரியங்களைக்குறித்து எடுத்துரைக்கின்றது.

1. ஒருவன் தன் விசுவாசத்திற்கு வீட்டில் வரும் எதிர்ப்புகளை சமாளித்தல்
2. பிள்ளைகளை வளர்த்தல்.

குடும்ப வாழ்க்கையில் மற்றொரு முக்கியமான காரியம் கணவன், மனைவி, உறவு ஆகும். முக்கியமான பாடத்தில் இதைக்குறித்து சொல்லப் படவில்லையானாலும், திருமண பந்தத்தைக் குறித்த சில முக்கியமான சத்தியங்களை இக்குறிப்புகளின் பகுதியில் குறிப்பிடப் படடுள்ளது.

**குடும்பத்தின் உறவுகள்**

கிறிஸ்தவர்கள் அனைவரோடும் ஒரு நல்உறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. என்றாலும் ஒரு வீட்டில் ஒரு நபர் கிறிஸ்தவராகவும், மற்றவர்கள் இரட்சிக்கப்படாத வர்களாகவும் இருக்கும்போது மிக எளிதாக சண்டைகள் உருவாக வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிப்பட்டி சூழ்நிலைகளில் ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய விசுவாசத்தில் நிலைத்து நின்று, தன் கிறிஸ்தவ சாட்சியைக் காத்துக்கொண்டு அவர்களோடு உடன்படாமல் தனித்து நிற்க வேண்டியது மிகவும் அவசியம். அதேசமயம் அவனுடைய எண்ணம் குடும்பத்திலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் தன்னை உயர்வாக கருதி, விரோதம் பாராட்டுவதாக இராமல், அவர்களுக்கு தன் அன்பை காட்டுபவனாக இருக்க வேண்டும். மேலும் ஒருவன் தன்னுடைய விசுவாசத்தை உயர்த்தி பேசும் முடிவுற்ற வாக்குவாதங்கள் அதிக திஜமயை விளைவிக்கும். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய சொற்களைவிட தன்னுடைய மேன்மையான கிறிஸ்தவ விசுவாசத்திற்கு சாட்சியாக வாழ்ந்தால் நலமாயிருக்கும்.

**பெற்றோர்—பிள்ளை உறவு:**

எபேசியர் 6:10 அத்தியாயத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு ‘‘கர்த்தருக்குள்’’ கீழ்படியும்படி அழைக்கப்பட்டிருக்கின்றனர். இப்படியாக பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்படிந்து அவர்களை கனப்படுத்த வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தெளிவாக பாவமான காரியங்களையும், தேவனுடைய சித்தத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்யும்படி கூறும்போது மட்டுமே இது விதிவிலக்காகும்.

பெற்றோரும் பதிலுக்கு தங்கள் பிள்ளைகளை நேசித்து பராமரிக்க வேண்டும். பெற்றோர் தாங்கள் கண்காணிகள் என்பதையும், தங்கள் பிள்ளைகளைக் குறித்து தேவனுக்கு முன்பாக அவர்கள்

கணக்கொப்புவிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் உணரவேண்டும். பிள்ளைகள் வளரும்போது நற்பயனளிக்கும் வகையில் ஒரு தெளிந்த பொறுப்புணர்ச்சியோடு வளர்ந்த முதியோர்களைப்போல சரியான அஸ்திபாரத்தைப் பெற வேண்டுமெனில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நேசித்து, பராமரித்து, பாதுகாத்து, வளர்க்க வேண்டும்.

பெற்றோர்களுக்குரிய செயல்களின் ஒரு பகுதியாக, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஒழுக்கத்தோடு வளர்க்க வேண்டுமேயொழிய கோபத்தோடும், ஏமாற்றத்தோடும் அல்ல. ஒழுக்கத்தின் குறிக்கோள் பிள்ளையின் (வளர்ச்சி) முன்னேற்றம் மட்டுமே. மேலும் ஒழுக்கம் என்பது பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஒரு ஒட்டுமொத்த பயிற்சி ஆகும்.

**கணவன்—மனைவி உறவு**

இந்த உறவை எடுத்துரைக்கும் மிக முக்கியமான வேதபகுதி எபேசி. 5:21—33 இப்பகுதியில் நாம் கற்கும் அடிப்படை காரியம் என்னவெனில்:

1) கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்ததுபோல புருஷர்களும் மனைவிகளிடம் அன்புகூற வேண்டும்.

2) புருஷர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து, அவர்களில் அன்புகூற வேண்டும். ஏனெனில் அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக் கிறார்கள்.

3) மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்படிய வேண்டும். கிறிஸ்துவுக்குள் எல்லோரும் சமமாயிருக்கிறோம்: ஆணோ, பெண்ணோ, அடிமையோ, சுயாதீனனோ, அனைவரும் ஒன்று என்று வேதம் மிகத் தெளிவாக போதிக்கின்றது. பெண்கள் ஆண்களை விட தாழ்ந்தவர்கள் அல்ல. எனினும் குடும்ப உறவில் புருஷனே தலைமைத்துவத்தின் "ஸ்தானத்தை" அல்லது 'அலுவலகத்தை' பிடித்திருக்கிறான். ஆதலால் மனைவி கணவனுக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும். மீண்டும் கணவன், மனைவியிடத்தில் அன்புகூர்ந்து தன்னையே அவளுக்காக தியாகம் செய்ய விரும்போது, மனைவியானவள் புருஷன் தன் நலனையே விரும்புகிறவன் என்பதை அறிந்தவளாய் இன்னும் அதிகமாக கீழ்படிந்து நடப்பாள். கிறிஸ்து தன் மணவாட்டியாகிய சபையை கவனித்துக்கொள்வார் என்னும் பூரணமான நம்பிக்கையினால் சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்பட்டிருப்பதை போலவே மனைவியும், கணவனுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும். திருமண பந்தத்தைக் குறித்து பேசும் மற்றொரு முக்கியமான வேதபகுதி ஆதி. 2. ஆகும். இங்கு வெளிப்படையான உரையாடல், நம்பிக்கை, பற்றுதலின் வெளிப்பாடு, போன்ற திருமண உறவின் மாம்சீக பிரகாரமான காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## பாடம் 10—க்கான குறிப்புகள்

இப்பாடம் 3 தலைப்புகளை உள்ளடக்குகிறது. புசித்தல், பானம் பண்ணுதல் மற்றும் உபவாசம். இப்பாடத்தில் 3 தலைப்புகளும் போதிய அளவு விளக்கப்பட்டுள்ளன. குறிப்புகள் சில திருத்தங்களையும், தெளிவாக்கங்களையும் கொடுக்கின்றன. ( 1 கொரி. 10:23—24)

பிரிவு டீ—புசித்தல் மற்றும் பானம் பண்ணுதலில், தேவன் தேவைகளை சந்திப்பவர் என்றும், அவர் நம்முடைய தேவைகளை சந்திப்பார் என்றும் அறிந்துகொள்வது பயனள்ளதாயிருக்கும்.

கேள்வி:3: தேவைக்கும் விருப்பத்திற்கும் இடையேயான வித்தியாசத்தை காண்பிக்கின்றது. தேவன் நம் தேவைகளை சந்திக்கிறார். விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது அவசியமற்றது.

பிரிவு ஊ – உபவாசத்தைக் குறித்த பகுதி வேதாகமத்திலுள்ள வெவ்வேறு வகையான உபவாசங்களைக் குறித்து சொல்லப்படவில்லை. – பகுதிநேர உபவாசம், திட ஆகாரம் மட்டும் எடுக்காத உபவாசம், ஒருவெளை உபவாசம், ஒருநாள்உபவாசம், சிலநாட்கள் உபவாசம் மற்றும் நீட்டிக்கப்பட்ட உபவாசம். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட அதிகநாள் உபவாசம் 40 நாட்கள் ஆகும். உபவாசத்தைப் பொறுத்தவரையில் ஒரு நடைமுறை கண்ணோட்டம் என்னவெனில் உபவாசிக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாக நாட்களை கூட்டி ஜெபிப்பதெ ஞானமான ஒரு விஷயம்.

ஏசாயா 58—ல் இதைக்குறித்து விரிவாக கூறப்பட்டுள்ளது. கூடுதலாக உபவாசத்தைக்குறித்து சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் ஒரு நீதியான வாழ்க்கை வாழ்வதும், நம்முடைய ஜெபம் கேட்கப்படுவதற்கு முன் அத்தியாவசியமான பிறர் நலன் கருதி, பிறர்மீது அக்கரை காட்டி வாழும் வாழ்க்கை வாழ்வதும் அவசியம் என்பதை கூறுகின்றது. உபவாசிப்பது மட்டும் போதாது.

## பாடம் 11—க்கான குறிப்புகள்

இப்பாடம் தூய்மை, உடை மற்றும் உரைநடை இவற்றை உள்ளடக்கியுள்ளது.

1. குறிப்பு: 1 கொரி. 3:17 — இக்கேள்வி பதில் கொடுக்கிறது. என்றாலும் 1 கொரி. 6:20—ல் சொல்லப்பட்டிருப்பதுபோல நமது சரீரம் தேவனுடைய ஆலயம் என்பது சரியான மொழி பெயர்ப்பு அல்ல. 1 கொரி. 3:17 தேவனுடைய ஆலயம் என்பது ஸ்தல சபையைக் குறிக்கிறது.

2. நம் தேவன் பரிசுத்தமான வராயிருப்பதினால் நாமும் கட்டாயம் பரிசுத்தமுற்றவர்களாயிருக்க வேண்டும். தேவன் பரிசுத்தவமுள்ளவ ராயிருப்பதினால் நாமும் நம்முடைய சரீரத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பஜகறார் என்பதை இக்கேள்வி குறிப்பிடுகின்றது. இது ஒரு சரியான மொழிபெயர்ப்பு அல்ல. தேவனுடைய பரிசுத்தத்தினிமித்தம், ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு பரிசுத்த ஜீவியம் செய்வதின்மூலம் நாம் தூய்மையும் பரிசுத்தமு முள்ளவர்களாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இதை சரீரப் பிரகாரமான வெளிப்புற சுத்தத்தோடு தொடர்புபடுத்துவதை இவ்வசனம் ஆதரிக்கவில்லை.

**பிரிவு யு –வைக் குறித்து பொதுவான கருத்து:**

வெளிப்புற சரீர சுத்தம் முக்கியமே. நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிற ஆலயமாயிருக்கிறது. நம்முடைய சரீரத்தின் மூலமாக தேவனை கனப்படுத்தும்படி அழைக்கப்பட்டி ருக்கிறோம். தம் சரீரங்களை சுத்தமாக வைத்துக்கொள்வது, தேவனை சரீரத்தினால் கனப்படுத்தும் வழிகளில் ஒன்றாகும்.

வெளிப்பிரகாரமான சரீர சுத்தம் நம் ஆரோக்கியத்திற்கு நல்லது. சரீரத்தினால் தேவனை கனப்படுத்துதல் என்பது சரீரத்தின்மீது அக்கறை காட்டுவதையும், அதின் ஆரோக்கியத்தையும் கவனிப்பதையும் குறிக்கும். ஒரு தூய்மையான மற்றும் பரிசுத்தமான வாழ்க்கை நடத்துவதற்கு அடையாளமாக சரீர சுத்தத்தை வேதாகமம் பலமுறை பயன்படுத்தியுள்ளது.

ஆகவே, கிறிஸ்துவின் இரத்தத்தாலே கழுவப்பட்டு, ஆவிக்குரிய சுத்தத்தோடு வாழ்வதும், நீதியும், தூய்மையுமான ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ்வதும்கூட எவ்வளவு முக்கியம் என்பதை உங்களுக்கு நினைப்பூட்ட இதுவே சரியான சமயம் ஆகும்.

**பிரிவு டீ –வைக் குறித்து பொதுவான குறிப்புகள்:**

ஒருவர் அணியும் ஆடைகள் மிக முக்கியமானவை. ஏனெனில் அது உங்களைக் குறித்தும், பிறரை குறித்ததுமான ஒரு தோற்றத்தை உண்டுபண்டுகிறது. உதாரணமாக ஒரு

அழுக்கு வஸ்திரம் தரித்தவனை அவனுடைய உடை அழுக்காயிருப்பதினால் அவனை குடிகாரன் எனலாம். ஒரு காவல்துறை அதிகாரியின் சீருடையை பார்த்த மாத்திரத்தில் அவரை காவல்துறை அதிகாரி என்கிறோம். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் உடுத்த வேண்டிய உடை என்று எந்தவகையான வஸ்திரமும் குறிப்பிடப்படவில்லை. சில பொதுவான கொள்கைகள் என்னவெனில்:

—நாம் கிறிஸ்துவின் ராஜ்ய தூதர்களாயிருப்பதினால், ஒரு ஒழுங்கான, தூய்மையான தோற்றத்துடன் இருக்க வேண்டும.

—உலகத்திலுள்ள நாகரீகங்களினால் கட்டப்பட வேண்டியவர்கள் அல்ல. ஏனெனில் நம் வாழ்க்கையில் நாகரீகமானது ஒரு அடிமைத் தனமாகவும் விக்கரகமாகவும் மாறிவிடும்.

— வஸ்திரங்களுக்காக செலவு பண்ணப்படும் பணம் வீணாய் போகக்கூடாது.

—ஆண்களும் பெண்களும் பிறரை இச்சைக்குட்படுத்தவோ, வசீகரம் செய்யும்படியோ உடுத்தாமல் ஒழுக்கமாக உடுத்த வேண்டும்.

தேவன் ஆண்களையும், பெண்களையும் வித்தியாசமாக படைத்திருக்கிறார். தங்களின் உடை இந்த வித்தியாசத்தை காண்பிக்க வேண்டும் என்று வேதாகமம் எதிர்பார்க்கிறது. ஒரு மனிதன் தன்னை ஒரு பெண்ணைப் போல இருக்க வேண்டுமென்றோ அல்லது ஒரு பெண்தான் ஒரு ஆணைப் போலிருக்க வேண்டுமென்றோ விரும்புவதும், தங்கள் உடைகளின்மூலம் அதை பிரதிபலிப்பதும் தவறாகும். இன்றைய நாட்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே ஒரு மாதிரியான ஆடைகளும் கேச மாதிரிகளும் காணப்படுகின்றன. அவன் பெண்ணாகவும், ஒருபெண் ஆணாகவும் இருக்க விரும்புகிற விஷயத்தில் வெளிப்புற தோற்றம் எப்படியிருந்தாலும் பிரச்சனையில்லை. ஆண்டவருக்கு நம் இதயம் மட்டுமே தேவை என்று கூறி வேதம் உண்மையாக எதிர்க்கின்ற காரியங்களை நியாயந் தீர்க்கும் விஷயத்தில் நாம் அதை நியாயப்படுத்தக்கூடாது.

<u>பிரிவு ஊ—ஐ குறித்த பொதுவான கருத்து</u>

தேவனுடைய நாமம் சாதாரணமாகவோஅல்லது மரியாதை குறைவுடனோ, பயன்படுத்தக்கூடாது ‘‘ஓ தேவனே’ ‘என்தேவனே. ‘கிறிஸ்து’ போன்ற சொற்றொடர்கள் பொதுவான பேச்சு வழக்கின் ஒரு பகுதியாக பயன்படுத்தக்கூடாது.

<u>பாடம் 12—க்கான குறிப்புகள்:</u>

த்மமுடைய குடியிருப்பு பரலோகத்தில் உண்டு என்பதை அறிந்து கொள்ளும் பயிற்சிக்குரிய ஒரு ஊகம். சுயநலமான வாழ்க்கை வாழ்வதினால் கிடைக்கும் உலகப் பிரகாரமான மதிப்பை விட்டு விலகி, தேவனுக்கு பிரியமான, பிறருக்கு ஆசீர்வாதமான வாழ்க்கை வாழ்வதே பரலோகம் ஆகும். இப்பாடத்திற்காக வாசிக்கவேண்டிய பிற வசனங்கள் எபே. 6:5:9, தானி. 6:1—5.

<u>பாடம் 13—க்கான குறிப்புகள்</u>

இந்த பாடம் நாம் வாழ்வதற்கு வேண்டியவற்றை சம்பாதிக்க வேண்டுமென்கிற மிக முக்கியமான வேதாகம் சத்தியத்தை கூறுகிறது. நம்முடைய வேலை ஸ்தலத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் குறித்த சில காரியங்களை தேவன் வைத்திருக்கிறார். வேலை சூழ்நிலையில் நம்முடைய அதிகாரிகளோடும், நமக்கு கீழ்பணிபுரிபவர்களிடமும் நம் உறவு வேதத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

<u>பாடம் 15—க்கான குறிப்புகள்</u>

இப்பாடத்தில் சொல்லப்பட்டுள்ள 2 காரியங்கள், கிறிஸ்தவர் களுக்கும் அவர்களுடைய சத்துருக்கள் மற்றும் உபத்திரங்கள், இடையான சட்டங்கள் மற்றும் வழக்குகள் பிரிவு ஏ—ல் சொல்லப்பட்டுள்ள வழக்குகளும், வாதங்களும் 2 தலைப்புகளின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. 1) சட்டங்கள் மற்றும் 2) தனக்கு விரோதமாய் பாவம் செய்த கிறிஸ்தவர் சகோதரனை

கையாளுதல்: கேள்வி 1 மற்றும் 2 ஆகியவை குறிப்பாக சட்டங்களை குறித்தும், கேள்விகள் 3 முதல் 10வரை தனக்கு விரோதமான பாவஞ்செய்த சகோதரனை கையாள்வது எப்படி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு வேறுபாட்டைக் கொண்டுவர காரணம் என்னவெனில் கட்சியில் உள்ள இருவருமே, தங்கள் பக்கம்தான் நியாயம் என்று நம்புவிதனால் இவர்களை நியாயந்தீர்க்க கட்சியின் நபரின் வாதம் தேவைப்படுகிறது. ஒரு சகோதரன் பாவஞ்செய்த விஷயத்தில், அவரை மனந்திரும்பச் செய்து, கிறிஸ்துவுடனான நடக்கையிலும், தான் யாருக்கு விரோதமாக பாவஞ்செய்தாரோ, அந்த சகோதரனோடு உறவிலும் புதுப்பிப்பதே மிக முக்கியமான காரியமாகும்.

1 பேதுரு: 2.23—ல் சத்துருக்களை கையாளும் மூன்று படிகள் பயிற்சிக்கு மிக எளிமையானதாகவும், கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய மிக முக்கியமானதாகவும் காணப்படுகிறது. துரதிஷ்டமாக எதிர்ப்பு இருக்கும்போதுதான் இன்னும் வலுவாக சண்டையிடும் மனப்பான்மை நம்மில் ஏற்படுகின்றது. அவ்வாறு மீண்டும் சண்டை யிடுவதினால் நம் ஆண்டவரின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்று வதில்லை என்பதை உணர வேண்டும்.

## பாடம் 16—க்கான குறிப்புகள்
## விக்கிரக ஆராதனை குறித்த கருத்துக்கள்

வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தர் மனிதர்களைஅன்புகூறுவதற்காகவும், ஆராதிப்பதற்கும் என்றென்றைக்கும் தம்மோடு மகழ்ந்திருக்கும்படியாகவும், சிருஷ்டித்தார். அவர் நம்மை உருவாக்கினவரானபடியால்,அவர் ஒருவரே பயபக்திக்கும்,ஆராதனைக்கும் பாத்திரம். தேவன் ஆவியாய் இருக்கிறபடியால், ஆவியானவர் (யோவான்: 4:24) அவரை பிரதிபலிக்கும் ஒன்றை உருவாக்க முயற்சிப்பது மிகவும் மதியீனமான செயலாகும். மனிதர்களால் உண்டாக்கப்பட்ட கோவில்களிலும் (அப். 17:24) மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளிலும் வாசம் பண்ணுவதில்லை. (அப். 17:29)
நம் வாழ்க்கையில் தேவனுக்கு மட்டுமே முதலிடம் கொடுக்க வேண்டும். தேவனுடைய இத்தை ஆக்ரமிக்கும் எந்தவொரு காரியமும் விக்கிரகம் என்றழைக்கப்படுகிறது. (ரோ.1:28—32) அது பணமாகவோ, விளையாட்டாகவோ, அந்தஸ்தாகவோ அல்லது ஒருவடைய துணைவராகவோ, பிள்ளையாகவோ, கூட இருக்கலாம்!. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சேவியாமல் நேசியாமல் அவரைவிட்டு பிரிப்பதற்கு நம் வாழ்க்கையில் விக்கிரகங்களைக் கொண்டுவர முயற்சிப்பபது சாத்தானுடைய தந்திரம் என்பதை நாம் உணரவேண்டும்.

இரகசிய சடங்குகளும், பொருட்களின் ஆராதனையும் பின்பற்றப்பட்ட பழங்கால மதங்களிலிருந்து தான் விக்கிரக ஆராதனையின் வேர் உண்டானது. இவ்விதமாக சாத்தானுடைய வல்லமையின் மாய உலகிற்கான வாசல் திறக்கப்பட்டது.

விக்கிரகங்களை வைத்துக் கொள்ளவும், ஆராதிக்கவும் கூடாது என தம்முடைய வேதத்தின் மூலமாக தேவன் நம்மை எச்சரிக்கிறார் எப்படியெனில்
அ) விக்கிரகங்களும் பின்னால் காணப்படும் வல்லமை பிசாசுனுடையது (உபா. 32:16—17, சங். 166:35—38, 1 கொரி. 10:20)
ஆ) நீங்கள் தேவனாகிய கர்த்தரை கனவீனப்படுத்தி அவருக்கு கீழ்ப்படியாமற் போனதினால் அவருடைய சாபத்திற்கும், தண்டனைக்கும் ஆளாகிறோம்.(யாத் 20:3—5)
இ) நீங்கள் (உங்கள் வீட்டாரும்) சபிக்கப்பட்டு போவீர்கள் (உபா. 7: 25—26) ஏசாயா: 44:9—20, விக்கிரகாராதனையின் மதியீனம் மேலும் விரிவாக கூறப்பட்டுள்ளது. ஆகவே ஒருவன் விக்கிரகத்துக்கு விலகியிருக்க வேண்டும் (1 கொரி. 10:14 1யோ.5:21)

**பில்லிசூன்யத்தை பற்றிய கருத்துக்கள்**

ஏதேனில் மனிதன் கீழ்ப்படியாமற் போனது முதல் முரட்டாட்டமான மனிதன் "தேவனை போல மாறும்படி" முயற்சித்துக் கொண்டிருக்கிறான்(ஆதி 3:5) தன்னை தேவனுக்கு அர்ப்பணிப்பதற்கு பதிலாக மனிதன் மற்ற தெய்வங்களை உருவாக்கி, தன்னை வல்லமைமிக்கவனாக காண்பிக்க வகை தேடுகிறான்.

தேவனுடைய அதிகாரத்திற்க்கு எதிராக முரட்டாட்டம் பண்ணுதல் பில்லிசூன்ய பாவத்திற்கு இணையான ஒரு பாவமாகும் ( 1 சாமு 15:23). ஒருவன் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டு தேவனுடைய தன்மையை யூகித்து நடக்கிறான். இப்படிப்பட்ட பில்லிசூன்யம் மாய உலகத்தின் ஒட்டு டிமாத்த பகுதியாக விளங்குகிறது.

(a) இயற்கைக்கு அப்பாற்பட்ட மூலதன்ங்களைக் கொண்டு மற்றவைகளை சூழ்ச்சியாக உருவாக்கி, ஆளுகை செய்து தன் கட்டுபாட்டிற்குள் கொண்டு வர மனிதன் வகை தேடுகிறான்.

(b) தெய்வங்களுக்கு மேலாக சக்தியை பெற்றுக் கொள்ளும்படி மனிதன் முயற்சிக்கிறான்.

மந்திர பயிற்சிகளை தொடருகிறவர்கள் யாரெனில்: ஜோசியக்காரர், சூன்யக்காரர், சகுனங்கள் மொழிபெயர்ப்பவர் மந்திரவாதிகள், மாந்திதிரீகர்கள், குறி சொல்லுகிறவர்கள்? ஆவிகளோடு பழகுபவர்கள் அல்லது செத்தவர்களோடு பேசுபவர்கள் ஆவர் (உபா 18:10—11) உபா 18:12—ல் "இப்பழப்பட்டவைகளை செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்," என்று வேதாகமம் கூறுகிறது."ஆகையால் நாம் சாத்தானுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட மாயமான காரியங்களினால் வஞ்சிக்கப்படாதிருப்போமாக! ஆனால் நாமோ தேவனுடைய குமாரர்களாக கர்த்தரையோ நாடி, அவரதுவார்த்தையில் நிலைத்திருந்து, அவருமடய ஆவியினால் நடத்தப்பட வேண்டும்.

ஒருவனுடைய வாழ்க்கையில் மந்திரவாதங்களுக்கு வழி திறக்கும்போது, அவன் அடிமைத் தனத்துக்கும், முழுமையான அறிவுக்கும் உள்ளாகிறான். ஜனங்களை அடிமைத்தனத்திற்குள் கொண்டு வர சாத்தான் முயற்சிக்கும் பிரபலமான பாதைகள் என்னவெனில்: கைரேகை பார்த்தல், ஜாதகம் பார்த்தல், மந்திரம், சூன்யம், மயங்க வைக்கும் வித்தை, அதிர்ஷ்ட மந்தரங்கள், பொதை வஸ்துகள், பாலியல் தவறுகள் கழனமான உலேகங்களினால் ஏற்படுத்தும் ராக் இசை... போன்றவை.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இயேசுவின் மூலம் இவ்வகையான கட்டுகளிலிருந்து நமக்கு விடுதலை உண்டு!

சாபங்களையும் மந்திர வேர்களையும் உடைத்து வெட்டி எரியக்குகூடியவை (யாக் 4:7)

(1)இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாச அறிக்கையிடுதல் மற்றும் உங்கள் மீது அவருடைய அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளுதல்

(2) மாயமான பாவங்களை அறிக்கையிட்டு, அதற்காக மனஸ்தாபப்படுதல்.

(3) சாத்தானையும், இருளின் அதிகாரத்தையும் விட்டு அகலும்படி கட்டளையிட்டு அவற்றை கைவிடுதல்.

(4) விடுதலையின் ஜெபம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம். இதற்கு பின்பு தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய சத்தியத்தை அறிவதில் பலமாக வளர்ச்சியடைந்து சத்துருவை எதிர்த்துக் கொண்டேயிருப்பது மிகவும் முக்கியம்.

## பாடம் 19—க்கான குறிப்புகள்

வேதாகமத்தில் மரணம் என்பது நான்கு வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

1) சரீர பிரகாரமான மரணம் — சரீரத்தின் அனைத்து செயல்களும் நின்றுவிடும்

2) ஆவிக்குரிய மரணம் — மனிதன் தேவனிடமிருந்து

பிரிக்கப்பட்டிருக்கிறான். தேவனுக்கடுத்த காரணங்களில்
பொறுப்பற்றவனாய், தேவனுக்கு பகைஞனாய் இருக்கிறான்.
இது பாவத்தினாலேயே நடைபெறுகின்றது ஆதி. 2:17
ரோ. 6:23, எபேசி. 2:1

3) இரண்டாம் மரணம் — துன்மார்க்கருக்கு ஆண்டவரின்
கடைசி தீர்ப்பாகிய. தேவனிடமிருந்து நிரந்தரமான பிரிவு
வெளி. 2:11, 20:6, 14:15, 21:8

4 பாவத்திற்கு மரணம் — பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட
மனிதனுக்கு ஏற்படுவது: ரோ. 6:4,6,11.

சரீர மரணம் மற்றும் ஆவிக்குரிய மரணம் ஆகிய இவ்விரண்டுமே பாவத்தின் விளைவாகும். எல்லாரும் பாவஞ்செய்தபடியினாலே, மரணமானது மனிதர்களின் மேல் விழுந்தது. ரோ.3:29, 5:12, 6:23,
எபி. 9:27.

கிறிஸ்து பாவத்தின் மேலும் மரணத்தின் மேலும் வெற்றி சிறந்தார்.

1) அதின் வல்லமையை நீக்கிவிட்டார். ரோ. 6:9, கொலோ. 1:16, 2 தீமோ. 1:10
2) அதில் சிக்கியவர்களை விடுவித்தார். ரோ. 8:2, 38—39 எபி. 2:14—15
3) தமது இரண்டாம் வருகையின் மூலம் அதை முற்றிலுமாக அழிப்பார். 1 கொரி. 15:23—26, 54—55, வெளி. 20:14,

விசுவாசிகளுக்கு மரணம் என்பது இவ்வுலக வாழ்க்கையின்று விடுபட்டு உடனடியாக கர்த்தரின் சமூகத்தில் பிரவேசிப்பதாகும். லூக்கா.23:43,46 2 கொரி. 5:8, பிலி. 1.23
உயிர்த்தெழுதலின் மூலம் விசுவாசி அழியாமையுள்ளவனாகிறான்
1 கொரி.15: 52—54.

## ஜெபத்தின் வல்லமை

அதிகாரம் — 1— **தேவனைத் தேடுதல்**

முழு இருதயத்தோடும் என்னைத் தேடினார்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பார்கள்.(ஏரோமியா 29:13)

1. தம்மை தேடுகிறவர்களுக்கு தேவன் வாக்குப் பண்ணுவது என்ன?
   எரோமிய 29:12—14——————————————————————————
   ஏசாயா 55:6—7——————————————————————————
   யாக்கோபு 4:8—9————————————————————————
2. தேவனோடு நெருங்குதல்
   யு. தேவனிடத்தில் சேர்வதற்கு யாக்கோபு கூறும் ஒரு வழி என்ன?——————————————————————————
   ட. யாக்கோயு 4:10—ல் கூறப்பட்ட மற்றொரு வழி————————————
   ஊ.யாக்கோபு 1:8—ல் அவர் கூறும் ‘‘இருமனமுள்ளவன்’’ என்பதைக் குறித்து உங்கள் கருத்து என்ன? (சங்கீ 86:11 பார்க்கவும்)—————————————————————————
   னு. யாக்கோபு 4:3—ன் படி தகாத விதமாய் ஜெபித்தல் என்றால் என்ன?—————————————————————————————
   நு. யோவான் 6:26—ல் இயேசுவை தேடிவந்த ஜனங்கள் கொண்டிருந்த தவறான நோக்கம் என்ன?——————————————
3. சங் 34:4ல் கர்த்தரை தேடினதினால் சரி செய்யப்பட்ட பிரச்சனை என்ன?—————————————————————————————————
4. நாம் அவரை எப்படி தேட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?(எராமியா 29:13)——————————————————————
5. ஆமோஸ் 4:6—12 தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மிடம் திரும்புவதற்கு பயன்படுத்திய நிகழ்வுகள் என்ன?————————————
————————————————————————
6. சங்கீதக்காரன் தேவனுக்காக தான் கொண்டிருக்கும் வாஞ்சையை எதனோடு ஒப்பிடுகிறார்?(சங் 42:1)?——————————————————
   சங் 73:23—24; சங் 91:14—16ல் தேவன் தம்முடைய தோழர்களுக்கு வாக்குப் பண்ணியவைகள் என்ன?——————————
7. ஆமோஸ் 5:6 மற்றும் சங்கீதம் 69:32—ல் தேவன் தம்மை தேடுகிறர்களுக்கு கொடுப்பது என்ன?—————————————————
8. தானியேல் திறந்த பலகணியில் தேவனைத் தேடினான். தேவனைத் தேடுவதை நிறுவத்துவற்கு பதிலாக என்ன தண்டனையை எதிர்கொள்ள அவர் விருப்பமுடையவாரய் இருந்தார்(தானி 6:7—16)————————————————————————
9. 2 நாளாகமம் 15.
   யு. இச்சூழ்நிலையில் யூத மக்கள் சந்தித்த பிரச்சனைகள் என்ன?——————————————————————————————
   ட. தேவனை தேடுவதற்கு அவர்கள் அழைப்பைக் கேட்டது எப்படி?————————————————————————————————————
   ஊ.இராஜவாகிய ஆசா தேவனைத் தேடும்பழ அழைப்பு பெற்ற போது அவனுடைய பதில் என்ன?(வச 8—9)————————————
   னு ஜனங்கள் தேவனை தேடின போது செய்தவை என்ன( வச 10:18)?
   ய—————————————————————————
   டி—————————————————————————
   ஊ—————————————————————————

ஞ—————————————————————————
ந—————————————————————————
ந. ஜனங்கள் தேவனை தேடின போது அவர் எப்படியாக வந்து அவர்களை ஆசீர்வதித்தார்?(வ 15)——————————————————கு. இராஜாவாகிய ஆசா தேவனைத் தேடுவதை நிறுத்தின போது என்ன செய்தார்( 2 நாளா 16:2)?————————————

பு. இதின் விளைவாக அவருக்கு சம்பவித்தது என்ன (வச 7—9)——————————————————————————————————
10. இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்றால் எனன?(யோ 14:13? —————————————————————————
11. சங் 37:4ல் தேவனடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் என்ன செய்யக் கூடும்?——————————————————
12. இயேசு ஜெபத்திற்கு அழைப்பு கொடுத்த பொது, தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் என்று கூறியதைக் குறித்து என்ன நீனைக்கிறீர்கள்(மத்தேயு 7:7)— ———————————————————
13. தம்மை கருத்தோடு தேடுகிறவர்களுக்கு தேவன் அளிக்கும் ‘வெகுமதிகள்’ என்ன? உதாரணம் தருக (எபி 11:6 முதல்)—————————————————————————————————————
14. சங்கீ 139:23—24ல் சங்கீதக்காரன் மனந்திரும்புதலுக்காக எப்படி ஜெபிக்கிறார்?——— ——————————————————————————
15. தம் ஜனங்கள் தேசத்திற்காக செய்யும்படி தேவன் கேட்கும் நான்கு காரியங்கள் என்ன?(2 நாளா 7:14)
ய———————— டி————————— உ————————— ன—————————
அதற்கு தேவன் வாக்குப் பண்ணும் மூன்று காரியங்கள் என்ன?
ய————————— டி————————— உ—————————

**மனப்பாட வசனங்கள்**

1. தேவனைத் தேடுங்கள் ய) எபி 11:6; டி) எரே 29:13
2. தேவன் உங்களை கண்டடையமட்டும் ய) சங் 139:23—24; டி) சங் 26:2

**தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக**

1. தேவ பிரசன்னத்தை நடைமுறை வாழ்க்கையில் வழக்கமாக்கிக் கொள்ள என்ன செய்வீர்கள்? தேவனோடு நெருங்கிய உறவை ஒரு உயர்ந்த அளவில் வளர்த்துக் கொள்வதற்கு என்ன செய்யவீர்கள்? தேவனோடு ஒரு சிநேகிதனைப் போல உறவாடின ஆபிரகாம் மோசே மற்றும் எலியா போன்ற மனிதரை நினைவுகூர்ந்து அவர்களைப் போல தேவனோடு பேசுகிறீர்களா?
2. ஜனங்கள் ஒருவரோடொருவர் அதிகமாக அன்புகூரும்போது குறைவான காரியங்களையே பகிர்ந்துக் கொள்கிறார்கள் என்பது உண்மையா? சில சிறிய விஷயங்கள் தேவனோடு பகிர்ந்துக் கொள்வதற்கு மிகச்சிறியவை(பகிர்ந்துக் கொள்ளும் அளவுக்கு பெரியவையல்ல) என்று உணருகின்றிர்களா? ஒரு நாளில் எத்தனை முறை தேவனோடு பேசுகிறீர்கள்? தேவனை எதற்காக?எவ்வளவு? நேசிக்கிறீர்கள் என்பதையும் பிதாவே (அல்லது இயேசுவே) ‘நான் உம்மை நேசிக்கிறேன்’ என்பதையும் தேவனிடம் கூறுவதற்கு ஒரு காதல் கடிதம் எழுதுங்கள். ஏனெனில்————————————————————————“
3. உங்கள் வாழ்க்கையில் எந்த சூழ்நிலையில் நீங்கள் தேவனோடு வாதாடி இருக்கிறீர்கள்? முழுமையாக அவரிடம் ஒப்படைக்காத காரியங்கள் ஏதேனும் இருக்கிறதா? மன்னிப்பதற்கு மிகவும் கடினமாக உணர்ந்த நபர் யாரேனும் உண்டா?

4. உங்களை வழி நடத்துவதின் மூலம் தேவன் பதில் கொடுக்க வேண்டுமென்று எதிர்பாக்கிறீர்களா? ஒரு காரியத்தைக் குறித்து ஜெபத்த பிறகு அடிக்கடி மனதை மாற்றிக் கொள்கிறீர்களா?
5. இயேசு உங்களுக்குள் வாசம் பண்ணுவதினால் உங்கள் வாழ்க்கையில் எவ்விதமான மாற்றங்கள் ஏற்பட்டது என்பதைக் குறித்து விழிப்புடையவர்களாயிருக்கின்றீர்களா?
6. நீங்கள் ஒரு ஜெபிக்கின்ற நபராக மாற உதவுவதற்கு ஏற்ப குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். ஆனால் நியமித்த நேரம் மட்டுமில்லாமல் எப்பொழுதும் தேவனோடு பேசிக் கொண்டிருங்கள்.
7. உங்களுக்கு உண்மையாகவே ஆசிர்வாதமாக இருக்கக்கூடிய சில காரியங்கள் இங்கு இருக்கின்றன. உங்கள் ஜெபத்தை குறித்த விவரங்களை எழுதுவதற்கு ஒரு குறிப்பு புத்தகம் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்கு சொல்லுகிறவைகளையும் அவருடைய பதில்களையும் கூட அதில் எழுதுங்கள். பிற்பாடு தேவன் உங்கள் ஜெபங்களுக்கு எப்படியாக பதில் கொடுத்தார் என்பதை வாசித்துப் பாருங்கள்.
8. பூக்கள், காற்று, கடல், அன்பின் பரிசுகள், நட்பு, மகிழ்ச்சி இன்னம் இது போன்ற பல காரியங்கள், நீங்கள் ரசிப்பவற்றுக்காக தேவனுக்க நன்று கூறி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.

**<u>தேவனைத் தேடுவதற்கான ஒரு ஜெபம்</u>**

**<u>அன்பின் பரலோக பிதாவே</u>**

எங்கள் முழு உள்ளத்தோடும் தூய்மையான இருதயத்தோடும் உம்மை தேட உதவி செய்தருளும். உமது சித்தத்தின் மையத்தில் ஜெபிக்கும்படிக்கு உமது குமாரனாகிய இயேசுவில் நிலைத்திருக்கும்படிச் செய்யும் எங்களையும் உம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்வீர் என்பதை அறிந்து எங்கள் பாவங்கள் அனைத்தையும் இயேசுவின் மிது இறக்கி வைக்கிறோம். உம் வார்த்தைக்கு கட்டுப்படாத சிந்தனைகளோ குற்ற உணர்வற்ற, தாழ்மையற்ற மனப்பான்மையே இருந்தால் அதை எங்களுக்கு வெளிப்படுத்தி, எங்கள் இருதயங்களை எங்களுக்கு காண்பித்தருளும். உம்மோடு நடப்பதில் நெருங்கி ஜீவிக்கும் மட்டும், மனந்திரும்புதலின் ஏற்படும் ஆனந்தத்தையும், கண்ணீரையும் அனுபவிக்கும் மட்டும் எங்களுக்கு திருப்பதி உண்டாகமல் இருக்கட்டும்.

நீர் கண்டடையக் கூடாத கடினமானவரல்ல, என்பதையும் நீர் எங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறீர் என்பதையும் அறிந்திருக்கிறோம். அன்பின் பிதாவே சிங்காசனத்தில் தம்மோடு அமரும்படி எங்களை அழைக்கிற, இயேசுவின் இரத்தத்தின் மூலமாக உம்முடைய மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கையில் எங்களோடு பகிர்ந்துக் கொள்ளும் கர்த்தராகிய இயேசுவே வந்து எங்களுள் வாசஞ்செய்து, தங்கியிரும். உம் பிரசன்னத்திற்காக எங்கள் கதவுகளை திறக்கிறோம். எங்கள் வாழ்வில் உமக்கென்று ஒரு புதிய பிரதிஷ்டையையும் புதிய அர்ப்பணிப்பையும் கொடுக்கும்படி எம்மை நிரப்பியருளும். எங்கள் ஜெபங்கள் மனித உழைப்பினால் இயக்கப்படும் இயந்திர சடங்குளாயிராமல் உம்முடைய இருதயத்தின், ஆவியின் வாஞ்கைளின் வெளிப்பாடாய் காணப்படும்படி எமக்கு ஜெபிக்க கற்றுத்தாரும். ஆமென்.

## <u>அதிகாரம் — 2 உடன்பாட்டின் ஜெபம்</u>

“அல்லாமலும், உங்களில் இரண்டபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” (மத்தேயு 18:19)

1. சகோதரர்களின் மத்தியில் காணப்படும் ஒற்றுமைக்கு என்னவிதமான ஆசீர்வாதங்களை சங்கீதம் 133 ஒப்பிடுகின்றது?

யு..............................................................

டீ...............................................................

2. (யோசுவா 7:1—21—ஐ பார்க்கவும்) இஸ்ரவேலரின் ஒற்றுமையை உடைத்த ஆகானின் பாவம் எது?

......................................................................

3. அப்போஸ்தல்—5ல் ஆதிதிருச்சபையின் ஒற்றுமையை அழிக்கும்படி பயமுறுத்தின அனனியா, சப்பீரானின் பாவம் என்ன?

.....................................................................

4. சபையின் ஒற்றுமையின்யை தேவன் எவ்வாறு சுத்திகரிக்கின்றார்

.....................................................................

5. எபேசியர் 4:1:3 சபையின் ஒற்றுமையை நிலைநாட்ட அப்போஸ்தல் கூறிய அறிவுரை என்ன?

.....................................................................

சபை தனது ஒற்றுமையை தக்கவைத்துக்கொள்ள பவுல் எடுத்துரைக்கும் வழிகள் என்ன?

எபேசியர் 4:25 .....................................................

எபேசியர் 4:26 .....................................................

வச. 28..................................................................

வச. 31 ..................................................................

வச. 32..................................................................

அதிகாரம் 1:14ல் அப்போஸ்தல நடபடிகள் அவை ஸ்தாபிப்பதற்கான ஜெபத்தை எவ்வாறு விளக்குகின்றது?

..........................................................................

அப்போஸ்தல் 2:40—46—ல் எக்காரியங்களில் எல்லாம் சபை ஒற்றுமையாய் இருந்ததாக பார்க்கிறோம்? (நான்கு காரியங்கள்)

..........................................................................

..........................................................................

6.சரீரமாகிய சபை முழு உடன்பாட்டோடு ஜெபிக்கும்படி, ஒற்றுமையை கட்டிடியழுப்பவும், நிலைநாட்டவும், சபை ஆராதனையில் சம்பவிப்பது என்ன?

.................................................................

7.உடன்பாட்டின் ஜெபத்தில் நீங்கள் யாரோடு சேர்ந்து கொள்ளலாம்?

A.உங்கள் வீட்டிலா...........................................

B.நண்பனா (அ) பங்காளனா?...............................

C.படிக்கும் குழுவா?...........................................

D.சபை தலைவர்களா?.........................................

E.சபையா? ..................................................

8. ஒரு குழுவின் ஜெபத்தின் வல்லமையை தடைசெய்யும் ***மனப்பாண்மை*** அல்லது ***தடைகள்*** என்ன?

A.யோசுவா. 7:11—12........................................

B.மத்தேயு 17: 19—20........................................

C.மற்றவை ..................................................

9. ஒரு உண்மையான ஒற்றுமை உண்டவாதற்கு **நாம் உடன்பட** வேண்டிய பல பகுதிகளைக் குறிப்பிடுக?

.....................................................................

10. ஒரு குழுவில் காணப்படும் <u>அனுபவங்களும் விசுவாசமும்</u> அல்லது <u>ஆவிக்குரிய வரங்களும்</u> தேவனுடைய வல்லமையை பிறருக்கு வெளியிடுவதற்கு எவ்விதத்தில் உதவுகின்றன என்பதற்கு உதாரணங் களைப்பட்டியலிடுக:

………………………………………………………………………………

………………………………………………………………………………

11. அப்போஸ்தல் 4:24—32ல் ஸ்தாபிக்கப்பட்ட சபை ஒருமனதுட்ன ஜெபித்தனர்

யு. அவர்களுடைய ஜெபத்தில் பெரும்பாலான வார்த்தைகளுக்கு மூல ஆதாரமாக காணப்பட்டது எது?

………………………………………………………………………………

B. அவர்கள் கேட்ட இரண்டு குறிப்பிட்ட காரணங்கள் என்ன?

………………………………………………………………………….

C. தேவன் தம்முடைய பிரசன்னத்தையும், வல்லமையையும் உடனடியாக காண்பித்தது எப்படி?

………………………………………………………………………….

12. அப்போஸ்தல் 13:1—6ல் ஒருமனதோடு ஆராதிக்கும்போது சம்பவித்த காரியங்கள் என்ன?

யு. வசனம் 1………………… மற்றும்……………………………….

டி. வசனம் 2 அவர்கள் ஜெபித்த விதம்…………………………….

ஊ. வசனம் 3 அவர்களிடம் பேசியது யார்?…………………………

னு. வசனம் 4 விளைவுகள்………………………………………….

**<u>மனப்பாட வசனங்கள்</u>**

1. ஜெபத்தில் உடன்பாடு ய) மத்தேயு 18:19 (டி) யாக்கோபு 5:16
2. ஒற்றுமையில்ஃ ஒளியில் நட ய) எபேசி: 4:1—3 டி)1 யோவா.1:7

**<u>தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக</u>:**

1. இந்த வாரம் உங்கள் ஜெப வாழ்க்கையை எப்படி பலப்படுத்து வீர்கள்? உங்களுக்கென்று ஒரு ஜெப பங்காளர் உண்டா? குடும்ப ஜெபத்திற்கென்று ஒரு கால அட்டவணை இருக்கின்றதா?
2. ஜெபத்தின் மூலமாக நீங்கள் அன்பை பிறரோடு பகிர்ந்து கொள்வீர்கள்? பிற கிறிஸ்தவனோடு ஏற்படுகின்ற வேறுபாட்டை அல்லது வாக்குவாதத்தை சரிசெய்ய எப்படி உங்கள் ஜெபத்தை பயன்படுத்துவீர்கள்.?
3. உங்கள் ஜெபக்குழுவில் ஒவ்வொரு முக்கியமான தேவைக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஜெபித்திருக்கின்றார்களா?
4. உடன்பாட்டை தெரியப்படுத்தி, தேவனோடு உறவாட ஒவ்வொரு வருடைய ஜெபத்தையும் சேர்க்கவும்:
5. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் என்ன சம்பவித்தது என்பதை அறியாவிட்டாலும் ஒரு குறிப்பிட்ட நபருக்காக ஜெபிக்க வேண்டு மென்கிற உணர்வு எப்பொழுதாகிலும் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?
6. பதிலளிக்கப்படாத ஜெபத்திற்கு உதாரணமாக ஒரு சாட்சியை நீங்கள் பகிர்ந்துகொள்ள முடியுமா? பிறருடைய ாட்சிகள் உங்களை எந்த அளவுக்கு பலப்படுத்தி, உற்சாகப்படுத்தியது என்பதை அவர்களுக்கு கூற முடியுமா?
7. சபைக்கு தீங்கிழைப்பதற்கு சாத்தான் செய்யும் சில தந்திரங்கள் என்ன? ‘‘பிரிவினை உண்டாக்கி, ஜெயமெடுக்கும்’’ தந்திரத்தை அவன் எப்படி பயன்படுத்துகிறான்.?

**<u>ஒற்றுமையினால் வரும் வல்லமைக்கான ஜெபம்</u>**

பரலோக பிதாவே, சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும் இன்பமாயிருக்கிறது என்று சங்கீதக்காரன் மூலம் நீர் தெரியப்படுத்தியிருக்கிறீர் (சங். 133) கர்த்தராகிய இயேசுவே, நீரும் பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல உம்மை

விசுவாசிக்கிறவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் ஜெபித்தீர். (யோவான் 17:21) நாங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ...............சமாதனக் கட்டினால் ஆவியின் ஒருமையை காத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறீர் (எபே 4:3) ஒருவருக்கொருவர் ஜெபிப்பதினால் வரும் ஆசீர்வாதங் களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒருவருக்கொருவர் பணிவுடன் நடப்பதை தடைசெய்கின்ற எல்லாவிதமான பிரிவனைகள், சுயநலங்கள் மற்றும் அகம்பாவங்களை வெட்டி எரிவதற்கு உம்முடைய வார்த்தை ஒரு லெசர் கதிர்களைப் போல எங்கள் இருதயங்களை ஊடுருவிச் செல்லும்படி நாங்கள் ஜெபிக்கிறோம்.
இரண்டு பேராவது, மூன்று பேராவது ஒருமனப்பட்டு ஜெபித்தால் உங்கள் ஜெபத்தைக் கேட்பேன் என்று நீர் வாக்குப் பண்ணியிருக்கிறபடியினாலே, உம் இருதயத்திலுள்ளவை யெல்லாம் உங்கள் உதடுகளில் இருக்கும்படி எங்கள் ஜெபங்களை பலப்படுத்தி, எம் வாழ்க்கைக்கு அதிகாரங்கொடுக்கும்படி கேட்கிறோம். எல்லா வகையிலும் உம் நிறைவை எம்ஜெபங்கள் வெளிப்படுத்துவதாக, இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

## அதிகாரம் 3: துதியின் வல்லமை

நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும். (சங்கீதம் 23:1)

1. கீழ்வரும் வசனங்கள் ஒவ்வொன்றும் சிருஷ்டிப்பில் தேவனுடைய நோக்கத்தை எவ்விதமாக எடுத்துரைக்கின்றன?

ய) சங்கீதம் 19: 1—6.........................................

டி) ரோமர் 1:20

உ) சங்கீதம் 100: 1—3

ன) சங்கீதம் 103: 22

ந) சங்கீதம் 104 – தேவனுடைய சிருஷ்டிப்பை எப்படி துதிக்கின்றது?

.................................................................................

2. சங்கீதம் 139: 14—16

ய) தேவன் நம்மை சிருஷ்டித்ததற்காக நாம் அவரை எப்படி துதிக்கிறோம்?

டி) இப்படிப்பட்ட துதிகள் நம் சரீரங்களைப் பாராட்டுவதற்கு எவ்விதம் உதவுகின்றன?

...........................................................................

உ) மிக அப்புதமாக படைக்கப்பட்டிருக்கின்றது என்று நீங்கள் நினைக்கின்ற உங்கள் சரீரத்தின் ஒரு குறிப்பிட்ட உறுப்பு அல்லது அதின் இயக்கத்திற்கு ஒரு உதாரணம் தருக: ஏன்?

................................................................................

3) பிலி. 4:4—ல் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கும்படி பவுல் கூறுகிறார். நம் ஜெபத்திற்கு துணை புரிவது எது (வச.6)?

...............................................................................

a) பிலிப்பு: பட்டணத்தை முதன்முறையாக சந்தித்தபோது பவுல் எவ்வாறு உபத்திரவப்படுத்தப்பட்டார்? (அப். 16: 19—40)

.....................................................................

b) பவுலும், சீலாவும் தாங்கள் பெற்ற பேச்சுகளுக்கும், காயங்களுக்கும் எப்படி பதில் கொடுத்தனர்?

.................................................................

c) அவர்களுடைய துதியின் பலனாக நிகழ்ந்தது என்ன?

...............................................................

d) பிலிப்பியருக்கு நிருபத்தை எழுதியபோது பவுல் எங்கு இருந்தார்? (பிலி. 1:13)

..............................................................

e) தனக்கு என்ன நேரிடக்கூடும் என்று அவர் கருதினார் (பிலி. 1:23)

..............................................................

f) தேவனை துதித்தல், களிகூருதல் மற்றும் நன்றி கூறுதல் குறித்து இது நமக்கு கூறுவது என்ன?

..............................................................

4. செப்பனியா 8:17

a. தேவன் நம்மமேல் மகிழ்ச்சியாய் இருப்பதை எப்படி வெளிப் படுத்துகிறார்

..............................................................

b. தேவனுடைய கெம்பீரமான களிகூருதலுக்கு பதிலளிக்க நாம் என்ன செய்யலாம்

..............................................

5. சங்கீதம் 98:

ய) துதியினால் தேவனுக்கு பதில் கொடுக்கும்படி எவைகள் அழைக்கப் பட்டிருக்கின்றன?

..............................................................

டி) இந்த சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துதியின் வடிவங்கள் என்ன?

..............................................................

c) இந்த கங்கீதம் நம்முடைய துதியின் முழக்கத்தை எதனோடு ஒப்பிடுகின்றது (வச. 4,7

6. ய) தேவதூதர்களின் முக்கியமான பணி எது? (சங். 103:20—21 ஏசா. 6:1—4, வெளி 5:11—13)

டி) இயேசுவின் பிறப்பின்போது தேவதூதர்கள் பாடிய துதிப்பாடல் என்ன? (லூக்கா: 2:14)

..............................................................

உ) நீங்கள் தேவனை துதிக்க தூண்டுவதற்கு தேவதூதர் களைப்பற்றி அறிந்துகொள்வது எவ்விதம் உதவுகின்றது.

..............................................................

7. ய) எக்காரியங்களுக்காக நாம் நன்றி செலுத்த வேண்டும் என்று அப். பவுல் கூறுகிறார்? (எபே. 5:20)

b) இதே வசனத்தின்படி நாம் எப்பொழுது நன்றி கூறவேண்டும்?

c) ரோமர் 8:18, 28—ல் வாக்குத்தத்தின் மேலுள்ள நம் விசுவாசம், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்ய வேண்டும் என்ற கட்டளைக்கு கீழ்படிய எவ்விதம் நமக்கு உதவுகிறது?

..............................................................

8. 2 நாளாகமம் 20: 15—17

ய) ஜெபத்தின் மூலம் தேவனைத் தேடுகிற ஜனங்களுக்கு அவர் அளித்த வாக்குத்தத்தம் என்ன?

..............................................................

டி) வாக்குத்தத்தங்களை சுதந்தரித்து கொள்வதற்கு ஜனங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு பதில் கொடுப்பது எப்படி?

..............................................................

9. சங்கீதம் 103: 1—3ல் காணப்படும் துதிக்கும், சுகமாதலுக்கும் இடையேயான தொடர்பு என்ன?

..............................................................

*மனப்பாட வசனங்கள்*

1. மகிழ்ச்சியோடு தேவனைத் துதியுங்கள்
   ய) சங். 33: 1 டி) சங. 103:1—3
2. எப்பொழுதும் எல்லாவற்றிலும் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்த வேண்டும் ய) எபே. 5:20—21 டி) ரோமர் 8:28

**<u>தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக:</u>**

1. நாம் எதற்காக தேவனைத் துதிக்க வேண்டும் என்ற காரியங்களை **<u>சங்கீதங்களிலிருந்து பட்டியலிடுக:</u>**

2. பின்வரும் முகவுரைகளைக் கொண்டு தொடங்கும் துதியின் ஜெபங்கள் சிலவற்றை எழுதுக:

ய) கர்த்தாவே, நீர் பெற்றுக்கொள்ள பாத்திரர் (வெளி. 5:12—13ஐ காண்க)

.......................................................................

டி) உம்மை உயர்த்துகிறேன், ஆண்டவரே நீர்

.......................................................................

c)நான் உம்மை துதிக்கிறேன், கர்த்தாவே, நீர் தந்தருளின

.......................................................................

d)ஆண்டவரே, நான் அறிக்கையிடுகிறேன். நீர்

.......................................................................

e)நான் இயேசுவின் நாமங்களைத் துதிப்பேன். ஏனெனில் அவர்

.......................................................................

f)கர்த்தாவே நீர் மிகவும் அருமையானவர், நான் உம்மில் அன்புகூறுகிறேன், ஏனெனில்

.......................................................................

g)நான் எப்பொழுதும் உம்மில் களிகூருவேன். இயேசுவே, ஏனெனில்,

.......................................................................

3. நீங்கள் தேவனை துதிப்பதற்கு பயன்படுத்தும் கருவிகளாக தேவன் அளித்த காரியங்களைப் பட்டியலிடு
4. உங்களுக்கு பிரியமான துதியின் சங்கீதம் எது? ஏன்?
5. அண்டவருடைய ஜெபத்தில் காணப்படும் முதல் மூன்று விண்ப்பங்கள் எவ்வாறு தேவனை துதிக்கும் ஒரு வடிவமாக காணப்படுகின்றன?
6. நீங்கள் தற்பொழுது சந்திக்கிற ஒரு பிரச்சனை என்ன? தேவன் தமது அன்பையும், வல்லமையையும், மகிமையையும், காண்பிப்பதற்கு இந்த பிரச்சனை எப்படி ஒரு வாய்ப்பாடு அமைகின்றது.
7. ஒரு துதியின் ஜெபமாக வெளி. 5:12ஐ மனப்பாடம் செய்ய விரும்பலாம். அதை சத்தமாக உரைத்து, ஒரு இராகம் சேர்த்து பாடுங்கள்.

**<u>என்னை ஒரு துதிப்பானாக மாற்றுவதற்கான ஜெபம்</u>**

பரலோகத்தின் பிதாவே, உமது அன்பினாலும், நீர் எனக்குச் செய்த எல்லாவற்றினாலும், என்னை ஆச்சரியத்துக்குட்படுத்துகிறீர். உமக்கு சேவை செய்யும்படி நான் என்னை ஒப்புக் கொடுக்க விரும்புகிறேன்.என்னுடைய சத்தத்தையும், கைகளையும், மனதையும், எனக்குள்ளறெல்லாவற்றையும் கொண்டு உம்மை உயர்த்த தொடங்குவேன். நான் உமது நாமத்தைத் துதிப்பேன். உம்மை துதிப்பதற்காக என் சொற்களை லெகுவாக்குவேன். அது தவறுகையில், உம்மை அதிகமாக துதிப்பதற்கு உதவும் உம்முடைய ஆவியை அருளும்படி கேட்கிறேன். பின், உம்மை துதிக்கும் மகிழ்ச்சியில் இன்னும் அதிகமாக துதிப்பதற்கு உதவும் உம்முடைய ஆவியை அருளும்படி கேட்கின்றேன். பின், உம்மை துதிக்கும் மகிழ்ச்சியில் இன்னும் அதிகமாக இன்னும் சிறப்பாக உம்மை துதிக்க உதவும்படி

கேட்கிறேன். உம் மகத்துவம், அன்பு மற்றும் வல்லமையுடன் கூடிய ஒருமைப்பாட்டில் பாய்ந்துசெல்ல விரும்புகிறேன்.

உம்மை துதிக்கையில் நான் சமுத்திரத்தைப்போல முழங்குவேன் (சங்கீதம் 97:7) உம்மை கனப்படுத்தும்படி ஆட்டுக்குட்டியைப்போல துள்ளுவேன். (சங்கீதம் 114:4) உம் நாமத்தை மகிமைப்படுத்தும்படி தூதர்களோடு சேர்ந்து பாடுவேன். கர்த்தாவே உமக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக நான் விளங்கும்படி என்னை பயன்படுத்தும். ஆமென்.

## அதிகாரம் 4 – ஜெப பயிற்சி

உங்கள் முகத்தைக்கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும் பொருட்டு, இரவும், பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறோமே (1 தெசலோனிக்கேயர் 3:10).

1. கீழ்க்காணும் வசனங்களில் நம்முடைய ஜெப முயற்சிக்கு இயேசு வைத்திருக்கும் உதரணம் என்ன?

லூக்கா 3:21—22——————————————————————————————
லூக்கா 5:16———————————————————————————
லூக்கா 6:12———————————————————————————
லூக்கா9:18——————————————————————————
லூக்கா 18:1—8—————————————————————————————

2. கீழ்க்காணும் வசனங்களில் திருச்சபையின் ஜெபங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன?

அப்போஸ்தலர் 4:24—31———————————————————————
அப்போஸ்தலர் 12:5,12———————————————————————
அப்போஸ்தலர் 13:2—3 யு———————————— ட——————————
ஊ————————————னு————————————

3. கொர்நெலியுவின் ஜெபங்களுக்கு துணைபுரிந்து தேவனிடத்தலிருந்து பதிலை வரவழைத்தது எது?

அப்போஸ்தலர் 10:4,30—31——————————————————————

4. நியாதிபாதிகள் 20:26—ல் ஜனங்கள் எவ்வாறு தங்களை தேவனுக்கு வெளிப்படுத்தினர்?———————————————————————————

5. பின்வரும் வசனங்களில் உபவாசத்தில் குறிக்கோள் என்ன?

2 சாமுவேல் 12:16——————————————————————————
எஸ்தர் 4:16——————————————————————————
தானியேல் 9:3————————————————————————————
யோவேல் 2:12——————————————————————————
அப்போஸ்தலர்14:23——————————————————————————

6.சத்தமாக ஜெபித்ததற்கு நல்ல காரணங்கள் எதுவாக இருக்கலாம்?

சங்கீதம் 98:4—7———————————————————————————
1 இராஜக்கள் 8:52————————————————————————

7. சில சமயங்களில் மௌனமாக ஜெபித்தற்கு சில நல்ல காரணங்கள் என்னவாக இருக்காலம்?

சங்கீதம் 19:14—————————————————————————
1 சாமுவேல் 1:13——————————————————————————
சங்கீதம் 4:4——————————————————————————

8. பின்வரும் வகனங்களின்படி ஜெபத்திற்காக எந்த நிலை ஆலோசிக்கப்பட்டுள்ளது?

சங்கீதம் 95:6——————————————————————————
1 தீமோ 2:8————————————————————————
எபேசி 3:14 ————————————————————————

9. 1 இராஜக்கள் 8:54ல் ஜெபத்தின் போது சாலமோனுடைய பாங்கனி (நிலை) சிறப்பம்சம் என்ன?

—————————————————————————————————————

10.சங்கீதம் 28:2—ல் எவ்வாறு?———————————————————

11.சங்கீதம் 41:1—ல் ஆராதனையின் போது நம் கரங்களை எதற்கு பயன்படுத்த வேண்டும்?—————————————————————————

12.சங்கீதம் 134:2—ல் நாம் எதற்காக கரங்களை உயர்த்த வேண்டும்?——————————————————————————————

13.சங்கீதம் 50:15—லிருந்து ஜெபிப்பதற்கு நான்கு காரணங்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகள் என்ன?

ய)தேவ கட்டளை———————————————————————————

டி)நமது தேவை ——————————————————————————

உ)தேவனுடைய வாக்குத்தத்தம்————————————————————

ன)நம்முடைய நன்றி ——————————————————————————

14.பிலிப்பியர் 4:4—6ன்படி கலவலைப்படுவதற்கு மூன்று மாற்று வழிகள் என்ன———————————————————————————

15.நாம் கேட்பதற்கு முன்பே தேவன் எப்படி நம்முடைய ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார்?——————————————————————————

16.யோவான் 15:7ன்படி பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்கான நிபந்தனை என்ன?—————————————————————————

**<u>மனப்பாட வசனங்கள்</u>**

1. பதில் கொடுக்கப்பட்ட ஜெபத்திற்கான நிபந்தனை ய) யோவான் 15:7, டி. பிலி 4:6—7
2. ஜெபத்தில் மனப்பக்குவம் ய)யோவேல் 2:12—13 டி)சங்கீதம் 28:2

**<u>தனிப்பட்ட தியானம் மற்றும் கலந்துரையாடலுக்காக</u>**

1. ஒவ்வொரு நாளும் நீங்கள் ஜெபத்திற்காக ஒரு விசேஷித்த நேரம் ஒதுக்குவதிலும் அமைப்பதிலும் உங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் என்ன? எந்த சமயத்தில் இதை செய்வது சரியாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? ஜெபித்துக் கொண்டே நீங்கள் செய்யக்கூடிய வேறு சில காரியங்கள்(வசனம் ஒட்டுதல்) எவை?
2. ஜெபிக்காத பாவத்தை அறிக்கையிட்டு, ஜெபிக்கவிடாமல் செய்கிற ஆவியின் மேல் அதிகாரம் எடுங்கள்.
3. எவரேனும் உங்களை அவர்களுக்காகவோ அல்லது அவர்களுடைய பிரச்சினைகளுக்காக ஜெபிக்கும்படி கேட்கும்போது, உடனடியாக அங்கேயே செய்கின்றீர்களா? அல்லது பின்னர் தனிப்பட்ட முறையில் செய்கின்றீர்களா? எது சரியானது?
4. எப்பொழுதும் ஒரு ஜெப நிலையில் இருக்கும் குறிக்கோளுடைய உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நீங்கள் செய்யக்கூடிய சில காரியங்கள் என்ன?
5. ஜெபிக்கும்போது துதிக்கவும், கவனிக்கவும், தியானிக்கவும் நேரம் எடுக்கின்றீர்களா?
6. உபவாசத்தோடு அல்லது அதைக் குறித்த கேள்விகளோடு கூட உங்களின் சில அனுபவங்களை பிறரோடு பகிர்ந்து கொள்ளுங்கள்

**<u>ஜெபமற்ற நிலைக்கு எதிராக ஜெபித்தல்</u>**

பரலோகத்திலுள்ள அன்பின் பிதாவே, என் வாழ்க்கையிலும், சபையிலும் ஜெபமற்ற பாவத்தை அறிக்கையிடுகிறேன. எங்கள் சபையில் ஜெபத்தை தடை செய்யும் எந்த ஆவியினிடமிருந்தும் காப்பாற்றி, பாதுகாக்கும்பழ ஜெபிக்கிறேன. உம்முடைய பரிசுத்த ஆவியினால் உம்முடையசபையையும் என்னையும் நிரப்பும்படி ஜெபிக்கிறேன். உம்மோடு பேசுவதற்கும், நீர் பேசுவதை கவனிப்பதற்கும் ஏற்ற ஒரு விசேஷமான நேரத்தை திட்டமிடுவதற்கு எனக்கு உதவி செய்தருளும். அந்த நேரத்தை ஜெபிக்கவும், உம்மோடு ஐக்கியம் கொள்ளவும் உமக்கென்று ஒதுக்கி, பிரதிஷ்டை செய்ய விரும்புகிறேன். கர்த்தாவே, ஒரு வல்லமையான ஜெப வாழ்க்கை பெறுவதற்கு உம்முடைய பரிசுத்த

ஆவியினால் நடத்துவீராக! என் ஆண்டவரே, என்னுடைய தேவைகளையும், பிறருடைய தேவைகளையும் உமக்கு முன்பு கொண்டு வநநது இயேசுவின் மூலம் உமது வல்லமையினால் விடுவிக்கப்படும்படி என்னை நடத்தியருளும். ஆமென்!

**அதிகாரம் 5— பரிசுத்த ஆவியானவரும், ஜெபமும்**

“நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும், கிருபையின் ஆவியையும் விண்ணபங்களின் ஆவியையும் ஊற்றுவேன்” சகாரியா 12:10.

1.சகரியா 12:10ல் பரிசுத்த ஆவியானவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நாமம் என்ன?—————————————————————————

நம்முடைய வாழ்க்கையில் ஆவியானவரின் கிரியைக் குறித்து இந்த நாமம் உரைப்பது என்ன?——————————————————

2.கீழ்வரும் வசனங்களில் ஜெபத்தின் மூலம் தேடி பெற்றுக் கொள்ளக் கூடிய ஆவியின் வரங்கள் யாவை?

யு) அப்போஸதலர் 4:29—30. 1.———————————2.————————

டீ.அப்போஸ்தலர் 19:6 1)—————————2)———————

ஊ. 1 கொரி 14:13———————————————————————

னு. எபேசியர் 3:16—17 1.——————————————————

2.—————————————————————————————

3.—————————————————————————————

3.எபேசியர் 5:18—19 ஆவி எவ்விதமாக பெற்றுக்கொள்ளப்படுகிறது அல்லது ஜனங்கள் ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது சம்பவிப்பது என்ன?

..................................................................................................

..................................................................................................

4.அப்போஸ்தல் 13: 1—6 மிஷனரிகளை அனுப்பும்படி ஆவியானவரால் நடத்தப்பட்டபோது, அந்தியோகியாவிலிருந்த சபை என்ன செய்துகொண்டிருந்தது?

...................................................................................................

5.1 கொரிந்தியர்: 14 ஒருவன் ஆவியினாலே அந்நிய பாஷைகளை பேசும்போது, 14:2—ன்படி யாரோடு பேசுகிறான்?............................ இந்த உண்மை அந்திய பாஷைகளை பேசும் வரத்தில் இயல்பை என்னவாக்குகிறது?.............................................................

பேசுகிறவனுடைய (அல்லது வேறொருவனுடைய) மனம் பொதுவாக தான் பேசுவதை புரிந்துகொள்கின்றதா,

...........................................................................................

6.ஆவிக்குள்ளாக அந்திய பாஷையில் ஜெபித்தல் என்பதின் விளக்கம் என்ன? 1 கொரிந்தியர் 4:14?

.......................................................................................வசனங்கள் 15—16ல் குறிப்பிடப்பட்டுள்ள, ஆவியினாலே ஒருவன் செய்யக்கூடிய மற்ற காரியங்கள் எவை?

யு.......................டீ.....................ஊ...................................

7.அந்நிய பாஷைகளைப் பேசும் வரம் சபையின் பக்திவிருத்திக்காக பேசப்படுகிறது எனில் சபை பயன் அடைவத்கு உதவியாக எவ்வரங்கள் தேவைப்படுகின்றன? (வ.5)

..................................................................................

8.14:4—ன்படி இவ்விதமான ஜெபத்தின் குறிக்கோள் என்ன?

யு.........................................................................

டீ. விசுவாசிகள் செய்ய வேண்டுமென யூதா: 20 கட்டளையிடுவது என்ன?..................................................................................

ஊ. நம் மனதால் புரிந்துகொள்ள முடியாத வார்த்தைகளை ஒவ்வொன்றாக உச்சரிக்கும்போது தேவன் என்ன செய்வார் என்று நாம் நம்புகிறோம்.
………………………………………………………………………………

னு. எபேசியர் 6:10—18—ன்படி நாம் எப்பொழது ஆவியில் ஜெபிக்க வேண்டும்?
………………………………………………………………………………

நு. இவ்வசனத்தின் இரண்டாவது பகுதியில் ஆவியில் ஜெபிப்பதுடன் தொடர்புடைய மற்ற வகையான ஜெபங்கள் எவை? (அதிகாரங்கள் 4 மற்றும் 6).
………………………………………………………………………………..

9. கலாத்தியர் 5: 22—23 ஆவியின் கனியை பெற்றிருப்பது எப்படி? நம்மை ஜெபிக்கவும், துதிக்கவும் வைக்கிறது?
……………………………………………………………………………….

10. யு. ரோமர் 8:26—ன்படி நாம் ஜெபிப்பதை தடுக்கும் நம்முடைய பெலவீனம் எது?
………………………………………………………………………………

டி. சில வேலைகளில் உங்கள் ஜெபத்தை தடைசெய்யும் வரம்புகள் என்ன?……………………………………………………………………….

ஊ. தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் இவ்விதமான பெலவீனங்களை மேற்கொள்ள எவ்விதம் உதவுகிறார்?

D. நாம் ஆவியில் ஜெபிக்கும்போது, எத்தகைய விசுவாசமும் நிச்சயமும் பெறுகிறோம்?
……………………………………………………………………..

E. ஆவியானவர் நம்முடைய ஆவியோடு தொடர்பு கொள்ளும்போது நாம் அவரை ‘‘அப்பா’’ என்று ஜெபிக்கும்போது எவ்விதமான விசேஷித்த நிச்சயத்தை அவர் நமக்கு கொடுக்கிறார்?
……………………………………………………………………..

11. பிதாவினிடத்தில் பரிசுத்த ஆவியைக் கேட்கிறவர்களுக்கு இயேசு அளிக்கும் விசேஷித்த வாக்குத்தத்தம் என்ன? (லூக்கா: 11:13)

12. ஆவியானவர் ஊற்றப்படுதல் என்பது ‘‘ஆவியின் ஞானஸ்நானம்’’ என்றழைக்கப்பட்டது. ஆவியானவர் ஊற்றப் படுவது யாருக்கு (அப். 21:17)
…………………………………………………………………..

13. மனந்திரும்பி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் என்ன? (அப்போஸ்தல் 2:38)

14. விசுவாசிகள் அவருடைய ஆவியினாலும் வல்லமையினாலும் நிரப்பப்படுவதற்கு அப்போஸ்தல்கள் செய்தது என்ன? அப்போஸ்தலர் 8:15?
…………………………………….

15. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவன் வாக்குப் பண்ணியிருக்கும் வரங்கள் என்னென்ன? (1 கொரி.12:47) ?
…………………………………………………………………..

**<u>தனிப்பட்ட தியானம் மற்றும் கலந்துரையாடலுக்காக</u>**

1. நீங்கள் பகர வேண்டிய சாட்சி.

யு. இப்பாடத்தை கற்க தொடங்கியதிலிருந்து தேவன் பதிலளித்த ஜெபங்கள் பற்றிய சாட்சி

டி. உங்கள் ஜெப வாழ்க்கையில் ஏற்பட்ட தனிப்பட்ட வளர்ச்சி

ஊ. உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவின காரியங்கள்

2. அந்நிய பாஷைகளை பேசும் வரத்தையோ அல்லது ஆவியில் ஜெபிக்கும் வரத்தையோ, பெறவில்லையெனில் இப்பொழுதே அவ்வரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவனிடம் கேளுங்கள். பெறதேகோஸ்தே என்னும் நாளில் மாம்சமான யாவர்மேலும்

பரித்து ஆவியை ஊற்றினபோதே, அவர் ஆவியின் ஞானஸ்நானத்தை வழங்கிவிட்டார். உங்கள் மனதிலோ அல்லது நாவிலோ வருகின்ற சத்தங்களையோ. உச்சரிப்புகளையோ கர்த்தருக்கு அளிக்கத் தொடங்குங்கள். உங்கள் மனதில் தடுமாற்றம் ஏற்படும்போது, தேவன் அதை ஒரு மொழியாக மாற்றும்படி கேளுங்கள். விரைவில் கர்த்தருடைய மகிழ்ச்சி உங்கள் இருதயங்களை நிரப்புவதை உணருவீர்கள்.

3. அவருடைய வேதத்தில்கூறப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களும் உங்கள் வாழ்வில் நிறைவேறும்படி தேவன் கிரியை செய்வதற்கு, இம்முழு அதிகாரத்தையும் ஒரு ஜெப பட்டியலாக மாற்றி ஜெபிக்கலாம்.

.............................................................

**விண்ணப்பத்தின் ஆவிக்கு எதிரான பாவ அறிக்கை:**

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதையும், கேட்பதையும் அசட்டை பண்ணுவதினால் மாத்திரமல்ல, ஆவியின் வரங்களை வாஞ்சையுடன் நாடி பயன்படுத்துவதிலும், நம் தோல்வியினாலும் கூட நாம் தீர்க்கதரிசனங்களை புறக்கணித்திருக்கிறோம்.

இப்படியாக எங்கள் ஆவியை அவித்துப்போட்ட பாவத்தை அறிக்கை செய்கிறோம். ( 1 தெச. 5:19) எங்கள் சகோதரர்களிடம் அன்புகூராமல் தேவ ஆவியானவரை துக்கப்படுத்தியிருக்கிறோம். கசப்பையும், கோபத்தையும், மூர்க்கத்தையும், தூஷணத்தையும் எங்களை விட்டு நீக்கவில்லை. நாங்கள் தயவாயும், மனவுருக்கமாயும், மன்னிக்கிறவர்களாயும் இருக்கவில்லை. இவைகளையும் அறிக்கை செய்கிறோம். (எபே. 4: 30—32)

நீர் கொடுத்த கட்டளைகளை எதிர்க்கும்போது, விசேஷமாக நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை எதிர்க்கும்போது உம்முடைய ஆவியை கோபமடையச் செய்ததை அறிக்கையிடுகிறோம். (ஏசா. 62:10)

நாங்கள் மனந்திரும்பி, எங்களுடைய பாவ மன்னிப்பிற்காக இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். தேவ ஆவியானவர் எங்களுக்கு கொடுக்க விரும்புகிற, எங்களுக்குள் கிரியை செய்ய விரும்புகிற அனைத்தையும் பெற்றுக்கொள்ளும்படி வாஞ்சித்து நாடுகிறோம்.

அன்பின் பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியை அசட்டை செய்த, எதிர்த்த பாவங்களை மன்னிக்கும்படி கேட்கிறோம். உம்முடைய ஆவி எம்மை முழுமையாகவும், பூரணமாகவும் நிரப்புமாறு வேண்டிக் கொள்கிறோம். நீர் எங்களுக்கு அளிக்க விரும்புகிற ஒவ்வொரு வரங் களையும், பெற்றுக்கொள்ள உதவும்படி ஜெபிக்கிறோம். விசேஷமாக நாங்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவும், உம்மை இன்னும் அறியாதவர்களிடம் உம் அன்பையும், வல்லமையையும் பகிர்ந்து கொள்ளும்படி எங்களுக்கு கிருபை செய்யும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

## அதிகாரம் 6 பரிந்து பேசும் ஜெபம்

நான் பிரதானமாய்ச் சொல்லலுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும்,ஜெபங்களையும், வேண்டுதல் களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும் ( 1 தீமோத்தேயு 2:1)

1. எசேக்கியேல் 22:30 எவ்வாறு ஒரு பரிந்து பேசுகிறவனுடைய வேலையை விளக்குகிறது?

—————————————————————————————————————

2. ஆதியாகமம் 18:23—ல் ஆபிரகாம் லோத்துக்காக பரிந்து பேசுவதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன?

—————————————————————————————————————

3. யோபு தன் சிநேகிதருக்காக வேண்டிக் கொண்டபோது அவர் பெற்றுக்கொண்ட (யோபு 42:10) ஆசீர்வாதம் என்ன?

———————————————————————————————————

4. மோசே எவ்வாறு தேவனுக்கும், ஜனங்களுக்குமிடையே ஒரு மத்தியஸ்தனாக செயல்பட்டார் (யாத்திராகமம் 20:19)

A. ———————————————————————————————

B. எண்ணாகமம் 14:13—ல் அவர் எதற்காக பரிந்து பேசினார்.
————————————————————————————————

C. எண்ணாகமம் 16:46—ல் அவருடைய செயல் எவ்விதமாக காணப்பட்டது?
—————————————————————————————————

5. சாமுவேலுடைய பரிந்து பேசுதலினால் உண்டான விளைவு என்ன?
( 2 சாமுவேல் 7:8)?

யு. ————————————————————————————————

டீ. சாமுவேல் தான் இஸ்ரவேலருக்கு ஒரு பரிந்து பேசுபவராக இருக்கும் கதாபாத்திரத்தை எந்த அளவு முக்கியப்படுத்தினார் என்பதை எப்படி காண்பிக்கிறார் (12:23) ?

————————————————————————————————————

6. தாவீது ஜனங்களுக்காக பரிந்து பேசினபோது, அவர் ஜெபித்தது என்ன? ( 1 நாளாகமம் 21:17)?

————————————————————————————————————

7. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத யூதர்களுக்காக பவுல் ஜெபித்தபோது அவர் செய்ய விரும்பிய இதற்கு ஒத்த காரியம் என்ன (ரோமர் 9:3)

————————————————————————————————————

8. எரேமியா முரட்டாட்டமுள்ள ஜனங்களுக்காக பரிந்து பேசுவதை தேவன் நிறுத்தும்படி கூறியது ஏன் ( எரேமியா 7:16, 11:14, 14:11)?

———————————————————————————————————

9. தானியேல் பரிந்து பேசுகையில் எவ்விதமான ஜெபத்தை ஏறெடுத்தார் (தானியேல் 9:3)?

————————————————————————————————————

10. நம்முடைய மாபெரும் மத்தியஸ்தராகிய இயேசு எப்படிப்பட்டவர்?

யு. ஏசாயா 53:12...................................................

டீ யோவான் 17....................................................

ஊ. எபிரேயர்: 7:25..................................................

னு. ரோமர் 8:34...................................................

நு. 1 யோவான் 2:1 ...............................................

11. பின்வரும் வகனங்களின்படி நாம் யாருக்காக, எதற்காக, பரிந்துபேச வேண்டும்.

யு. யாக்கோபு 5:13.......................................................

டீ. மத்தேயு5:44........................................................

ஊ. 2 தெச. 3:1 ........................................................

னு. 1 தீமோ. 2:1—2...................................................

12. விசுவாசிகளின் சார்பாக பவுல் கேட்டுக்கொண்ட சில விஷயங்கள் எவை ( 2 தெசலோனிக்கேயர் 1:11)?

————————————————————————————————————

13. நமக்காக பரிந்து பேசுகிறவரும், நாம் பிறருக்காக பரிந்து பேசும்படி உதவி செய்கிறவரும் யார் (ரோமர் 8:26)?

————————————————————————————————————

14. பார்வோனை ஜெபிக்க வைப்பதற்கு பதிலாக மோசே பார்வோனுக் காகவும், எகிப்துக்காகவும் ஜெபித்தது ஏன் (யாத். 8: 8—9)?

———————————————————————————————————

16. யோவான் 17ம் அதிகாரம் முழுவதும் இயேசுவின் மாபெரும் பரிந்துபேசும் ஜெபம் ஆகும். மூன்று ஜெபங்களையும், ஒவ்வொன்றிலும் இயேசு கெட்ட காரியங்களையும் பட்டியலிடுக:

கெத்சமனே தோட்டத்தில் வேதனைப்படுவதற்கு மன்னர் இயேசு இந்த ஜெபத்தை ஏறெடுத்தார்.

யாருக்காக ஜெபித்தார்? எதற்காக கேட்டார்?

A. வசனங்கள் 1:5 ........................................................

B. வசனங்கள் 6: 19..................................................

C. வசனங்கள்20—26....................................................

**<u>தனிப்பட்ட சிந்தனை மற்றும் கலந்துரையாடல்:</u>**

1. உங்களால் புரிந்துகொள்ளமுடியாத ஒரு வலியையோ (அ) பாரத்தையோ எப்போதாகிலும் உணர்ந்திருக்கிறீர்களா? பின்னர் இதேபோன்று வேறு சிலர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று கற்றுக்கொண்டதுண்டா? அது உங்களுக்கு காண்பிக்கிறது?
2. நம் தேசத்தின் பாவங்களுக்காக என்றாவது பாரப்பட்டதுண்டா?
   2 நாளா. 7:14—ன்படி தேசத்திற்கு எவ்வாறு கிறிஸ்தவர்கள் பொறுப்பாகின்றனர்.?
3. நம்முடைய மத்தியஸ்தராக (பரிந்து பேசுகிறவராக இயேசு செய்த காரியங்கள் என்ன? எக்காரியங்களில் நாம் இயேசுவை போல ஒரு பரிந்து பேசுபவராக இருக்கக்கூடும்?
4. தேவனுடைய சித்தத்தின்படி நாம் ஆவியில் ஜெபிப்பது எப்படி? பரிந்து பேசுவதில் ஆவியானவர் உதவும் பல்வேறு வழிகளைப் பற்றி விவாதிக்கவும்.
5. “பாரம்” சுமப்பதைக் குறித்து தீர்க்கதரிசிகளும், பரிந்து பேசுகிறவர்களும் பேசியது ஏன்? (உதாரணம்: நாகூம் 1:4 எண். 11:17, யாத். 18:32, சகரி. 9: 13, 12:1) மற்றவர்களுடைய பாரத்தை நீங்கள் சுமக்கும்படி தேவன் உங்கள்மேல் வைத்து விட்டதைபோல் எப்போதாகிலும் நினைத்ததுண்டா?

   (ஒரு பாரத்தைக் குறித்து சிந்தியுங்கள். அதை குறித்து குற்றச் சாட்டும்படியாக அல்ல: பிறருக்காகஅதை சுமக்கும் படியாக)

**<u>பரிந்து பேசும் ஜெபம்</u>**

சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்களுடைய பாவபாரத்தை சுமப்பதற்கு வேறொருவர் இல்லாதபடியினாலே நீர் உம்முடைய குமாரனை எங்களுக்காக பரிந்து பேசும்படி அனுப்பினாா. இயேசுவே, எங்களுடைய அக்கிரமங்களினிமித்தம் நீர் காயப்பட்டதற்காகவும், உம்முடைய தழும்புகளால் எங்களுக்கு சுகத்தைக் கொண்டு வந்ததற்காகவும், உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது பிதாவின் வலது பாரிசத்திலே நீர் எங்களுக்காக பரிந்து பேசுவதற்காகவும் எங்கள்மீது தயவு காண்பிப்பதற்காகவும் இயேசுவே நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். பிறருக்காக நாங்கள் சுமக்க வேண்டுமென்று நீர் கேட்டுக்கொண்டதை இப்பொழுது பெற்றுக் கொள்கிறோம்.

கொலை, தூஷணம், சுயாதீனத்தை இறுமாப்பாய் கையாள்தல் போன்ற பாவங்களுக்காக மன்னிப்பு தேடிக்கொண்டிருக்கும் எம் தேசத்திற்காக ஜெபிக்கிறோம். அன்பின் ஆண்டவரே எங்கள் இருதயங்களை உம்மிடம் திருப்பிக்கொள்ளும். அரசியல்வாதி மற்றும் தலைவர்களின் இருதயங்களை நீதிக்கு நேராக திருப்பியருளும். உம்மை எதிர்க்கிறவர்கள் அமர்த்திப் போடுவீராக.

இயேசுவை கர்த்தாகவும் இரட்சகராகவும், அறியாதவர்களுக்காக மன்றாடுகிறோம். சபையானது பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் தைரியத்தினாலும் நிரப்பப்பட்டு, அனைவரும் இத்தேசத்திலும் சுற்றியுள்ள ஜனங்களுக்கு மத்தியிலும் சாட்சியாக வாழும்படிக்கு வேண்டிக் கொள்கிறோம். கர்த்தாவே நீர் சுமக்கும் பாரம் எதுவாயினும் நீர் செய்ய நினைப்பது, நீர் சுகமாக்கவும், ஆசிர்வதிக்கவும் பாதுகாக்கவும், விரும்புகிற மக்கள்

எதுவாயினும் அவற்றிற்காக ஜெபிக்கும்படி எம்மை அழைப்பியும். உமது வல்லமையின், ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இருக்கும்படி விரும்புகிறோம். ஆமென்.

## அதிகாரம் 7: அதிகாரத்தின் ஜெபம்

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மாற்கு 11:23)

1. தேவனுடைய சுகமாக்கும் வல்லமையை வெளியிட்ட அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் என்ன?

- அப்போஸ்தலர் 3:6:
———————————————————————————————————————
- அப்போஸ்தலர் 9:34
———————————————————————————————————————
- அப்போஸ்தலர் 9:40
———————————————————————————————————————
- அப்போஸ்தலர்: 14:10
———————————————————————————————————————
- அப்போஸ்தலர் 16:18
———————————————————————————————————————

2. இதற்கு ஒப்பாக இயேசு செய்த காரியங்கள் என்ன?
மாற்கு: 9:5
———————————————————————————————————————
- யோவான் 5:8
———————————————————————————————————————
- யோவான் 11:43
———————————————————————————————————————
- மாற்கு 1:25
———————————————————————————————————————
- மத்தேய 8:26
———————————————————————————————————————

3. இயேசு தம்முடைய சபைக்கு கொடுத்த அதிகாரம் என்ன?
லூக்கா 9:1, 10:19
———————————————————————————————————————
— மத்தேயு: 28: 19
———————————————————————————————————————
— மாற்கு: 11:24
———————————————————————————————————————
— யோவான் 20:21—23
———————————————————————————————————————

4. இந்த அதிகாரத்தைக் குறித்து நாம் கற்றுக்கொள்வது என்ன?
— மத்தேயு: 7:21
——————————————————————————————————————— அப்போஸ்தல் 19: 15
———————————————————————————————————————மத்தேயு 8:9
———————————————————————————————————————————————————
———————நாம் அதிகாரத்தைப் புரிந்து கொள்கிறோம்.

5. பிசாசின் மீது ஜெயமெடுத்து தேவனுடைய ராஜ்யத்தை பிரஸ்தாபம் பண்ணுவதற்கு இந்த அதிகாரம் சபையில் பயன்படுத்தப்பட்டது எப்படி?
— அப்போஸ்தல்: 8:5—13
———————————————————————————————— அப்போஸ்தல் 13: 6,11
————————————————————————————————
6. எபெசியர் 1:18—22ல் தேவன் நமக்கு பகிர்ந்தளிக்கிற வல்லமை மற்றும் அதிகாரத்தைக் குறித்து பவுல் நமக்கு கூறுகிறார்.

— சபையானது எதை அறிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் ஜெபித்தார்? (19)
————————————————————————————————எப்பொழுது வல்லமை வெளிப்படுத்தப்பட்டது (20) ?
———————————————————————————————— கிறிஸ்துவுடன் தொடர்புடைய ஒரு விசுவாசியின் ஸ்தானம் எது?
———————————————————————————————— பிசாசுனுடன் தொடர்புடைய நம்முடைய ஸ்தானம் எது
எபே. 1:27—28)
————————————————————————————————

7. எபெசி 1:13—ல் பரிசுத்த ஆவியானவர் நமக்காக வைத்திருக்கும் வரங்கள் மற்றும் வல்லமையை குறித்து பவுல் என்னகூறுகிறார்?
————————————————————————————————

8. 2 பேதுரு 1:4—ன்படி தேவனுடைய வாக்குத்தத்தங்கள் விசுவாசிகளுக்கு எதைப் பகிர்ந்து கொடுக்கின்றன.

9. தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுடைய அதிகாரத்தை எப்படி உறுதிப்படுத்தினார்?
— 1 சாமு. 7:10, 12:17
————————————————————————————————எலியா (1 இராஜா 17:1)
———————————————————————————————— எலிசா 2 இராஜாக்கள் 2:14)
————————————————————————————————

<u>**தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக:**</u>

1. தேவனுடைய வேலையை செய்வதற்கு கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் வல்லமையின் மூல ஆதாரங்கள் அல்லது வாய்க்கால்கள் என்ன?
ஏசாயா 55:10—11 மற்றும் எபிரெயர் 4:12—ஐ பயன்படுத்தி, வார்த்தையின் வல்லமையை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்.
ரோமர் 8:11 மற்றும் அப். 1:8—ஐ கொண்டு நம்மிலுள்ள ஆவியின் வல்லமையை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்.

2. ஒரு காரியத்தை செய்வதற்கு வேண்டியவ ல்லமையும், அதிகாரமும் கொடுக்காமல் அக்காரியத்தை செய்யும்படி தேவன் கட்டளையிடுவாரா? மத்தேயு 23:1 முதலான வசனங்களும், மாற்கு 16:17—18 ஆகிய வசனங்களும் இவற்றை எவ்விதம் தொடர்பு படுத்துகின்றன.

3. சாத்தானை கட்டி, அவனை அடியோடு விரட்டுவதற்கு இயேசு ஏற்கனவே செய்திருக்கும் செயல் என்ன? (மத். 12:28) யோ. 12:31—ஐ பார்க்கவும்) இயேசு இப்பணியை முன்னமே நிறைவேற்றிவிட்டபடியால் இதை நம்முடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் எவ்வாறு பயன்படுத்தவும், உறுதிதப்படுத்தவும் முடியும்?

4.கீழ்வரும் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அதிகமாகவோ(உறுதிப்படுத்தும்) சுதந்தரித்துக் கொள்ளும் ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.
அப்போ 1:8; யோவான் 14:16—17; எபேசியர் 6:10—17; சங்கீதம் 91:10—11.

நம்மிலுள்ள இயேசுவின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் ஜெபம். சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்முடைய வார்த்தையின் வல்லமையினாலே அண்டசராசரத்தை படைத்து, நிலைப்படுத்துகிறவரே, நீர் அனுப்பும் வார்த்தை வெறுமையாய் திரும்பாமல் தான் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுகிறது. ஆகவே நாங்கள் ஊனையும், கணுக்களையும், ஆத்துமாவையும், ஆவியையும் வகையறுக்கத்த தக்கதாய் உருவக் குத்துகிற உம்முடைய வார்த்தையையும் வாக்குத்தத்தங்களையம் பற்றிக் கொள்கிறோம். பாவம், வியாதி, அந்தகார வல்லமை ஆகிய அனைத்து சத்துருகன்களுக்கு விரோதமாக போரிடுவதற்கு, பரிசுத்த ஆவியின் வல்லமையோடு உம் வார்த்தைகளை பயன்படுத்துவதற்கு எங்களுக்கு உதவி செய்தருளும்.

அநேகரை சீஷராக்கவும், வியாதியஸ்தரை சுகமாக்கவும், பாவங்கைள மன்னிக்கவும் உமது வல்லமையை வெளிப்படுததவும் உம்முடைய அதிகாரத்தை பயன்படுத்தும்படி நீத் கட்டளையிட்டபடியினாலே, உமக்கு கீழ்ப்பழயவும், உமது கண்களுக்கு முன்பாக உம்முடைய கிரியைகளை செய்வதற்கு உம் சித்தத்தை நம்பவும் எமக்கு விசுவாசமும் தந்தருளும். எங்களுக்கு விரோதமாய் எழும்புகிற மலை போன்ற பிரச்சினை எதுவானாலும் இயேசு கிறிஸ்துவின் அதிகாரமுள்ள வார்த்தையினாலே, நாமத்தினாலே வெளியேறும்படி கட்டளையிடுகிறோம். ஆமென்.

## அதிகாரம்—8

## பழைய ஏற்பாடு

1.யோபுவின் பிரச்சினை

தேவன் தன்னிடம் பேசவில்லை என்று யோபு குற்றஞ்சாட்டினார். தேவன் தங்களிடம் பேசுவதில்லை என்று ஏன் மக்கள் அடிக்கடி நினைக்கின்றனர்( யோபு 33:14)?—————————————————

நாம் தேவனுக்கு செவிகொடுக்காத பட்சத்தில் அவர் எப்படி பேசமுடியும்(யோபு 23:14—16)————————————————————

2.தீர்க்கதரிசிகள் மற்றும் நியாயாதிபதிகள்

யு. மோசே எகிப்திலிருந்து இஸ்ரவேலரை வழி நடத்த வேண்டும் என்ற செய்தியை உறுதிப்படுத்த தேவன் என்ன விதமான அடையாளத்தை கொடுத்தார்(யாத் 3:14)?————————————

டீ, எண்ணகமம் 22:12—ல் தேவன் பாலாக்கிடத்திற்கு போக வேண்டாம் என்று பிலெயாமுக்கு கூறினார். பிறகு அவரை போகவிட்டார். ஆனால் வழியிலே தேவ துாதன் அவரை கொல்லும்படி எதிர்ப்பட்டார்( வக 20,22). பிலேயாம் இரண்டாம் தரம் கேட்டதற்கான நோக்கம் என்ன?———————————————

தேவன்பேசும்படி நாம் கவனிக்கும் போது நம்முடைய சொந்த உணர்ச்சிகளை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்பது குறித்து இச்சம்பவம் நமக்கு உணர்த்துகிற காரியம் என்ன?——————————————————————————————————————

ஊ.உண்மையாக தேவன் தான் பேசுகிறாரா என்பதை உறுதிப்படுத்தி கொள்வதற்காக கிதியோன் ஒரு தோலைப் பயன்படுத்தினார்(நியாதி 6:37). தேவன் தம்முடைய செய்தியை எப்படியாக கிதியோனுக்கு இரண்டு தரம் உறுதிப்படுத்தினார்?———————————————————————————————————

D. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் முதன்முறையாக இரவில் தேவனுடைய அழைப்பைக் கேட்ட போது எப்படியாக பதில் கொடுத்தான்?(1 சாமு 3:4—5).

E. 1 இராஜக்கள் 19:8—14—ல் தேவன் தன்னிடம் பேசியதை எலியா எப்படி கேட்டார்?——————————————————————————

3.**சங்கீதம் ஃ நீதிமொழிகள்**

யு. சங்கீதம் 119:105, 133—ன்படி தேவனுடைய வார்த்தை நமக்கு என்ன செய்யும்.—————————————————————————————

டீ. சங்கீதம் 25:12—14ன்படி தமக்கு பயப்படுகிறர்களுக்கு தேவன் செய்வது என்ன?.—————————————————————————————

ஊ.நீதிமொழிகள் 1:28—31—ன்படி தேவனுடைய வழிநடத்துதலை ஏன் ஜனங்கள் பெற்றுக் கொள்வதில்லை.——————————————————————————

**புதிய ஏற்பாடு**

4. **அப்போஸ்தலனாகிய பவுல்.**

யு.தேவன் பேசின போது அந்தியோகியா சபை விசவாகிகள் என்ன செய்தனர்——————————————————————————————————

டீ. அப் 16:6—7ல் தேவன் பேசுவதைக் கேட்பதில் பவுலுக்கு ஏன் பிரச்சினை ஏற்பட்டது. ——————————————————————————

ஊ.இவ்வாழ்க்கையில் நாம் தேவனை பார்க்கிற அவர் கூறுவதை கேட்கிற விதத்தை பவுல் எதனோடு ஒப்பிடுகிறார் ————————————————————————————

னு. 1 தெசலோனிக்கேயர் 5:20—21—ல் தீர்க்கதரிசனங்களைக் குறித்து நாம் செய்ய வேண்டியதாக பவுல் கூறுவது என்ன?.——————————————————————————————

நு. கர்த்தரிடத்திலிருந்து வந்த வார்த்தைகள் என்று விசுவாசிக்கிற ஒரு கிறிஸ்தவன் யாருக்கு அடங்கியிருக்க வேண்டும் (1 கொரி 14:32) ——————————————————————————

கு. அப்போஸ்தலா் 21:11—14—ல் எருசலேமுக்கு போனால், அவருக்கு தீங்கு நேரிடும் என்று அகபு என்பவன் தீர்க்கதரிசனம் உரைத்தார். எனினும் பவுல் எதற்காக அங்கு சென்றார். (அப் 20:22—ஐ பார்க்கவும். ———————————————————————————————

இங்கு ஆவியானவர் ஒரு முரண்பாடான நடத்துதலைக் கொடுக்கிறார் என்று யோசிக்கின்றீர்களா? ————————————————————————————

**5. 1 கொரிந்தியர் 12**

யு. வசனங்கள் 8—10ல் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய வரங்களில் எவற்றை தேவனுடைய வாய்மொழி செய்திகளை பெற உதவும் ‘‘வெளிப்பாட்டு வரங்கள்’’ என்றழைக்கிறோம்.?——————————————————————————————

டீ. தங்களால் பேசக் கூடாத அந்நிய தெய்வங்களைக் குறிக்க பவுல் உபயோகிக்கும் பதம் என்ன (வ.2). ——————————————————

ஊ.1 கொரிந்தியர் 13:1—ல் பவுல் தீர்க்கத்தரிசன வரத்தை எவ்வாறு உற்சகாப்படுத்துகிறார்? —————————————————————————

6.**யாக்கோபு**

யு. தேவனையல்லாமல் ஞானத்தை பெறக்கூடிய மூல ஆதாரங்கள் எவை (யாக்கோபு 3:15)——————————————————————————

டீ. தேவனுடைய செய்தியை உணரக்கூடாமல் கெடுத்துப் போடுகிற மனஷுகமான (மாம்சீகமான) பிரச்சினைகள் என்ன (யாக்கோபு 3:16) ——————————————————————————

ஊ. தேவ ஞானம் எதை கொண்டு வருகின்றது (வச 17) ——————————————————————————

னு. முரண்பாடாக மனித சுபாவம் எதை கொண்டு வருகிறது (4:14) ——————————————————————————

**<u>தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக:</u>**

1.தேவன் பேசின நேரங்களை எடுத்துரைக்கவும் தேவன் பேசியதும், நீங்கள் அதைக் குறித்து உறுதியற்று இருந்ததுமான சில நேரங்கள் இருந்ததாக எண்ணுகிறீர்களா?

2.தேவனிடத்தில் ஒரு கேள்வி கேட்ட பின்போ அல்லது உங்களை உற்சாகப்படுத்தவோ, வழிநடத்துவோ அவர் தம் வார்த்தையை கேட்ட பின்போ கவனிப்பதற்கு நேரம் எடுக்க வேண்டும். உங்கள் மனதில் தோன்று எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள் அது தேவன் பேசுவதைப் போல தோன்றுகிறதா?

3.உங்கள் குழுவிலோ அல்லது தனியாகவோ தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு உங்களை நடத்தும்படி ஜெபியுங்கள். பின்பு ஒவ்வொருவரும் வேதத்தை திறந்து,

அங்கு காணப்படும் வசனங்களை வாசியுங்கள். உங்களுடைய வசனங்கள் ஒனரு பொதுவான செய்தியைக் கொண்டிருக்கிறதா? அவர் பேசுகிற செய்தியின் சாராம்சத்தை கண்டறியுங்கள்.

4.தேவன் இயற்கையின் மூலமாக, உங்கள் சரீரத்தில் பெற்ற அற்புதம் அல்லது உங்கள் வாழ்வில் நடைபெற்ற சம்பவத்தின் மூலமாக கூறுவது என்ன?

5.ஒரு வாரம் முழுவதும் தேவனிடத்திலிருந்து பெற்ற நடத்துதலின் அல்லது உற்சாகத்தின் வார்த்தைகளைக் குறித்து விழிப்பாக இருந்தீர்களா அல்லது உறங்கி விட்டீர்களா என்பதை கவனியுங்கள்.

6.சொப்பனங்களிலும் தரிசனங்களிலும் பேசுவதற்கு தேவன் பயன்படுத்தும் சில அடையாளங்கள் யாவை?————————————————————————————————

**வழிநடத்துதலுக்கான ஜெபம்**

பரலோக பிதாவே, என்னுடைய ஆவியை உமது ஆவிக்கு, நேராக உயிர்ப்பிக்கும்படியாய் கேட்கிறேன. நான் உமது சத்தத்தைக் கேட்டு, உம் நடத்துதலைப் பெற்று, உமக்கு எப்படியாக ஊழியம் செய்ய வேண்டும் என்பதை அறியட்டும் நீர் உமது ஆலோசனையின்படி என்னை நடத்தி, மகிமையிலே ஏற்றுக் கொள்வீர் என்று சொல்லியிருக்கிறீர்(சங் 73:24). நான் உம்மை முகமுகமாய் தரிசிக்கும் மட்டும் உம்முடைய சித்தத்தை அறிந்துக் கொள்வதற்கு உம்முடைய ஆவியின் வரங்களாகிய ஞானத்தையும், அறிவையும், தீர்க்கததரிசன வார்த்தையையும், விசுவாசத்தையும் தந்தருளுவீராக. இந்த உலகத்தினாலோ, பிசாசினாலோ அல்லது என்னுடைய மாம்சீகமான இச்சைகளினாலோ தவறி போகாதபடிக்கு உமது விவேகத்தை எனக்கு தந்தருளும். நீர் விரும்புகிற பொழுதெல்லாம் என்னோடு பேசும்படிக்கு உமது சார்த்தைகளை நான் மனப்பாடம் செய்யவும் இருதயத்தில் பதிக்கவும் உதவி செய்தருளும். ஆபிரகாமை போல, மோசேயைப் போல நானும் உம்மோடு ஒரு சிநேகிதனாக பேச விரும்புகிறேன்.

நான் சிந்திக்க வேண்டும் என்று நீர் விரும்புகிற சிந்தனைகளினாலும், நீர் விரும்புகிற ஜெபங்களினாலும், உம்முடைய வார்த்தை நிரப்பும்படியாய் ஜெபிக்கிறேன் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

## அதிகாரம் 9 தேவனுடைய வார்த்தைகளை ஜெபித்தல்

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோ 15:7)

1.ரோமர் 10:9—10—ல் விசுவாசித்திற்கும், அறிக்கைப்பண்ணுவதற்கும் இடையேயான உறவு என்ன?

————————————————————————————

2. தம்மை அறிக்கைப் பண்ணுகிறவர்களுக்கு இயேசு செய்வது என்ன (மத்தேயு 10:32)?
——————————————————————

3.தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட வாக்குதத்தங்கள் என்ன?

ய. சங்கீ 32:5——————————

டி சங்கீ 103:3——————————

உ எபேசியர் 1:7——————————

ன. ஏரோமியா 31:34——————————

4. தேவனுடைய வார்த்தையின் நிச்சயித்தில் நாம் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்(எண்ணாகமம் 21:9)? ——————————————————————————

5. ஜனங்கள் தேவனுடைய வார்த்தைக்கு தங்களை அர்ப்பணிக்கவும், அதை அறிக்கையிடவும் மறுக்கும்போது அவர்கள் செய்வது என்ன
(சங்கீதம் 107:11)?

நாம் மனந்திரும்பும்போது தேவன் எந்த வல்லமையைக்கொண்டு நம்மை குணமாக்குகிறார் (வ.20)? ——————————————————————————————
6. சுவிசேஷ வார்த்தையின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் மற்ற வல்லமை எது?
ய. ரோமர் 1:16————————————
டி யாக்கோபு1:18————————————
7.நாம் ஜெபிக்கும் போது தேவன் பதிலளிப்பதாக வாக்குப் பண்ணியவற்றில் எவற்றை நாம் அவருக்கு நினைப்பூட்டலாம்?
ய. யோவான் 14:13————————————
டி சங்கீ 37:4————————————
8.ஆவிக்குரிய வல்லமையையும், ஜெபத்தையும் நாடும் போது நாம் அறிக்கைப் பண்ண வேண்டியது எது
ய. லூக்கா11:13————————————
டி வெளி 12:11————————————
9.கஷ்டமான நேரங்களை தைரியமாக எதிர்கொள்ள நாம் பயப்படும்போது, எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பின்வரும் வாக்குத்தத்தங்கள் நமக்கு உதவியாக இருக்கும்?
ய. ஏசாயா 43:1————————————
டி சங்கீ 27:1—5————————————
உ. சங்கீ 46————————————
ன யோசுவா 1:9————————————
ந. பிலிப்பியர் 4:9————————————
க. ஏசாயா 46:4————————————
10. கீழ்க்காணும் செழிப்பின் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் என்ன?
ய. சங்கீ 1————————————
டி உபாகமம் 28:9————————————
உ. 2 நாளாகமம் 26: 5————————————
11. நீதிமொழிகள் 17:22—ஐ தனிப்பட்ட முறையில அறிக்கைப் பண்ணலாம்
"மனமகிழ்ச்சி——————————————————————————————
ஆகவே நான் ——————————————————————————————

<u>**தேவனின் குணமாக்கும் பெலத்தில் களிக்கூருவேன்.**</u>

**தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக**

1.கீழ்க்காணும் ஜெபத்தை ஏறெடுத்த பின்பு, வேதவாக்கியயங்களை ஜெபமாக பயன்படுத்தும் கொள்கையை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டள்ள சனங்களை மனதில் கொண்டு அவைகளை ஜெபமாக்கி ஏறெடுங்கள். "இந்த வார்த்தையை நான் உண்மையாக சிசுவாசிக்கிறேனா? "தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கான நிபந்தனையை நிறைவேற்றுவதற்கு தேவனுடைய உதவி வேண்டி எப்படி ஜெபிக்கலாம்?" என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

2.வேதத்தில் ஏதாவது ஒரு பகுதியை திற்ந்து,"இன்று தேவனுடைய வார்த்தை என்னிடம் கூறுவது என்ன?" என்று கேட்டக் கொண்டு வேதத்திலிருந்து ஒரு வசனத்தை எடுத்து, இந்த வார்த்தையைக் கொண்டு உங்கள் வாழ்க்கையில் ஒருமனதை கொண்டு வருவதற்கு அதை ஒரு ஜெபமாக எழுதுங்கள்.

3. ரோமர் 8:1—ஐ எடுத்து ஒரு சுகமாக்கும் ஜெபத்தை உருவாக்குங்கள். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

4. ஒருவரை பயத்திலிருந்து விடுவிக்க எவ்வசனங்களை நீங்கள் பயன்படுத்தவீர்கள்.

நமக்குள் வார்த்தையின் வல்லமையை உறுதிப்படுத்தவதற்கான பலப்படுத்துவதற்கான ஜெபம்.

கர்த்தராகிய தேவனே. நீர் உம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவதாக வாக்குப் பண்ணியிருக்கிறீர்(எரோமியா 1:12) உம்முடைய வார்த்தைகள் தன் நோக்கத்தில் தவறுவதுமில்லை. வழி மாறுவதுமில்லை. எனமக்கு உம்முடைய வார்த்தைகளையும் கூட அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படியாக பெற்றுக் கொள்ளத்தக்கதாக கேட்கிறோம். உமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே எங்கள் குறைவுகளை எல்லாம் நிறைவாக்குவீர் என்பதினால் எங்களுடைய தேவைகளையும், உமது மக்களாகிய யாவருடைய தேவைகளையம் நீர் சந்திப்பீர் என்று நம்புகிறோம். நீர் எனம்கு வைத்திருக்கிற ஆசிர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்படி உமது வார்த்தையின்வல்லமையினால் எம்மை ஆசிர்வதித்து நிரப்புவீராக. உம்முடைய வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கும்படி ஜெபிக்கிறேன். என் ஞாபக சக்தியையும், நினைவு ஆற்றல்களையும் பெருக்குவீராக! உம் வல்லமையை என்னோடு பகிர்ந்துக் கொள்ளும்படியாய் உம் வாயிலுள்ள வார்த்தைகளை என் உள்ளத்திற்குள் வையம். என் வாழ்க்கைக்காக நீர் தீவிரப்படுத்துகிற வார்த்தைகளை அறிந்துக் கொள்ளும் விவேகத்தையும், நீர் பேசும் வார்த்தைகளை நம்புவதற்கு ஏற்ற விசுவாசத்தையும் எனக்கு தந்தருளும். ஆமென்.

## <u>அதிகாரம் 10 — விசுவாத்தின் ஜெபம்</u>

ஆதாலல், நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன.(மாற்கு 11:24)

1.பின்வரும் நபர்கள்தங்கள் விசுவாசத்தை எவ்வாறு காண்பித்தனர்? அதன் மூலமாக அவர்கள் பெற்றுக் கொண்டது என்ன?

காண்பிக்கப்பட்டபெற்றுக் கொண்டவிசுவாசம் பரிசு

- பெரும்பாடுள்ள ஸ்திரி(லூக்கா 8:43—48)——————————————
- எரிகோவிலிருந்த பர்திமேயு (மாற்கு 10:46—52)———— ———————
- சமாரியாவின் குஷ்டரோகி(லூக்கா 17:12—19)——————————————

**2. விசுவாசத்தின் தடைகள்**

- வார்த்தையாகிய வாக்குதத்தங்கள் தங்களின் வல்லமையை வெளிப்படுத்துவதை தடை செய்பவை எவை?( எபி 4:2)?
- இயேசு தங்களுக்கு கட்டடையிட்டவைகளை சீஷர்களால் ஏன் செய்ய முடியவில்லை(மத்தேயு 17:14—20)? ———————————————————————————————
- இயேச தனது சொந்த ஊரில் அற்புதங்களை செய்யக் கூடாதபடி தடுத்தது எது (மத்தேயு 13:58)? ———————————————————————————————
- பெருங்காற்று உண்டான போது இயேசு எதற்காக தம்ஐடய சிஷர்களைக் கடிந்துக் கொண்டார். (மத்தேயு 8:26)? ————————————————————
- கர்த்தரிடத்திலிருந்து நாம் எதையாகிலும் பெற்றுக் கொள்ள விரும்பும் போது அதை தடுப்பது எது என்று யாக்கோயு 1:6,7 கூறுவது என்ன?———————————————————————————
- பின்வரும் வசனங்களின்படி விசுவாசம் செய்வது என்ன?
- யோவான் 1:12————————————
- எபேசியர் 2:8————————————
- யோவான் 14:12————————————
- லூக்கா 17:6————————————
- மத்தேயு 9:29 ————————————

➢ யாக்கோபு 5:15——————————

**4.விசுவாசத்தின் ஆதாரம்.**

➢ லூக்கா 11:28 மற்றும் யோவான் 3:36—ன்படி விசுவாசத்திற்கு துணைபுரியும் செயல் எது ———————————————————————

➢ விசுவாசம் என்பது சாதாரண அறிவு சார்ந்த உடன்பாட்டை விட மேலானது என்பதை யாக்கோபு எப்படி காண்பிக்கிறார்.(2:17—19) ————————————————————

➢ அவர் காண்பிப்பது——————————————————விசுவாசம்

➢ அவர் குறிப்பிடுவது————————————————கூட அறிவு சார்ந்த ஒரு விசுவாசம் உடையவைகளை இருக்கின்றன.

➢ நீதிமொழிகள் 3:5—ல் விசுவாசத்திற்கு மாற்றுவழியாக கூறப்பட்டிருப்பது என்ன? ————————————————————

➢ அந்த கிரியை விசுவாசத்தை காண்பிக்கிறதும், பெருகிறதுமாய் இருக்கிறது (வ.9). ——————————————————————

➢ விசுவாசத்தினால் வரும் ஆசிர்வாதம் என்ன (வச .8)? ————————————————————————

**நிலையற்ற விசுவாசம்**

➢ தன் விசுவாசத்தில் நிலையற்றிருக்கிறவனை யாக்கோபு என்னவென்று அழைக்கிறார். (1:6—8) ————————————————————

➢ மத்தேயு 14:30—31—ல் பேதுரு இருமனமுள்ளவனாயிருப்பதை எவ்வாறு காண்பிக்கிறார். ———————————————————

➢ பிள்ளையின் தகப்பன் பேசிய எந்த சொற்றொடர், அவன் ஏன் உதவி செய்யப்படவில்ல என்பதை காண்பித்தது (மாற்கு 9:22)? ———————————————————

➢ விசுவாசிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள் என்று இயேசு கூறியது என்ன? ————————————————————————

➢ தகப்பன் விசுவாத்திற்காக எவ்வாறு ஜெபித்தார்? ———————————————————————

**தனிப்பட்ட உபயோகம் மற்றும் கலந்துரையாடலுக்காக**

1. விசுவாசத்திற்கான ஜெபத்தை ஏறெடுங்கள். வார்ததையின் வாக்குத்தத்தங்களை வாசித்து, உரத்த சத்தமாய்.'' இது கர்த்தருடைய வார்த்தை. இது உண்மையானது, கர்த்தர் சொன்னார். நான் விசுவாசிக்கிறேன். அது அனைத்தையும் நிறைவேற்றும்,'' என்று கூறுங்கள்.

2. ஜெபங்க்ள பதிலளிக்கப்பட்ட சில அனுபவங்களை உங்கள் குழுவிலுள்ள மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள். பிளருடைய சாட்சி உங்கள் விசுவாசத்தை எவ்வாறு பலப்படுத்தகிறது? ஒரு இலகுவான சுமைக்காக நீங்கள் ஜெபித்தபோது, மெய்யாகவே தேவன் பதில் கொடுத்து சோதனையின் வழியாக உங்களை உறுதிப்படுத்தின ஒரு அனுபவத்தை சிந்திக்க முடியுமா?

3. ஒரு பிரச்சினை அல்லது தேவை குறித்து கலந்துரையாடும்போது,'' இப்பொழுது இங்கு இயேசு இருந்திருந்தால், என்ன செய்திருப்பார்?'' என்று கேளுங்கள். பின்னர் அவர் இங்கே பிரசன்னமாகியிருக்கிறார் என்று அறிக்கைப் பண்ணுங்கள்.

4.''தேவன் ஜெபத்திற்கு பதிலாளிக்கிறார்'' “இன்பமான ஜெப நேரம்,'' இயேசு என் பிராண சிநேகிதர்'' போன்ற பாடல்களை—யோ அல்லது மற்ற துதிப் பாடல்களையோ பாடுங்கள்.

5. நீங்கள் ஒருவருடைய வியாதிக்காக ஜெபித்த பின்பு அவர் உங்களிடம் வந்து விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு அடையாளமாக தான் மருந்துகள் எடுப்பதை தொடர வேண்டுமா என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்.?

6. ஒரு காரியத்திற்காக ஒரு தடவைக்கு மேல் ஜெபித்தால், அது நம் விசுவாச குறைவை காட்டுகிறது. எனவே நாம் அவருக்கு நன்றி மட்டுமே கூற வேண்டும என்று சிலர் கூறுகின்றனர் லூக்கா 18:1—8 வகனங்களில் இயேசு இதைக் குறித்து என்ன சொல்லுகிறார். 2 கொரி 12:8—11ல் ஜெபம் பதிலளிக்கப்படாததை பவுல் எவ்வாறு சமாளித்தார்? ஒரே காரியத்திற்காக நாம் ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டுமென தேவன் விரும்புவது ஏன்?

**விசுவாசத்தின் ஜெபம்**

பரலோகத்திலிருக்கிற பிதாவே, விசுவாசம் என்பது உம்மிடத்திலிருந்து வருகிற ஒரு வரம் என்பதை அறிந்திருக்கிறோம். எவ்வளவு கடினமாக முயற்சித்தாலும். நீர் எங்களுக்கு அருளாவிட்டால் எங்களால் விசுவாசிக்க முடியாது. ஆகவே உமது சீஷர்களைப் போல நாங்களும் எங்கள் விசுவாசத்தை நீர் பெருகப் பண்ணும்படியாய் ஜெபிக்கிறொம். ஆனால் உமது வார்த்தையின் வாக்குத்தத்தை கேட்பதினாலேயே விசுவாசத்தை அருளுகிறீர் என்பதை அறிந்திருக்கிறோம். ஆகவே பெரிய காரியங்களை செய்யக்கூடிய கடுகு விதையை போல எங்கள் விசுவாசம் பலமுள்ளதாய் மாறும்படிக்கு உம்முடைய வார்த்தைகளை வாசிக்கவும். ஆராயவும், புரிந்துக் கொள்ளவும், கீழ்ப்படியவும் எங்களுக்கு உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவரும், மரித்தோரை உயிர்ப்பிக்கிறவருமான உம் வார்த்தைகளை விசுவாசிக்கிறோம். (ரோமர் 4:17) விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிராகாமைப் போல நாங்களும் உம் வாக்குத்தத்தங்களின் மேல் நம்பிக்கை வைத்து, பலவீனமுள்ளவர்களாகவும். இருமனமுள்ளவர்களாகவும் இராமல், உம் வார்த்தையின் வல்லமையை பற்றிக் கொள்கிறோம். நீர் பொய்யுரைக்கமாட்டீர் என்று உம் வார்த்தைக் கூறுவதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

கர்த்தாவே, நாங்கள் சுயபுத்தியின் மேல் சாயாமல், எங்கள் முழு இருதயத்தோடும் உம் மேல் நம்பிக்கை வைக்க விரும்புகிறோம் (நீதி 3:5). உம்மை கனப்படுத்தும்படி எங்களுக்குரியவைகளைக் கொடுப்பதில் நாங்கள் உமக்கு கீழ்ப்படிவோம். அவிசுவாசமானது உம் ஜீவனின் நிறைவையும் வல்லமையையும் தடுக்காதபடிக்கு, நாங்கள் செய்யும்படி நீர் கூறுகிற அனைத்தையும் செய்து உமக்கு கீழ்ப்படிவோம். அது விசுவாசத்தின் மூலம் பாய்ந்து செல்வதாக! இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**ஜெபத்தைக் குறித்து மற்றொரு சுருக்கமான முறையான பாடம்**

**1. ஏன் ஜெபிக்க வேண்டும்.**

நாம் எதற்காக ஜெபிக் வேண்டும்? எல்லாவற்றையும் தேவன் முன்னமே அறிந்திருக்கிறார்! தம் பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். அவர் முன்னமே அறிந்தவற்றை நம்மிடமிருந்து முதல் முறையாக கேட்ட மாத்திரத்தில் அவர் நகர்ந்துவிட மட்டுமே ஆயத்தாமாயிருக்கிறாரா? நாம் தேவனைப் பற்றி விழிப்புள்ளவர்களாகும்படிக்கு, ஜெபிக்க வேண்டியது அவசியம். தேவனோடு ஒரு தெடர்பு ஏற்படுத:தவதற்கு ஜெபம் மிகவும் அவசியம். ஜெபம் மிகவும் கட்டாயம் ஏனெனில் ஜெபித்தால் மட்டுமே நாம் காரியங்களை கர்த்தர் பார்க்கிற வண்ணமாக பர்க்க முழயும். ஒருவன் கண்டிப்பாக ஜெபிக்கும் போது மட்டுமே தன்னுடைய தேவை உண்மையாக எது என்பதைக் குறித்தும் தான் செய்ததவற்றைக் குறித்தும் விழிப்புணர்வு உடையவனாய் இருப்பான். ஜெபித்தால் மட்டுமே ஆவிக்குரிய உண்மையையும் கர்த்தருடைய பிரசன்னத்தையும் அனுபவிக்கத் தொடங்குகிறீர்கள்.

**ஜெபம் என்றால் என்ன?**

ஒரு கருத்தைப் புரிந்துக் கொள்வதற்கான சில வாக்கியங்கள்:

ஜெபம் என்பது இயேசுவுடன் பேசுவதும், ஆத்துமாவில் ஏற்படும் பிளவும் ஆகும். ஜெபம் என்பது கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு ஏற்படுத்தும் ஐக்கியம் அல்லது தோழமை ஆகும். ஜெபம் என்பது நமது நியாயமான தேவையான அனைத்து

விருப்பங்களையும் ஆண்டவரும் இரட்சகருமான இயெசு கிறிஸ்துவை தியானிப்பதின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்கிற ஒரு தாழ்மையான நம்பிக்கையோடு தேவனிடம் ஒரு காணிக்கையாக அர்ப்பணிப்பதாகும். ஆண்டவருடைய முகத்தைத் தேடுவதே ஜெபம். மற்ற எல்லா காரியங்களையும் மறந்து, ஆண்டவர் மேல் நம் முழு இருதயத்தோடு கவனத்தை பதிய வைப்பதே ஜெபம் ஆகும். ஜெபம் என்பது நம்ஐடய அனைத்து கரியங்களுக்கும் மூல ஆதாரம் தேவனே என்று உணர்வது ஆகும். எடுத்துக்காட்டு— 1 சாமுவேல் 1:10; 15—16. அன்னாள் கர்த்தருக்கு முன்பாக தன் ஆத்துமாவை ஊற்றினாள்.

**3.எங்கு ஜெபிக்க வேண்டும்.**

—எவ்விடத்திலும்( 1 தீமோ 2:8)
—பிரத்யேக அறை தேனோடு தனித்திருக்க ஒரு அமைதியான இடம் உங்கள் அறை கதவைப்பூட்டி ஜெபிக்க வேண்டும்( மத் 6:6) இயேசுவை பாருங்கள. அவர் அடிக்கடி தனித்து ஜெபம் பண்ணினார் (மாற் 1:35, லூாக் 5:16; மத் 14:23).
—சபையிலும், பொது இடங்களிலும் (சங் 26:12) தேவாலயத்தில் ஜெபிக்கும்படி (லூாக் 18:10). சாலமோன் (1 இராஜா 8:22—53) ஆக, இரகசியமான இடத்தில் தனி ஜெபம்; சிறிய குழுவில் குடும்ப ஜெபம்; சபைக்கு முன்பாக பொதுவான ஜெபம்.
4.எப்பொழுது ஜெபிக்க வேண்டும்?
ய) எப்பொழுதும் (லூாக்கா 18:1—வயதான பெண்மணியின் உவமை விடாமுயற்சி) (1 தெச 5:17— இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்)
டி) காலை வேளையில் (சங் 5:3)
உ) மதியம் சாயங்காலமும் (சங் 55:17; தேவனோடு நிலையான ஐக்கியம் ஃஒற்றுமை) தானியேலும் கூட மூனறு வேளையும் ஜெபித்தர்.(தானி 6:10)
ன) நாடோறும் (சங் 36:3)
ந)இரவும் பகலும்(சங் 86:3) உதாரணமாக இயேசு தமது சீஷர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முன்பு இராமுழுவதும் ஜெபம் பண்ணினார்(லூாக் 6:12)
க) பாடுகளின் மத்தியில் (யாக்கோபு 5:13)
5. யாரிடம் ஜெபிக்க வேண்டும்?
பிதாவாகிய தேவனிடத்தில் (அப் 12:5) இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்( பழைய ஏற்பாட்டின் வேறுபாட்டுடன்) (யோவான் 14:13). யோவான் 16:23—27) வாசிக்கவும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடும், ஒத்தாசையோடும் நாம் ஜெபிக்க வேண்டும்.

**6. ஜெபத்திற்கான ஆயத்தம்!**

தேவ பிரசன்த்திற்குள் அவசரமாக நுழையாமல், தேவன் மேல் சிந்தையை பதித்து, அமைதியாக அவரே தேவனென்று அறிந்துக் கொண்டு, விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.! ஏதாகிலும் பாவம் இருப்பின் அவற்றை உணர்த்தும்படியாகவும் (யோவான் 16:8), நம்முடைய இருதயங்களை ஆராயும்படியாகவும் (சங் 139:23—24} பரிசுத்த ஆவயானவரைக் கேட்க வேண்டும். உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, மன்னிப்பைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் நம்முடைய பாவங்களும், அக்கிரமங்களுமே நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது.(ஏசா 59:2; 1 யோவான் 1:9; 2:1—2’ சங் 66:18—19;சங் 32:5( எவ்வளவு பாவம் செய்தாலும் ஒவ்வொரு முறை நீங்கள் உண்மையாக மனஸ்தாபப்படும்பொது நீங்கள் அவருடைய பிள்ளைகளாகவே இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் உணமையும் நீதியுமுள்ளவராய் பாவங்களை மன்னித்து அவைகளை ஒருபோதும் நினைவுக் கூறமாட்டார். நமக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை(ரோ 8:1).
7.எப்படி ஜெபிக்க வேண்டும்?
பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு, விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரும் ஜெபமும், விசுவாசமும் உடைக்கப்பட் கூடாத முப்பரி நூலைப் போன்றது. ஒவ்வொரு ஜெபமும் கண்டிப்பாக பரிசுத்த ஆவியானரால் ஏவப்பட்டு செய்யப்பட வேண்டும்.

ஏனெனில் ஆவியானவரே ஜீவன் கொடுக்கிறவர் (2 கொரி3:6) மேலும் நீங்கள் விசுவாசத்தோடு தேவன் ஒருவர் இருக்கிறார் என்னும் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் (எபி 11:6). விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். விசுவாசத்தின் விளக்கம்—எபி 11:1). விசுவாசமானது நீங்கள் கேட்டுக் கொண்டவைகளை பெற்றுக் கொண்டீர்கள் என்பதை நிச்சயமாக அறிந்திருக்கும் உறுதியைக் குறித்து பேசுகிறது. தேவனை விசுவாசித்தலும் நம்புதலும்! உங்கள் விசுவாசத்தை பழக்கமாக்குங்கள்! தேவைப்படுவது கடுகளவு விசுவாசமே (மத் 17:20; 21:21—22), எவைகளை கேட்பீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வீர்கள்! ஆகவே பரிசுத்த ஆவியானவரின் துணையோடு **விசுவாசத்துடன் ஜெபியுங்கள்.** யூதர் 20ம் வசனமும் கூட இவற்றைக் குறித்து பேசுகின்றது. பரிசுத்த ஆவியானவருக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் நாம் ஜெபம் பண்ண அறியாவிட்டாலும், அவர் வாக்குங்கடங்கதா பெருமூச்சோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்(ரோ 8:26—27). பெருமூச்சு என்ற வார்ததைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும், கிரேக்க சொல்லுக்கான அர்த்தம்: இருதயத்திலிருந்து பாய்ந்து வெளியெறும், வார்த்தையினால் வர்ணிக்கக் கூடாத வெளிப்பாடு இந்த வசனத்தில் ஒரு அழமான அர்த்தத்தை மற்றுமொரு முறை உணர்கிறேன்ஃபார்க்கிறேன்; அதாவது பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலினால் ஜெபிப்பதோ அல்லது அந்நிய பாஷையில் ஜெபிப்பதைக் குறித்து பேசுவதோ அல்ல (1 கெரி 14:14)

அவிசுவாசம் அல்லது இருமனமாயிருப்பது விசுவாத்திற்கு எதிரி ஆகும். இதை தேவனுடைய வார்த்தையை நம்பவிடாமல் தடுக்கின்றது. அவிசுவாசம் என்பது பிசாசிடமிருந்து வருவது, இது முதன்முறையாக ஆதியாகமம் 3:3—6 காணப்படுகிறது. தேவன் புசிக்கக் கூடாது என்றார். பிசாசானவன் வித்தியாசமாக வேறொன்றைக் கூறினான். அப்பாவத்தோடு அவிசுவாசமும் நுழைந்தது. விசுவாத்தினால் வராத யாவும் பாவமே என்ற ரோமர் 14:23 குறிப்பிடுகின்றது.! தேவனடைய வார்த்தையை நம்புவதே விசுவாசம்! தேவனுடைய வார்த்தையோடு கூட அவரை பெற்றுக் கொள்வதே விசுவாசம்.!

**டி) தாழ்மையுடன் ஜெபியுங்கள்**

தேவன் சகலத்தையும் அறிகிறவர், அவர் உங்களுக்கு தேவை என்பதை உணர வேண்டும். தேவன் ஒரு ‘‘பொத்தானை—அழுத்தும்’’ தேவன் அல்ல. அவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்; எல்லாவற்றைக் காட்டிலும் மேலான சர்வ வல்லவர். உங்களுக்காக ஏதாவது ஒன்றை செய்வதற்கு அவருக்கு உத்ரவிட முடியாது. உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கென்று அவர் இல்லை. அவர் தானாக இயங்கமாட்டார். நீங்கள் பொத்தானை அழுத்தாமல்(ஒரு சிறிய ஜெபத்தை அனுப்புங்கள்) உங்கள் வாய்ப்பை பெறுங்கள்( பதிலை பெறுங்கள்). நாம் முற்றிலும் அவரையே சர்ந்திருக்க வேண்டுமென்ற கர்த்தர் சொல்லுகிறார். அவரேயன்றி நம்மால் ஒன்றும் செய்யக் கூடாது (யோவ 15:5). தாழ்மையோடு கூட நாம் அவருடைய கிருபாசனத்தை கிட்டி, அவருக்கு முன்பாக நம் இருதயத்தை வெளிப்படுத்தும் போது, தமது நாமம் மகிமைப்படும்படி அவர் தமது வல்லமையை விளங்கப்பண்ணுவார்.

**ஊ. விடா முயற்சியுடன் ஜெபியுங்கள்(லூாக்கா 18:1—8)**

நீங்கள் கேட்டதைப் பெற்றுக் கொள்ளும் வரை விடாமுயற்சியுடன் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் சில சமயங்களில் பிசாசானவன் (ஜெபத்தை தடை பண்ணுகிறவன்) நம் ஜெபத்திற்கு தேவன் கொடுக்கிற பதிலை பிடுங்கிக் கொள்கிறான் அல்லது தடைப் பண்ணுகிறான்.

**8. ஜெபத்தின் நிபந்தனைகள்**

ய) மீண்டும் நீங்கள் ஏற்கனவே பெற்றதை போல விசுவாசித்து, விசுவாசத்துடன் ஜெபி விசுவாசம் என்பது ஒரு அம்சம் (மாற்கு 11:24) விசுவாசத்தினால் பெற்றுக் கொள்வோம் என்று உங்கள் ஆவியிலே உறுதியாயிரங்கள். சந்தேகப்படாமல் ஒரே மனுதடையவர்களாய் இருக்க வேண்டும்( யாக்கோபு 1:6—8; இரு மனமுள்ளவர்கள்)

டி) தேவனடைய சித்தத்தின்படி ஜெபியுங்கள் மத்தேயு 25:39—ல் ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே என்று இயேசு ஜெபித்ததைப் போல,

தேவனுடைய வார்த்தையில் அவருடைய சித்தம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காண்கிறோம். ஆகவே அவருடைய சித்தத்தின்படி ஜெபித்தல் என்றால் அவருடைய வார்ததையின்படி ஜெபித்தல் என்பதாகும். ஏனெனில் தேவன் தம்மையும் தம்ஐடய வார்த்தையையும் மறுதலிக்க மாட்டார்; இவ்வகையான ஜெபங்கள் எப்பொழுதுமே பதிலளிக்கப்படக் கூடியவை (1 யோ 5:14—15). ஆகவே அவருடைய வார்த்தையில் ஏதாகிலும் தெளிவாக வாக்குப் பண்ணப்பட்டிருந்தால், உம்முடைய சித்தத்தின்படி'' என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால் கேளுங்கள், விசுவாசியுங்கள், பெற்றுக் கொள்ளுங்கள்( 2 கொரிந்தியர் 1:20). ஜெபிக்கின்ற ஒவ்வொரு முறையும் தேவனுடைய சித்தத்தைக் கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தால் அதுவே ஜெபத்திற்கு பதில் கொண்டு வருதற்கு மிக பெரிய தடையாகி விடுகின்றது. தேவனை விசுவாசிக்கின்ற அனைவரும், அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று விசாவசிக்கின்றனர். வேறு சிலாரால் அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியாது என்று எண்ணுகின்றனர். ஆனால் வேறு சிலர் அவர் **சித்தங் கொள்கிறார்** என்று விசுவாசிக்கின்றனர்! தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் விரும்புவதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தேவன் எப்பொழுதமே சித்தங் கொண்டிருக்கிறார்! நிலையான விசுவாசமிருந்தால் ஜெபங்கள் நிச்சயமாக பதிலளிக்கப்படும்! சுவிசேஷங்களில் தேவனால் வாக்குப் பண்ணப்பட்ட, வழங்கப்பட்ட அனைத்துக் காரியங்களும் கொடுக்கப்படும். ''அவை ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் ஏதுவானவை''(2 பேது 1:3—4; சங் 84:11, 2 கொரி 1:20)

ஊ. அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ள வேண்டும்—ஆக அது கீழ்படிதலைக் குறிக்கும் (1 யோவான் 3:22)

ன. நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம்; கர்த்தரோடு திடமான உறுதியான ஐக்கியம் மற்றும் ஒற்றுமை; ஒரு உறுதியான உறவை வளர்த்ததுக் கொள்ள வேண்டும்( யோவான் 15:7)

ந) பரிசுத்த ஆவியில் நிறைந்து ஜெபம் பண்ணுங்கள் (7 ஐ பார்க்கவும் (யூதா 20)

க) இயேசுவின் நாமத்தில் கேட்ட ஜெபம் பண்ணுங்கள் (5—ஐ பார்க்கவும்) (யோவான் 16:23)

ப) தேவன் உங்கள் ஜெபங்களுக்கு பதில் தருவதற்கு முன்பு ஒருவரையொருவர் மன்னியுங்கள்( மாற்கு 11:25)

ப) நேர்மையான இருதயம், நோக்கம் மற்றும் மனப்பான்மையுடன் ஜெபம் பண்ண வேண்டும். அது கிறிஸ்துவை மகிமைப்படுத்துமா?

**ஜெபத்திற்கான தடைகள்:**

a) அவிசுவாசம் (யாக்கோபு 1:6—7) (எப்படி ஜெபிக்க வேண்டும் என்ற தலைப்பின் இரண்டாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.)

டி) மன்னிக்காத ஒரு ஆவி (மாற்கு 11:25) (லேலே பார்க்கவும்)

உ) அக்கிரமம் (சங்கீதம் 66:18)

ன) தகாதவிதமாய் கேட்டல், தவறான நோக்கங்களோடு அல்லது தேவனுடைய சித்தத்திற்கு வெளியே காரியங்களைக் கேட்டல் (யாக்கோபு 4:2—3)

ந) பாவம் (யோவான் 9:31, ஏசா. 59:2)

க) வீண் வார்த்தைகளை அலப்புதல் (மத்தேயு 6:7)

10. **ஜெபத்தில் முன்னேற்றம்**

கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் (மத்.7:7—8) ''கேட்குதல்'' என்பதின் கிரேக்க வார்த்தை நீங்கள் குடும்பத்தினிமித்தமாக அல்லது மீட்கும் உரிமையினிமித்தமாக உங்களுக்குரியதை பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தல் என்பதை குறிக்கிறது. நமக்குரியதை இயேசுவின் நாமத்தில் கேட்கலாம். ஏனெனில் கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாகி யிருக்கிறோம். நாம் அவருடைய குமாரர்களும் குமாரத்திகளுமாயிருக்கிறோம்; ஆதலால்

நமக்கு வேண்டியதை நாம் கேட்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (சங். 84:11).

இப்பொழுது கேட்பது ஒரு விருப்பத்தையும், தேடுவது ஒரு இழப்பையும், தட்டுவது ஒரு தேவையையும் குறிக்கிறது. ஆகையால் நம்பிக்கையோடும் தாழ்மையோடும், கேளுங்கள், கவனமாகவும் பிரயோஜனத்துக்காகவும் தேடுங்கள். நேர்மையாகவும் விடாமுயற்சி யுடனும் தட்டுங்கள். ஒரு பதிலை மூன்றுவிதமான உறுதிப்படுத்தும் தேவனுடைய வாக்குத் தத்தங்களை இங்கு கவனியுங்கள். பெற்றுக்கொள்கிறான். கண்டடைகிறான். திறக்கப்படும்; நீங்கள் உட்பட இது ஒவ்வொருவருக்குமுரியது.

11. **ஜெபத்தின் வகைகள்:**

(2 தீமோ.2:1)

மூ நன்றி கூறுதல் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் சில காரியங்களுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியத்திற்காக, தேவைகளை சந்திக்கப்பட்டதற்காக பாதுகாக்கப்பட்டதற்காக,மகிழ்ச்சியானதருணங்களுக்காக,நண்பர்களுக்காகசபைக்காக, நிச்சயமாக இரட்சிப்புக்காக மற்றும் சத்தியத்தின் அறிவிற்காகவும், நன்றி கூறலாம். அதோடு கூட உத்திரவங் களுக்காகவும், கடனமான சமயங்களுக்காகவும் நன்றி செலுத்த கற்றுக் கொள்ளுங்கள்.

மூ **விண்ணப்பங்கள்** வேண்டுதல்: என்றால்

லூக்கா 18:1—8—ல் (விதவை மற்றும் நியாயாதிபதி) போன்று ஜெபம் பதில் அளிக்கப்படும்வரை விடாமல் தொடர்ந்து உறுதியாக கெஞ்சுதல்: தற்பொழுது விளக்கப்பட்டதின்படி கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் அப்பொழுது பெற்றுக் கொள்வீர்கள்.

- **ஜெபம்:** உங்கள் தேவைகளை சந்திக்கும்படி உங்கள் பரம பிதாவிடம் கேட்டல்! அதன்பின்பு உங்கள் ஜெபத்திற்கான பதிலை நீங்களே விசுவாசத்தோடு அறிக்கையிடுதல் (பிரிலப்பியர் 4:6—7 விசுவாசத்தினாலே உங்கள் ஜெபத்திற்கான பதிலை ஆவியில் பெற்றுக் கொள்ளுதல்) நன்றி கூறி, தேவனுடைய வேளையில் அதை பெற்றுக்கொள்ளத் தக்கதாக காத்திருங்கள். ஆவியினாலே ஜெபம் பெறுவீர்கள்!.
- **மன்றாட்டு ஜெபம்:** என்றால் மற்றொருவருடைய சர்பாக செயல்படுதல்ஷ எளிமையான வார்த்தைகளில் — தேவனோடு உள்ள உறவின் மற்றவர்களுக்காக ஜெபித்தல் அல்லது வேண்டதல். அல்லது மன்றாடுதல ஃ பரிந்து பேசுதல் என்பது பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு பிறருக்காக ஜெபித்தல்! எசேக்கியேல் 22:30— திறப்பிலே நிற்கும் ஒருவன்ஷ அல்லதுசோதோம், கொமோராவுக்காக பரிந்துபேசின ஆபிரகாமைப்போல (ஆதி. 18:20—23) அல்லது

இஸ்ரவேலுக்காக மன்றாடின மோசேயைப்பொல (யாத். 32: 7—14, சங். 106—23) உண்மையான மன்றாட்டு ஜெபம் என்பது பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய உள்ளத்திலிருந்து நம்முடைய மனதிற்குள் வந்து நம் உள்ளத்தை தொட்டு பின் ஜெபத்தின் மூலமாக மீண்டும் தேவனிடம் அனுப்பப்படுதல். இந்த ஜெபமே பரிசுத்த ஆவியால் அளிக்கப்பட்ட விசுவாசத்தினால் ஜெபிக்கப்படும் ஜெபம். அவிசுவாசிகளின் மனதையும் சிந்தையையும் ஆட்கொண்டி ருக்கிற சாத்தானுடைய அரண்களை இயேசுவின் நாமத்தினாலே உடைப்பதற்கு மன்றாட்டு ஜெபத்தில் ஒரு விடாமுயற்சி தேவை.

12. **ஜெபிக்க வேண்டிய காரியங்கள்**

ஒரு பொதுவான வாக்கியங்களை ஜெபத்தில் உபயோகிப்பதற்கு பதிலாக உதாரணமாக ''அனைவரையும் ஆசிர்வதியும்'' ஆமென் என்பதற்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட சரியான காரியங்களுக்காகவோ, நபர்களுக்காவோ, ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் ஜெபித்த காரியத்திற்கு ஈடாக அதாகிலும் கிடைத்தால் அதில் திருப்பிதயடைய வேண்டாம். (நீங்கள் கேட்காததினாலே பெற்றுக் கொள்கிறதில்லை என்று யாக்கோபு 4:2 கூறுகின்றது.) எப்பொழுதும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய சித்தம் நிறைவேறும்படி ஜெபியுங்கள்!. ஆகவே நீங்கள் ஜெபிக்க வேண்டியது:

ஞ எல்லா மனுஷருடைய இரட்சிப்பிற்காக (1 தீமோ. 2:4 வா.1,36)

ஞ அறுப்புக்கு ஆட்கள் அனுப்பப்படும்படியாக (மத். 9:37—38)

ஞ சுவிஷேசம் பரவுவதற்காக (கொலோ:4:3, 2 தெச. 3:1—2)

ஞ ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்து இயேசுக்குள் பூரணப் படும்படியாக (கொலோ: 1:28)

ஞ சபை தலைவர்களுக்காக ( 1தீமோ. 5:17)

ஞ சுவிசேஷத்தினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்காக (எபி.13:3)

ஞ உங்களையும், உங்கள் சத்துருக்களையும் துன்பப்படுத்துகிற வர்களுக்காக (மத். 5:44—45)

ஞ பிரதமர், அரசாங்கம் மற்றும் அதிகாரத்திலுள்ள யாவருக்காக ( 1 தீமோ. 2:2)

ஞ அன்றாட உணவுக்காக (மத்தேயு 6:11)

ஞ வியாதியஸ்தர்களுக்காக (யாக்கோபு 5:14—15)

ஞ சோதனைக்குட்படாமல் பாவத்தின்மேல் ஜெயம் எடுக்க (மத். 6:13)

ஞ பாவ மன்னிப்பிற்காக ( 1 யோ.1:9)

ஞ ஞானத்திற்காக (யாக்கோபு 1:5)

ஞ கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கா (வெளி. 22:7)

13. <u>**குழு ஜெபம்**</u>

வேதத்தின்படி ஐக்கியமான ஜெபத்தில் வல்லமையுண்டு (மத். 18:19) இங்கு மிக சுயாத்னமாக ஒரு வாக்குத் தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது ''எதையாகிலும்''கேட்டால்— ''அது அவர்களுக்கு கொடுக்கப்படும்'' என்பது. ஆதலால் மற்ற விசுவாசிகளுடன் அல்லது ஒரு குழுவில் தவறாமல் ஒருமித்து ஜெபிப்பது மிகவும் நல்லது. ஒருமனதில் வல்லமை இருக்கிறது. இந்த கொள்கையை ஏறகனவே ஆதியாகமம் 11:6—ல் பாபேல் கோபுரத்தின் சம்பவத்தில் பார்த்திருக்கிறோம். ஆகவே நீங்கள் ஒரு குழுவாக ஜெபிக்க வரும்போது அதன்பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின்படி ஜெபத்தில் நம் பரலோக பிதாவுக்கு முன்பாக விண்ணப்பங்களைத் தெரியப்படுத்துவதெற்கென்று முன்கூட்டியே ஒருவருக்கொருவர் தேவைகளை பகிர்ந்துகொள்வது நல்ல.

<u>**பயிற்சிமுறை குறிப்புகளில் சில:**</u>

— ஒரு குழுவில் ஜெபிக்கும்போது, நீங்கள் மட்டும் 20 நிமிடத்திற்கு மிகாமல் ஜெபிக்க வேண்டும். ஆனால் சுருக்கமாகவும், கச்சிதமாகவும் இருக்க வேண்டும். அது வல்லமைமிக்கதாக காணப்படும். ஏனெனில் நாம் அனைவரும் ஒருமனப்பட்டு மற்றவர்களுக்கும் ஜெபிப்பதற்கு வாய்ப்பு தருகிறோம்.

— நீங்கள் ஜெபத்திற்குள் பிரவேசிக்கும்போது, ஜெபத்தில் ஒரு பகுதியாக உங்களின் சித்தம் இருக்கும்படி அமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதையும், கவனத்தையும் அங்குமிங்கும் அலைய விடாதீர்கள்.

— மற்றவர்கள் ஜெபிப்பததை கவனித்து ஒருமனப்படுங்கள். மெதுவாக அந்நிய பாஷைகளை பேசுவதின் மூலமாகவும் அவர்களோடு கூட ஒருமனப்படலாம்.
— ஆவியில் நிறைந்து, பொருளை உணர்ந்து. அங்குமிங்கும் தாவாமல், உண்மையாக அடிமனதிலிருந்து ஜெபியுங்கள்.
— நீங்கள் ஜெபிக்கும்போது மிகவும் கண்டிப்பாக இராமல் — பரிசுத்த ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் வைப்பதை பேசுங்கள்.
— ஒழுக்கத்தை கடைபிடியுங்கள், மற்றவர்கள் ஜெபிப்பார்கள் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம். ஆகவே உங்கள் வாயைத் திறந்து தேவனை நோக்கி கதறுங்கள்!!

14. <u>ஜெபத்திற்கான சில வாக்குத்தத்தங்கள்</u>

யோவான் 15:7, மாற்கு: 11:24, சங்க. 50:15, சங். 50—15—17, சங். 86—7, மத்தேயு 7:7—8, ஏசா. 65:24, யோவான் 14:14, சங்கீதம் 91:15, 1 யோவான் 3:21—22, 1 யோவான் 5:14—15,
மத்தேயு 21:22 லூக்கா 11:9—13, ரோமர் 8:32, எரே. 3:20, எபி. 4:16, பிலி. 4:6—7.

15. <u>ஜெபமும், உபவாசமும்</u>.

— அவிசுவாத்தை குணமாக்குவது உபவாச ஜெபம் (மத்.17, 20—21)
— உபவாசம் என்பது மனிதனை விழச்செய்த உணவிலிருந்து (கடினமானஃ மென்மையான உபவாசம்) விலகியிருப்பதாகும். அது ஒரு தியாகமாக இருப்பதினால் தண்ணீர், ஓய்வு, தூக்கம் மற்றும் ஐக்கியம் ஆகிய இவற்றிலிருந்தும்கூட விலகி இருக்கலாம்.
— தவறான உபவாசம்: 30 உண்மையற்ற மனதோடு, வெளிப்புற தோற்றத்தின் அளவில் உபவாசிப்பது.
— சரியான உபவாசம்: (ஏசாயா58: 6—9), மத்தேயு 6:16—12ல் கர்த்தர் சொல்லுவதை பாருங்கள்.
— உபவாசத்தில் எப்போதும் ஜெபமும், வேவாசிப்பும் ஒன்றாகு செல்கிறது. ஆவிக்குரிய நன்மை (மத். 4:14) ஆத்துமாவை ஒடுக்குதல் (சங். 35:13)
— உபவாசம் என்பது ஜெபத்திலும் தியானத்திலும் அல்லது தேவனுடைய சித்தத்தை கண்டடைவதிலும் ஒரு உயர்ந்த ஆவிக்குரிய அனுபவத்தை பெறுவதற்கு நாம் செய்யவேண்டிய ஒரு காரியம் ஆகும். (ஏசா. 58:11) (சோதனையையும், மாம்சத்தையும் மேற்கொள்ளுதல்)
—உபவாசிப்பது உங்கள் சரீரத்திற்கு மிகவும் நல்லது. உங்கள் ஜீரண உறுப்புகளை அனைத்து நச்சு கழிவுகளிலிருந்து சுத்தம் செய்யப்பட்டு ஓய்வெடுக்கின்றது. உபவாசத்தினால் மூளைப்பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரித்து, சிந்திப்பதற்கு அதிக தெளவைகட கொடுக்கிறது. (பரீட்சை நேரங்களில் நல்லது), மிக தெளிவான மனதோடு சிந்திக்கவும், சரியான முறையில் மதிப்பிடவும் முடிகின்றது.
— பெரும்பாலோனோர் அதிகப்ம் சாப்பிடுகின்றனர். – அவர்களுடைய உறுப்புகள் நித்திரையடைந்து, ஆவியை அவித்துப் போடுகிறார்கள் (பில. 3:18—19) அவர்களுடைய தேவன் வயிறு!)
— மோசே, யோசுவா, எலியா மற்றும் ஆண்டவராகிய இயேசு ஆகிய அனைவரும் 40 நாட்கள் உபவாசித்தனர்.
— பயிற்சி முறை குறிப்புகள்: உபவாசத்தை தொடங்கும்போது நீண்ட உபவாசத்தை எடுக்க வேண்டாம்: அதிக கடினமாக உழைக்கக் கூடாது (உபவாசித்து ஜெபியுங்கள், உபவாசத்தோடு வேலை செய்ய வேண்டாம்)
— நீண்ட உபவாசத்திற்கு சற்று தூக்கத்தை அதிகப்படுத்தலாம். போதுமான அளவு தண்ணீர் குடிக்கலாம், சாப்பிடுகிற மற்றவர்களிடம் போக வேண்டாம்.
— (நீண்ட உபவாசத்தின்போது: மதல் இரண்டு அல்லது மூன்று நாட்கள் சற்று கடனமாக இருக்கும் — பசியாகவும், பெலவீனமாகவும் உணர்வதோடு, தலைவலியும் ஏற்படும். இது

இயற்கையான ஒன்று. அதற்கு பின்பு பசி மற்றும் உணவு பற்றி எண்ணம் மறைந்துவிடும்). உபவாசத்தை முடிக்கும்போது கவனமாக இருக்கவேண்டும். உபவாசத்தை சற்று நேரம் எடுக்க வேண்டும். – பழச்சாறுகள், சூப், காய்கறிகள் மற்றும் சில எளிமையான உணவுகளைக்கொண்டு உபவாசத்தை முடிக்கவேண்டும். (பால் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும்)

**எப்பொழுது உபவாசிக்க வேண்டும்:**

— தேவனோடு நடக்கும் அனுபவத்தில் உங்கள் வாழ்க்கை வறட்சியாக இருப்பதாக உணர்ந்தால் உபவாசம் புத்துணர்ச்சியை உண்டுபண்ணும்.

—மாம்ச இச்சைகள் வலிமையாக தோன்றும்போது அதை சாதாரண ஃ தினசரி நிலைக்கும் ஃ கட்டுப்பாடான பழக்கத்திற்கு கொண்டு வர உபவாசிக்க வேண்டும்

— நுகத்தை முறிக்கும்படி உபவாசிக்கவேண்டும். (ஏசா.58:4—6)

— மனந்திரும்புதலை வெளிப்படுத்த உபவாசிக்க வேண்டும் ( 1 இரா. 21: 19—27)

— தேவைகளின்போது உபவாசிக்கவேண்டும் (எஸ்றா 8:21—23)

— ஆபத்துக் காலத்தில் உபவாசிக்க வேண்டும்(எஸ்தர் 4:3—16)

— இயேசுவை போல— ஆவிக்குரிய யுத்தத்தின்போது உபவாசிக்க வேண்டும் (மத் 4:1—11)

— முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும்போதும் ஃ கர்த்தருடைய சித்தத்தை நாடும்போதும் உபவாசிக்கவேண்டும் (அப். 18:3 நியா. 20:26)

— மூப்பர்களை நியமிப்பதற்கு முன்பு உபவாசிக்கவேண்டும் (அப். 14:23)

— அறிவையும், வெளிப்பாடுகளையும் பெற்றுக்கொள்வதற்கு உபவாசிக்க வேண்டும் (தானி. 9:3—6:, 20—23)

மத்தேயு 9:15—ன்படி ஒவ்வொரு விசுவாசியும் உபவாசிக்க வேண்டும். ஆனால் அது வழக்கமாக செய்யப்படுகிற ஒரு காரியமாகவோ அல்லது இயற்திரம்போல் இயங்கக்கூடிய ஒரு காரியமாகவோ ஒருபோதும் இருக்கக்கூடாது: அது பரிசுத்த ஆவியால் நினைவூட்டப்பட்டு அவர் குறிப்பிடும் கால அவகாசத்தில் அவருடைய கட்டளையின்படி ஒப்பந்தப்படுத்தப்பட வேண்டும்.

**16. ஜெபமும், ஆவிக்குரிய யுத்தமும்:**

தேவன் நமக்கு அளித்திருக்கிற பகுத்தறியும் வரத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!. பகுத்தறியும் திறனுக்காக ஜெபிக்க வேண்டும். ஏனெனில் உங்களுக்கு அதிகமாக தேவைப்படுகிற காரியங்களில் அது ஒன்றாகும். நீங்கள் ஜெபம் பண்ணும்போது தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்காததினால், பதிலை பெற்றுக் கொள்ளாதபடி ஜெபிக்கிறீர்களா அல்லது பிசாசானவன் உங்கள் பதிலை வராவிடாமல் தடைபண்ணுகிறானா என்பதையும் கூட நீங்கள் பகுத்தறிய வேண்டும்.

இப்பொழுது ஜெபத்தில் பிசாசோடு போராடுவது ஆவிக்குரிய யுத்தம் என்றழைக்கப்படுகிறது. (எபே. 6:12) சாத்தான் நம்மூலமாய் இலாபமடைய விடாதபடி தவிர்க்க வேண்டியது நமது கடமையாக இருக்கின்றது. பிசாசின் ஒரு நோக்கம் திருடுவது; கொல்லுவது மற்றும் அழிப்பது ஆகும். (யோவான் 10:10, 1 பேது 5:8) அதற்கு அவன் பயன்படுத்தும் வழிகளில் ஒன்று ஜெபத்திற்கான பதிலை வரவிடாமல் தடை பண்ணுவது (தானி 10:12—21) கிறிஸ்துவுக்குள் அவிழ்க்கவும், கட்டவும், ஜெபத்திற்கு பதில் வெளிப்படுத்தப்பட்டதை பார்க்கவும் அதிகாரமும் பெற்றிருக்கின்றோம்! (மத். 18:18, 16:19, 18:19)

**சீஷத்துவத்திற்கு ஒரு அடிப்படையான, சுருக்கமான முகவுரை**

**தலைப்பு: 1 இரட்சிப்பின் நிச்சயம்**

பயிற்சியின் நோக்கம்: அவன் ஒரு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் மற்றும் அவருடைய வசனத்திலிருந்து பெறும் ஒன்று. அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குத் தத்தங்களின் அடிப்படையில் தனது சொந்த இரட்சிப்பின் நிச்சயத்தை பிறரிடம் தைரியமாக வெளிப்படுத்த முடியும்.

**வேத வசனங்கள்:**

1 யோவான் 5:13 – நாம் கிறிஸ்தவர்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும்

யோவான்: 1:12—13— கிறிஸ்துவின் கிரியையின் அடிப்படையில்

1 யோவான் 5:11—12—வார்த்தையின் வாக்குத்தத்தம்

ரோமர் 8:16 — ஆவியானவரின் சாட்சி

**தலைப்பு 2 தியான வேளை**

நோக்கம்: தினமும் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் ஒரு அமைதியான தியான நேரம் அவனுக்கு இருக்கும்

**வசனங்கள்:**

மாற்கு: 1:35 — இயேசுவின் உதாரணம்

ஆதியாகமம் 19:27— ஆபிரகாமின் உதாரணம்

யாத்திராகமம் 34:2—3 — மோசேயின் உதாரணம்

சங்கீதம் — தாவீதின் உதாரணம்

தானியேல் 6:10 — தானியேலின் உதாரணம்

1 கொரிந்தியர் 1:9— இயேசுவுடன் ஐக்கியம் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**தலைப்பு 3: பாவத்தின்மீது ஜெயம்**

**நோக்கம்:** அவன் பரிசுத்த ஆவியானவரை சார்ந்து கொள்வதினாலும், தேவனுடைய வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களை விசுவாசிப்ப தினாலும், சோதனையின் மேல் ஜெயம் எடுக்கும் அனுபவத்தை பெற்றுக்கொள்வது எப்படி என்று அறிந்துகொள்கிறான். சமீபத்தில் அவனுக்கு நேரிட்ட ஒரு குறிப்பிட்ட சோதனையின்மேல் ஜெயம் எடுத்த அவனுக்கு நேரிட்ட ஒரு குறிப்பிட்ட சோதனையின்மேல் ஜெயம். எடுத்த அவனுடைய தெளிவான சாட்சி இதற்கு ஆதாரமாய் இருக்கும்.

**வசனங்கள்**

1 கொரி. 10:13 வாக்குப் பண்ணப்பட்ட ஒரு தப்பிக்கும் வழி

1 கொரி. 15:57 இயேசுவின் மூலம் ஜெயம்

ஏசாயா 41: 13 வாக்குப் பண்ணப்பட்ட தேவனின் ஒத்தாசை.

**தலைப்பு 4: பாவத்திலிருந்து பிரிவு**

**நோக்கம்:** அவன் பாவம் செய்வதை தவிர்ப்பதிலானாலும் 2 கொரி. 6:17—18 போன்ற பகுதிகளை மனப்பாடம் செய்வதினாலும் மற்றவர்களின் வேண்டுதல்களுக்காக ஜெபிப்பதினாலும் அவன் பாவத்தினின்று பிரிக்கப்படும்படி அடியெடுக்கிறான்.

**வசனங்கள்:**

1 யோவான்: 1:5 – 2:2 — ஒளியில் நடத்தல்
யாக்கோபு 1:10 — உபத்திரவத்தில பொறுமையாம் இருத்தல்
2 தீமோ. 2:19—20 — அக்கிரமத்தினின்று பிரிக்கப்படுதல்
ரோமர் 6:12—14 — பாவம் நம்மை ஆளுகை செய்யக் கூடாது
1 யோவான் 2:15—16 — உலகத்தில் அன்பு கூரக்கூடாது
ரோமர் 12:2 — உலகத்தோடு ஒத்துபோகக்கூடாது.

## தலைப்பு 5: கிறிஸ்தவ ஐக்கியம்

**<u>நோக்கம்</u>:** அவன் சபையின் வேதப்பாடக்குழுவின் மற்றும் ஒரு ஜெபக் குழுவின் ஒரு அங்கமாக அதில் கலந்துகொள்கிறான்.

**வசனங்கள்:**
அப்போஸ்தல நடபடிகள் 2:42— ஆதிதிருச்சபைக்கு ஓர் எடுத்துக்காட்டு
1 யோவான் 1:3— ஒன்றான ஐக்கியம்
எபிரெயர் 10:24—25— ஐக்கியத்தை ஐக்கியத்தை கைவிடுவதற்கு அல்ல
சங்கீதம் 122: 1— மகிழ்ச்சியோடு ஆலயத்திற்கு செல்தல்.

## <u>தலைப்பு: 6 வேதாகமம்:</u>

கேட்பதற்கு: ரோமர் 5:6
வாசிப்பதற்கு: வெளி 1:3
கற்பதற்கு: அப். 17:11
மனப்பாடம்
செய்வதற்கு : சங். 119:11
தியானிப்பதற்கு: சங். 1:12

**நோக்கம்**: அவன் வேதத்தின் புத்தகங்களைக் கற்றுக்கொண்டு தனது நம்பிக்கைகளையும், அதற்குள்ளிலிருக்கும் ஏவுதல்களையும், வெளிப்படையாக பகிர்ந்து கொள்வான்.

## <u>வசனங்கள்</u> 7:

2 தீமோத்தேயு 3:16—17 — வேதாகமம் ஏவப்பட்டது
2 பேதுரு 1:21 — வேதாகமம் தேவ சித்தத்தின்படி உருவானது
மாற்கு 22:29 வசனங்களை அறியாததினால் ஏற்படும் அபாயம்
சங்கீதம் 19:7—11— தேவ வார்த்தையின் விளக்கங்கள்
சங்கீதம் 119:160— வார்த்தை சத்தியமும், நித்தியமுமானது
சங்கீதம் 119:105— அது தீபமும் வெளிச்சமமாயிருக்கிறது

## தலைப்பு 8: வார்த்தையை வாசித்தல்

நோக்கம்: தன்னுடைய வேதத்தை முறையாக வாசிப்பான் வசனங்கள்:
நீதிமொழிகள் 28:9—ஜாக்கிரையாத வாசி
எரோமியா 22:29 — வார்த்தையை கேட்பதற்கு அழைப்பு
லூக்கா 19:48 — தினசரி வாசிப்பதின் அவசியம்

## தலைப்பு 9: வேத பாடம்

நோக்கம்: ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தன்னுடைய தனிப்பட்ட வேத வாசிப்பை தவாமல் நிறைவேற்றுவான்

வசனங்கள்:
அப்போஸ்தலர் 17:11—வேதபாடத்திற்க சிபாரிசு
நீதிமொழிகள் 2:1—5 — வேத பாடம் என்பது பொக்கிஷத்தை தேடுவதைப் போன்றது
எஸ்ரா 7:10— எஸ்ராவின் உதாரணம்

**தலைப்பு 10: வசன மனப்பாடம்**

நோக்கம்: அவன் தவறாமல் வசனங்களை மனப்பாடம் செய்து போதிய அளவு தினறாய்வு செய்வதை தொடர்ந்து செயலாற்றுகிறான்:
கொலோ 3:16 —மனனம் செய்வது நம்மை வளப்படுத்தும்
உபா 6:6—7 — வசனங்களை மனனம் செய்வதை மோசே துரிதப்படுத்துகிறான்
மத்தேயு 4:4 — கிறிஸ்துவின் உதாரணம்
சங்கீதம் 37:31 — அது வளர்ச்சியைக் கொடுக்கிறது
நீதிமொழிகள் 7:1—3— இருதயத்தில் எழுதப்பட வேண்டும்

**தலைப்பு 11: வார்த்தையை தியானித்தல்**

நோக்கம்: தியனித்தலின் அர்த்தத்தையும், சமீபத்தில் மனப்பாடம் செய்த வசனத்தை தியானித்ததினால் உண்டான ஆசீர்வாதத்தையும்அவனால் விளக்கமுடியும்:
**வசனங்கள்:**
சங்கீதம் 1 —தியானிப்பதினால் ஏற்படும் விளைவுகள் யோசுவா 1:8— தியானிப்பவருக்குதிய வாக்குதத்தங்கள் ஏரோமியா 15:16 — தியானத்தின் மனம் சார்ந்த ஒழுக்கு

**தலைப்பு 12: வர்த்தையின் உபயோகம்**

நோக்கம்: தேவனுடைய வார்த்தையை எழுவதினாலும், அதில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றை பயன்படுத்துவதினாலும் அவன் தன் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தும் விருப்பத்தை விளங்கப்பண்ணுகிறான்.
**வசனங்கள்:**
யாக்கோபு 1:22—25—அவருடைய வார்த்தை கூறுவதை செய்ய வேண்டும்
சங்கீதம் 119:56,60 — தியானித்தல் அவ்வார்த்தைகளை அப்பியாசப்படுவதற்கு நேராய் நடத்தும்
2 தீமோ 3:16—17— தேவனுடைய வார்த்தை வாழ்க்கைக்கு பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறது
லூாக்கா 6:46—49— கீழ்படிதல் என்பது ஒரு உறுதியான அஸ்திபாரம்

**தலைப்பு 13: ஜெபம்**

**நோக்கம்:**
தினமும் குறைந்தபட்சம் ஒரு 10 நிமிடங்களாவது ஜெபிப்பதினாலும், ஒரு குடி ஜெபத்தில் நம்பிக்கையுடன் கலந்துக் கொள்வதினாலும் ஒரு திடமான ஜெப வாழ்க்கையை விளங்கப் பண்ணுகிறான்:
1 தெச 5:17 —இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்
மத்தேயு 6:6 — அந்தரங்கத்தில் ஜெபம் பண்ணுங்கள்
யோவான் 17 — கிறிஸ்துவின் உதாரணம்
யாக்கோபு 5:17— ஜெபம் பலனைக் கொடுக்கும்
பிலிப்பியர் 4:6—7 —தனிப்பட்ட கரிசனைக்காக ஜெபித்தல்
மத்தேயு 21:2 — விசுவாசத்துடன் ஜெபித்தல்
1 யோவான் 3:22— கீழ்படிவது ஜெபங்கள் பதிலளிக்கப்படு

வதற்கான நிபந்தனை
மத்தேயு 7:7 — கேட்டக் கொண்டே, தட்டிக் கொண்டே, தேடிக் கொண்டே இருக்க வேண்டும்
எபேசியர் 6:18 — பரிசுத்தவான்களுக்காக எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்

### தலைப்பு 14: தனிப்பட்ட சாட்சி

**நோக்கம்:**

குறைந்தபட்சம் ஒரு வசனத்தையாகிலும் உட்படுத்தி ஒரு மூன்று நிமிட சாட்சியை எழுதிய ஆயத்தம் பண்ணி, ஒரு மாதத்தில் கிறிஸ்தவரல்லாத 2 பேருக்காவது தன் சாட்சியை பகர்வான்:

**வசனங்கள்**

லூக்கா 8:38—39 —ஒரு மாற்றப்பட்ட வாழ்க்கைக்கு உதாரணமாய் இருங்கள்
அப்போஸ்தலர் 26:1—23 — பவுலின் சாட்சி
யோவான் 9:25 — முந்தைய பார்வையற்ற மனிதனுடைய சாட்சி
1 யோவான் 1:3 — நீங்கள் அனுபவித்ததைதை அறிவியுங்கள்

### தலைப்பு 15: கிறிஸ்துவின் கர்த்தத்துவம்

**நோக்கம்:**

தன் வாழ்க்கையில் ஒப்புக் கொடுக்கப்படாத ஏதேனும் ஒரு பகுதியையாவது கிறிஸ்து கட்டுப்படுத்தும்படி அனுமதிப்பதினால் அவருடைய கர்த்தத்துவத்துக்கு அர்பணித்திருப்பதை நிரூபிக்கிறான்.:

**வசனங்கள்**

லூக்கா 6:46 —கிறிஸ்துவுக்கு கீழ்படிவதின் ஒரு அவசியம்
ரோமர் 12:12 — நிர்ணயிக்கப்பட்ட அர்ப்பணிப்பின் அவசியம்
கொலோ 1:10 — கிறிஸ்து தலைவராயிருக்க வேண்டும்
எபிரேயர் 1:2 — எல்லாவற்றுக்கும் கிறிஸ்து சுதந்திரவாளியாய் இருக்கிறார். நாம் கண்காணிகளாகயிருக்கிறோம்.

### தலைப்பு 16: விசுவாசம்

**நோக்கம்:**

குறிப்பிட்ட தேவைகளுக்காக தேவன் மேல் நம்பிக்கை வைப்பதின் பலன் நிரூபிக்கிறவன்:

**வசனங்கள்**

எபிரேயர் 11:6 —விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்
எபேசியர் 6:16 — விசுவாசம் சாத்தான் மேல் நமக்கு ஜெயத்தை கொடுக்கிறது
1 யோவான் 5:4 — விசுவாசம் உலகத்தை ஜெயிக்கிறது
ரோமர் 4:20—21 — விசுவாசம் தேவனை மகிமைப்படுத்துகிறது

### தலைப்பு 17: அன்பு "அகாபே" (தியாகமான அன்பு)

**நோக்கம்:**

பிறர் மீது அக்கறையுடையவனாயிருப்பதினிமித்தமாக அன்பான விதத்தில் செயல்படுவதினாலும், தேவையுடன் இருப்பவர்களுக்கு (வாரத்திற்கு ஒரு முறையேனும்) ஏதாகிலும் ஒரு உதவி செய்வதினாலும் அன்பை காண்பிக்கிறான்:

**வசனங்கள்**

யோவான் 13:34—35 —அன்புக்கூருவதற்கான கட்டளை

1 யோவான் 3:17—18 — அன்பு பிறருடைய தேவைகளை சந்திக்கிறது

யோவான் 9:25 — அன்பு என்பது முழுமையான தியாகம்

1 கொரி 13:3—8 — பிறரிடம் அன்புக்கூருவது எப்படி அறிவியுங்கள்

1 யோவான் 4:7—21 — நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புக் கூர வேண்டும்

## தலைப்பு 18: நாவு

**நோக்கம்:**

தன்னுடைய நாவின் கட்டுப்பாட்டை விளங்கப் பண்ணுகிறான்:

**வசனங்கள்**

எபேசியர் 4:29 —பக்திவிருத்திக்கு ஏதுவான வார்த்தைகளை மட்டும் பேச வேண்டும்

நீதிமொழிகள் 26:20 — கோள் சொல்லி திரியக்கூடாது

நீதி 18:6—7 — மூடனுடைய உதடுகள் அவனுக்கு கேடு

சங்கீதம் 71:15 — உதடுகள் தேவனை துதிப்தற்காகவே

எபேசியர் 4:29 —பக்திவிருத்திக்கு ஏதுவான வார்த்தைகளை மட்டும் பேச வேண்டும்

கொலோ 4:6 — கிருபையுள்ள வார்த்தைகளைப் பேசுங்கள்

யாக்கோபு 1:26 — எதிர்மறையான பேச்சுகளை கட்டுப்படுத்துங்கள்

யாக்கோபு 3:1—12 — கட்டுப்படுத்தக்கூடாத நாவினால் ஏற்படும்ஆபத்துகள்

## தலைப்பு 19: நேரத்தின் பயன்

**நோக்கம்:**

ஒரு கால அட்டவணையை அமைத்து, அதை பின்பற்றுவதினால் தன்னுடைய நேரத்தை பயனுள்ளதாக செலவழிப்பதினால் ஏற்படும் வளர்ச்சியை காண்பித்து, விளங்கப் பண்ணுகிறான்:

**வசனங்கள்**

எபேசியர் 5:15—17 —காலத்தை பிரயோஜன்படுத்தி ஷ கொள்ளுங்கள்

சங்கீதம் 90:10—12 — ஒரு நேரத்தை திட்டமிடுதல்

பிரசங்கி 3:1 — நேரத்தின் முக்கியத்துவம்

யாக்கோபு 4:14 — வாழ்க்கையின் சுருக்கம்

ரோமர் 13:11 — நேரத்தின் அவசரம்

நீதிமொழிகள் 4:14 — நேரத்தை வீணடிக்காமல் இருப்பது

## தலைப்பு 20: தேவ சித்தம்

**நோக்கம்:**

ஒரு பெரிய தீர்மானம் எடுப்பதில் தேவனுடைய சித்தத்தை அறிந்துக் கொள்வதற்கு வேதத்தின் கொள்கைகளை அவர் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை பகிர்ந்துக் கொள்வார்:

**வசனங்கள்**
சங்கீதம் 119:105 —தேவனுடைய வார்த்தையின் மூலம் வழி நடத்தப்படுதல்.
நீதிமொழிகள15:22 — தேவ ஆலோசனையை பெறுதல்
யோவான் 16:13 — நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்
ரோமர் 12:12 — தேவனுடைய சித்தம் நன்மையும், பிரியமானதும். பூரணமானதாயும் இருக்கிறது.
கொலோ 3:15 — நம் இருதயங்களில் ஆண்டவரின் சமாதானம்.

## தலைப்பு 21: கீழ்ப்படிதல்

**நோக்கம்:**

குறிப்பிட்ட வேத பாடத்தை தன் ஜீவியத்தில் தொடர்ந்து பின்பற்றுவதினால் ஒரு கீழ்ப்படிதலுள்ள ஒரு கிறிஸ்தவனாகஃ விசுவாசியாக இருக்கக் கற்றுக் கொள்கிறான்.:

**வசனங்கள்**
யோவான் 14:21 —கீழ்ப்படிதலின் மூலம் அன்பு நிரூபிக்கப்படுகிறது.
யோபு 17:9 — தொடர்ச்சியான கீழ்படிதலினால் உண்டாகும் பலன்கள், விளைவுகளும்.
யோவான் 15:10,14 — கீழ்ப்படிதல் பலனைக் கொடுக்கிறது. தேவனைப் பிரியப்படுத்துகிறது
1 சாமு 15:22 — பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் நல்லது
சங் 119:59—60 — தேவன் உடனடியாக கீழ்ப்படிவதை விரும்புகிறார்
யாக்கோபு 4:17 — கீழ்படியாமை ஒரு பாவம்
யோவான் 14:23 — கீழ்படிதலுக்கான ஊக்கம்

## தலைப்பு 22: பரிசுத்த ஆவியானவர்

**நோக்கம்:**

பரிசுத்த ஆவியானவர் யார் என்பதையும், நமது தினசரி நடக்கையில் அவர் எப்படி உதவுகிறார் என்பதையும் வேத வகனங்களின் மூலம் வெளிப்டுத்துகிறார். ஆவிக்குள்ளாக நடப்பது குறித்தும் பிறனுக்கு விளக்க முடியும்:

**வசனங்கள்**
யோவான் 14:16—17—அவர் தேற்றரவாளன்.
ரோமர் 8:26 — ஜெபிப்பதற்கு உதவுகிறார்
யோவான் 16:7,8 — பரிசுத்தஆவியானவரின் ஊழியம்
கலாத்தியர் 5:22,23— ஆவியின் கனிகள்
எபே 5:18 — ஆவியினாலே நிரப்படுங்கள்
ரோமர் 8:5—6 —ஆவிக்கும், மாம்சத்திற்கும் யுத்தம்
ரோமர் 12:3—8 — பரிசுத்த ஆவியின் வரங்கள்
1 கொரி 12:13—14 — ஆவியின் ஊழியம்
சகரி 4:6 — பரிசுத்த ஆவியின் வல்லமை
ரோமர் 8:16—17 — ஆவியானவர் சாட்சிக் கொடுக்கிறார்.
யோவான் 16:13—15— ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார்.
யோவான் 15:26—27— ஆவியின் சாட்சி

## தலைப்பு 23: உங்கள் சத்துருவாகிய சாத்தான்

**நோக்கம்:**

ஜெபத்தையும், வசனங்களையும் பயன்படுத்தி, சாத்தான் மீது ஜெயம் எடுக்கும் சம்பங்களை வெளிப்டுத்துகிறவன். தேவனுடைய வார்த்தையை தனது வாழ்க்கையில் பயன்படுத்தியதினால் சாத்தானின் தாக்குதலை எவ்வாறு மேற்கொண்டான் என்பதை பகிர்ந்துக் கொள்கிறான். தனிப்பட்ட வாழ்க்கையில் ஆவிக்குரிய சத்துருவாகிய சாத்தானுக்கு விரோதமாய் ஜெபம் பண்ணுகிறான்.:

**வசனங்கள்**

எபேசியர் 6:10—18—யுத்தத்திற்கு வேண்டிய ஆவிக்குரிய ஆயுதங்கள்
2 கொரி 10:3—5 — நம் ஆயுதங்கள் மாம்சத்துக்குரியவையல்ல
1 யோவான் 4:4 — சாத்தானுடைய வல்லமை அளவானது
1 பேதுரு 5:8—9 — ஒரு சத்துருவாக சாத்தானின் செயல்
யோவான் 8:44 — சாத்தான் ஒரு பொய்யன்
ஏசாயா 14:12—15—சாத்தானின் வீழ்ச்சி
1 யோவான் 3:8 — சாத்தானுடைய கிரியை அழிக்கப்பட்டது
2 கொரி 4:3—4 — சாத்தானின் தந்திரங்கள்
2 கொரி 2:11 — நாம் சத்துருவை அறிய முடியும்.
மத்தேயு 4:4 — சத்துருவை மேற்கொள்வதற்கு வார்த்தையின் உபயோகம்

## தலைப்பு 24: பாவத்தை கையாளுதல்

**நோக்கம்:**

தன் வாழ்க்கையில் பாவத்தின் பெரும் பகுதியை கண்டறிந்து, ஜெயம் பெறுவதற்கான திட்டத்தைப் பகிர்ந்துக் கொண்டு, தொடர்ந்து பாவத்தை செய்ய விருப்பங்கொள்ளமாட்டான்:

**வசனங்கள்**

கொலே 3:9—10 —புதிய வாழ்க்கை வாழுங்கள்
1 பேதுரு 1:14—16 — பரிசுத்த நடவடிக்கை மிகவும் அவசியம்
எபேசி 6:10—20 — தேவனுடைய சர்வாயுத வர்க்கம்
ரோமர் 13:14 — கிறிஸ்துவை நம்புதல்
மாற்கு 14:38 — விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்
1 யோவான் 1:9 —அறிக்கையிடுதல்

## தலைப்பு 25: மன்னிப்பின் நிச்சயம்

**நோக்கம்:**

தேவனுடைய வசனத்திலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் தனது சொந்த மன்னிப்பின் நிச்சயத்தை மற்றவர்களுக்கு மன உறுதியுடன் வெளிப்டுத்த முடியும்.:

**வசனங்கள்**

1 யோவான் 1:9 —அறிக்கை பண்ணுவதினால் பாவ மன்னிப்பு
சங்கீதம் 32:1 — மன்னிப்பதினால் உண்டாகும் ஆசிர்வாதம்
மத்தேயு 5:23—24 — உரியவரிடம் ஒப்படைப்பதின் அவசியம்
மத்தேயு 18:15 — உரியவரிடம் ஒப்படைப்பதின் அவசியம்

## தலைப்பு: 26: கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

**நோக்கம்:**

கிறிஸ்துவின் வருகையைக் குறித்து ஒரு புதிய விழிப்புணர்வை வெளிப்படுத்தி, அத்துடன் தொடர்புடைய வேத பகுதிகளைப் பகிர்ந்துகொள்ள முடியும்.

**வசனங்கள்:**

1 தெச. 4:16—17 — கிறிஸ்துவின் வருகைக்கான வாக்குத்தத்தம்
யோவான் 14:2—3 – அவர் நம்மை ஏற்றுக்கொள்ளுவார்
1 யோவான் 3:2—3— நம் வாழ்க்கைக்கு சவால்
தீத்து 2:11—14 — தேவபக்திக்குரிய வாழ்க்கை வாழுதல்
வெளி 19:11—16 — மகிமையில் அவர் வருகை

## தலைப்பு 27: சாட்சியாயிருத்தல்:

**நோக்கம்:**

வசனத்தைக் கொண்டு சுவிசேஷத்தை தெளிவாக பகிர்ந்து கொள்வதற்கு முதற்படிகள் எடுக்கிறவன்:

**வசனங்கள்**

கொலோ 1:28—29— இயல்பாக கிறிஸ்துவை அறிவித்தல்
ரோமர் : 1:16 — சுவிசேஷத்தினிமித்தம் வெட்கப்படக்கூடாது
2 தீமோ. 4:1—2 — எக்காலத்திலும் கிறிஸ்துவை பறைசாற்ற வேண்டும்.
நீதிமொழி: 11:30 — ஞானவான் ஆத்துமாக்களை சம்பாதிக்கிறான்
அப்போஸ்தல 8: 85 – சுவிசேஷம் அறிவிக்க வேதத்தைப் பயன்படுத் துங்கள்
நீதிமொழிகள்: 28: 1 – தைரியம் மிகவும் அவசியம்
1 கொரி. 15:3—4 — சுவிசேஷம் விவரிக்கப்பட்டிருக்கிறது
யோவான் 4 — இயேசு மற்றும் சமாரியஸ்திரீயின் உதாரணம்
லூக்கா 19:10 — பாவிகளைத் தேடுங்கள்

## தலைப்பு 28 பின்தொடர்

**நோக்கம்:**

தான் பின் தொடர்ந்து சீஷனாக்குவதற்கு ஒருவனை தேவன் தரும்படி ஜெபிக்கத் தொடங்குகிறான்.

**வசனங்கள்:**

கொலோ: 1—28— எந்த மனுஷனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு
3 யோவான்: 4 — ஜனங்கள் தேவனோடு நடப்பதை காணும் சந்தோஷம்
2 தீமோ. 2:2 — மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷனிடத்தில் ஒப்புவி
2 தீமோ. 1:3 — ஜெபங்களினால் பின் தொடருதல்

## தலைப்பு 29 – கொடுத்தல்

**நோக்கம்:**

கர்த்தருடைய வேலைக்காக தவறாமல் கொடுக்கிறவன்:

**வசனங்கள்**

நீதிமொழிகள் 3:9—10— முதலாவது தேவனுக்கு கொடுங்கள்
2 கொரி. 9:6—8 — மகிழ்ச்சியோடு கொடுங்கள்
லூக்கா: 6:38 — கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதம்
நீதிமொழிகள் 2:27— திராணியிருக்கும்போது கொடுங்கள்
கலா 6:6 — ஆவிக்குரிய போதகர்களோடு நன்மைகளை

பகிர்ந்து கொள்ளுங்கள்
மல்கியா 3:10 — கொடுப்பதினால் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
நீதிமொழிகள்: 11:24—25— உதாரகுணமுள்ளவன் ஆசீர்வதிக்கப் பட்டவன்.
2 கொரி. 8:9 — கிறிஸ்து ஐசுவரியமுள்ளவராய் இருந்தும் நமக்காக அவர் தரித்திரரானார்

## <u>தலைப்பு: 30 உலக தரிசனம்</u>

**நோக்கம்:**

வாரந்தோறும் அனைத்து மக்களுக்காகவும், மிஷனரிகளுக்காகவும், அயல்நாட்டு மக்கள் கூட்டங்களுக்காகவும் ஜெபிப்பதின்மூலம் உலக தரிசனத்தில் தனக்கிருக்கும் அக்கறையையும், ஆர்வத்தையும் விளங்கப்பண்ணுகிறான். ஒரு அயல்நாட்டு மிஷனரிக்க மாத உதவி அளிக்கிறான் (சங். 2:8)

**வசனங்கள்:**

மத்தேயு 9:35— 38 —உலக வயல்வெளியின் வேலையாட்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்
மத்தேயு: 28:19,20— எவ்விடங்களிலும் சீஷர்களை ஏற்படுத்துங்கள்
அப்போஸ்தல் 1:8 — பூமியின் கடையாந்தரத்திற்கு போங்கள்
மாற்கு: 16:15 — அனைவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்
லூக்கா 24:47 — சகல ஜாதிகளிடத்திற்கும் போங்கள்
யோவான் 20:21 — இயேசுவின் கட்டளை அவருடைய வெற்றியுள்ள ஊழியத்தின் அடிப்படையில் இருந்தது.
ஏசாயா 6:8 — செல்வதற்கு விருப்பம்.

**<u>நற்பண்புகளை பழகுதல்</u>**

நற்பண்புகளற்ற ஒரு நபர் மிகுந்த அழகுடைய சான்றோரிடம் இருந்தும் பற்கள் இல்லாவனைப் போலவும், ஒரு அழகிய வழுக்கை தலை பெண்மணியை போலவும் இருப்பர். ஒரு விழாவில் தொடர்ந்து விடாமல் பேசிக்கொண்டிருக்கிற ஒரு நபரால் நீங்கள் வெறுப்படை கிறீர்கள். இவர் வராமலேயே இருந்திருந்தால் நலமாயிருக்குமே என்று எண்ணுகிறீர்கள். அனைத்து நுட்பங்களையும் மறந்தாலும், பின்விளைவு களாக நம்மை வேதனையடைய வைத்த அவரது தீய பண்புகளை மட்டும் மறக்கமுடிவதில்லை. மற்றவரை பிரியப்படுத்தும் பண்புகளில் லாமல் ஒருவன் இயேசுவை போன்று மனுஷர் தயவை பெறமுடியாது. ஆகவே சில அடிப்படை பண்புகளை குறித்து விழிப்புடையவர்களாய் இருப்பது நல்லது. கண் சிமிட்டும் நேரத்தில் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு காரியம். நற்பண்புகளைக் கற்றுக்கொண்டு தீயவற்றை விட்டுவிடும்போதுதான் நம்முடைய புகழ் என்னும் வரைகோடு உயர்ந்து கொண்டே செல்கிறது.

**<u>தனிப்பட்ட பழக்கம்:</u>**

கூச்ச சுபாவமுள்ள ஒருவருக்கு தன்னம்பிக்கை குறைவாக இருப்பதினால் பிறரோடு எளிதில் தாராளமாக பழக முடிவதில்லை. ஒருவரிடம் பேசும்போது அவருடைய கண்களைப் பார்த்து தைரியமாக பேசக் கற்றுக்கொள்ளுங்கள் தினமும் குளித்து, தூய்மையான ஆடைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். நன்கு உடுத்துகிற ஒருவனை விரும்புவதற்கு

எவருமே தயங்குவது இல்லை. ஆண்கள் தினமும் சவரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். தலையை சொரியும்போது ஈருகள் பிடித்த முடியை பார்ப்பது ஒரு விருப்பமற்ற காட்சியாகும். அழுக்கடைந்த கூரிய நகங்கள், மை படிந்த விரல்கள், இவற்றைப் பார்ப்பது கண்வலியை உண்டாக்கும் தன் விரல்களினால் மூக்கை சிந்தி, கம்பங்களிலும் தூண்களிலும் கையை துடைக்கும் ஒருவரைக் குறித்து என்ன அபிப்ராயம் ஏற்படும். ஒரு கைக்குட்டையை பயன்படுத்துங்கள். பொது இடங்களில் மூக்கை குடைவது, காது குடைவது, பல் குத்துவது போன்ற செயல்களைத தவிர்க்க வேண்டம். ஒரு கொட்டாவி, தும்மல் அல்லது இருமலை அடக்க முடியவில்லை யெனில் ஒரு கைக்குட்டையினால் வாயை மறைத்துக் கொள்ளுங்கள். விசேஷமாக இன்றைய நாட்களில் எப்பொழுது புகைப்பட கருவி உங்கள் பக்கம் திருப்பப்படும் என்பதை அறிந்துகொள்ள முடியாது.

நடக்கும்போதும், உட்காரும்போதும் அல்லது நிற்கும்போதும் உங்கள் நிலையைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். உங்கள் முதுகு எலும்பு நேராக இருக்கட்டும். ஒருவர் கால்களை அகல பரப்பி உட்காருவதோ, அல்லது துணிகள் திணிக்கப்பட்ட பொம்மைபோல நிற்பதோ பார்ப்பதற்கு நன்றாயிருக்காது. ஆனால் கண்டிப்பாக இருக்க வேண்டியதில்லை. செயங்கையான அல்லது வற்புறுத்தலான புன்னகையை அணிந்துகொண்டு தன்னுணர்வுடன் செயல்பட வேண்டாம். இயல்பாக இருங்கள். ஒருவர் தன்னை அளவுக்கதிகமாக அலங்கரித்துக் கொள்ளும்போது அது அவருக்கு ஒரு சிறைந்த தோற்றத்தைக் கொடுத்து விடுகிறது. உங்கள் வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது ஒரு மணமகன் அல்லது மணமகளைப்பொல புத்துணர்ச்சியுடன் காணப்பட வேண்டும். நாகரிகமானது உங்களுடைய சுபாவமாய் மாறும்வரை தினமும் பயிற்சியெடுக்க வேண்டும்.

**இல்லம்**:

சிலவேளைகளில் வீட்டுக்கு வெளியே நற்பண்புடையவர்களாய் திகழும் அநேகர் வீட்டுக்குள் மிக மோசமானவர்களாய் இருப்பர். வீட்டில் விருந்தினர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு உண்மையான நாகரீகமான மனுஷனோ, மனுஷியோ நற்பண்புடையவர்களாகவே இருப்பர். காலை எழுந்தவுடன் முதல் வேலையாக படுக்கையை எடுத்து வைப்பது நாள்முழுவதும் ஒரு நல்ல உணர்வைக் கொடுக்கும். நாளை முயற்சி செய்து பாருங்கள்.

காலையில் குளித்து முடித்தபிறகு, வெளியே சூனியக்காரனை போல போவதற்கு பதில் உங்கள் முடியை சீவுங்கள். சீப்பிலிருந்து முடியை அகற்றுங்கள். அதை விரலில் சுற்றி குப்பைத் தொட்டியில் போடுங்கள். பின்பு மற்ற கடமைகளை செய்யுங்கள். நாம் பயன்படுத்தும் கழிப்பறை எந்தவொரு கறையும் இல்லாமல் நன்கு தூய்மைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். சிறுநீர் கழிப்பதற்கோ மலம் கழிப்பதற்கோ ஒருபோதும் ஒரு நாளும் உங்கள் பிள்ளைகளை தெருக்களில் விடாதீர்கள்.

பயன்படுத்தப்பட்ட ஈரத்துண்டுகள் மூட்டையாக குளியலறையில் விட்டுவிடாமல், சீராக கம்பியில் காயப்போட வேண்டும். அழுக்கு துணிகள் தங்களுக்குரிய இடத்தில் இருக்க வேண்டும். குளியல் அறையிலும், கை அலம்புமிடத்திலும் மூக்கை சீந்தினாலோ அல்லது எச்சில் உமிழ்ந்தாலோ வெளியேறும் முன்னர் அது கழுவி அகற்றப்பட்டுவிட்டதா என்பதை கவனிக்க வேண்டும். ஒரே குளியலறை மட்டும் இருப்பின் மற்றவர்களைக் குறித்து சிந்திக்க வேண்டும்.

நினைவில் கொள்ளவேண்டிய சிறந்த கொள்கை குடும்பத்திலுள்ள நபர்களை விருந்தினர்கள் போல நடத்துவதாகும். எல்லா குடும்பத்திலும் வாக்குவாதங்கள் தவிர்க்க முடியாதவைதான். ஆனாலும் அவை நாகரீகத்தின் எல்லையை மீறக்கூடாது. மனைவி பிள்ளைகளை உணர்வுள்ள மனுஷ ஜென்மங்களாக நடத்துவதை விட உடமைகளைப் போல நடத்துவது மிக கொடூரமானது. அதேபோன்று வீட்டில் தலைவருக்கு அடங்காத, மதிக்காத மனைவியும் பிள்ளைகளும் வெறுப்பூட்டுகிறவர்களாவர் வெட்கப்படாமல் தாராளமாக ‘வருந்துகிறேன்’ தயவுசெய்து மற்றும், நன்றி போன்ற வார்த்தைகளை உபயோகிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொருவருடைய அந்தரங்கமும் மதிக்கப்பட வேண்டும். ஒருவருடைய அறைக்குள் நுழையும் முன்பு கதவை தட்டி பின்னர் உள்ளே வரும்படி அழைப்பு வரும்வரை காத்திருங்கள். திறந்த கதவு மற்றும் ஜன்னல்களின் வழியாய் எட்டிப்பார்ப்பதும், உரைநடைகளை ஒற்றுக்கேட்பதும் சரியல்ல. மற்றவர்களுடைய கடிதங்களை திறப்பதும் அவர்கள் கையேட்டை வாசிப்பதும் நம்பிக்கையையும், அந்தரங்கத்தை மீறும் ஒரு மன உறுத்தலற்ற செய்கை ஆகும். உங்களின் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தை அடக்கி வையுங்கள். பிறருடைய தனிப்பட்ட பொருட்களை அவர்களுடைய அனுமதியின்றி பயன்படுத் தாதீர்கள். பிள்ளைகள் பதில் தரும்படி பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஒரு பெற்றோர் கூப்பிடும்போது, ''ஆங்'' என்று கத்தாமல் 'இருக்கிறேன் அப்பா' 'உள்ளேன் அம்மா' என்று பதில் தரவேண்டும். சிணுங்கி அழுவதற்கும் குற்றச்சாட்டுவதற்கும் பதிலாக சமாளிப்பதை அவர்களுக்கு கற்பிக்க வேண்டும்.

ஒருவரையொருவர் மூர்க்கத்தனமாக கேலி செய்வது ஒரு ஒழுங்கற்ற செயல். பிள்ளைகள் வீடமுழுவதும் பொருட்களை அங்குமிங்கும் எறிவதும், அவற்றை சுத்தம் செய்வதற்கு தாயை எதிர்பார்ப்பதும், கெஞ்சுவதும் அசிங்கமான காரியம். அவர்கள் வளரும் பருவத்தில் துணி துவைத்தல், வீடு சுத்தம் செய்தல், சில வேளையில் சமைத்தல் போன்ற காரியங்களை தாங்களே செய்துகொள்ளக் கற்றுக் கொள்ளவேண்டும். இல்லையெனில் அவர்கள் தொல்லையாகி விடுவார்கள்.

<u>மக்களை சந்தித்தல்</u>:

சிலரிடம் அறிமுகப்படுத்தப்படும்போது 'ஹலோ எப்படியிருக்கிறீர்கள்''? என்று கேட்க வேண்டும். அல்லது இந்தியா போன்ற நாடுகளினல் ''நமஸ்காரம்'' என்று கூறி வாழ்த்தலாம். தாய்லாந்தில்: ''சாயுர்டிக்கப்'' என்று கூறலாம். இது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் புரிந்துகொள்ளப்பட்டு, பாராட்டப்படுகின்றது. அறிமுகப்படுத்தும்போது ஓரவெளை நீங்கள் உட்கார்ந்திருந்தால், எழுந்து நின்று வாழ்த்துரைக்க வேண்டும். நீங்கள் மற்றவரை சந்திக்கும்போது உங்களோடு இருப்பவரையும் அறிமுகப்படுத்துவது மரியாதைக்குரியது.

<u>உரையாடல்:</u>

முதலில் சௌகரியமான சூழலை ஏற்படுத்துங்கள். பேசும்போது குரலில் ஏற்ற இறக்கம் காணப்படட்டும். பிறரை தாழ்வாக நினைக்கும் கர்வத்தை தவிருங்கள். மற்றவர்களையும் பேசவிடுங்கள். மற்றவர் கூச்ச சுபாவமுடையவராயிருப்பின் ஒரு கேள்வி கேட்பதினாலோ அல்லது அவருடைய அபிப்பிராயத்தை கேட்பதினாலோ அவருடைய பங்கை ஊக்குவிக்கலாம். தெளிவாக பதில் கொடுக்கும் நோக்கத்தோடு, கவனிக்க வேண்டும். பிறரை அதட்டி பேசுவதும், ஜம்பமாக பேசுவதும் கருணையற்ற செயல். சிந்திக்காமல் பேசிய வார்த்தைகளால் யாரையாவது புண்படுத்தியிருந்தால், உண்மையான மனதோடு மன்னிப்பு கேட்க தயங்கவேண்டாம். பிறரை காயப்படுத்தாமல் நம் கருத்து வேறுபாகளை தெரியப்படுத்தலாம். ''எனக்கு—எல்லாம்— தெரியும்'' என்ற மனப்பான்மை சிநேகிதனுடைய முகத்தில் அடிப்பது போன்றிருக்கும. வாக்கியங்களின் இடையிடையே 'அ....அ' என்று இழுப்பதை தவிர்க்க வேண்டும்.

**விமர்சனம் உடையாடலின் ஊக்கத்தைக் கெடுக்கும்.**

''சாண்ட்விச்—இரண்டு புகழி அடுக்குளுக்கு இடையே விமர்சனம்'' அசிங்கமான வார்த்தைகள் நம்முடைய அகராதியிலிருந்து அகற்றப்பட வேண்டும். சண்டையான வன்முறையான வார்த்தை பரிமாற்றங்கள் ஒழுங்கற்றவை. அவை கிறிஸ்தவர்களையும் கூட எரிச்சலடைய செய்யும். சுய கட்டுப்பாட்டை கற்க வேண்டும். அடிக்கும் தோரணையஜல் கையை ஓங்குதல், கோபம் உச்சக்கட்டத்தல் இருக்கும்பொது துப்புதல் ஆகியவை அநாகரீகமான நடத்தையின் அறிகுறிகள் ஆகும். பிள்ளைகள் பேசும்பொது

ஏழையானலும், பணக்காரனானாலும் அவர்களிடம் கத்தி பேசாமல், பணிவுடன் பேசுவதற்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் ஒருவருடன் ஒருவர் பேசும் போது சிநேகமான சம்பாஷணையை ஏற்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மொழியைப் புரிந்துக் கொள்ள முடியாத ஒருவர் இருக்கும் போது, ஒரு பொது மொழியைப் பயன்படுத்த வேண்டும்; சாத்தியமற்ற சூழ்நிலையில் அருகிலிருப்போர் நடைபெறும் காரியங்களை சுருக்கமாக அவருக்கு தெரியப் பண்ணலாம். ஒரு கூட்டத்தில் இருக்கும் போது இரகசியமாக பேசுவது பிறரை வருத்தப்படுத்தும். ஒரு குழுவிலிருந்து நீங்கள் எழுந்து வெளியே போக வேண்டியிருந்தாலோ அல்லது சம்பாஷணையை குறுக்கிட வேண்டியிருந்தாலோ மன்னிப்பு கோருங்கள். நீங்கள் வரவேற்கப்படாத பட்சத்தில் ஒரு சம்பாஷணையில் ஈடபடக் கூடாது. உங்கள் பொது அறிவை பயன்படுத்த வேண்டும். அற்பமான காரணங்களுக்குகாக சோர்வடைவது மிகவும் அற்பமானது. இது அனைவரையும் சோர்வடையச் செய்யும். தேவனடைய கிருபையினால் இதை மேற்கொள்ளலாம். எளிதில் கோபமடைய செய்யும் விஷயங்களை பேசி, பிள்ளைகளையோ பெரியவர்களையோ சங்கடப்படுத்தும் சூழ்நிலையை தவிர்க்க வேண்டும். பிறர் தங்களைக் குறித்தே நன்றாக உணரும்படி செய்ய வேண்டும்.

**உண்ணுதல்**

உணவு உண்ணும் போது பின்பற்றப்பட வேண்டிய நற்பண்புகளை கற்க வேண்டியது மிக முக்கியம். மேஜை ஒழுங்கு செய்யப்படும் வரை காத்திருக்க வேண்டும். சோம்பலாக காத்திருப்பதற்கு பதில் உடன் சேர்ந்து உதவி கரம் கொடுக்கலாம். கணவன் சாப்பிடும் வரை மனைவி காத்திருந்து அவர் வைத்த மீந்ததை சாப்பிடும் பழங்கால வழக்கத்தை மாற்ற வேணடிய வேளை வந்துவிட்டது. உண்ணும் நேரம் குடுமபத்திற்கான நேரமாக கருதப்பட வேண்டும். வணிகம் போன்ற இவ்வுலகத்தில், இரவு நேர உணவு வேளை மட்டுமாவது குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்றாக கூடிவருகிற வேளையாக இருக்க வேண்டும். ஜெபம் ஏறெடுக்கப்படும் வரை காத்திருந்து, அதன் பின்னரே உண்ண தொடங்க வேண்டும். சாப்பிடும் போது சம்பாஷணை இன்பமானதாகவும், இலகுவானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். சாப்பிடும் போது உணவை விமர்சிக்க கூடாது. மற்றவர்க்கு என்ன தேவைப்படுகிறது என்பதை கவனித்து, உணவு பாத்திரங்களை எடுத்து தர வேண்டும். உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்ட பின்பே உண்ணத் தொடங்க வேண்டும். வாயில் உணவை வைத்துக் கொண்டே பேசுவதினாலும், வெளியே கேட்கும்படி சத்தமாக நொறுக்குவதினாலும், வாய் நிறைய அடைத்து வேகமாக உழுங்குவதினாலும் உங்கள் பண்புகளுக்கு அவப்பெயர் உண்டாக்கிக் கொள்ளுகிறீர்கள். சிலருக்கு கறிவேப்பிலையையும், எலும்புத் துண்டுகளையும் மேஜையின் மீதோ அல்லது தரையிலோ விட்டுச் செல்லும் பழக்கம் உண்டு. தட்டின் ஒரு ஓரத்திலோ அல்லது வேறு ஒரு சிறிய தட்டிலோ வைக்குமாறு கூறலாம். தட்டிலேயே கை கழுவுதல் என்பது ஒரு சோம்பேறித்தனமான பழக்கம் ஆகும்.

**சந்திப்பு**

உண்ணும் நேரத்தில் சந்திக்க வரபவர்கள் மிக தேவையற்றவர்களாவர். மக்களை சந்திப்பதற்கு முன்னதாகவே நேரம் நியமிப்பது மிகச் சிறந்தது. நீங்கள் யதார்த்தமாக செல்லும் போது குடும்பத்தினர் முக்கியமான தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தாலோ அல்லது வேறு விருந்தினரை உபசரித்துக் கொண்டிருந்தாலோ அல்லது பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தாலோ மன்னிப்பு கோரி விடைபெறுங்கள். உணவு நேரம் வரை உங்களை தொடரும்படி பொழுதைக் கழிக்க கூடாது. ஒரு குறிப்பிட்ட பணிக்காக செல்லும் போது சுற்றி வளைக்காமல், பணியை முடித்து உடனடியாக விடைபெறுவது அவ்வீட்டார் உங்களை நன்றியுடனம், வருத்தமின்றியும் பார்க்க வைக்கும். உங்களை சந்திக்கும்படி யாராகிலும் வந்தால் தொலைக்காட்சியை அணைத்துப் போட வேண்டும். ஏனெனில் நிகழ்ச்சிகளை விட மனிதர்கள் மிக முக்கியமானவர்கள்.

ஒரு தேநீருக்ககாவோ விருந்திற்காகவோ அழைக்கப்படும் போது சரியான நேரத்திற்குச் செல்லுங்கள். குடிப்பதற்கு பானம் பரிமாறப்படும் போது ‘வேண்டாம்’’ என்று சொல்லிவிட்டு உங்கள் பார்த்தையின்படியே அவர்கள் செய்யும் பொழுது அவர்களை மனதிற்குள் சபித்தக் கொண்டிருப்பதை காட்டிலும் திறந்த மனப்பான்மையோடு உங்கள் விருப்பத்தை தெரியப்படுத்துவது நல்லது! உங்களிடம் விருந்தினர் வரும்பொது, பானத்தையோ, உணவையோ, திணிக்கக் கூடாது. அது உபசரிப்பின் ஒரு தவறான கருத்தாகும். எச்சில் ஊறும் உணவு பதார்த்தங்களை பார்க்கும் போது கட்டுப்பாட்டை இழந்துவிடாதீர்கள். விட்டாரை பாராட்டுங்கள்.

அவர்களுடைய பிள்ளைகளை விமர்சிப்பதை தவிர்த்து உங்கள் பிள்ளைகளை கட்டபாட்டிற்குள் வையுங்கள். ஒரு பரிசை கொண்டு செல்வது சரியானது. ஆனால் கட்டாயமல்ல. வீட்டார் பாத்திரங்களை கழுவும் போதும், சமையலறையை சுத்தம் செய்யும் போதும் உதவி செய்ய முன்வருதல் மிகவும் நல்லது. ஆனால் தங்கள் சமையலறைக்குள் பிறர் நுழைவதை அனைவரும் விரும்பமாட்டார்கள். ஆகவே, அறிவுக்கூர்மையுடன் தீர்மானியுங்கள். நீங்கள் மற்றவரோடு தங்கும் போது ஒத்துழைப்பதும், உடன்படுவதும் இருண்டு பெரும் நற்குணங்கள் ஆகும். அவர்களின் நேரத்திறக்கும், வழக்கத்திற்க்கும் இணங்கிச் செல்லுங்கள். தங்கள் சோப்பையும், துண்டையயும் பிளர் பயன்படுத்தவதை எல்லோரும் விரும்பமாட்டார்கள். ஆகவே தனிப்பட்ட உபயோக பொருட்கள் அனைத்தையும் கொண்டுச் செல்லுங்கள். அவர்களுடைய தொலைபேசியை பயன்படுத்தவதற்கு முன்பு அவர்களிடம் அனுமதி பெறுங்கள். வீட்டை சுற்றிலும் என்னவெல்லாம் உதவி செய்ய முழயுமோ அவற்றை செய்யலாம்.

**தொலைபேசி சம்பாஷணை**

தொலைபேசியில் பிறரை அழைக்கும் போது, ஹலோ, இது உங்களுடைய எண் தானா? ‘‘ என்று பணிவான, மரியாதை தரும் குரலில் பேச வேண்டும். அதன் பிறகு உங்களுக்கு வேண்டிய நபரை கேட்கலாம். உங்களுக்கு அழைப்பு வரும்போது, ‘‘ஹலோ, இது இன்ன அலுவலகம்’’ என்று புன்னகையுடன் கூடிய குரலில் பேசி காத்திருங்கள். அழைத்தவருடைய குரலைக் கேட்ட மாத்திரத்தில் ‘‘நீங்கள் யார்?’’ என்று கேட்பதை விட ‘‘பேசுவது யார் என்று தெரிந்துக் கொள்ளலாமா?’’ அல்லது ‘‘நான் உங்களுக்கு உதவி செய்யலாமா?’’ என்று கேட்பது மிகவும் பணிவுடன் காணப்படும். முடிவில்லாமல் தொலைபேசியில் வெகுநேரமிருந்தால் உங்களுடைய அர்த்தமற்ற பேச்சுக்களும், அசடான சிரிப்புகளும் கேட்போருக்கு தலைவலியை உண்டுபண்ணும். மென்மையாக பேசி ‘போய் வருகிறேன்’ (குட் பை) என்று சொல்லி சம்பாஷணையை முடிவுக்கு கொண்டு வாருங்கள்.

**சமுதாய வாழ்க்கை**

தெருக்களையும் பொது இடங்களையம் அசுத்தப்படுத்துவது ஒரு குற்றம் ஆகும். நம் சுற்றுப்புறம் அசுத்தமாக இருப்பதை விசுவாசத்துடன் சம்பந்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை. நாம் ஏற்கனவே ஒரு பெரிய விலைக்கிரயத்தை செலுத்திக் கொண்டு இருக்கிறோம். பொதுவான பணங்களின் போது இளைஞர்கள் முதியோர்களுக்கும் பெண்களுக்கும் இருக்கைகளை விட்டுக் கொடுக்க மனிதாபிமானம் அழிந்துக் கொண்டே வருகிறது அல்லது மரித்து விட்டது எனலாம். அப்படிப்பட்ட பழைய நற்பண்புகளை நாம் புதுப்பிப்போமாக! உங்களுக்கு உண்மையாக தேவைப்படும் அளவைக் காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்ரமித்துக் கொள்ள கூடாது. மற்றவர்களும் உட்காருவதற்கு இடம்தர வேண்டும். மக்களின் தோற்றத்தை அல்லது குறைபாடுகளை பரியாசம் பண்ணுவது மிக கொடூரமான மற்றும் மூர்க்கத்தனமான செயல் ஆகும். தெருக்களில் செல்லும் போது விரல் நீட்டுவதைரயும், பெயர் சொல்லி பிளரைஅழைப்பதையும் தவிர்த்து விடுங்கள்.

துப்புதல் என்பது மிக மோசமான ஒரு பழக்கம். அவ்விதமான பழக்கத்தை நிறுத்துங்கள். பிறரும் நிறுத்துவதற்கு கற்றுக் கொடுங்கள். தேவைப்படும் இடங்களில் வரிசையில் நிறக் வேண்டும். வரிசையில் நிற்கும் மற்றவர்களைத் தாண்டி முன் செல்லக்

கூடாது. கடனாக வாங்கப்பட்டவை ஒழுங்காக சரியான முறையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். பணம் என்பது எவருக்கும் ஒரு உணர்ச்சி பூர்வமான பகுதியாகும். காலந்தாழ்த்தாமல் உடனடியாக செலுத்தப்பட்டால் உறவுகள் பாதுகாக்கப்படும். பக்கங்களை திருப்புவதற்கும், பணத்தை எண்ணுவதற்கும் விரலை நக்குவது ஒரு அருவருப்பான காட்சியாகம்.

**சபை**

சபை என்பது ஒரு மாதேவனை ஆராதிக்கம ஸ்தலமாகும். ஆகவே சபைக்கு செல்லும்போது விவேகமாக உடுத்த வேண்டும். ஆராதனை தெடாங்கிய மாத்திரத்தில சகலவிதமான பயபக்தியோடும் காணப்பட வேண்டும். தாமதமாக வருபவர்களிடம் பேசுவதையும், அவர்களை வாழ்த்துவதையும் தவிர்க்க வேண்டும். ஒரு சுயாதீனமாக ஆராதிக்கும் சபையில் ஒருவர் மற்றவர்களை காட்டிலும் சத்தத்தை உயர்த்துவதோ, தன்னுடைய வேத அறிவை பிதற்றுவதோ நல்லதல்ல.

ஆராதனை முடிந்த பின்பு நண்பர்களின்றி தனியாக நிற்பவர்களை சந்திக்க வேண்டும். அலுவலகத்தில் உங்களை விட உயர் பதவியில் இருப்பவர் ஆராதனையில் கலந்துக் கொண்டால் நட்பாக பழகலாம். ஆனால் அறிமுகத்தைக் காண்பித்துக் கொள்ள வேண்டாம். அவராக வந்து உங்களை தயவாக நடத்தினாலொழிய அலுவலகத்தை போலவே மரியாதையுடனும், ஒதுங்கியும் நடந்துக் கொள்ளுங்கள்.

வாத்து குஞ்சுகளா அல்லது அன்னப்பறவைகளா?

அசாத்தியமான நற்பண்புகளைக் கண்டு குழப்பமடைய வேண்டாம். ஒரு நற்பண்பாளனாக ஒரு பரிசுத்தவானாய் இருக்க வேண்டிதில்லை. சில எளிய தீர்மானங்கள் உங்கள் வாழ்க்கையை தலைகீழாய் மாற்றும். உணவிற்கு பின் என்னுடைய விரல்களையும், தட்டையும் நக்க மாட்டேன் என்றும் சாப்பிடும் போது பக்கத்து அறையில் இருப்போர் கேட்கும் அளவிற்கு ஒலி எழுப்பக் கூடாது என்பதை என் கணவருக்கு நினைப்பூட்டுவேன் என்றும் ஏற்கனவே தீர்மானித்து விட்டேன். சற்று விவேகத்துடன் நடந்து கொண்டாலே மிக சிறப்பாக செய்ய முடியும். நம்முடைய சுய ஒழுக்கமே அசிங்கமான வாத்து குஞ்சுகளான நம்மை அழகிய அன்னப் பறவைகளாக மாற்றுவதில் பெரும்பங்கு வகிக்கும்!

**நம்முடைய வாழ்க்கையில் இசையின் தாக்கம்**

கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட்டு, நம் வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணித்த பிறகு, நம்முடைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற ஒரு மாபெரும் வாஞ்சை நமக்குள் எழும்புகின்றது. ஆனால் எப்படியென்று தெரியாது. மாற்றம் கொண்டு வரப்பட வேண்டிய ஒரு பகுதிகளில் ஒன்று, உலக சம்பந்தமான இசை நம் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய பகுதியாகும். அநேகருக்கு உலக சம்பந்தப்பட்ட இசை அதிகமாக பின் தொடர்கின்ற ஒரு விஷயமாக காணப்படுகின்றது. நாம் இப்பொழுது இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிறபடியால், அதற்கு எப்படி பதில் கொடுக்க வேண்டும் என்பதை கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும்.

இசை தேவனால் உண்டாக்கப்பட்டது. ஆனால் சாத்தான் அதை கெடுத்துப் போட்டான். அநேகரை வஞ்சிப்பதற்காகவும், தேவனுக்கு மாத்திரமே உரித்தான துதியையும், ஆராதனையையம் திருடுவதற்காகவும் அவன் இசையை பயன்படுத்துகிறான். நம் சரீரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இசை குடிக்கொண்டிருக்கிறது என்னும் உண்மையை மறுக்க முடியாது. நம்முடைய சுவாசத்திலும், இதய துடிப்பிலும், முழு சரீரத்தின் ஒவ்வொரு அணுக்களிலும் இசை இருக்கின்றது. நமக்குள் இசை இருப்பதினால் தான் வெவ்வேறு தாளங்களுக்கும் ராகங்களுக்கும் தக்கதாக நம் உணர்ச்சிகளை தூண்டுகிறது. அது இயற்கையானது தான். ஏனெனில் தேவன் நம்மை அவ்விதமாக சிருஷ்டித்திருக்கிறார்.

இசையினால் நம்மை நாமே கவர்ந்திழுக்க கூடாது. ஆனால் பாதகமான விளைவை நம்மில் தோற்றுவிக்காத இசையை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். இசை நம்முடைய

நடத்தையில் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நாம் மிக அழுத்தமாக உணரும்போது நரம்புகளை அமைதிப்படுத்தி, கவலையை குறைக்கும் மென்மையான அமைதியான இசையை கேட்கலாம். அடிக்கடி நாம் தாளத்திற்கு ஏற்ப நம்முடைய கால்களையம், விரல்களையும், தலையையும், அசைக்கிறோம். இதை செய்யும் போது நம்மையறியாமல், பிடிக்காத பாடலாக இருந்தாலும் கவனிக்கிறோம். அதை பாடுகிறோம். இப்படி செய்வதின் காரணம் ராகமும், தாளமும் நம் மனதில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

**ஐ. இசையின் மூலமாக சத்துருவின் திட்டம்**

இசையின் மூலமாக மனித வர்கத்தின் இதயங்களையும், சிந்தைகளையும் ஆட்கொள்ள வேண்டும் என்பது சத்துருவின் ஒரு திட்டம். ஜனங்களின் குணாதிசயத்தைக் கட்டுப்படுத்தி, சரீர பிரகாரமான, ஆவிக்குரிய அழிவு மற்றும் மரணம் வரை அவர்கள் வாழ்க்கையை ஆளுகை செய்ய வேண்டுமென்பது அவனுடைய குறிக்கோள். அவர்களுடைய குடும்பம், உணர்வுகள், நண்பர்கள், அவர்கள் நேசிக்கும் அனைத்தையும் திருட விரும்புகிறான். யோவான் 10:10 கூறுகிறது; ''திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வாரன். நானோ ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்' என்றார்.

**ஐஐ. இசையின் மூலமாக சாத்தானின் குறிக்கோள்**

ய. தேவனுக்குரிய துதியையும், புதிய விசுவாசிகளுடைய பூரணமான வாழ்க்கையையும் திருடுவது

தேவனுக்குரிய கனத்தையும், ஆராதனையையும் சாத்தான் தனக்கென்று திருடும்படிக்கு வகை தேடுகிறான். அவனுடைய தீமையான திட்டங்களும், கிரியைகளும் மகிமைப்டும் விதத்தில் மக்கள் பாடும்படியாகவும், ஆடும்படியாகவும் அவர்களுக்குள் தாக்கத்தை உண்டு பண்ணுகிறான். தேவன் வெறுக்கிற விபச்சாரம், வேசித்தனம், பாலியல் இச்சைகள் மற்றும் பழிவாங்குதல் போன்ற பாவங்களை வெளிப்படையான பாடல் கருத்துடன் கூடிய தன் இசையினால் துாண்டி விடுகிறான். இவ்விதமாக சாத்தான் தன் இசையை பின்பற்றுகிற வர்களுடைய ஆத்துமாக்களை கொள்ளையிடுகிறான். கிறிஸ்து சிலுவையிலே வெற்றி சிறந்ததினால் கிடைக்கும் நிறைவான வாழ்க்கையை எடுத்துவிடுகிறான். 'இன்னொரு முறை எடுத்துக்கொள்'' என்னும் பாடல் வரிகளை நாம் பாடும்போது, அவ்வார்த்தைகளை நம் மாம்சத்தில் காணப்படும், உணர்ச்சிகளையும் பாலியல் இச்சைகளையும் எழுப்பக்கூடிய அவ்வார்த்தைகளை நம்முடைய சிந்தையில் பதிக்கிறோம். இவ்வகையான பாடல்கள் மீண்டும பாவத்தின் அடிமைத்தனத்துக்கு நம்மை ஒப்புக் கொடுக்கும் நிலைக்கு கொண்டு வருகிறது. என்னடைய அனுபவத்திலிருந்து நான் சொல்லக் கூடியது என்னவென்றால் உலகத்தின் இசையை துறக்க முடியதாவர்கள் இன்னும் தங்கள் இருதயத்தில் உலகத்தை வைத்திருக்கின்றனர். அவர்களுடைய ஆண்டவர் தேவன் அல்ல, உலக இசைதான் என்பதே.

நாம் உண்மையாகவே யாருக்குரியவர்கள் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டியது நம் கடமை. நாம் பாடுகிற பாடல்களும், மனதில்

பதிக்கிற இசையும் இயேசு அங்கீகரிகக்கூடியதா என்பதை நாம் மதிப்பிட வேண்டும். அவர் மகிழ்ச்சியடவாரா? ''என்னோட இராதவன் எனக்கு விரோதியாய் இருக்கிறான். என்னோட சேர்க்காதவன் சிதறடிக்கிறான்'' லூக்கா 11:23. ஒரு இளம் பெண் விசுவாசியான சில நாட்களுக்குள்ளாகவே ஒரு முகாமுக்கு சென்றாள். அங்கு தேவ வல்லமையினால் தொடப்பட்டாள். அப்பொழுது பொல்லாங்கான இசை. மது அருந்துகிறபொழுதெல்லாம் தன்னை அழைக்கிற இரட்சிக்கப்படாத நண்பன் போன்ற எல்லா பாவங்களையும் விட்டு மனந்திரும்பினாள். சில நாட்களுக்க பின் அவள் மீண்டும் உலகத்தின் இசையில் மயங்கத் தொடங்கினாள். குறிப்பாக நடனத்துடன் கூடிய இசை. விரைவில் அவள் பின் மாற்றத்திற்குள்ளாக தொடங்கினாள். அது மீண்டும் அவளுடைய இச்சைகளுக்கு உயிர் கொடுத்து பழையபடி மீண்டும் பார்ட்டிகளுக்கு செல்லத்

தொடங்கினாள். அவள் மீண்டும் தன் பழைய நண்பனை சந்திக்கத் தொடங்கி விரைவில் தன்னுடைய பழைய பாவ வாழ்க்கையின்படியே மீண்டும் வாழத் தொடங்கினாள். துக்கத்திற்குரிய விஷயம் என்னவென்றால் தேவனுக்கு முழுயைாக தன் முதுகை காட்டினாள். அவளுடைய நண்பன் அவளுக்கு இரு குழந்தையைக் கொடுத்து பின்பு அதை தகப்பனார் குழந்தையாக விட்டு, அவளையும் கைவிட்டுச் சென்றுவிட்டான். இப்பெண்மணி தனது வாழ்க்கையை வீணடித்ததோடு, தேவன் தனக்கென்று வைத்திருந்த திட்டத்தையும் கெடுத்துப்போட்டாள். அவள் உன்தமான முக்கியத்தவம் கொடுத்தது இசைககும், பாலுறவுக்கும் மட்டும்தான் இவற்றிற்கு பதிலாக தேவன் இருந்திருக்க வேண்டும். அவரை பிரியப்படுத்துவது எப்படி என்பதை அவள் அறிந்திருக்க வேண்டும்.

**டீ. <u>தன்னை பின்பற்றுகிறவர்களின் வாழ்க்கை அழிப்பது</u>:**

இசை தன்னை கவனிப்பவர்களை அழிக்கும் சக்தியுடையது: ‘‘ராக்குரையின் லூாசிபர்’’ என்றறியப்பட்ட ஒரு பாப் பாடகர்’’ நாங்கள் எப்பொழுதும் மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் திசை
திருப்புவதற்காகவே உழைக்கிறோம்.மற்றொரு கூட்டத்தின் பெரும்பான்மை யினரும் அதையே செய்கின்றனர்’’ இசை க்சேரிகளின் மூலமாக மக்கள் மற்ற சூழ்நிலையில் ஒருபோதும் செய்யாத காரியங்களை செய்யும்படி ஊக்குவிக்கப்படுகின்றனா. இசையினுடைய தாக்கத்தினால் சில் தங்கள் ஆடைகளை கிழித்துக்கொண்டு, உடலின் அந்தரங்க பகுதிகளை வெளிப்படுத்துகின்றனர். வரைமுறையற்ற பாலியல் தொடர்புக்கு உட்படுகின்றனர். அவர்கள் மனம் இசைக்கு பைத்தியமாவதினால், போதை பழக்கங்கள், குடிப்பழக்கம் மற்றும் வன்முறை போன்ற காரியங்கள் இடம் பெறுகின்றன.
இப்படி குழுக்கள் கச்சேரிகளை நடத்தப்பட்ட பிறகெ இவை சம்பவித்ததாக அடிக்கடி ஊடகங்களில் அறிவிக்கப்படுகிறது. ‘‘பிசாச தன்னை சேவிக்கிறவர்களுக்கு நன்றாக கூலி கொடுக்கிறான்’’ என்று ஒரு பிரபலமான பழடிமாழியிருக்கிறது. இப்படிப்பட்ட இசை நிகழ்ச்சிகள் கலந்துகொள்வோருக்குள் ஒரு கலை வெறுப்பை உண்டுபண்ணி தீமையான காரியங்களை செய்யும்படி துாண்டி அவர்களின் மதிப்பைக் குறைக்கின்றன. அவர்கள் தீங்கான காரியங்களில் ஈடுபடும்போது அது அவர்களை சோர்வுக்குட்படுத்தி, தனிமை மற்றும் தோல்வியின் உணர்வுகளில் இருக்கும்படி செய்துவிடுகிறது.
இது அநேகரை தற்கொலை எண்ணத்திற்கு நடத்தியிருக்கின்றது. இப்படிப்பட்ட சாத்தானிய இசையில் மூழ்கிவிட நம்மமை நாமே விட்டுவிடக்கூடாது.

**ஊ. <u>தன்னை பின்பற்றுகிறவர்களை ஆவிக்குரிய பிரகாரமாகவும் சரீரப் பிரகாரமாகவும் அழிப்பது:</u>**

இசையை கேட்பதில் உங்கள் நேரத்தை கழிப்பீர்களானால், அதில் கூறப்படும் செய்திக்கு கீழ்படியும் வாஞ்சை ஏற்படுவதை உணருவீர்கள். சோகமான, நிர்கதியான இசைகளில் உங்கள் நேரத்தை கழிக்க வேண்டாம். என்னவாக இருந்திருக்க கூடும் என்பதைக் குறித்து மட்டுமே அவை பேசுகின்றன. தவறான கருத்துக்களைக் கொண்ட வேதனை மிகுந்த பாடல்களை கவனித்தால், உங்கள் வாழ்க்கை அழுத்தத்திலும் அவமரியாதையிலும் முடிவடையும். உங்கள் துக்கத்தை மறப்பதற்கு குடிப்பீர்கள் அல்லது தற்கொலையைக்குறித்து யோசிப்பீர்கள்.

தனது சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்த 17 வயது நிரம்பிய ஒரு மேல்நிலைப்பள்ளி மாணவனைக் குறித்து கேள்விப்பட்டேன். ஒருநாள் மிக ஆழமான தினமை உணர்வு அவனை வாட்டத் தொடங்கியது. அவன் ேர்ந்தெடுத்த நண்பர்களும், நல்லவர்களாயிருக்கவில்லை. வாலிபர்கள் ஒன்றுகூடி போதையின் உச்சத்திற்கு சென்று ஒருவரோடொருவர் சண்டைபோடும் ராக் இசை க்சேரிகளில் கலந்துகொள்ள தொடங்கினான். அவனும் அவர்களைப் பொலானான். சில நாட்களுக்கு பின்பு அவனுடைய வாழ்க்கை விதம் இதுவாகவே மாறிப்போனது. ஒருநாள் அவன் தெருவில்

நடந்து பொய்கொண்டிருந் தபோது அவன் தன்னைத் தானே சுட்டுக்கொண்டான். தன் வலைக்கும் வீழ்வோரை அழிக்க வேண்டும் என்பதே சத்துருவின் திட்டம். அவர்கள் இனி வெளியே வரவே முடியாது என்று எண்ணுகிற ஒரு சித்திரவதையான இடத்துக்கு அவன் அவர்களைக் கொண்டு செல்கிறான். அநேக விசுவாசிகள் இந்த கண்ணியில் அகப்பட்டுவிடுகிறார்கள். சோதனையைய எதிர்த்து தங்கள் சொந்த வாழ்க்கையை நடத்துவதற்கு போதுமான பலமுடையவர்களாயிருக் கின்றோம் என்று அவர்கள் நம்புகின்றனர்.

ஆனால் அவர்களை பழைய வாழ்க்கை மது, சட்டத்துக்கு விரோதமான பாலுறவு இவற்றுக்கு அடிமைகளாவதுடன் அவன் வாழ்க்கை முடிவடைகின்றது. அவர்கள் பிசாசின் பிள்ளைகளாய் மாறி, கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த ஜீவனை இழந்து விடகிறார்கள்.

தேவன் தமக்கு ஜீவனை அளித்து அது பரிபூரணப் படவேண்டும் என்று விரும்புகிறார். உங்கள் மனதை எந்த அளவுக்கு மேம்பாடான காரியங்களில் வைக்கின்றீர்களோ அந்த அளவுக்கு தேவன் அளிப்பதை அனுபவிப்பார்கள். உங்களை ஆறுதல்படுத்தி, சமதானத்தை கொடுக்கிற இசையை தேடுங்கள் உங்களை தேவனண்டை கொண்டு செல்லும் துதி, பாடல்களையும், உங்களை உயர்ந்தவனாக மாற்றக்கூடிய பாடல்களையும் (இசையையும்) கவனியுங்கள்.

ஐஐஐ. **<u>ஜீவனை அளிக்கிற கிறிஸ்தவ இசை</u>**

யு. அது சமாதானத்தைக் கொடுத்து ஆவியில் அமைதியைக் கொடுக்கிறது:

இசைந ம்முடைய உணர்ச்சிகளையும், சித்தத்தையும் தொடுகிறது. நாம் கேட்கும் இசைந ம்முடைய எண்ணங்களையும், செயல்களையும், மனப்பாங்கையும் ஆளுகிறத. இராஜாவாகிய சவுல் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்ம் பண்ணினபோது பாதுகாப்பை இழந்தான். ஒரு பொல்லாத ஆவி வந்து அவனை வேதைப்படுத்தியது. தாவீது சுரமண்டலத்தை வாசித்தால் மட்டுமே அவரால் சமாதானத்தை உணரமுடியும், பொல்லாத ஆவி அவனை விட்டுவிலகும். “அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனை விட்டு நீக்க, சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமாவான்” (1 சாமுவேல் 16:23)

இசையானது கேட்கிற ஜனங்களில் தனது வல்லமையை செயல்படுத்துகிறது. இசையின் வகையைப் பொறுத்து அதின் வல்லமை நல்லதாகவோ, அல்லது தீயதாகவோ, இருக்கலாம்.

கிறிஸ்தவ இசையை கேட்கும்போது நம் வாழ்க்கையிலும், இல்லங்களிலும் தேவ பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறோம். நம்மை நெருக்கும்படி வகை தேடுகிற எல்லா ஆவிகளையும் விரட்டுகிறோம். நம்மை சந்திக்கிற மக்களும் சமாதானத்தையும், கர்த்தருடைய பிரசன்னத்தையும் உணருவார்கள். சவுலைப்போல நாமும் அபிஷேகம் நிறைந்த இசையின்மூலம் விடுதலையையும், சமாதானத்தையும் உணர்வோம். ( 1 சாமுவேல் 16:23)

டீ. **<u>ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு அது ஒரு பயனுள்ள கருவியாகும்:</u>**

கிறிஸ்தவர்கள் மிக அருமையாக இசையமைக்கின்றனர். அது கேட்பதற்கு இன்பமாகவும், சாதகமான தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. நம்முடைய இசைந ல்ல உயர்தரமானதாக இருப்பின் அதை கிறிஸ்தவரல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வது ஒரு பெரும் சாட்சியமாகும். இயேசுவை அறியாதோரக்கு இசை ஒர மாற்றுவழி ஆகும். சபை என்பது மிக சாதாரணமானதாகவும், பொழுது போக்கற்ற அறுவையானதாகவும் இருக்கும் என்ற கருத்தை இசை உடைக்கிறது. இசை என்பது ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்கு ஒரு சிறந்த வழியாகும். பல்வேறு வகையான கிறிஸ்தவ இசை

நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, கர்த்தரை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்படுகிறது.

ஊ. <u>நம்மை பயனடைய செய்வதற்கு ஏதுவான செய்தியை தருகிறது:</u>

அனைத்து கிறிஸ்தவ இசைகளுமே எவ்வகையான இசையாக இருந்தாலும் அவை ஒரு சாதகமான மற்றும் ஆறுதலான செய்தியைக் கொடுக்கின்றன. பாடலுக்குள் அடங்கியிருக்கும் ராகம் ஒருவனை தேவனிடம் நெருங்க வைக்கின்றது. ஜெபிப்பதற்கு ஒரு சரியான சூழ்நிலையை உருவாக்குகின்றது. நீங்கள் விரும்பினால் கிறிஸ்தவ இசையின பெரும் அளவை அனுபவித்து, இன்புறுவதற்கு அனுமதிக்கப் படுகிறீர்கள். ஆனால் முழுமையாக பயனளிக்க கூடிய ஒரு காரியம் என்னவென்றால் இயேசு மகிமைப்படுத்தும் ஜீவனுள்ள துதி மற்றும் ஆராதனைப் பாடல் ஆகும். 1 கொரிந்தியர் 6:12—ல் அப்போஸ்தல னாகிய பவுல், ''எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரண்டு. ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன். என்று உறுதியாக கூறுவதைப் பார்க்கின்றோம்.

அது சட்டதிட்டங்களைக் குறித்து சொல்லப்பட்டதல்ல. ஆனால் நமக்கு பயன்பதரக்கூடிய இசையை தேர்ந்தெடுப்பதற்கு அறிந்து கொள்வதை குறித்தது. கிறிஸ்தவ இசை உங்களை ஒரு நபராக உணர வைக்கின்றது. வேதனையான வேளைகளில் அது உங்களுக்கு தைரியத்தையும், பெலனையும் கொடுத்து தன் ராகத்தினாலும் கருத்துள்ள பாடல் வரிகளினாலும் உங்களை தேவனண்டைக்கு கிட்டி சேர்க்கிறது.

ஐஏ <u>ஒரு கிறிஸ்தவனாக இசையை சம்பந்தப்படுத்துவது எப்படி?</u>

1. உலகத்தின் இசை குறித்து பார்க்கும்போது சிறிதுகூட உடன்பட அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் சுலபமாக பழைய பழக்கங்களில் சிக்கி விடுவீர்கள்.
2. பொது இடங்களில் உலக சம்பந்தமான இசையை கேட்க நேரிட்டால், அதினால் ஆட்கொள்ளாதபடி மனதில் நிர்ணயித்து கொள்ளுங்கள்.
3. பழைய நினைவுகளையும், கடந்த கசப்பான அனுபவங்களை உயிர்ப்பிக்கும் இசைகளை கேட்கக்கூடாது. ஏனெனில் அது மிண்டும் பழைய வழிகளுக்கும், பழக்கங்களுக்கும் கொண்டு செல்லும்.
4. ஒளிவு மறைவின்றி எல்லாவற்றிலும் ஒரு வெளிப்படையான மனப்பான்மையை கடைபிடிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர்
5. எல்லாவற்றையும் பார்க்கிறார். அவர் உங்களுக்கு உதவி செய்யும்படி இருக்கிறார் என்ற உணர்வுடன் இருக்க வேண்டும்.
6. உங்கள் உள்ளத்தை அசுத்தப்படுத்த விரும்பாதபோது அந்நிய பாஷை பேசி ஜெபியுங்கள், வேத வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள். தேவன் செய்த நன்மையான காரியங்களைக் குறித்து சிந்தியுங்கள்.
7. கடந்த காலத்தில் உங்களை அடிமைப்படுத்திய இசையை அழித்துப் போடுங்கள். நாம் கேட்பதை விட, புரிந்துகொள்ளவதை விட அதிகமாக அதிகமாக கொடுக்க தேவனால் கூடும் என்று விசுவாசியுங்கள். (உபாகமம் 7:26 மற்றும் அப்போஸ்தல் 19:19)
8. உங்கள் தனிப்பட்ட ரசனைக்கு ஏற்ப நல்ல கிறிஸ்தவ இசையை சம்பாதியுங்கள். கூடுமானால் வானொலியில் கிறிஸ்தவ அலை வரிசையை கவனியுங்கள்.

## <u>வேதாகமும் பாலுறவும் — ஓர் அறிமுகம்</u>

அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் பிறரை நேசிக்கவும் நேசிக்கப்படுவதற்கும் ஏதுவான திறமையை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். இது மெய்யாகும் படியாக அவர் சில கொள்கைகளை நியமித்திருக்கிறார். ''காதல்'' என்றழைக்கப்படுகிற ஒன்றை கண்டுபிடிக்கும் அவசரத்தில் அநேகர் சட்டத்திற்கு மாறான பாலியல் தொடர்புகளில் விழுகின்றனா. தேவ சித்தத்தின்படி ஆசீர்வாதமாயிருப்பதற்கு பதிலாக இவர்கள் செய்யும் காரியத்தினால் அவர்கள் சமாதானத்தையும் நினைவுகளையும்

திருடுகிற வேதனைகள் உண்டாகிறது. பின்பு அவர்களை உடைந்த இருதயத்தோடு கைவிடப்படுகின்றனர். திருமணத்திற்கு வெளியே ஏற்படுத்தப்படும் பாலுறவுகளினால் ஏற்படும் விளைவுகளை தேவன் அறிந்திருக்கிறார். உங்களைக் குறித்து அவருடைய நோக்கத்தை நீங்கள் அறிந்துகொள்வதினால் அவருடைய நேரத்திற்காக காத்திருப்பீர்கள் என்று அவர் எண்ணுகிறார். நீங்கள் ஆசீர்வாதமாக இருக்ககூடிய உங்களை மகிழ்ச்சியால் வைத்திருக்க கூடிய இருவருமாய் கூடி அவருடைய நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய மிக சிறந்த நபரை அவர் உங்களுக்கு தருவார்.

1. **<u>பாலுறவு, தேவனால் உண்டாக்கப்பட்டது</u>.**

தேவன் மனிதனை சிருஷ்டித்து, எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் மேலாக மனிதனை வைத்தார். ஆகிலும் அனைத்து கிரியைகளிலும் ஆதாமுக்கோ, ஏற்ற துணை காணப்படவில்லை. ''அப்படியே ஆதாரம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கு ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை'' (ஆதியாகமம் 2:20) ஆகவே, தேவன் அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து மனுஷியை உண்டாக்கினார் ''அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்: இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள் என்றான்''.

எபிரெய எழுத்துக்களை வாசிக்கும்போது இவ்வார்த்தைகள் மாபெரும் உணர்ச்சியையும், சந்தோஷத்தையும், ஆச்சரியத்தையும் வெளிப்படுத்துகின்றன. ஆதாம் அப்படியாக தான் உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் அதுவரை அவர் பார்த்தவைநெல்லாம் மிருக ஜீவன்களாயிரந்தன. அவர் மனுஷியை கண்டபோது ஒரு மாதிரியான, அனால் வேறுபட்ட அவளை ''இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்'' என்றான். தனக்க மிக பொருத்தமானவளாகவும், தனக்கு மிகவும் தேவைப்பட்டவளாகவும் இருக்கிறாள் என்பதை அறிந்து, தான் உணர்ந்த திருப்பதியை வெளிப்படுத்துகிறான். ஆதி. 2:24—ல் தேவன் முதல் திருமணத்தைக் கொண்டாடி அவர்களை ஜோடியாக இணைத்தார்.'' இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும். தன் தாயையும் விட்டு, தன் மனைவியொடே இசைந்திருப்பான: அவர்கள் ஒரே மாம்சமா யிருப்பார்கள்.'' இவ்வசதன்தின் கடைசி பகுதியில் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்பது ஒரு தம்பதியின் அந்தரங்கமான, சரீரப்பிரகாரமான ஐக்கியத்தை பாலுறவைக் குறிக்கின்றது. இது வெட்கத் திற்குரிய காரியமல்ல. மாறாக எவ்வித தடையுமின்றி ஒருவரை யொருவர்சுயாதீனமாகஅறிந்துகொள்வதை வெளிப்படுத்துகிறது.''ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப் படாதிருந்தார்கள்'' பாலுறவை தேவன் ஒரு இயல்பான காரியமாக பார்க்கிறார். தேவன் அமைத்த வரையறைக்குள் அதை அனுபவிப்பது, அவரை பிரியப்படுத்தும் நேர்மையான முழுமையான , நேசத்தில் தேவன் மகிழ்ச்சியடைகிறார். உன்னதப்பாட்டு ஒரு மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் இடையே காணப்படும் ஒரு சரீரப் பிரகாரமான நேசத்தின் வெளிப்பாடாகவும் திருமணம் என்பது எத்தனை அந்தரங்கமாக இருக்க தேவன் விரும்புகிறார் என்பதின் பிரதிபலிப்பாகவும் காணப்படுகின்றது.

தொடக்கத்தலிருந்தே இருபாலருக்கும் இடையே ஒருவித கவர்ச்சியும், பரஸ்பரமான புரிந்துகொள்ளுதலும் காணப்பட்டது. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் உறவு வைத்துக்கொள்வது, தேவனுடைய திட்டமல்ல. அப்படியிருந்திருந்தால் தேவன் ஆதாமுக்கு ஏவாளைக் கொடுப்பதற்கு பதிலாக மற்றொரு ஆதாமைக் கொடுத்திருப்பார். இவ்வகையான தவறான உறவு தேவனை மறந்து, உங்கள் சுயபுத்திக்கு ஞானிகளாகி கர்த்தர் அருவருக்கிற காரியத்துக்கு தன்னை விற்றுப் போட்டதின் விளைவு ஆகும். ''அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அனுபவியாமல் ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்கு தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். ''ரோமர்1:27,

மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக இவைகளும் இன்னும் அநேக பழக்கங்களும் தோன்னிறன. அவர்கள் தேவன் நியமித்த ரைமுறையை மாற்றி விட்டனர். அவர்கள் பாலுறவை இன்பத்திற்குரிய காரியமாகவும், விரும்புகிற பொழுதெல்லாம், விருப்பப்படுகிறவரோடெல்லாம் அனுபவிக்க வேண்டிய காரியமாகவும் பார்க்கின்றனர். சில இளைஞர்கள் தங்களுடைய துணைவர் தங்களை
விட்டுவிடக்கூடாது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பாலுறவை பயன்படுத்திக் கொள்கின்றனர். இறுதியில் இவ்வித மோசடிகள் ஆழமான தனிமை உணர்வையும், உள்ளான வெறுமையையும், உணர்ச்சி சார்ந்த போராட்டங்களையும், பாலுணர்வினால் பரவிய நோய்களையும் (எயிட்ஸ் உட்பட), எதிர்பாராத கருத்தரிப்புகளும், கட்டாய திருமணங்களும் ஏற்படுகின்றன.

2. ஏன் காத்திருந்து திருமண பந்தத்தில் மட்டும் பாலுறவு வைத்துக்கொள்ள வேண்டம்?
தேவன் தாமே பாலுறவை ஒரு நல்ல நோக்கத்திற்காக ஏற்படுத்தி இருந்தாலும் சமுதாயம் அசுத்தத்திற்கும், சீர்கேட்டிற்கும், நாசத்துக்கும் ஏதுவாக திருப்பி விடுகின்றது. தகவல் தொடர்பு (தொலைக்காட்சி,செய்தி தாள், வானொலி, தொலைபேசி, மற்றும் இளையதளம்) மூலமாக அழுத்தம் உருவாக்கப்படுவதோடு கூட ஆதாயமும் மக்களை சட்டத்திற்கு மாறான பாலுறவில் விழச்செய்வதற்கு குறிபார்க்கிறது. தந்திரங்கள் நிர்வாண படங்களிலிருந்து(கற்பனையை பூரிக்க வைக்கும் பாலுறவு காட்சிகள் அடங்கிய நிகழ்ச்சிகள்) திருமணத்துக்கு முன் பாலுறவு வைத்துக்கொள்வதை மேம்படுத்தும் புது கருத்துக்களை கொண்ட வெளிப்படையானவிளம்பரங்கள் வரை பல வகையில் வேறுபடுகின்றன. திருமணத்திற்கு முன் பாலுறவு கொள்வது சாதாணமானதே என்று வர்ணிக்கப்படுகின்றது. விபச்சாரத்தின் பங்காளர் திருப்பியாகவோ, கவர்ச்சியாகவோ இல்லாதபோது, விபச்சாரம் சரியானது என்று தீர்க்கப்படுகிறது.

**சட்டத்திற்கு மாறான பாலுறவினால் ஏற்படும் விளைவுகள்:**

தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்கிறோம், இருவிதமான குற்ற மனசாட்சியை வளர்க்கிறோம். பாதகமான விளைவுகள் உங்கள் வாழ்வில் உண்டாகும். உங்களுடைய சாட்சி கெட்டுப்போகும். இவற்றை குறித்து சிந்திக்காமல் அநேகர் தாங்களே இப்படிப்பட்ட தவறான உறவுகளில் சிக்கி கொள்கின்றனர்.

நாம் தேவனுக்கு முன்பாக பாவம் செய்கிறோம். திருமணத்திற்கு வெளியே நாம் இப்படிப்பட்ட பாலுறவுகளுக்கு உடன்படும்போது நாம் தேவனுக்கு முன்பாக பாவம் செய்கிறவர்களாயிருக்கிறோம்.1கொரிந்தியர் 6:18—ல் வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிலும் ஏற்கும், ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது. கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்'' என்று வேதம் கூறுகிறது. சரீரத்தினால் செய்யப்படுகின்ற எந்தவொரு பாவமும் தேவனுக்கு விரோதமானது. இதில் விபச்சாரம், வேசித்தனம், ஓரின சேர்க்கை இவை அடங்கும். இப்படிப்பட்ட பாவங்களை செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லை என்று 1 கொரி. 6:9—10—ல் கூறப்பட்டள்ளது. நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக திருப்புகிற மாத்திரத்தில் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணும்படி பிரவேசிக்கிறார். யோவான் 14:17, உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது: அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் என்று போதிக்கிறது. தேவன் நமக்குள்ளே வாசம்பண்ணி நம் சரீரத்தை அவருடைய ஆலயமாக மாற்றுகிறார் என்பதே உண்மை. இப்படிப்பட்ட பாலியல் பாவங்களை பழகும்போது நாம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயத்மை அவமதிக்கிறோம். இப்படிப்பட்ட வெட்கத்துக்குரிய பாவங்களில் நீங்கள் விழும்போது சாலமோனின் பழமொழி நிறைவெறுகின்றது: ''திருட்டுத் தண்ணிர் தித்திக்கும்: அந்தரங்கத்தில் புசிக்கும் அப்பம் இன்பமாயிருக்கும் என்றும், சொல்லிக் கூப்பிடுகிறாள். ஆயினும் மரித்தவர்கள்

அவ்விடத்தில் உண்டென்றும், அவனுடைய விருந்தாளிகள் என்று நரக பாதாளங்களில் கிடக்கின்றார்களென்றும் அவன் அறியான்'' நீதிமொழிகள்: 9: 17—18.

''நீ தவறவிடுவது இன்னதென்று அறியாதிருக்கிறாய்'' அல்லது '' நீ இருக்கவேண்டிய இடத்தில் இல்லை!'' என்று பிறர் கூறுவதை நம்பும்போது தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்யும்படி நம்மை ஒப்புக் கொடுக்கிறோம. அநேகர் தங்களுடைய நண்பர்கள் சொல்வதை யெல்லாம் செய்ய முயற்சித்து, அவர்களோடுகூட இணைந்து நிற்க பிரயாசப்பட்டு விழுந்து போயிருக்கின்றனர். தேவனுடைய சித்தத்துக்கு அப்பாற்பட்ட பாலுறவு வாழ்க்கை உங்கள் சமாதான்தை நீக்கி, தேவனைக்குறித்து ஒரு பாதுகாப்பற்ற உணர்வை உருவாக்கிவடும். இப்பாவத்தின் விளைவாக என்ன சம்பவிக்கப் போகின்றது என்பதைக் குறித்து ஒரு மோசமான பயம் உண்டாகின்றது.

**ஈ. குற்ற மனசாட்சி**

எப்பொழுதும் பாவம் முதன் முறையாக பார்ப்பதற்கு இன்பமானதாகவும், உடன்படுதவற்கு ஏதுவானதாகவும் தோன்றும். வேறென்ன அநேகர் எந்த நேரத்தில் அதை நிறுத்த வேண்டும் என்று அறியும் வரை மோசமான காரியம் எதுவும் சம்பவிக்காது என்று நம்பும்படியாக கண்ணி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக தான் அநேகர் நிர்வாண படங்களின் உலகத்தில் பிடிப்பட்டு, கடுமையான குற்ற மனசாட்சி அடிமைத்தனம், மற்றும் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகுதல் போன்வற்றில் முடிவடைகின்றா். அவர்கள் தங்களை மிக தாழ்வாக மதிப்பிடுவதினால் எதிர்பாலரோடு ஒரு ஆரோக்கியமான உணர்ச்சி ததும்பும் உறவில் நிலைத்திக்க முடிவதில்லை.

ஒரு முறை நான் குப்பை தொட்டியில் இருந்து ஒரு நிர்வாண பட பத்திரிக்கையை கண்டெத்து ஒரு மனிதனை குறித்து வாசித்தேன. அவன் அதை எடுத்தான், வாசித்தான். அந்நேரம் முதற்கொண்டு நிர்வாண படங்களை பார்க்கும் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டான். அவன் பயந்த சுபாவமுள்ளவனாய் இருந்தபடியால் ஒரு இளம் பெண்ணின் மனதை வென்று அவளோடு ஒரு புதிய உறவை ஆரம்பிப்பதை காட்டிலும், தனக்குத் தானே சுயப்புணர்ச்சியில் ஈடுபடுவது சுலபமாக காணப்பட்டது. ஆனால் நம்முடைய பாவ சுபாவத்தை ஒரு போதும் தணிக்க முடியாததால் எப்பொழுதம் மீண்டும் அதிககமாக செய்யத் தூண்டுகிறது. அவன் இளம் பெண்களை கற்பழிக்கவும், கொலை செய்யவும் தொடங்கினான். கடைசியாக இப்படி 17 பேரை கொலை செய்த பிறகு, அவன் பிடிபட்டான்! பாவமானது எப்படியாக நம் வாழ்க்கையில் தந்திரமாக நுழைந்து நாம் அதினுடைய சுதந்திரமான ஆளுகையை அனுமதிக்கும் போது, மோசமான செயல்களுக்கு நேராக வழிநடத்துகிறதை இச்சம்பவம் பிரதிபலிக்கிறது. ''இப்படிப்பட்ட அளவுக்கு மீறின பாவத்தில் நான் ஒரு போதும் விழமாட்டேன்!'' அல்லது ''மிக பொல்லதவனாய் மாறும் அளவுக்கு ஒரு போதும் என் இதயம் அனுமதிக்காது,''என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அநேகர் கருகலைப்பின் மூலம் பல கொலைகளை செய்து கொண்டிருக்கின்றனர்.

**<u>கருகலைப்பு என்பது பெரிய எண்ணிக்கையில் கொலை செய்யும் அளவிற்கு சமமான ஒரு படுகொலையாகும்.</u>** அநேகர் கரு என்பது ஒரு அணுக்களின் கூட்டு மட்டுமே என்று கூறி தங்கள் குற்றத்தை நியாயப்படுத்துகின்றனர். ஆனால் சங்கீதக்காரன், ''என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது'' என்று நினைப்பூட்டுகிறார். சங்கீதம் 139:16 கரு தரித்த அந்த ஷணத்தில் இருந்த தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனிதனாகி ஜீவனை கொடுத்த சிருஷ்டிகரோடு தொடர்பு கொள்ள தொடங்குகிறோம். நீங்கள் ஒரு போதும் கருகலைப்பு செய்வதற்கோ அல்லது அதை செய்பவாக்ளுக்கு உடந்தையாகவோ இருக்கக்கூடாது. தற்காப்பற்ற ஒரு நபருடைய ஜீவனைக் குறித்து தீர்மானம் எடுக்கும் உரிமை உங்களுக்கு கிடையாது. அப்படி செய்வீர்களாகில், உங்கள் வாழ்க்கைக்கு சாபத்தைக் கொண்டு

வருகிறீர்கள். நீதிமொழகள் 14:12 உங்கள் வாழ்க்கையில் நிறைவேறுகிறது. ‘‘மனுஷனுக்கு செம்மையாய் தோன்றும் வழிகளுண்டு, அதின் முடிவோ மரண வழிகள்.’’

உண்மையாகவே அது ஒரு ஜீவன் என்றும் நீங்கள் எந்த தவறை மாற்ற இனி எந்த ஒரு வழியும் கிடையாது என்பதை உணரும் போது, மிக ஆழ்ந்த வேதனையினால் நிரப்பப்படுவீர்கள். ஒரு குழந்தையை பார்க்கும்போது, உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால் இப்பொழுது எத்தனை வயதாய் இருந்திருக்கும் என்றும், அவன் உயிரோடிருந்தால் என்னவாக இருந்திருப்பான் என்றும் நினைத்து மிகவும் வேதனைப்படுவீர்கள். கருக்கலைப்பு செய்வதற்கு ஊக்குவிப்பவர்கள் ஒது நாளும் அதன் பின்விளைவுகளைக் கூறமாட்டார்கள். ஆனால் அதின் வழியாய் கடந்து வந்தவர்களுக்கு மட்டுமே அது உண்மையாகவே வலி மிகுந்த ஒரு காரியம் என்பது தெரியும்

பொதுவாக ஒவ்வொரு பாலியல் பாவமும் குற்றமனசாட்சி வெட்கம் மற்றும் ஏமாற்றத்தின் வலையை விட்டு செல்கின்றன. நாம் இனி நேசிக்கப்பட தகுதியற்றவர்கள என்று அநேகர் எண்ணுகின்றனர். அவர்கள் தங்களுடைய உறவில் தன்னலைமிக்கவர்களாகி, மற்றவருடைய அன்புக்காக கெஞ்சி, தாங்கள் சரீர பிரகாரமாகவும், பாலியல் மற்றும் உணர்ச்சி அடிப்படையில் தவறாக பயன்படுத்துவதற்கு விட்டுக் கொடுத்துவிடுவார்கள். உறவை தக்க வைத்துக் கொள்வதற்கு அந்த உறவில் ‘‘யாரோ ஒருவராக’’ இருப்தற்கு ஒத்துழைப்பார்கள்.

**ஊ. உங்கள் வாழ்வில் எதிர்மறையான விளைவுகளைக் கொண்டு வருகிறது.**

பாலியல் பாவத்தில் ஈடுபட்ட ஒருவனுடைய மீதமுள்ள வாழ்க்கை முழுவதும் அப்பவாத்தினால் ஏற்பட்ட வேதனைகளும் விளைகளும் நிலைத்து விடுகிறது. அநேகர் ஒரே நேரத்தில் எதிர்பாராத விதமாக பாவத்தில் விழுகின்றனர். இதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது ஒரு சரியான எடுத்தக்காட்டு ஆவான். ஒரு நாள் அவர் தன்னுடைய அரண்மனையில் உப்பரிக்கையில் நடந்து கொண்டிருந்த போது, ஒரு அழகான ஸ்திரி குளிப்பதை பார்த்தான். அவள் திருமணம் ஆனவளா? அல்லது ஆகாதவளா? என்கிற அக்கறை சிறிதளவும் இன்றி அவளை தனக்கென்று எடுத்துக் கொண்டு அவளோடு படுத்ததின் நிமித்தமாக அவள் கர்ப்பவதி ஆனாள். தாவீது சாதரணமாக தன்னுடைய ஆண்மையின் துாண்டுதலுக்குத்தான் கீழ்ப்படிந்தான், என்று சிலர் கூறுவதுண்டு. ஆனால் அவன் அங்கும் இங்கும் அலைவதற்கும், தனக்கு பிரியமானதையெல்லாம் கற்பனை செய்வதற்கும் தன் சிந்தைக்கு சுதந்திரம் கொடுதுதப்படியினால் தான் பாவத்தில் விழுந்தான் என்று நான் எண்ணுகிறேன். அவனுடைய சோம்பேறி தனமும் கூட இப்பாவத்தை செய்தவறக உறுதுணையாக இருந்தது. தன் ஜனங்களோடு யுத்தத்திற்கு செல்வதற்கு பதிலாக அவன் தன்னுடைய வீட்டில் நேரத்தை வீணடித்துக் கொண்டிருந்தான். சோம்பேறித்தனம் ஒரு நல்ல செல்வாக்கை தருவதில்லை. ஏனெனில் நாம் சிந்திக்க கூடாத காரியங்களை சிந்திப்பதற்கு நம்முடைய மனதின் வாசல்களை அது திறந்து விடுகிறது. இத்தகைய எண்ணங்கள் ஒரு விசை நம் மனதில் உருவாகத் தொடங்கினால், பின்ப அவை பாவத்திற்கும், ஆவிக்குரிய மரணத்திற்கும் நம்மை கொண்டு போய்விடும். இதையே யாக்கோபு கூறும் போது, ‘‘அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தை பிறப்பிக்கும்’’ என்று போதிக்கிறார் யாக்கோபு 1:14—15.

உரியாவின் மனைவியாக பத்சேபாளுடன் தாவீது படைத்த சாதனை இன்றும் நிறைவு பெறவில்லை. அவள் கர்ப்பந்தரித்ததை தாவீது அறிந்த போது, அவளுடைய கணவனுக்கு ஆள் அனுப்பி அவனை வரவழைத்து அவளோடு படுக்க வைத்து தன்னுடைய பாவத்தை மறைப்பதற்கு எல்லா வகையிலும் முயற்சித்தார். ஆனால் உரியாவோ தன்னுடைய தேசமும் கூட்டாளிகளும் யுத்தத்தில் இருந்ததினால் தன்னுடைய வீட்டிற்கு போகவில்லை. உரியாவின் உண்மையான நடத்தை தாவீதுக்கு பிரச்சனைகளை கொண்டு வந்தது. ஆகவே படைத்தலைவன் யோவாப்புக்கு உரியாவின் மூலமாக கடிதம்

அனுப்புவது அவனுக்கு சுலபமாக கண்டது. யுத்தம் பலக்கும் போது, போர் முகத்தில் உரியாவை தனியே விட்டு கொல்லும்படி தாவீது கட்டடைளயிட்டான். தாவீது இட்ட கட்டளையின்படியே உரியா போர் முகத்தில் இறந்து போனான். பத்சேபாள் தன் கணவனுக்கா துக்கங்கொண்டாடின பிறகு, அரண்மனைக்கு கொண்டு போகப்பட்டாள். தாவீது அவளை தனக்கு மனைவியாக்கி கொண்டு அவள் அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். ஒரு வருடம் கடந்தது. தாவீது தன் பாவத்தை உணராதபடியினாலே அவன் தன் பாவங்களுக்குக்கா மனஸ்தாபப்பட்டு அறிக்கையிட வேண்டும் என்று தேவன் காத்திருந்தார். நாளடைவில் அவனுடைய பாவமே அவனை பற்றிக் கொண்டத. தாவீது தன் பாவத்தை உணரும்படியாக தேவன் நாத்தானை அனுப்பினார். தீர்க்கதரிசி அவனுக்கு முன்பாக ஒரு கதையை சித்தரித்தான். அதாவது ஏராளமான ஆடுகளை வைத்திருந்த ஐசுவரியவானுடைய வீட்டிற்கு வந்த வழிபொக்கனுக்கு தன்னுடைய ஆடுகளில் ஒன்றை படிக்க மனதில்லாமல் அருகில் வசித்த தரித்தரனுடைய வீட்டில் அவனோடும் அவன் பிள்ளைகளோடும் கூட வளர்ந்து அவன் அப்பத்தை தின்று அவன் பாத்திரத்திலே குடிதது, அவன் மடியிலே படுத்த கொண்டு அவனுக்கு ஒரு மகனைப்போல இருந்த அந்த ஆட்டுகுட்டியை கொன்றது. தாவீது இக்கதையை கேட்டபோது மிகவும் கோபம் மூண்டவாகி நாத்தானைப் பாத்த்து ‘‘இந்த காரியத்தை செய்த மனுஷன் மரணத்திற்கு பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன். அவன் இரக்கமற்றவனாயிருந்து இந்த காரியத்தை செய்தபடியினால் அந்த ஆட்டுகுட்டிக்கா நாலத்தனை திரும்ப செலுத்த வேண்டும் என்றார்’’. ( 2 சாமுவேல் 12:5—6)

தாவீது நியாயதீர்ப்பை அறிவித்த பின்பு தீர்க்கதரிசி அவனைப் பார்த்து ‘‘நீயே அந்த மனுஷன்.’’ என்றார். நாத்தான் ஒரு தீர்க்கதரிசன வார்த்தையின் மூலம் தேவன் எப்படியாக தாவீதை அழைத்து உயர்த்தி ராஜாவாக அபிஜேகம் பண்ணினார் என்பதை நினைப்பூட்ட தொடங்கினார். இவை அனைத்தும் போதாதென்று இருந்தால் கர்ததர் இன்றும் அதிகமாக அவனுக்கு கொடுத்திருப்பார். தேவன் பாவத்திற்கான பலனை தாவீதுக்கு காண்பித்தார். அவன் ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை தனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டபடியால், பட்டயம் என்றைக்கும் அவன் வீட்டை விட்டு விலகாதிருக்கும், அவன் கண்கள் பார்க்க அவன் ஸ்தீரிகளை எடுத்து, அவனுக்கு அடுத்தவனுக்கு கொடுப்பார், அவன் ஒளிப்பீடத்தில் செய்ததை தேவனோ எல்லாருக்கும் முன்பாகவும் செய்வித்தார். கடைசியாக, பத்சேபாளிடத்தில் அவனுக்கு பிறந்த மகனும் மரித்துப் போனான் (2 சாமு 12:14).

தாவீது தன்னுடைய நியாயதீர்ப்பை குறித்து சற்று சிந்தித்தால் தானே மரித்து போயிருப்பார். ஆனால் தேவனோ இரக்கமுள்ளவராய் அவனுக்கு மற்றொரு வாய்ப்பை கொடுத்தர். என்றாலும் தான் வாழ்ந்த மீதமுள்ள நாட்களில் பாவத்தின் பலனால் உண்டான வலயொடு தன் வாழ்க்கையை கழித்தான். தாவீது சந்தித்த முதல் காரியம் தன்னுடைய மகன் சாக கிடப்பதை கண்டது. இது அவனுடைய இருதயத்தில் மிகுந்த வலியையும் வேதனையையும் ஏற்படுத்தியது. புசிப்பதையும், குளிப்பதையும், வஸ்திரங்களை மாற்றுவதையும் நிறுத்திவிட்டு, தரையில் முகங்குப்புற விழுந்து தன் தேவனுக்கு மமுன்பாக தன்னை தாழ்த்தினான். ஆனாலும் காலம் சென்றபடியால் அவனுடைய மகன் இறந்து போனான். சில நாட்களுக்கு பின்பு தேவன்மற்றொரு மகனை தந்து அவனை ஆறுதல் படுத்தினார். அவனே ராஜாவாகிய சாலொமோன் பிற்பாடு தாவீது தன் கடந்தகால செய்க்கைளால் வந்த விளைவுகளினால் தன் சந்திதியார் வாழ்வதை கண்டு வருந்தினான். தாவீது தன் சொந்த குடும்பத்தில் பாலியல் பாவத்தையும வன்முறையையும் அனுபவித்து நேர்ந்தது. அவனுடைய குமாரர்களில் ஒருவனான அம்னோன் தன் சொந்த சகோதரியாகிய தாமாரை கற்பழித்தான். பின்பு தன்னுடைய குமாரர்களில் மற்றொருவனாகிய அப்சலோம் தன் சகோதரி இழவாக நடத்தப்பட்டதின் நிமித்தம் பழிவாங்கும்படி அம்னோனை கொலை செய்தான். பின்னும் அப்சலோம் முரட்டாட்டம்

பண்ணி தாவீதின் ராஜ்யப்பாரத்தை பிடுங்க முயற்சித்தான். இதுவும் தாவீதுக்கு இருந்த மன வேதனையை கொடுத்தது. “தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுது கொண்டு ஒலிவ மலையின் மேல் ஏறிப் போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுது கொண்டு ஏறினார்கள்.” ( 2 சாமு 15:30).

தாவீது ஓடி போன போது, அப்சலோம் சகல இஸ்ரவேல் கண்களுக்கு முன்பாக தகப்பனுடைய பத்து மறுமனையாட்டிகளிடம் பிரவேசித்தான் (2 சாமு 16:22). இக்காரியங்கள் தாவீது வாழ்க்கையில் பாவத்தின் விளைவுகளினால் தான் என்பதை வலியுறுத்தும் ஒரு வேதனை மிக்க உண்மை ஆகும். “காரணம் இல்லாமல் இட்ட சாபம் தங்காது” என்று நீதிமொழிகள் 26:2 கூறுகிறது. பாவம் என்பது சில நிமிடங்களின் பெலவீனம் அல்ல. அது தனக்குள் விழுகிற அனைவரையும் அழிவுக்கு நேராக வழிநடத்தும் கண்ணி வைக்கும் வலை ஆகும்.

இன்று அநேக இளைஞர்கள் பாலியல் பாவத்தினால் ஏற்படுகின்ற விளைவுகளை அனுபவிக்கின்றனர். தோலையும், நரம்புகளையும பாதிக்கும் ஹெர்பஸ், பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் போன்ற நோய்களினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்நோய்களில் சில குணப்படுத்த முடியாததாகவும், பிள்ளைகளிடத்தில் பரவுவதாகவும் காணப்படுகின்றது. பிள்ளைகள் வியாதியோடு பிறப்பது அதாவது நேரடியாக பெற்றோருடைய கடந்த பாவத்தின் பலனாக வந்த வியாதியொடு பிறப்பதை பார்ப்பத மிக கொடுமையானது.

திருமணத்திற்கு முன்பு பாலுறவு வைத்துக் கொள்வதினால் சிலர் சுயநலமாக பயன்படுத்துவதற்கும், உணர்ச்சிபூர்வமாகவும் மற்றும் சரீரபிரகாரமாகவும் பாதிக்கப்படும்படியாகவும் விழுந்து விடுகின்றனர். இன்றும் சிலர் விபச்சார உலகத்திற்குள் நுழைந்து தங்களிடத்தில் வருபவரோடு ஒரே மாம்சாகி அவர்களிடத்தில் இருருக்கிறதான சாபத்தை இவர்களும் பெற்றுக் கொண்டு தவறாக பயன்படுத்தப்பட்டதினால் காயம், வலி, கசப்பு, வன்மம் மற்றும் குற்ற மனசாட்சி இத்தகைய உணர்வுகளை பெறுகின்றனர். இவை அனைத்தும் ஒரு குழப்பமான வாழ்க்கை முறையின் விளைவுகளாகும்.

**ஐஐஐ. பாவமான பாலுறவுகளை தவிர்ப்பது எப்படி?**

பாவத்தினால் ஏற்படும் விளைவுகளை குறித்து, விழிப்புணாவோடு இருப்பதை காட்டிலும், வேறு எதுவும் பாவத்தில் தவிர்பதற்கு உதவி செய்ய முடியாது. ஆனால் அதை காட்டிலும் மேலான ஒன்ற கர்த்தருக்கு பயப்படுகிற பயம், பரிசுத்தமான தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு நம்மை தூண்டகிற பரிசுத்தம் பக்கதி மற்றும் தேவனுக்குரிய கனம் இவைகள் பாவத்தை தவிர்க்க உதவும். ˙ எனினும் பாலியல் சம்பந்தமான சோதனைகளை எதிர் கொள்ளும்போது வெற்றியுடன் நிற்பதற்கு சில அடிப்படை சட்டங்களை பின்பற்ற வேண்டும்.

**யு. தேவனோடு உள்ள உறவை வலுப்படுத்துங்கள்**

ஒரே நாள் விழித்து உங்களின் மாம்ச சுபாவம் கட்டுப்பாடற்ற நிலையில் இருப்பதை கண்டறிவதினால் வீழ்ச்சி ஏற்படுவதில்லை. முதலில் சோதனைக்கும் பின்னர் பாவத்திற்கும் வழி திறக்கிற சிறு சிறு காரியங்களுக்கு இணங்குவதில் தொடங்குகிறது. பல்வேறுபட்ட மக்களுக்கு பல்வேறு விதங்களில் இது ஏற்படக்கூடும். ஆண்களுக்கு அவர்களுடைய பார்வை எளிதில் பாதிக்கப்படக்கூடியது. ”விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு சொல்கிறேன். ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கின்ற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று.”(மத் 5:27.28). நீங்கள் இச்சையோடு பார்க்கும் போது பாவம் ஆரம்பிக்கிறது. முதல் முறை பார்ப்பதில் எவ்வித தவறும் இல்லை; இரண்டாம் முறை பார்ப்பதினாலேயெ இச்சை உண்டாகிறது! என்று கூறப்படுவதுண்டு

பெண்களே தாங்கள் கேட்பதைக் கொண்டு மிகவும் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள். தனக்கு சரியானவர்கள் அல்ல என்று தோன்றும் மக்களிடம் இருந்து (ஏற்கனவே திருமணம் ஆனவர்கள், திருமணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் அல்லது தேவ பக்தி அற்ற வாழ்க்கை நடத்துபவர்கள் புகழ்ச்சிகளையும் பெண் அனுமதித்தால் அது அவருக்க பிரச்சினைகளை கொண்டு வரும். மேலும் தன் வாழ்க்கையில் எதிர்மறையான விளைவுகளை உண்டு பண்ணக்கூடிய ஒரு எரிச்சலூட்டும் உறவில் எளிதில் சிக்கி கொள்ள ஏதுவாகிறது.

ஒரு வீழ்ச்சியை தவிர்ப்பதற்கு மிக சிறந்த வழி தேவனோடுள்ள என் உறவை பாதுகாத்துக் கொள்வதினாலும் என் ஜெப வாழ்க்கை வலுப்படுத்துவதினாலும், தேவனுடைய வார்த்தையை சார்ந்து அதில் நிலைத்திருப்பதினால் மட்டுமேமே முடியும். நம்முடைய கடந்த கால பாவங்களையும் பெலவீனங்களையும் உணர்ந்தறிவதே சரியான தொடக்கம். தேவனுடைய மன்னிப்பை பெறுவதற்கு தாவீதின் முன் மாதிரியை பின்பற்ற வேண்டும்."நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கை இடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். சங்கீதம் 32:5 தேவனுடைய மன்னிப்பையும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் சுத்திகரிப்பையும் அனுபவிக்கும்வரை நம்முடைய ஒவ்வொரு பாவத்தையும், தேவனிடம் அறிக்கை பண்ண வேண்டியது அவசியம். பாவத்தினால் வரும் சாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும். நீங்கள் ஒரு சொதனையின் வழியாக கடந்து செல்லும்போதும் இதையே பின்பற்ற வேண்டு. தேவனை தேடும்போது அவர் உங்களுக்கு வழியை ஏற்படுத்துவார், "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்: உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையை தாங்கத் தக்கதாக சோதனையோடுகூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்"(1கொரி.10:13)

ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதற்கும் தேவனுடைய வார்த்தையை தியானிப்பதற்கு நேரம் செலவழக்க வேண்டும் என்று தீர்மானியுங்கள். ஒரு நாளேறும் தேவனோடு பேசாமலும் அவருடைய ஆலோசனைக்கு செவிகொடாமலும் போகும்படி அனுமதிக்க வேண்டாம். ஆனால் சில சூழ்நிலைகளில் தவறும்போது தேவனுடைய மன்னிப்பை வேண்டி பாவத்தை அறிக்கையிட்டு முன்னேறி செல்லுங்கள். இது பாவத்தில் விழுவதிலிருந்து உங்கள் வாழ்க்கையை பாதுகாப்பதோடு சகல காரியங்களையும் மேற்கொள்வதற்கு வேண்டிய ஞானமுள்ள பெலத்தை அளிக்கும்.

## ட சோதனை எதிர்கொள்ள ஆயத்தப்படுங்கள்:

நீங்கள் எதிர்பாராத நேரத்திலும், நினைத்து பாராத விதத்திலுமே சோதனைகள் எழும்பும். எனவே ஆச்சரியத்தினால் பிடிபடாதபடிக்கு முன்னெச்சரிக்கையாக சில காரியங்களைச் செய்ய வேண்டியது ஞானமானது. தங்களுடைய காதலுக்கும், பாலியல் விளையாட்டு களுக்கும் அல்லது பாலுறவுக்கும் கூட நம்மை அடிபணிய வைக்க விரும்புவோர் சில பாலியல் உணர்ச்சிகளை தூண்டும் மறைமுகமான சொற்களையும், குறிப்புகளையும் அடிக்கடி உபயோகிப்பார்கள்.

"நீ என்னை உண்மையாக விரும்பினால் என்னோடு படுத்து உறங்கு!, "நீ என்னோடு வராவிட்டால் வேறு யாரேனும் வந்துவிடுவார்கள்"!, " நீ உண்மையாக ஒரு ஆணாகயிருந்தால் அதை என்கு நிரூபித்து காட்டு!" " இது எல்லாரும் செய்கிற காரியம்தான்!". அல்லது "நீ என்னை மீண்டும் பார்க்க விரும்பினால் இன்னும் நெருக்கமாக என்னிடம் வரவேண்டும்!" போன்ற சொற்றொடர்கள் அனைத்தும் எவ்வித ஒப்புதலுமின்றி பாலுறவுக்கு வற்புறுத்துவதற்கு பயன்படுத்தப்படுபவை ஆகும். நீங்கள்

ஞானமாக செயல்பட்டு இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எதிர்ப்பதற்கு ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளாக பிரகாசிப்பதற்கு ஏற்ற வேளை இதுவே. ஆகவே பாலியல் பாவம் இன்றி மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை இவ்வுலகுக்கு காண்பித்து ஒரு வித்தியாசத்தை உண்டாக்குவோமாக. நம்முடைய கணவன் அல்லது மனைவி, வாழ்நாள் முழவதும் நியமிக்கப்பட்ட நபருக்காக நம்முடைய சரீரங்களை தற்காத்து மகிழ்ச்சியுடன் வாழமுடியும். தேவனை பிரியப்படுத்தகிற காரியங்களையும், தேவனுடைய அன்பையும் கனத்தையும் பிரதிபலிக்கிற காரியங்களையும் வெளியிடும் குடும்பங்களை உருவாக்குவோமாக,

''நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது'' ரோமர் 6:14.

## வேதாகமத்தைக் குறித்து மிக சுருக்கமான ஒரு கண்ணோட்டம்

பகுதி – 1 பழைய ஏற்பாட்டு புத்தகங்கள்

பாடம்— 1 முகவுரை

வேதாகமம் என்பது தேவன் மனிதர்களுக்கு தம்மையும் தம்முடைய சித்தத்தையும் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்திய எழுதப்பட்ட வெளிப்பாடு ஆகும். இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு என்பதே இதின் மையக்கருத்து வேதாகமம் ஏறக்குறைய 1600 ஆண்டகளில் 40 ஆசிரியர்களால் எழுதப்பட்டு 66 புத்தகங்கள் அடங்கிய ஒரு நூல் ஆகும். பழைய ஏற்பாடு பெரும்பாலும் எபிரெய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியலும் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்தாசிரியர்கள் ராஜாக்களும், பிரபுக்களும், பண்டிதர்களும் கவிஞர்களும் தத்துவ ஞானிகளும், தீர்க்கதரிசகளும், ஆட்சி நிபுணர்களுமாய் இருந்தனர். சில் உயர் கல்வி கற்றவர்களாகவும், வேறுசிலர் படிப்பறிவு அற்ற மீனவர்களாகவும் இருந்தனர். நமது பள்ளியின் இந்த முதல் மாதத்தில் பழைய ஏற்பாட்டை கற்போமாக. இப்பகுதி கீழ்கண்ட பாடங்கள் அடங்கிய 39 புத்தகங்களால் ஆனது.

5 – **நியாயப்பிரமாணம்**

12— சரித்திரம்

5 – கவிதை

17 –தீர்க்கதரிசனம் (5 பெரிய தீர்க்கதரிசனம், 12 சிறிய தீர்க்கதரிசனம்

மனித வர்க்கத்திற்கு கிடைக்க்கூடிய ஒரு மாபெரும் ஆவனம் வேதாகமம் ஆகும். அது வாசிக்கப்படவும், கற்கப்படவும், விசுவாசிக் கப்படவும், கீழ்படியப்படவும் வேண்து அவசியம்.

### பாடம்: 2 ஆதியாகமம்

வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்கள் மோசேயினால் எழுதப்பட்டு ஐந்தாகமங்கள் என்று அழைக்கப்படுகிறது. ''ஆதியாகமம்'' என்றால் தொடக்கம் அல்லது பிறப்பு என்று பொருள்படும். ஆதியாகமம் தொடகங்களின் புத்தகம் ஆகும் — உலகத்தின் தொடக்கம் (1:1—25), மனிதவர்க்கத்தின் ஆரம்பம் (1:26,27), உலகத்தில் பாவத்தின் தொடக்கம் (3:1—7) மீட்புக்கான வாக்குத்தத்தின் தொடக்கம் (3:8—24)ஈ குடும்ப வாழ்க்கையின் தொடக்கம் (4:1—15) மனிதனால் உண்டாக்கப்பட்ட நாகரீகத்தின் தொடக்கம்: (4:16—9:29) உலக தேசங்களின் தொடக்கம் (10,11) மற்றும் எபிரேயருடைய வம்சங்களின் தொடக்கம் (12—50) ஆதியாகமம் என்பது மனிதனின் தோல்வியை குறித்த சரித்திரம். அது ''தேவன்''—ல் ஆரம்பித்து ''சவப்பெட்டியில் நிறைவடைகிறது. இரண்டு பெரிய கருத்தக்களால் இப்புத்தகத்தை பிரிக்கக்கூடிய சுருக்கமான குறிப்பி இங்கே கொடக்கப்பட்டுள்ளது.

**I. பூமியின் மேல் பாவத்தின் நுழைவு, அதிகாரங்கள் 1—11**

1. படைப்பு — அதிகாரங்கள் 1,2
2. வீழ்ச்சி — அதிகாரங்கள் 3,4
3. ஜலப்பிரளயம்—அதிகாரங்கள் 5—9
4. யாபேல் கோபுரமும் மொழிகளின் குழப்பமும் அதிகாரங்கள் 10,11

**ஐஐ. மீட்பரின் வருகைக்கான ஆயத்தம் அதி. 12—50**

1. விசுவாசத்தின் மனிதனாகிய ஆபிகராம் அதி. 12—23
2. நேசக்குமாரனாகிய ஈசாக்கு அதி. 24—26
3. பாடுகள் அடைந்தும் தேவனுக்கு முன்பாக உண்மையாக நிலைத்திருந்த யாக்கோபு அதிகாரம் 37—50

**<u>பாடம் 3: யாத்திராகமம்:</u>**

**யாத்திராகமம் என்றால் "வெளியேறுதல்"**

எகிப்திற்கு சென்றவர்கள் 70 பேர் மட்டுமே. அனால் அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறும்போது 30 லட்சம் மக்கள் கொண்ட ஒரு தேசமாக வளர்ந்திருந்தனர். ஆதியாகமம் மனிதனுடைய தோல்வியை குறித்து பேசுகிறது. இருளிலும், துக்கத்திலும் தொடங்கி மகிமையில் நிறைவடைகிறது. யாத்திராகமம் 12 பஸ்காவை குறித்த ஒரு உணர்ச்சி ததும்பும் கதையை வர்ணிக்கிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தத்தினால் உண்டான விசுவாசத்தின்மூலம் கிடைக்கும் தனிப்பட்ட இரட்சிப்பை குறித்த ஒரு தெளிவான சித்தரிப்பெ பஸ்காவாகும். யாத்திராகமத்தை குறித்த சுருக்கமான குறிப்பு பின்வருமாறு:

1. தேவன் மோசேயை ஒரு இரட்சகனாக ஆயத்தப்படுத்தகிறார்
2. இரத்தத்தினாலும் வல்லமையினாலும் விடுதலை அதி 12—14
3. சீனாய் மலைநோக்கிபயணம், மக்களின் ஆவிக்குரிய கல்வி அதிகாரம் 15—18
4. நம்முடைய அத்துமீறிய பாவத்தின் தன்மையை காண்பிக்கும் தேவனுடைய கண்ணாடியாகிய நியாயப்பிரமாணம் கொடுக்கப் படுதல்: ஆதி. 19—25.
5. தேவன் தம்முடைய ஜனங்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் என்பதற்கு சாட்சியான ஆசாரிப்பு கூடாரத்தின் அச்சுபடிவமும் கட்டமைப்பும் அதி. 25—40

**பாடம் 4: லேவியராகமம்:எண்ணாகமம் மற்றும் உபாகமம்:**

இஸ்ரவேல் புத்திரரின் ஆவிக்குரிய பயிற்சிக்கு உதவும் தேவனுடைய வரைபட புத்தகமே லேவியராகமம் ஆகும். ஒவ்வொரு படமும் இயேசு கிறிஸ்துவின் கிரியையை குறிக்கிறது. இது பாவநிவர்த்தியின் புத்தகம் என்றழைக்கப்படுகிறது. "சரியானதை பெறு" என்று கூறுவது பலிகள். இங்கு 5 விதமான பலிகள் கூறப்பட்டுள்ளன. சர்வாங்க தகன பலி, போஜனபலி, சமாதான பலி. பாவ நிவாரண பலி மற்றும் குற்ற நிவாரண பலி, "சரியானவைகளை பின்பற்று" என்று கூறுவது பண்டிகைகள். இங்கு 8 விதமான பண்டிகைகள் குறிக்கப்பட்டுள்ளன. ஓய்வுநாள் பண்டிகை, பஸ்கா பண்டிகை, பெந்தோகொஸ்தே பண்டிகை எக்காளபண்டிகை, பாவ நிவாரண பண்டிகை. கூடார பண்டிகை, பூபிலி வருஷம் ஓய்வுநாள் வருஷம்.

பலிகள் இரத்தத்தினால் உண்டாகிற இரட்சிப்பை குறித்து பேசுகிறது. பண்டிகைகள் நிறந்திருக்கிற உணவை குறித்து பேசுகிறது.

**எண்ணாகமம்:**

சினாய் மலை வழியாக வளாந்திரத்தில் அலைந்து திரந்து வாக்குத்தம் பண்ணப்பட்ட தேசமான கனானின் எல்லையை அடைந்ததை குறித்த எண்ணாகமம் கூறுகிறது.

இதை முறுமுறுப்புகளின் புத்தகம் என்றும் அழைக்கலாம். இந்தப் புத்தகத்தின் அடிப்படை கருத்து ஒழுக்கம். எண்ணாகமம் விசுவாசி களின் நடக்கையை எடுத்துரைக்கிறது.

அதி 1—10 – தெய்வீக சட்டங்களை கொடுக்கிறது.

அதி. 11—20 – தேசத்தின் தோல்வியை குறித்த சம்பவத்தை கூறுகிறது.

அதி 21—36 – வனாந்தரத்திலும் கூட இஸ்ரவேலர் யேகோவாவின் தயவுக்கு திரும்பி பெற்ற இறுதி வெற்றியை கூறுகிறது.

இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கியமான நபர்கள்:
மோசே, ஆரோன், மிரியாம், யோசுவா, மற்றும் காலேப்.

**உபாகமம்:**

ஒரு ஞாபக புஸ்தகம், இஸ்ரவெல் புத்திரர்களிடமிரந்து இறுதியாக விடைபெற்ற மோசேயின் வார்த்தைகள் மற்றும் பாடல்களின்

**தொகுப்பு.**

இப்புத்தகம் கீழ்படிதலின் ஆசீர்வாதங்களையும் கீழ்படியாமையின் சாபங்களையும் காண்பிக்கிறது. மோசேக்காக புலம்பிய 30 நாட்கள் உட்பட 2 மாதங்கள் மட்டுமே இதனுள் அடங்குகிறது. இயேசு அடிக்கடி உபாகம புஸ்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டினார். அதின் எழுத்துக்களில் இருந்து பிசாசுக்கு பதில் கொடுத்தார். உபாகம புஸ்தகம் இப்பூலோகத்தில் பரலோகத்தினை ருசுபார்க்கும் அனுபவத்தை காட்டுகிறது.

திரனாய்வு:ஆதியாகமத்தில் மனிதன் பாழாக்கப்பட்டதை பார்க்கிறோம்
யாத்திராகமத்தில் மனிதன் மீட்கப்பட்டான்:
லேவியராகமத்தில் மனிதன் தொழுதுகொள்கிறான்.
எண்ணாகமத்தில் மனிதன் சேவிக்கிறான்
உபாகமத்தில் மனிதன் கீழ்படிய கற்றுக்கொள்கிறான்.

<u>பாடம்: 5 யோசுவா, நியாயாதிபதிகள் மற்றும் ரூத்</u>

யோசுவாவின் புஸ்தகம் சரித்திர புஸ்தகங்களை திறக்கிறது. இப்புத்தகம் முழுவதும் ஆவிக்குரிய சத்தியம், உற்சாகம் மற்றும் ஞானத்தினால் நிறைந்து காணப்படுகிறது. மோசே மரித்து போனான்.

ஆனாலும் அவர்களுடைய அணிவகுப்பு தொடர்ந்து செல்லவேண்டி இருந்தது. மோசே தொடங்கினதை யோசுவா நிறைவு செய்தான். பெரும் தலைவர்களை குறித்த இப்புத்தகம் இரண்டு பிரிவுகளாக காணப்படுகிறது.

1.வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை ஜெபித்தல் அதி 1—12
2.வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை ஆக்கிரமித்தல் அதி 13—24

நியாதிபதிகள் புஸ்தகம் இஸ்ரவேல் மக்களின் இருண்ட காலத்தை குறிப்பிடுகிறது. ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகினார்கள் (நியா 2:13). தேவனும் ஜனங்களைவிட்டு விலகினார்(நியா 2:23). தங்களுடைய பெரும் தலைவனாகிய யோசுவாவினுடைய மரணத்திற்கு பிறகு இஸ்ரவேலருடைய சிங்காசனத்தில் ஏறின சவுல் வரையிலான காலத்தை இப்புத்தகம் உள்ளடக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் முதல் 350 ஆண்டுகள் அவர்களுக்கு ராஜா இல்லாதிருந்தான் என்ற வாக்கியம் இந்த புத்தகம் முழுவதும் காணப்படுகிறது:”அவனவன் தன் தன் பார்வைக்கு சரிபோனபடி செய்து வந்தான்.” இப்புத்தகம் மனிதனின் தொடர்ச்சியான தோல்வியையும் தேவனுடைய நிலையான இரக்கத்தையும் காண்பிக்கிறது. சுருக்கமாக கூற வேண்டுமானால் 7 கைவிடப்படுதல், அந்நிய தேசங்களில் 7 முறை அடிமைத்தனம் மற்றும் 7 முறை விடுவிக்கப்படுதல்! ரூத் புஸ்தகம் நம்மை மீட்கும் சுதந்தரவாளியான இயேசு கிறிஸ்துவை குறித்து பேசுகிறது. நியாயதிபதிகள் என்ற இருண்ட பின்னணியில் ரூத் புஸ்தகம் ஒரு

பிரகாசமான படமாக இருக்கிறது. மேலும் கிறிஸ்து மற்றும் சபையை குறித்த ஒரு அழகான படமாகவும் காணப்படுகிறது. இதில் கிதியோன் அல்லது யெப்தாவின் ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூத் என்பவள் கிறிஸ்துவின் மூதாதையர் ஆகிய தாவிதினுடைய பாட்டியின் தாயார் ஆவாள். இப்புத்தகம் மேசியா பிறக்கவிருந்த தேசத்தின் தொடக்கத்தையும், மேசியா குடும்பத்தினாரின் தொடக்கத்தையும் கூறுகிறது. அந்நிய ஜாதியாகிய லோத்தின் வம்சத்தை சேர்ந்த மோவாபிய ஸ்தீரி ரூத் ஆவாள். கிறிஸ்துவின் குடுமபத்திற்குள் புறஜாதிகளை இணைக்கும் தேவனுடைய கிருபையை எத்தனை அழகாக சித்தரிக்கின்றது.

**பாடம்—6—முதலாம் மற்றும் இரண்டாம் சாமுவேல்**

1 சாமுவேல் என்பது இராஜக்களைக் குறித்த 6 புத்தங்களில் முதலாவது புத்தகம். அவை சாமுவேலின் இரண்டு புத்தகங்கள் இராஜக்கின் இரண்டு புத்தகங்கள் மற்றும் நாளாகமத்தின் இரண்டு புத்தகங்களாகும். சாமவெலின் பிறப்பு முதல் சவுலின்பிரச்சனை நிறைந்த காலங்களிலிருந்து தாவீதின் ஆட்சி துவக்கம் வரையிலான 115 ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளது. மூன்று பிரதான நபர்களின் பெயர்களைக் கொண்டு இப்புத்தகத்தை பிரிக்கலாம்.

1. தேவனுடைய தீர்க்கத்தரிசியாகிய சாமுவேல் அதி 1—7
2. தேவனுக்கு கீழ்ப்படியாத ஒரு தோல்வியாக காணப்பட்ட இராஜவாகிய சவுல், அதி 8—15
3. தேவனுடைய மனிதனாகிய தாவீது அதி 16—31.

2 சாமுவேல் —1 சாமுவேல் மனுஷ இராஜாவாகிய சவுலின் தோல்வியை பதிவு செய்துள்ளது. இரண்டாம் சாமுவேல் தேவனடைய இராஜவாகிய தாவீதின் சிங்காசனத்தையும், பிற்காலத்தில் மேசியா பிறப்பதற்கு உகந்த ‘‘தாவீதின் குடும்பம்’’ நிலைநாட்டப்படுவதும் விவரிக்கப்பட்டுள்ளது. தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதன்— பூரணமற்றவன. ஆனாலும் அவன் தவறும் போது மனந்திரும்பி கிட்டிச் சேர்வான். அவன் அளவு கடந்த திறமைவுள்ள—சிறு மேய்ப்பன், தேறின இசைக்கலைஞன், சிறந்த போர் வீரன், உண்மையான நண்பன், வெளியேற்றப்பட்ட தலைவன், மன்னன், பெரும் தளபதி, கவிஞன், பாவியான மனிதன் மற்றும் நொறுங்குண்ட இருதயமுடைய வயோதிபன். ஆனால் எல்லா காலத்திலும் தேவனை நேசிக்கிறவன். இப்புத்தகத்தை இரு பகுதிகளாக பிரிக்கலாம்:

1. தாவீதின் வெற்றிகள் அதி 1—10
2. தாவீதின் போராட்டங்கள் அதி 11—24

**பாடம்:7 முதலாம் மற்றும் இரண்டாம் ராஜாக்கள்:**

இவை சாமுவேல் புஸ்தகத்தின் தொடர்ச்சியாகும். இதில் வளர்ச்சி ,அழிவு மற்றும் ராஜ்யத்தின் பிரிவு ஆகியவை சம்பவித்த 400 வருட காலங்கள் அடங்கும். தெற்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் சாம்ராஜ்யம் 19 ராஜாக்களையும் கொண்டது. யூதா மற்றும் இஸ்ரவேல் ஆகிய இரு ராஜ்யங்களும் சிறையிருப்பில் கொண்டு போகப்பட்டது. 1 ராஜக்கள் புஸ்தகத்தி கிருபை மற்றும் காருண்யத்தின் தீர்க்கதரிசியாக எலிசாவும் காணப்பட்டனர்.

**இவ்விரண்டு புத்தகத்தின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு**

1.தாவீதின் மரணம் 1 ராஜா 1,2
2.சாலமோனின் ராஜ்யபாரத்தின் மகிமை 1 ராஜா 3—11
3.ராஜ்யம் பகுக்கப்டுதல், 1 இராஜா 12—2 இராஜா 16.
4.அசீரியாவின் கீழ் இஸ்ரவேலின் சிறையிருப்பு 2 இராஜ 17
5.பாபிலோன் இராஜ்யத்தின் கீழ் யூதாவின் சரிவும் சிறையிருப்பும், 2 இராஜா 18—25.

**பாடம் 8— முதலாம் மற்றும் இரண்டாம் நாளாகமம்**

இராஜக்கள் புஸ்தகத்திலுள்ள அதே சம்பவங்கள் வித்தியாசமான விதத்தில் நாளாகம புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளன. இராஜாக்கள் புஸ்தகத்தில் சிங்காசனத்திலிருந்து தேசத்தின் சரித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. இராஜக்கள் புஸ்தகத்தல் மையப்பகுதி இடம், நாளாகம புஸ்தகத்தின் அரசியலின் வரலாறும், நாளாகமத்தில் மத சம்பந்தமான காரியங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ராஜாக்கள் புஸ்தகம் மனிதனுடைய கண்ணோட்டத்தையும், நாளாகமம் தேவனுடையதையும் வழங்குகிறது. 2 நாளாகமம் 5 பெரிய எழுப்புதல்களை குறிப்பிடுகிறது; ஆசாவின் கீழ், அதி 15; யோசபாத்தின் கீழ் அதி 20; யோவாசின் கீழ் அதி 23,23; எசேக்கயாவின் கீழ் அதி 29—31; யோசியாவின் கீழ் அதி 35.

**1 நாளாகமத்தின் சுருக்கமான குறிப்பு:**

1. வம்ச அட்டவணைகள் அதி 1—9
2. சவுலின் ராஜ்யபாரம் அதி 10
3. தாவீதின் ராஜ்யபாரம் அதி 11—29

**2.நாளாகமத்தின் சுருக்கமான குறிப்பு**

1. சாலொமோனின் ராஜ்யபாரம் அதி 1—9
2. ராஜ்யபாரம் பறிக்கப்பதலும் யூதாவின் வரலாறும் அதி 10—36

**பாடம் : 9 எஸ்ரா, நெகேமியா மற்றும் எஸ்தர்**

எஸ்ரா மற்றும் நெகேமியா புஸ்தகங்கள் பாபிலோன் சிறையிருப்புக்கு பின்பு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள் திரும்பி வரும் சம்வத்தை கூறுகிறது. எஸ்ரா ஒரு ஆசாரியன். நெகேமியா ஒரு சாதாரண மனிதன். இஸ்ரவேல் புத்திரரின் முதல் பயணம் எகிப்தில் இருந்து மோசேயின் மூலம் பாபிலோனில் இருந்து கொண்டு வரப்பட்டது. சில யூதர்கள் ஏற்கனவே திரும்பி இருந்தனர். எஸ்ரா எருசலேமுக்கு வந்த போது தான் எதிர்பார்த்ததை விட காரியங்கள் மோசமாக இருந்ததை கண்டான். யூதர்கள் தேசத்து ஜனங்களோடு கலப்பு திருமணம் செய்து புறஜாதிகள் கற்பித்த அனைத்தையும் செய்து கொண்டிருந்தனர் ( அதி 9:1—4). எஸ்ரா மிகுந்த துக்கமடைந்தார் (9—5—15); பின்பு ஜனங்கள் தங்களின் பாவம் மகா பெரியதாய் இருந்ததினால் உணர்வடைந்து அவனிடம் கூடி வந்தனர் (10:1—44). உடனடியாக எஸ்ரா அவர்களை தேவனோடு ஒரு பரிசுத்த உடன்படிக்கை பண்ணும்படி வழி நடத்தினான். நெகேமியா—எஸ்ராவுக்கு பிறகு 13 வருடங்கள் கழித்து நெகேமியா எருசலேமுக்கு வந்தான். எருசலேமின் அலங்கத்தை கட்டுவதற்கு பெர்சிய ராஜாவின் அதிகாரத்தோடு வந்திருந்தான். அவன் உண்மையான ஒரு பொறியாளன். அதிக எதிர்பார்ப்புகளின் மத்தியிலும் வேலை 52 நாட்களுக்குள் செய்து முடிக்கப்பட்டது.

**இந்த இரு புத்தகங்களின் சுருக்கமான குறிப்பு:**

1. செருபாபேலின் கீழ் பாபிலோனில் இருந்து திரும்பி
வருதல் —எஸ்ரா 1—7
2. எஸ்ராவின் தலைமையில் பாபிலோனில் இருந்து
திரும்பிவருதல் எஸ்ரா7 10
3. அலங்கங்கள் மீண்டும் கட்டப்படுதல் — நெகேமியா 1—7
4.எழுப்புதல் மற்றும் மறுமலர்ச்சி – நெகேமியா 8—13

**எஸ்தர்:**

இந்த அழகான கதையில் தேவனுடைய நாமம் குறிப்பிட்ட படவே இல்லை. ஆனால் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வார்த்தையின் பின் மறைந்திருக்கும்தேவனைக் குறித்தே எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் தேவனுடைய பாதுகாக்கும் கிருபையை

கற்பிக்கிறது. தேவன் இவ்வுலகத்தை கட்டுப்படுத்தும் சக்கரத்தில் இருக்கிறார். இப்புத்தகத்தின் அனைத்து சம்பவங்களும் 3 விருந்து மையமாக கொண்டிருக்கின்றன.

1.பெர்சியாவின் இராஜாவகிய அகாஸ்வேரு இராஜாவினுடைய விருந்து, வஸ்தி நிராகரிப்பட்டு, மொர்தெகாயின் வசத்தில் இருந்த சிறு அநாதை பெண் எஸ்தர். அகாஸ்வேரு ராஜாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, பட்டத்து அரசியாகும்படி கொண்டு வரப்படுவதற்கு வழி உண்டாக்கப்பட்ட விருந்து அதி 1,2

2.எஸ்தர்களின் விருந்து யூதர்களின் எதிரியாகிய ஆமான் கண்டுபிடிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு, மொர்தெகாய் மேன்மைப்படுத்தப்பட்ட போது கொண்டாடப்பட்ட விருந்து அதி —7.

3.பூரிம் பண்டிகையின் விருந்து, பயங்கரமான ஆபத்திலிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்ட போது கொண்டாடப்பட்ட விருந்து அதி – 9.

**பாடம் 10—யோபு**

யோபுவின் புஸ்தகம் ஐந்து கவிதை ஆகமங்களின் முதல் புத்தமாகும். இருதயத்தின் அனுபவங்களை இப்புத்தகங்கள் எடுத்துரைக்கின்றன. வேதாகம புத்தகங்கள் மிகவும் பழமை வாய்ந்தது. யோபுவின் புஸ்தகம் ஆகும். இப்புத்தகம் பிரச்சனைக்களுக்கான தேவனுடைய பதிலை தருகின்றது. “தேவ ஜனங்கள் எதற்காக கஷ்டப்படுகிறார்கள்?” என்பதற்கான பதில் இப்புத்தகத்தின் விரிவுரை ஒரு பரலோக காட்சியுடன் ஆரம்பித்து, பின் செழிப்பிலிருந்து வறுமைக்குச் சென்ற யோபுவின் வீழ்ச்சியையும் கூறுகின்றது. பின்னர் யோபுவுக்கும் அவனுடைய சிநேகிதர்களுக்கும் இடையெ பெருமளவில் ஏற்பட்ட கலந்துரையாடல்களின் தொகுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

1. பரலோக காட்சியுடன் சம்பவம் ஆரம்பிக்கின்றது 1:1—12;2:1—6
2. செழிப்பிலிருந்து வறுமைக்குச் சென்ற யோபுவின் வீழ்ச்சி 1:—13—22; 2:7—10
3. யோபுவுக்கும், அவனுடைய நான்கு நண்பர்களாகிய எல்ப்பாஸ், பில்தாத், சோப்பார் மற்றும் எலிகூவுடன் ஏற்பட்ட கலந்துரையாடல் 2:11—37:24.
4. தேவன் பேசிய போது உச்சக்கட்டத்தை அடைந்தது 38—42. மனிதர்கள் தேவனை பார்க்கிறபோதெல்லாம் ஏதாகிலும் சம்பவிக்கும் என்பதை யெகோவா யோபுவுக்கு விளக்கினார். தேவ பக்தியுள்ள அனைவரும் தங்களையே பார்ப்பதற்காக பாடுபடும்படி அனுமதிக்கப்படுகின்றனர்; பின்பு தேவன் அவர்களை உயர்த்துவார். அனைத்து கஷ்டங்களுக்கும் தேவன் ஒரு ஞானமுள்ள நோக்த்தை உடையாவராயிருக்கிறார். அவர் அக்கினியிலிருந்து ஒரு சுத்த பொன்னை கொண்டு வர விரும்புகிறார்.

**பாடம்—11—சங்கீதங்களின் புஸ்தகம்**

சங்கீதம் என்பது ஒரு துதி, ஜெபம் மற்றும் ஆராதனையின் புத்தகம் ஆகும். சங்கீதங்கள் கர்த்தரை உயர்த்தி துதிக்கின்றன. மனிதனுடைய ஒவ்வொரு அனுபவமும் அவரோடு தொடர்புடையது. ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையில் மகிழ்ச்சி, துக்கம், ஜெயம் மற்றும் தோல்வியின் அனுபவங்கள் சித்தரிக்கப்படுகின்றன. சங்கீதங்களின் புஸ்தகங்கள் முழுவதும் கிறிஸ்துவால் நிறைந்திருக்கின்றன. அவை கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணத்தைக் குறித்த ஒட்டு மொத்த நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. ஐந்து ஆகாமங்களை வகைப்படுத்திய பின் சங்கீதங்களின் சுருக்கமான குறிப்பை வகையறுத்திருக்கின்றனர்:

1.**ஆதியாகம பிரிவு,** சங்கீதங்கள் 1—41, மனிதன் ஒரு ஆசிர்வாதமான நிலையில் இருப்பதையும், பின்னர் வீழ்ச்சி அடைந்து மீண்டும் திரும்புவதையும் நோக்குகிறது.

2. **யாத்திராகம பிரிவு**, சங்கீதம 42—72, இஸ்ரவேலரின் அழிவும், மீட்பும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

3. **லேவியராகம பிரிவு,** சங்கீதம் 73—89, இருளிலும், பகலிலும் தேவனே நம் அடைக்கலம் என்பதை விவரிக்கிறது.

4. **எண்ணாகம பிரிவு,** சங்கீதும் 90—106. இப்பகுதி பூமியையும், அதின் ஆபத்துக்களையும், பாதுகாப்பையும் காண்பிக்கின்றது.
5. **உபாகம பிரிவு,** சங்கீதம் 107—150— இப்பகுதி தேவனுடைய உலகத்தின் முழுமையையம், புகழ்ச்சியையும் காட்டுகிறது.

**பாடம்——12—நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு**

சாலமோன் தனது ஞானத்திலும், ஐஸ்வரியத்திலும் பேர்பெற்ற ஒரு மாபெரும் மன்னனாய் இருந்தான். அவன் 3,000 நீதிமொழிகளையும், 100வ பாடல்களையும் எழுதினான் (1 இராஜாக்கள் 4:31,32). சாலொமோன் ஒரு தத்துவ ஞானியாகவும் ஒரு விஞ்ஞானியாகவும், உலக அதிசயங்களில் ஒன்றான ஆலயத்தின் கட்டட நிபுணனாகவும், ஒரு ராஜாகவும் இருந்தார். நீதிமொழிகள் முழுவதும் ஞான வார்த்தைகளால் நிறைந்து காணப்படுகிறது. அதை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. இளைஞர்களுக்கான ஆலோசனை அதி 1—10
2. சகல மனிதர்களுக்கான ஆலோசனை அதி 11—20
3. ராஜாக்களும் அதிபதிகளுக்குமான ஆலோசனை அதி 21—30

**பிரசங்கி:**

வாழ்க்கையின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் கண்டறிய முற்படும் மனிதர்களுடைய சிந்தனைகள் மற்றும் இயற்கையான சமயங்கள் அனைத்தையும் குறித்து இப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் காணப்படும் வாக்குவாதங்கள் தேவனுடையவை அல்ல. ஆனால தேவனால் பதிவு செய்யப்பட்ட மனுதனுடைய வாக்குவாதங்கள். இதை எழுதியவர் சாலொமோன் ஆவார்.

சாலொமோன் தேவனோடு ஐக்கியம் இல்லாதிருந்த சூழ்நிலையில் தன்னுடைய அனுபவத்தையும் பிரதிபலிப்புகளையும் வெளிப்படுத்தும் சுயசரிதையை ஒரு நாடக வடிவில் எழுதின ஒரு புத்தகம் ஆகும். சாலொமோனின் வழி ஞானமுள்ளதாய் காணப்பட்டது. ஆனால் அவரோ தன் சொந்த ஞானத்தை பின்பற்றவில்லை. இதில பயன்படுத்தப்பட்டிருக்கும் பிராதான வார்த்தை ‘‘மாயை’’(அர்த்தமற்றது) மற்றும் ‘‘சூரியனுக்கு கீழே’’ என்பதாகும்.

**உன்னதப்பாட்டு**

இது கிறிஸ்தவர்களின் காதல் கீதம் என்றழைக்கப்படுகிறது. இப்புத்தகத்தல் காணப்படும் 4 முக்கிய அர்த்தங்கள்:

1.’’திருமண பந்தத்தில் உள்ள நேசத்தின் மகிமையை‘‘ முன் வைக்கிறது
2. இஸ்ரவேலர் மீது யெகோவா காண்பித்த நேசத்த முன் வைக்கிறது.
3. கிறிஸ்து மற்றும் திருச்சபை குறித்ததான ஒரு சந்திப்பு
4. கிறிஸ்துவின் அந்நியோன்யத்தையும் தனிப்பட்ட விசுவாசியையும் வர்ணிக்கிறது.

திருச்சபையின் இன்றைய மிகப்பெரிய தேவை கிறிஸ்துவின் மீது காண்பிக்கும் தனிப்பட்ட அன்பு ஆகும்.

**பாடம் 13 ஏசாயா**

17 தீர்க்கதரிசன புஸ்தகங்களில் ஏசாயா முதல் புஸ்தகம் ஆகும். இஸ்ரவேலரின் சத்திரத்தில் இருண்ட நாட்களில் தேவனால் எழுப்பப்பட்ட மனிதர்களே தீர்க்கதரிசிகள் ஆவர். அவர்களே அந்நாட்களின் சுவிசேஷர்கள் கி.மு.முதல் 9 முதல் கி.மு. 4 வரையிலான 500 ஆண்டுகள் தீர்க்கதரிசிகளின் காலம் ஆகும். இந்த தீர்க்கதரிசிகள் ராஜாக்களிடமும், ஜனங்களிடமும் அவர்களுடைய பாவங்கள் மற்றும தோல்விகளை குறித்து பயமின்றி பேசினர். ஏசாயாவின் புஸ்தகத்தில் 2 தனித்தன்மை வாய்ந்த காரியங்கள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. முதல் புகுதியில் தீர்க்கதரிசி இஸ்ரவேலை

சித்தரிக்கிறார். கடைசி பகுதியில் இயேசு நம்முடைய பாவங்களை சுமந்து, உயர்த்தப்பட்ட மகிமையடைந்தததை வெளிப்படுத்துகிறார். வேதகாமத்தில் மிக குறைந்த அளவில் பேசப்பட்டவர் ஏசாயா. இப்புத்தகம் வேதம் எப்படி 66 புத்தகங்களை உள்ளடக்கி உள்ளதோ அப்படியே 66 அதிகாரங்களை கொண்டது. பழைய ஏற்பாட்டை போல 39 அதிகாரங்கள் முதல் பகுதியாகவும், புதிய ஏற்பாட்டை போல 27 அதிகாரங்கள் இரண்டாம் பகதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகமம் "ஏசாயா எழுதின சுவிசேஷம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் கன்னி பிறப்பு, அவரின் குணாதிசயங்கள், அவருடைய வாழ்க்கை, அவருடைய மரணம், அவருடைய உயிர்தெழுதல் மற்றும் இரண்டாம் வருகை ஆகிய காரியங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் இப்புத்தகத்தில் கொடுக்கப்ட்டுள்ளது.

**பாடம் 14: எரேமியா மற்றும் புலம்பல்**

எரேமியா ஒரு "புலம்பலின் தீர்க்கதரிசி" என்றழைக்கப்படுகிறார். அவர் எந்த செய்தியை உரைக்கும்படி அழைக்கப்பட்டாரோ அச்செய்தி அவர் உள்ளத்தை நெறுக்கியது. ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்ட தீர்க்க தரிசினங்களிலே முற்றிலும் வரவேற்பை பெறாத ஒரு தீர்க்கதரிசனம் எரேமியாவினுடையது ஆகும். அவர்கள் பாபிலோனுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள் என்று உரைத்ததினால் அவர் தேசத்துரோகி என்றழைக்கப்பட்டார் (38:17—23). இஸ்ரவேலர் செய்ய வேண்டியதாக வைக்கப்பட்ட ஒரே காரியம்— அர்ப்பணித்தல். தானியேலின் தரிசனத்தில் கண்ட பொன்னால் ஆன தலையாகிய பாபிலோனியரின் "புறஜாதியின் காலங்கள்" தொடங்கிவிட்டது. உரேமியா பாபிலோனின் 70 வருட சிறையிருப்பை முன்னுரைத்தார்(25:9—12). அவர் இருளுக்கு அப்பாற்பட்ட ஒளியை தரிசித்தார். எந்த ஒரு தீர்க்கதரிசியும் உரேமியாவைப் போல எதிர்காலத்தை குறித்து தெளிவாக பேசினதில்லை (23:3—8; 30,32,33:15—22). ஜனங்களுக்கு கற்பிக்கும்படி யெகோவா அருளின பாடங்களை விளக்க அநேக எடுத்துக் காட்டுகளை பயன்படுத்தினார். அவருடைய செய்தி அறியப்படாததால் மட்டுமல்ல, புறக்கணிக்கப்பட்டதாகவும் இரந்தது. அதினிமித்தம் அவருடைய எதிரிகள் அவருடைய மரணத்தை கூட எதிர்நோக்கியிருந்தனர். 5 தனித்துவம் மிக்க கவிதைகளை கொண்ட அறிவுக்கூர்மையான புத்தகமாகிய புலம்பல் எரேமியாவினால் எழுதப்பட்டதாக எண்ணப்படுகிறது. அத்தனையும் துக்கத்திற்குரியது மட்டுமல்ல. ஜனங்களுடைய பாவங்களுக்காக அழுது புலம்பும் கவிஞரின் மேகங்களுக்கு மேலாக தேவனுடைய சூரிய ஒளி இன்னும் பிரகாசித்து கொண்டிருக்கிறது. அதி 3:22—27 வாசித்து பார்க்கவும்.

**பாடம் 15: எசேக்கியல்**

பாபிலோன் சிறையிருப்பின் காலத்தில் வாழ்ந்த ஒரு தீர்க்கதரிசி எசேக்கியல் ஆவார். பாலஸ்தீனாவுக்கு விரைவில் திரும்புவோம் என்ற இஸ்ரவேலரின் தவறான நம்பிக்கையை மீட்கவும் அவர்களுக்கு பிரியமான எருசலேமின் பரிதாபமான அழிவைப் பற்றிய செய்திக்கு அவர்களை ஆயத்தப்படுத்தவும் முயற்சித்தார்.

அவர் அதிகமாக தேவனுக்குரிய காரியங்களை குறித்து பேசியதால் தீர்க்கதிசன்களிலே அவருடைய செய்தி மிகவும் ஆவிக்குரியதாக இருந்தது. ஜனங்கள் தனக்கும் தன்னுடைய செய்திக்கும் செவிகொடுக்காத படியினால் அவர் ஒரு புதிய வழிமுறையை கையாண்டர். உவமைகளோடு பேசுவதற்கு பதிலாக அவர் செய்து காட்டினார் (24:24). எசேக்கியேல் கர்த்தருடைய மகிமையின் தீர்க்கதரிசி ஆவார். இப்புத்தகத்தின் சுருக்கமான குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அது எருசலேமின் அழிவுக்கு நேராக கவனத்தை திருப்புகிறது.

1.முற்றுகைக்கு முன் அதி 1—24 எருசலேமின் அழிவுக்கு 6 வருடங்களுக்கு முன்பே எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்க தொடங்கினார். அது நிறைவேறும் வரை அதின் நிச்சயத்தை முன்னுரைத் கொண்டே இருந்தார்.

2.முற்றுகையின் போது அதி 25—32. அதன்பின்பு அவருடைய தீர்க்கதரிசனங்கள் யூதாவின் சத்துருக்களைக் குறித்தும் அந்நிய தேசத்தார் தோற்கடிக்கப்படுதல் குறித்துமாக இருந்தது.
3.முற்றுகைக்கு பின், அதி 33—48, கடைசியாக யூதா திரும்புதலும் மீண்டும் நிலைநாட்டப்படுதலும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

**பாடம் 16—தானியேல்.**

தானியேல் சொப்பனங்களின் தீர்க்கதரிசி என்றழைக்கப்பட்டார். ஏனெனில் தேவன் தம்முடைய இரககியங்களுக்கு அவனுக்கு வெளிப்படுத்தினார். அவர் எதிர்காலத்தில் நடைபெற போவதை தூரத்திலேயே கண்டவர். வெளிப்படுத்தின விஷேசத்தை அதிகமாக மேற்கோள் காட்டியவர். அவருடைய வாழ்க்கையும், ஊழியமும் 70 ஆண்டுகள் முழுவதையும் இணைக்கிறது. அவர் தனது 16—வயதில் சிறையாக கொண்டு போகப்பட்டு 90 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தார். அவர் சிறை கைதியாக இருந்தாலும் பாபிலோனின் பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டார். அற்புதமான காரியம் என்னவென்றால் அவர் யெகோவா தேவனுக்கு முன்பாக எப்பொழுதும் உண்மையுள்ளவராக இருந்தார்.

**புத்தகத்தின் சுருக்கமான குறிப்பு:**

1.தானியேலின் தனிப்பட்ட வாழ்க்கை அதி 1:1—2:3
2.தானியேலின் பொதுவான வாழ்க்கை—புறஜாதிகளின் காலத்தை குறித்த ஒரு வர்ணனை அதி 2:4—7:28
3.தானியேலின் தீர்க்கதரிசனங்கள்—தேசத்தின் தீர்க்கதரிசன வரலாறு அதி 8—12

**பாடம்—17, ஓசியா, யோவேல் மற்றும் ஆமோஸ்**

ஓசியாவின் புஸ்தகம், சிறிய தீர்க்கதரிசன புஸ்தகங்கள் என்றறியப்பட்ட 12 புத்தகங்களில் முதலாவது புத்தகம் ஆகும். எழுதப்பட்ட எழுதுக்களின் அடிப்படையில் அவை அவ்வாறு அழைக்கப்பட்டன. ஓசியா என்றால் ''இரட்சிப்பு'' என்று பொருள்படும். இவர் வட சாம்ராஜ்யத்தின் எரேமியா என்று அழைக்கப்பட்டார். ஒழுங்கற்ற இஸ்ரவேலரை தேவன் நேசிக்கிறார் என்ற தனித்தன்மை வாய்ந்த செய்தியை அவர்களுக்கு கொடுப்பதற்கு தேவனால் அழைக்கப்பட்ட ஒரு சாதாரண மனிதன்.
ஓசியா ஒரு வேசியை மணமுடிக்கும்படி கட்டளை பெற்று பின்பு அவள் மூலமாக இரண்டு குமாரர்களையும் ஒரு குமாரத்தியையும் பெற்றார். அவள் மறுபடியும் வேசித்தனம் பண்ணினாள். ஓசியா அவளை வீட்டை விட்டு வெளியேற்றினான். ஆனால் கர்த்தரோ அவளை மீண்டும் சேர்த்துக் கொண்டு நேசிக்கும்படி கட்டடை இட்டார்.
செய்தி என்னவென்றால் இஸ்ரவேலர் தேவனுக்கு முன்பாக உண்மையற்றவர்களாயிருந்தனர். ஆனாலும் அவர் அவனை நேசித்து அவளை தன் வீட்டிற்கு மீண்டும் கொண்டுவருவார்.

**ஓசியா புஸ்தகத்தின் சுருக்கமான குறிப்பு:**

1.தீர்க்கதரிசியும் அவனுடைய உண்மையற்ற மனைவியாகிய கோமேரும் அதி 1—3.
2. கர்த்தரும் உண்மையற்ற தேசமாகிய இஸ்ரவேலும் அதி 4—14.

**யோவேல்:**

யூதாவுக்கு தீர்க்கதரிசியாகிய யோவேல், பயங்கரமான வெட்டுக்கிளி கொள்ளை நோயின் காலத்தில் இப்புத்தகம் எழுதப்பட்டது. இக்கொள்ளை நோயை அவர் வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கு ஒப்பிட்டார். நியாயத்தீர்ப்பைக் குறிக்கும் ''கர்த்தருடைய நாளை'' குறித்து அவர் 5 முறை பேசினார். யோவேல் புஸ்தகத்தின் மிக பெரிய மைய வாக்குதத்தம் ஆவிக்குரிய விடுதலையாகும். தேவன் தம் ஆவியை ஊற்றுவர் என்ற செய்தியை

உரைக்கும் பாக்கியத்தை இவர் பெற்றிருந்தார். மாம்சமான யாவர்மேலும் தம்முடைய ஆவி (2:32;3:18) இத்தீர்க்கதரிசனம் பெந்தேகொஸ்தே நாளில் நிறைவேறினது.

**ஆமோஸ்:**

ஆமோஸ் ஒரு மந்தை மேய்க்கிறவனாயிருந்தான். அவருடைய செய்திகளில் பெரும்பாலானவை வட சாம்ராஜ்யத்திற்குரியவை. வஅர் வேறு எவருக்கும் பயப்படவில்லை. ஆனால் தேவனுக்கு மிகவும் பயந்தர். ஆமோஸ் அண்டை தேசங்களான ஆறு தேசங்களுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை அறிவிப்பதின் மூலம் தன் செய்தியை தொடங்கினார். யூதா மற்றும் இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும் விரோதமாக அவன் அருகாமையிலுள்ள இடங்களை அடைந்தான்.

**பாடம் 18: ஓபதியா, யோனா மற்றும் மீகா**

பழைய ஏற்பாட்டு புத்தகங்களிலே மிக சிறிய புஸ்தகம் ஒபதியா ஆகும். ஒரே ஒரு பக்கம் மற்றும் 21 வசனங்களைக் கொண்டது என்றாலும் இன்று நமக்கு அது மிக முக்கியமானதாய் காணப்படுகிறது.

இது ஏதோமுக்கு எதிரான நியாயத்தீர்ப்பின் தீர்க்கதரிசனம் ஆகும். இது இரண்டு முக்கிய நோக்கங்களை கொண்டது. பெருமையும், முரட்டாட்டமும் கொண்டவர்களின் அழிவும், சாந்தமும், தாழ்மையுமுள்ளவர்களின் விடுதலையும் ஆகும். ஏதோமியர்களின் தன் சேஷ்ட புத்திரபாகத்தை அசட்டை பண்ணின ஏசாவிலிருந்து தோன்றினவர்கள்—ஏதோம் தொடர்ச்சியாக இஸ்ரவேலரின் சத்துருவாக இருந்தான். ஒபதியா எச்சரித்தனால் அவள் அழிக்கப்பட்டாள்

ஒபதியாவும் மற்ற தீர்க்கதரிசிகளை போல கர்த்தருடைய நாளின் வருகையைக் குறித்தும், மேசியாவினுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலைக் குறித்தும் முன்னுரைத்தார்.

**யோனா:**

யோனா ஒரு தீர்க்கதரிசியாக இருந்தாலும், யோனாவின் புஸ்தகத்தில் தீர்க்கதரிசனங்கள் எதுவுமில்லை. உலக வரலாற்றில் மாபெரும் கம்பவமாகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக யோனாவின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு பெரும் சம்பவத்தின் தனிப்பட்ட விளக்கமாகும். இந்த புத்தகத்தில் தேவன் 4 காரியங்களை ஆயத்தப்படுத்தினார்

ஒரு பெரிய மீன்(1:17); ஒரு ஆமணக்கு செடி (4:60); ஒரு பூச்சி (4:9), உஷ்ணமான கீழ்காற்று(4:8). தேவன் தம்முடைய தீர்க்கதரிசியின் மேல் கவனம் செலுத்தினார்.

இப்புத்தகத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த 2 சம்பவங்கள் காணப்படுகின்றன: ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்குதல், அறிமுகம் அற்ற ஒரு அந்நிய தேசத்து மிஷனரியின் மூலம் வெகு சில நாட்களில் நினிவே என்றும் புறஜாதிகளின் மகா நகரம் மனந்திரும்புதல்.

இப்புதகத்தில் 2 விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும். முதலவாது கிறிஸ்துவைப்போல யோனாவும் தன்னுடைய மரணம், அடக்கம் பண்ணப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதலில் ஒரு மாதிரி. இரண்டாவது இஸ்ரவேலரை போல யோனாவும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் உலக தேசங்களால் விழுங்கப்பட்டு கிறிஸ்து வரும்போது ஒப்படைக்கப்படக்கூடிய ஒரு மாதிரி. பின்பு இஸ்ரவேல் எவ்விடங்களிலும் தேவனுக்கு சாட்சிகளாய் இருப்பார்கள்.

**மீகா:**

எருசலேமின் மேலும் இஸ்ரவேலின் பட்டணங்களின் மேலும் மீகா தீர்க்கதரிசி நியாயதீர்ப்பை அறிவித்தான். ஆனால் நம்பிக்கையின் வார்த்தைகளுக்கு நேராக அவர்களை துரிதப்படுத்தினான். ஆவன் அழிவுக்கம் தண்டனைக்கும் அப்பால் கிறிஸ்து ஆளுகை செய்யக்

கூடிய மகிமையின் நாளை கண்டான். மேசியா வருவார் (4:8). அவர் பெத்லகேமில் பிறப்பார் (5:2—4).
மீகாவின் 3 செய்திகளில் இருந்து ஒரு இயற்கையான எச்சரிக்கை வருகிறது. ஒவ்வொரு எச்சரிப்பும் ''கேளுங்கள்'' என்ற தொடங்குகிறது.

1. முதலாவது (அதி 1.2) அனைத்து மக்களுக்கும் உரைக்கப்பட்டது.
2.இரண்டாவதாக(3:1) இஸ்ரவேலின் தலைவர்களுக்கு உரைக்கப்பட்டது.மீகாவின்
3. மூன்றாவதாக(6:1) இஸ்ரவேலர் மனம்திரும்பவும் தேவனிடத்தில் திரும்பவும் மன்றாடுகிற ஒரு தனிப்பட்ட ஒரு வார்த்தை.

**பாடம்: 19: நாகூம்:**

நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியா. நாகூம் புத்தகத்தின் நோக்கம் யோனா எச்சரித்த நினிவே பட்டணத்தின் அழிவு ஆகும். யோனாவின் நாட்களினால் உண்டான எழுப்புதலுக்கு பிறகு 150 ஆண்டுகளில் நாகூம் எழுதப்பட்டது. அவர்களுடைய மனந்திரும்புதல் நீடிக்கவில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தம் நினிவே அழிக்கப்பட்டது (3:1—7). சகல தேசங்களும் தேவனுக்கு முன்பாக தங்கள் முதுகை காட்டுவதற்கு நினிவே ஒரு மாதிரி. தேவனை வெளிப்படையாக புறக்கணிக்கிற எந்த ஒரு நபரும் வெளிப்படையாக அழிவையும் மரணத்தையும் தெரிந்து கொள்கின்றனர்.

**ஆபகூக்:—**

ஆபகூக் என்னும் தீர்க்கதரிசி கேள்விகளை கேட்டு பதிலை பெற்றுக் கொண்டான். ''துன்மார்க்கன் செழிப்பது ஏன்.?'' என்பது ஆலோசிக்கப்பட்டது. தனது எல்லா கஷ்டங்களின் மத்தியிலும் அவன் தேவனிடத்தில் சென்று ஜெபித்து, அவருடைய பதிலுக்காக பொறுமையுடன் காத்திருந்தான்.

1.ஒரு தீவிரமான ஜெபத்திற்கு பின்னர் தேவனடைய மகிமை தோன்றுதல் (3:1—16).

''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்'' (2:4) மறுமலர்ச்சியின் போது இவ்வசனம் முக்கியத்துவம் வாய்ந்ததாய் காணப்பட்டது. இவ்வசனங்கள் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ரோமர் 1:17; கலாத் 3:11 எபிரேயர் 10:38

**செப்பனியா:**

செப்பனியா, என்னும் தீர்க்கதரிசி கோபத்தினாலும் தேவனுடைய நியாயதீர்ப்பினாலும் நிறைந்திருந்தான் (1:15; 3:8). ஆனால் தேவனுடைய அன்பின் மதிப்பைக் காண்பிக்கிறது (3:17). செப்பனியா விக்கிரக ஆராதனையின் பல்வேறு வடிவங்களை வெளிப்டையாக கண்டனம்செய்தான். யோசியாவின் கீழ் உண்டான எழுப்புதலுக்கு ம்கிய பொறுப்பு செப்பனியா ஆவார். இந்த புத்தகம் துக்கத்தில் தொடங்கி பாடலுடன் முடிவடைகிறது.

**பாடம் : 20 ஆகாய், சகரியா மற்றும் மல்கியா**

பழைய ஏற்பாட்டு தீர்க்தரிசிகளில் பெரும்பாலானோர் சிறையிருப்புக்கு முன்பு பேசினார். 2 தீர்க்கதரிசிகள் மட்டும் எசேக்கியல் மற்றும் தானியேல் சிறையிருப்பின் போது தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ஆகாய், சகரியா மல்கியா ஆகிய இம்மூவரும் சிறையிருப்பில் இரந்து திரும்பிய பின்னர் தீர்க்கதரிசனம் உரைத்தனர். தேவ ஆலயம் மீண்டும் கட்டப்படுவதும், மீண்டும் சீரமைக்கபடுதலும் ஆகாய் தீர்க்கதரிசியின் மிகப்பெரிய ஆவல். தேவாலயத்தை புதுப்பித்து கட:டவதில் ஜனங்கள் தாமதித்ததை அவன் கடிந்து கொண்டான். மேலும் அவர்கள் துணிவு கொள்ளும்படி உற்சாகப்படுத்தினான, உதவிகள் செய்தான். அவனுடைய புத்தகம் 4 மாத காலத்தில் எழுதப்பட்ட 4 சுருக்கமான செய்தி வரிகளை கொண்டது. கடமையை செய்வதற்கு அவருடைய கண்டிப்பான அழைப்பு ஒரு சிறந்த மருந்து ஆகும். ஜனங்கள் எழுந்து ஆலயத்தை கட்ட தொடங்கினார்கள் (1:12—15).

சகரியா என்னும் இளம் தீர்க்கதரிசி, வயதான ஆகாய் தீர்க்கதரிசியோடு கூட நின்று, தேவாலயத்தை கட்டின இஸ்ரவேல் புத்திரரை திடப்படுத்தி, தங்களை பிதாக்களைப்போல இவர்களும் தேவனை ஏமாற்றாமல் இருக்கும்படி எச்சரித்தார். வெகு தொலைவில் உள்ள காலங்களில் இஸ்ரவேலருக்கு வரப்போகும் பலவிதமான ஆசீர்வாதங்களை வர்ணம் தீட்டி காண்பித்தனர்.

மற்ற எந்த தீர்க்கதரிசியை காட்டிலும் மிக அதிகமாக இரட்சகரை குறித்த தீர்க்கதரிசனங்களை சகரியா முன்னுரைத்தார் (ஊசாயா வை தவிர). எதிர்காலத்தை மிக தொலைவில் இருந்து கண்ட இவர் முதலாவது அவருடைய தாழ்மையையும் பாடுகளையும் கண்டு பின்னர் மீண்டும் அவரை மாட்சிமையிலும் மகிமையிலும் கண்டார்.

மல்கியா:

இப்புத்தகம் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையே ஒரு பாலத்தை போல அமைந்துள்ளது. மல்கியா தீர்க்கதரிசிக்கும் ‘‘கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்’’ என்ற யோவான் ஸ்நானின் கூப்பிடுதலுக்கும் இடையே 400 ஆண்டுகள் அமைதயின் காலமாக இருந்தது. பழைய ஏற்பாடு ‘‘சாபம்’’ என்ற வார்த்தையோடு முடிவடைகின்றது. ஆனால் புதிய ஏற்பாடு ஆசீர்வாதத்தோடு முடிவடைகிறது. ஒரு எழுப்புதலின் காலத்தை பின் தொடர்ந்து (நெகேமியா 10:28—39). ஜனங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட காரியங்களில் கண்டிப்பற்வர்களாகவும் மாறியிருந்தனர். ஒரு சீர்திருத்தவாதியாக வந்த மல்கியா அவர்களை கடிந்து கொள்ளும்போது உற்சாகப்படுத்தினான். நாம் காத்து கொண்டிருக்கிற கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்த மல்கியாவின் பயங்கரமான பிரகடனத்தை வாசியுங்கள் (3:16—4:3).

## பகுதி இரண்டு—புதிய ஏற்பாட்டு புத்தகங்கள்

### பாடம் 21: சுவிசேஷ புத்தகங்களின் முகவுரை

‘‘சுவிசேஷம்’’ என்ற வார்த்தைக்கு ‘‘நற்செய்தி’’ என்று அர்த்தம். நான்கு எழுத்தாசிரியர்களும் சுவிசேஷகர்கள்—நற்காரியங்களை கூறும் தூதுவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய சுவிசேஷங்கள் சம்பவங்களில் ஒருமித்து காணப்படுகின்றன. ஏனெனில் யோவானைப் போல் அல்லாமல் இவர்கள் மூவரும் கிறிஸ்துவின் வாழ்க்கையை குறித்த ஒரு கூட்டு கண்ணோட்டம்ஒரே விதமாக காணப்படுகிறது. எனவே இவற்றை சினாப்டிக் சுவிசேஷங்கள் என்று அழைக்கிறோம். இம்மூன்று சுவிசேஷங்களும் இயேசுவின் ஊழியம் பிரதானமாக கலிலேயாவினல் நடைபெற்றதாக கூறும் போது யோவான் மட்டும் யூதேயாவில் நடைபெற்றதாக கூறுகிறார். 3 சுவிசேஷங்களும் அவருஜடய அற்புதங்களையும், உவமைகளையும் விரிவாக கூறி பெறுபவர்களை(எழுதப்பட்டவர்கள்) திரளாகனோராக குறிப்பிடுகிறது.˙ யோவான் அவருடைய ஆழமான போதனைகளையும் உரைநடைகளையும ஜெபங்களையும் குறிப்பிடுகிறார். 3 சுவிசேஷங்கள் செயல்படுகிற கிறிஸ்துவை சித்தரிக்கின்றன; யோவான் அவருடைய தியானத்தையம் ஐக்கியத்தையும் சித்தரிக்கிறார்.

தீர்க்கதரிசிகள் உரைத்தவை எல்லாம் ஆண்டவரின் பூலோக வாழ்க்கைக்கும், கிரியைக்கும் நேராக வழிந டத்துகிறது. நிருபங்களில் பின்பற்றப்படுகிற அனைத்தும் அவற்றில் இருந்து வந்தவையாகம். சவிசேஷங்களே இவை அனைத்திற்கும் மூல ஆதாரமாக விளங்கின.

சுவிசேஷங்கள் கிறிஸ்து எப்போது?, எப்படி வந்தார் என்பதை கூறுகின்றன.
நிருபங்கள் கிறிஸ்து ஏன், எதற்காக வந்தர் என்பதை கூறுகின்றன.

### பாடம்:22 மத்தேயு

மத்தேயு இயேசுவை ஒரு ராஜாவாக அறிமுகப்படுத்துகிறார். இது பிரத்யேகமாக யூதர்களுக்குக்கென்று எழுதப்பட்டது. அவர் தாவீதின் குமாரனாக அறிமுகப்படுத்துகிறார். அவருடைய ராஜரீக வம்ச அட்டவணை முதல் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு ஆபிரகாமுக்கு நேராக பின்னோக்கி செல்கிறது. மற்ற சுவிசேஷங்களை காட்டிலும் மத்தேயு சுவிசேஷத்தில் மேசியாவினுடைய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக கிறிஸ்து இருந்தார் என்பதை காண்பிப்பதற்கு பழைய ஏற்பாட்டில் இருந்து 29 வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

மத்தேயுவை இயேசு தெரிந்து கொண்டபோது ரோம சட்டத்தின் கீழ் கப்பர்நகூமில் ஒரு ஆயக்காரனாய் இருந்தார் (9:9;10:3). மற்ற சுவிசேஷங்கள் அவர் இயேசுவுக்கு கொடுத்த பெரிய விருந்தையும் எல்லாவற்றையும் விட்டு அவருக்கு பின் சென்றதையும் குறிப்பிடத்தக்க விதத்தில் உண்மையாய் பதிவு செய்துள்ளார். அவர் ஒரு சாதிக்கும் மனிதராக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை.

மத்தேயு சுவிசேஷம் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவின் சுவிசேஷம். இப்புத்தகத்தில் ஆவியானவரின் பிரதான நோக்கம் நசரேயானகிய இயேசுவே, மோசேயினாலும், தீர்க்கதரிசிகளினாலும் ஏழுதப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்பதை காண்பிப்பதே ஆகும்.

கிழக்கில் இருந்து சாஸ்திரிகள் இயேசுவை பார்க்கும்படி வந்ததை மத்தேயு சுவிசேஷம் மட்டுமே எடுத்துரைக்கிறது. ராஸ்யத்தின் சட்டதிட்டங்களை மலை பிரசங்கள் எடுத்தியம்புகிறது. இதில் பரலோக ராஜ்யம் என்ற வார்த்தை 55 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் இதுவே ராஜாவின் சுவிசேஷம்.

மத்தேயு 24 மற்றும் 25 அதிகாரங்களில் இயேசுவின் பெரும்பாலான போதனைகள் அவருடைய 2ம் வருகையை குறித்தே கூறுகின்றன. இதில் இயேசுவின் பரமேறுதல் பதிவு செய்யப்படவில்லை. மேசியா பூலோகத்தில் இருக்கும்போதே திரைசீலை விழுந்தது. ஏனெனில் பூமியிலே தாவீதின் குமாரன் இன்றும் மகிமையில் ஆளுகை செய்ய வேண்டியிருந்தது.

**பாடம்: 23 மாற்கு**

மாற்கு சுவிசேஷம் இயேசுவை வேலைக்காரனாக சித்தரிக்கின்றது. இது ரோமர்களுக்கு எழுதப்பட்டது. இதில் வம்ச அட்டவணை குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் ஒரு வேலைக்காரனுடைய வம்சத்தை பற்றி தெரிந்து கொள் மக்கள் விரும்புவதில்லை. இந்த சுவிசேஷம் மரியாளின் மகனும், பர்னாபாவின் உறவினருமான ஜான் மாற்குவால் எழுதப்பட்டது. பவுல் மற்றும் பர்னாபாவுடன் அந்தியோகியா பட்டணம் சென்றவரும், அவர்களுக்குள் பிரச்சனை வர காணமாய் இருந்தவனும் அவனே (அப் 12:25, 13:15) பின்பு அவன் அவர்களைவ ிட்டு சென்றான். அநேகமாக அவன் சந்தித்த இன்னல்களின் நிமித்தமாக இருந்திருக்க (அப் 13:13). கடைசியாக அவன் பவுலுக்கு சிறந்த உதவியாக இருந்தான் (கொலொ 4:10; 2 தீமோ 4:11) மாற்கு இரட்சிக்கப்பட காரணமாக இருந்தவரும் இவரை ''என் மகன்'' என குறிப்பிடப்படுபவரும் பேதுரு ஆவார் (1 பேதுரு 5:13). பேதுருவினுடைய செல்வாக்கை இந்த சுவிசேஷத்தில் நாம் காணலாம்.

முழுவதும் கிரியைகளாலும் நிறைவேறுதல்களாலும் நிறைந்த ஒரு குறுகிய சுவிசேஷம் இது. இந்த சுவிசேஷத்தை மாற்கு, ரோமாபுரியில் இருக்கும்போது ரோமர்களுக்காக எழுதினார். ரோமர்கள் மிக சுறுசுறுப்பானவர்களும் வல்லமையையும் ரியையையும் விசுவாசிப்பவர்களாகவும் இருந்தனர். ஒரு சில பழைய ஏற்பாட்டு வகனங்களே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. 4 உவமைகள் மட்டுமே இந்த சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டள்ளன. நீண்ட முகவுரை இல்லை. ''தாமதம் இன்றி'' ''ரேடியாக,'' ''உடனே'' ஆகிய வேகத்தை குறிக்கம் சொற்கள் 40முறை பயன்படுத்தப்பட்டுள்ளன.

மாற்கு சுவிசேஷத்தில் இயேசுவின் அற்புதங்கள் முன்னிலை வகிக்கின்றன. —20 அறிபுதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பாடம் 24:லூக்கா**

லூக்கா இயேசுவை ஒரு பூரணமான மனிதனாக அறிமுகப்படுத்துகிறார். இந்த சுவிசேஷம் கிரேக்கர்களுக்கு எழுதப்பட்டது. இயேசுவின் வம்ச அட்டவணை ஆபிரகாமுக்கு பதிலாக முதல் மனிதனாகிய ஆதாம் வரை செல்கிறது. ஒரு பூரண மனிதாக இயேசு ஜெபிப்பவராகவும், தூதர்களால் பணிவிடை செய்யப்படுபவராகவும் காணப்படுகிறார்.

பவுலின் உடன் வேலையாளகிய லூக்கா ஒரு மருத்துவர். புதிய ஏற்பாட்டை எழுதிய ஆசிரியர்களில் இவர் ஒருவர் மட்டுமே புறஜாதியை சேர்ந்தவர். அவர் நன்கு கற்று தேர்ந்தவராகவும், நுட்பமாக கவனிப்பவருமாய் இருந்தார். அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதியவரும் இவரே. இவர் இயேசுவை இலட்சியம் நிறைந்த பூரண மனிதனாக அறிமுகப்படுத்துகிறார். இது பாவிக்களுக்கான சுவிசேஷம் மனிதனை இரட்சிப்பதற்காக மனிதனாக வந்த கிறிஸ்துவின் உருக்கமான அன்பை இது வெளிப்படுத்தகிறது. மருத்துவரான லூக்கா அற்புதமான கிறிஸ்துவின் பிறப்பை முழுமையான குறிப்புகளுடன் வழங்கி உள்ளார். லூக்கா மட்டுமே மேய்ப்பர்களின் சந்திப்பை கூறுகிறார். தம் 12 ஆம் வயதில் இயேசு தேவலாயத்திற்கு சென்றதை பற்றியும் ஒரு மனிதனாக தன் கைகளால் கருமையாக உழைத்து கஷ்டப்பட்டார். என்பதையும் இவர் எழுதியுள்ளார். இந்த சுவிசேஷத்தில் 6ல் 5 அற்புதங்கள் சுகமாக்குதலை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. மல்கூஸ்ஸின் வெட்டப்பட்ட காதை இயேசு சுகப்படுத்தியதையும் லூக்கா மட்டுமே குறிப்பிட்டள்ளார் (22:51). லூக்கா சுவிசேஷம் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்காக எழுதப்பட்டது. இந்த சுவிசேஷம் பெண்ணினங்களை குறித்து அதிகமாக பேசுகிறது. இது அழகான பாடல்கள் நிறைந்த ஒரு கவிதை புத்தமாகவும் காணப்படுகிறது. மற்ற ஆசிரியர்களை காட்டிலும் கர்த்தரின் ஜெபங்களை குறித்து லூக்கா அதிகமாக பேசுகிறார்.

**யோவான் 25**

யோவான் இயேசுவை ஆதேவகுமாரனாக சித்தரிக்கிறார். இந்த சுவிசேஷத்தில் ஒவ்வொன்றும் அவருடைய தெய்வீக உறவை எடுத்துக்காட்டி விளக்குகிறது.

இந்த சுவிசேஷத்தின் ஆக்கியோன் ''இயேசுவால் நேசிக்கப்பட்ட சிஷனாகிய'' ''இடிமுழக்கத்தின் மகன்'' என்றழைக்கப்பட்ட யோவான் ஆவார். இவரது தந்தை வசதி படைத்த மீனவராகிய செபதேயு; இவரது தாய் கர்த்தரை பக்தியுடன் பின்பற்றிய சலோமி இவரது சகோதரன் யாக்கோபு.

மற்ற சுவிசேஷகர்களுக்கு பிறகு ஏறக்குறைய ஒரு சந்ததிக்கு பின் யோவான் சுவிசேஸம் எழுதப்பட்டது. இயேசு அவனை அழைத்தபோது அவன் ஏறக்குறைய 25 வயதுள்ளவனாய் இருந்தான். மேலும் யோவான் ஸ்நானனை பின்பற்றுகிறவனாக இருந்தான். பின்னர் தன்னுடைய வாழ்க்கையில் கி.பி 80—100 இடைப்பட்ட காலத்தில் தன்னுடைய சொந்த எழுத்துக்களை தவிர புதிய ஏற்பாடு முழுவதும் நிறைவு பெறும் சமயத்தில் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

மற்ற சுவிசேஷங்களை காட்டிலும் யோவான் சத்தத்தினால் மிக உயர்ந்தாகவும் கண்ணோட்டத்தில் மிக சிறந்ததாகவும் இருக்கிறது. இதில் இயேசு தேவனைக் குறித்து பேசும்போது ''என் பிதா'' என்று 35 முறை கூறியிருக்கிறார். அதிகாரத்துடன் பேசும்போது ''மெய்யாகவே மெய்யாகவே'' என்ற சொற்களை 25 முறை பயன்படுத்தியிருக்கிறார். இயேசு கிறிஸ்து என்று மனிதர் விசுவாசிக்கும்படியாக இந்த சுவிசேஷத்தை எழுதினாக யோவான் கூறுகிறார். இதற்கு யோவான் 7 சாட்சிகளை கொண்டு வருகிறார்: 1:34; 1:4; 9;6:69;11:27;20:28;20:31 மற்றும் 10:36. அவர் 7 அற்புதங்களை பதிவு செய்திருக்கிறார்:2:1—11;4:46—54;5:1—47;6:1—4;14:6;15—21:9;1—41 மற்றும் 11:1—57 மேலும் இப்புத்தகத்தில் கிறிஸ்துவின் தெய்வீக சுபாவம் 7 ''நானெ'' களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**பாடம் 26: அப்போஸ்தலருடைய நடபடிகள்**

லூக்கா தனது சிசேஷத்தில், கிறிஸ்து பூமியல் எதை செய்ய தொடங்கினார் என்பதை காண்பிக்கிறார். அப்போஸ்தல நடபடிகளில் இயேசு பரிசுத்த ஆவியானவரை கொண்ட எதை தொடர்ந்து செய்தார்
என்பதை காட்டுகிறார். லூக்கா சுவிசேஷத்தில் கடைசி காட்சி நமது ஆண்டவரின் பரமேறுதல் ஆகும். அப்போஸ்தல நடபடிகளில் இது தொடக்க உண்மை. அப்போஸ்தல நடபடிகள் அப்போஸ்தலர்கள் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் நடபித்த காரியங்களை பதிவு செய்கிறது. பரிசுத்த ஆவியானவர் நடபித்த காரியங்களை பிவு செய்கிறது. பரிசுத்த ஆவியானவருடைய பெயர் 70 முறை குறிப்பிடப்பட்டள்ளது. ''சாட்சி'' என்ற வார்த்தை 30 முறைக்கு மேலாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

யூத தேசத்தின் தலைநகரமாகிய எருசலேமில் சுவிசேஷம் பிரசங்கித்தலுடன் இந்த புத்தகம் தொடங்குகிறது உலகத்தின் ஆற்றல்மிக்க நகரமாகிய ரோமில் சுவிசேஷம் பிரசங்கிப்படுதலுடன் முடிவடைகிறது. ஒரே தலைமுறையில் அப்போஸ்தலர்கள் எல்லா திசைகளிலும் சென்று, வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்தார்கள்.(கொலோ:1:23)

அப்போஸ்தல நடபடிகள் அதிகாரங்கள் 1 முதல்12வரை பேதுரு யூதர்களுக்கு சாட்சி கொடுப்பதை நாம் காணலாம். அவருடைய பிரசங்கம் ''மனந்திரும்புதல்'' குறித்து இருக்கிறது. 13—ஆம் அதிகாரம் முதல் 28வரை பவுல் புறஜாதிகளுக்கு சாட்சி கொடுப்பதை நாம் காணலாம். அவர் ''விசுவாசியுங்கள் என்று பிரசங்கிக்கிறார். ஊழியத் திற்கு அப்போஸ்தல நடபடிகள் ஒரு நல்ல வழிகாட்டி புத்தகம். இது ஊழியத்திற்கான நோக்கம் — மனிதர்களை இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் அறிவுக்குள் கொண்டு வருதலை காண்பிக்கிறது. முதல் திருச்சபை தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றுவதில் ஒனி தெளிவான நிகழ்ச்சியை பின்தொடர்ந்தார்.அவர்கள் அஸ்தி பாரத்திற்காக ஒரு மாபெரும் பிரகாசமான மக்கள் தொகையின் மையத்தை தேர்ந்தெடுத்தனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரை மட்டுமே சார்ந்து பெரும் வைராக்கியம் உள்ளவர்களாய் இருந்தனர். வல்லமையான ஊழியப்பணிக்கு பவுலின் 3 மிஷனரி பயணங்கள் முன் உதாரணமாய் அமைந்திருக்கின்றன.

**<u>பாடம் 27 ரோமாபுரியாருக்கு எழுதின நிரூபம்</u>**

இதுதான் முதல் நிரூபம். 13 நிரூபங்கள் பவுலால் எழுதப்பட் டுள்ளதால் பவுலின் நிரூபங்கள் என்றழைக்கப்படுகிறது. (இதில் எபிரெயருக்கு எழுதின நிரூபமும் அடங்கும். இருப்பினும் பவுல்தான் இதை எழுதினார் என்பது நிச்சயமாக நமக்கு தெரியாது.) பவுல் தூய்மையான யூத பரம்பரையில் பிறந்தார். ரோம குடியுரிமையும், கிரேக்க கல்வியும், மற்றும் எபிரெய மதமும் சிறந்த வேலைக்கு அவரை அற்புதமாக தகுதிப்படுத்தியிருந்தது.
ரோமிலிருந்து வந்த பார்வையாளர்கள் எருசலேமில் பஸ்கா பண்டிகையை பெந்தேகொஸ்தே பண்டிகையாக மாற்றி, தலைநகருக்கு திரும்பி சென்று சுவிசேஷத்தின் விதையை யகொண்டு சபையை ஸ்தாபித்தனர். 28 வருடங்களுக்கு பிறகு அவர்களை சந்திக்க ஆவல் உள்ளவராய் கொரிந்துவில் இருந்து தன்னுடைய 3வது மிஷனரி பயணத்தின்போது 3 மாதங்கள் தங்கியிருந்த காலகட்டத்தில் இந்த கடிதத்தை அனுப்பினார்.
ரோம நிரூபம் குற்றமுள்ள மனிதர்களை நல்லவர்களாக்க தேவன் பயன்படுத்தும் முறையை காண்பிக்கிறது. இது நமது இரட்சிப்பின் மீதான ஒரு மாபெரும் எழுத்து பத்திரம் ஆகும்.

**<u>சுருக்கமான 28: குறிப்பு</u>**

அதிகாரங்கள் 1—8 உபதேசத்திற்குரியவை முதல் மூன்று அதிகாரங்கள் (விசேஷமாக 1: 18 மற்றும் 3:20—ஐ பார்க்கவும்) மனிதனுடைய மோசமான பாவநிலையை காட்டுகிறது. அதன்பிறகு நீதிமானாக்கப்படுதல்மூலம் தேவநீதி வெளிப்படுத்தப்படுதல் வருகிறது (3:21—5:11) அடுத்ததாக பரிசுத்தவான் பரிசுத்தமாக்கப்படுதல் குறித்த செய்தி வருகிறது. (5:12—

8:39) அதிகாரங்கள் 9—11 சரித்திரம் முழுவதும் இஸ்ரவேலரை குறித்து தேவனுடைய நோக்கத்தை காண்பிக்கும் வண்ணம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கடைசி 4 அதிகாரங்கள் 12—16, ஒரு கிறிஸ்தவரின் கடமையை காட்டும் நடைமுறை பயிற்சிக்குரியவை.

பாடம்: 28: கொரிந்தியருக்க எழுதின முதலாம் மற்றும் இரண்டாம் நிருபம்:

பவுலின் நாட்களில் ரோம சாம்ராஜ்யத்தில் பாவத்திற்கு பெயர்போன இடமாக கொரிந்து காணப்பட்டது. அனைத்து கிரேக்க பட்டாளங்களிலும் இது மிக முக்கியமான பட்டணமாகும். அதின் செல்வம் வர்ணிக்கப்பட இயலாததும், அடிப்படையாக ஒழுக்க கேடுகள் மிகவும் பெருகியும் இருந்தது.

இப்படிப்பட்ட மோசமான பிண்ணனிக்கு எதிராக, பவுல் கொரிந்துவில் சுவிசேத்தை பிரசங்கித்து. சபையை ஸ்தாபித்து, இவ்விரண்டு நிருபங்களையும் எழுதினார்.

கொரிந்தியர்கள் ஒரு கடிதத்தோடு ஒரு பிரதிநிதி குழுவையும் அனுபி இருந்தான் (7:1:இ 16:17) முதலாம் நிரூபம் சபையின் நிலைமையை குளித்து பவுலின் பதில் சபைக்குள் லொளதீகம் நுழைந்து பிரிவினைகள் ஏற்பட்டிருந்தது கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தாவ்களுக்கு எதிராக நீதிமன்றங்களுக்கு சென்று கொண்டிருந்தனர். கர்த்தருடைய பந்திதயில் அவர்களுடைய நடத்தை ஒழுக்கற்றதாய் இருந்தது. பெண்கள் தன்னடக்கமற்றவர்களாயும், சபை அங்கத்தினர்கள் திருமணத்தை குறித்தும் ஆவிக்குரிய வரங்களை குறித்தும் வாக்குவாதம் பண்ணுகிறவர்களாயும் இருந்தனர்.

அதிகாரம் 15—ல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அநேக ஆதாரங்களை பவுல் கொடுக்கிறார்.

இரண்டாம் நிரூபம் அதனுடைய முதல் நிரூபத்தை அவர்கள் பெற்றுக்கொண்ட விதத்தைக் குறித்து உற்சாகமளிக்கும் செய்தியை கேட்டதினிமித்தம் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்படியாகவும், தன்னுடைய அப்போஸ்தலத்துவத்தை நிரூபிக்கும்படியாகவும் எழுதினார். மற்ற எந்த நிரூபத்தை காட்டிலும் இந்த நிரூபத்தில் தனது தனிப்பட்ட வரலாற்றை அதிகமாக எடுத்து கூறியிருக்கிறார்.

இந்த நிரூபம் "ஆறுதல்" (1:3) என்ற வார்த்தையுடன் தொடங்கி "ஆறுதல்" (13:11) என்ற வார்த்தையுடன் முடிவடைகிறது.

**<u>பாடம்: 29 கலாத்தியர்:</u>**

பவுல் தனது இரண்டாம் மிஷனரி பயணத்தின்போது கிராமப் பகுதியான கலாத்தயாவில் சபைகளை ஸ்தாபித்தார். சட்டத்தைப் போதிப்பவர்கள் பவுலை தொடர்ந்து கிரியையினால் வருகிற இரட்சிப்பை குறித்து போதித்தார்கள். எல்லாவிதமான சடங்குகளையும் மக்கள் கட்டாயம் செய்ய வேண்டும் என்று சொல்லி கள்ள போதகர்கள் மக்களை "வசீகரிக்க" தொடங்கினார்கள்.

எந்த கிாயையும் அவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவர இயலாது என்பதை மக்கள் அறியவேண்டும் என்று பவுல் விரும்பினார். இரட்சிப்பு கிறிஸ்துவை விசுவாசத்ததினால் வருகிறது. மற்றெதினாலும் அல்ல. கலாத்தியர்கள் கள்ள போதகர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்க்கிறதை அறிந்த பவுல், காரியம் அவசரமானதால் இந்த கடிதத்தை தானே எழுதினார். (6:11)

இந்த நிரூபம் கிறிஸ்தவர்களுடைய சுதந்திரத்தை அறிவிக்கிறது. இது கிருபையும் நியாயப் பிரமாணத்தையும் எதிரிடையாக்குகிறது. கண்டிப்பான, கடுமையான மற்றும் முறையான செய்தியாகும். இதில் புகழ்வதோ அல்லது துதித்தலோ நன்றிகூறுதலோ, அடங்கியில்லை. எவருடைய பெயரும் குறிப்பிடவும் இல்லை. இதில் உணர்ச்சி வசப்படும் பலமான உணர்வுகள் இருக்கின்றன. இது ஒரு சண்டையிடும் நிரூபமாகும். மார்டீன் லூதருக்கு மிகவும் பிரியமான நிரூபம். அனைத்து வேதவாக்கியங்களிலும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் உபதேசத்தை தற்காகும் ஒரு உறுதியான பிரகடனமாக காணப்படுகிறது.

**<u>பாடம் 30) எபேசியர்:</u>**

4 சிறைச்சாலை நிருபங்களில் எபேசியர் ஒன்றாகும் (மற்றவை பிலிப்பியர், கொலொசேயர் மற்றும் பிலெமோன் ஆகியவை) இந்த நிருபம் திருச்சபையைக் குறித்த ஒரு மகா இரகசியத்தை காட்டுகிறது. சிலவேளைகளில் இது ''பவுலின் மகா பரிசுத்த ஸ்தலம்'' அல்லது ''பவுலினுடைய மூன்றாம் வானத்தின்'' நிருபம் என்றழைக்கப்படுகின்றது.

பவுலின் இரண்டாவது மிஷனரி பிரயாணத்தின்போது எபேசு பட்டணம் மிக பிரபலமான ஒரு மையமாக இருந்தது. அப்போது பவுல் ஆசியாவுக்குள் நுழையாதபடி பரிசுத்த ஆவியானவர் தடை பண்ணினார். கொரிந்துவின் தொலைவு அத்தனையாயிருந்த ஐரோப்பாவுக்கு சென்று மீண்டும் எபேசுவின் வழியாக வந்தார். மூன்றாவது மிஷனரி பிரயாணத்தின்போது, அவர் மீண்டும் எபேசுவுக்கு சென்று ஈராண்டுகள் தங்கி ஊழியம் செய்தார். (அப்போஸ்தல் 18:19 மற்றும் 19:8—10) மற்ற ஜனங்களைவிட எபேசுவின் மக்கள் அதிகமாக பவுலிடமிருந்து வேதாகம போதனைகளை கேட்டனர். அவர் எதிர்ப்புகளை சந்தித்தார் என்றாலும் தேவன் அவரை பாதுகாத்தார். அவர் எபேசு சபையை நேசித்தார்.

அந்த ஆழமான ஆவிக்குரிய புத்தகத்தின் சுருக்கமான குறிப்பஜப உதவியாக இருக்கலாம்.

1. விசுவாசிகளின் நிலை – ''கிறிஸ்துவுக்கள்'' பரலோகங்களில் அதி. 1—3
2. விசுவாசியின் நடக்கை – அதி 4—6.
3. சபைக்குரியது – அதி. 4
4. ஒழுக்கத்திற்குரியது – அதி. 5
5. சமுதாயத்திற்குரியது – அதி. 5:21 – 6:9
6. யுத்தத்திற்குரியது — அதி. 6:1—24

<u>பாடம் 31: — பிலிப்பியர் மற்றும் கொலோசெயர்</u>

எபேசியர் மற்றும் பிலலெமோனுக்கு எழுதின நிருபத்தைப் போன்று இவ்விரு நிருபங்களும் சிறையிலிருந்து எழுதப்பட்டவையாகும். பவுலும் தீமோத்தேயும் தாங்கள் பெற்ற அன்பளிப்புகளுக்காக நன்றி தெரிவிக்கும் வண்ணம் பிலிப்பிய சபைக்கு எப்பாப்பிரேயோத்துவின் மூலம் அனுப்பிய ஒரு ''நன்றி'' கடிதமே பிலிப்பியர் நிருபம் ஆகும்.

பவுல் பிலிப்பிய சபையின்மீது ஒரு விசேஷமான அன்பு வைத்திருந்தார். ஆற்றங்கரையில் அவர் ஒரு பெண்கள் குழுவை சந்தித்தார். லீதியாள் என்னும் சகோதரி இரட்சிக்கப்பட்டாள். பிற்பாடு பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் போடப்பட்டு அடிக்கப்பட்டனர். நள்ளிரவில் அவர்கள் ஜெபம் பண்ணி, தேவனை துதித்தபோது. ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டு சிறைச்சாலையை அசைத்தது. அங்கு சிறைச்சாலைக்காரனும், அவனுடைய குடும்பத்தாரும் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர். (அப். 16)

இப்புத்தகத்தின் அடிப்படை குறிப்பி மகிழ்ச்சி ஆகும். பாடுகளின் மத்தியில் சந்தோஷம் அதிகாரம் 1:
சேவையில் சந்தோஷம் அதி. 2,
கிறிஸ்துவுக்குள் சந்தோஷம் அதி.3:
திருப்தியில் சந்தோஷம் அதி. 4.

<u>கொலோசெயர்</u>

பவுல் கொலோசெய நிருபத்தை எழுதினதின் காரணம் அங்கு ஓர் உபதேசங்கள் போதிக்கப்பட்டதினால் அவர் அதை சரிசெய்ய வேண்டியிருந்தது. கிறிஸ்தவர்கள் தாங்கள் விருத்தசேதனத்தையும், உணவு பிரமாணங்களையும் பின்பற்றி, பண்டிகைகளை ஆசரித்து தேவதூதர்களின் பணிகளையும்,
என்று எண்ணினர். கிறிஸ்துவின் தேவத்துவத்தைக் குறித்த கருத்தை அவர்கள் புரிந்தும் கொள்ளவில்லை. ஆகவே அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் இயேசுவில் கண்டடைய முடியும் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

பவுல் அவர்களை திருத்தினார்.

1. உபதேசத்தின் அடிப்படையில் அதி. 1,2
2. நடைமுறை பயிற்சியின் அடிப்படையில் அதி 3,4.

**பாடம்: 32 முதலாம், இரண்டாம் தெசலோனிக்கேயர்**

இரண்டாவது மிஷனரி பிரயாணத்தின்போது பவுலும் சீலாவும் தெசலோனிக்கேயாவில் சபையை நிறுவனர். (அப். 17:1—10) யூதர்கள் அவர்களுக்கு விரோதமாக கூடினதனால் அவர்கள் அங்கு ஒரு மாதத்திற்கும் குறைவாகவே தங்கினர். இனம் சபை பாராட்டத்தக்க பெலத்ததைக் காண்பித்தனர். இச்செபையின் அங்கத்தினர்கள் பிரதானமாக புறஜாதியிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள். அவர்கள் பிரதிகூலமான ஒரு அஞ்ஞான சூழ்நிலையை சந்தித்தனர்.

அவர்களின் முன்னேறத்தை அறிய பவுல் மிகுந்த ஆவலுள்ளவராய் காணப்பட்டார். தீமோத்தேயு அவனுக்கு செய்திகளை கொண்டுவந்தான். (3:6) விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்த விரும்பினார். 1 தெசலோனிக்கெயர் அதிகமான ஊக்குவிப்பையும், மிக குறைவான உபதேசத்தையும் கொண்டுள்ளது பவுல் அதிகமாக இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து பேசுகிறார். (1.10: 2:19, 3:13, 4:16—18 மற்றும் 5:23) கிறிஸ்தவ ஜீவியத்திற்கும், சேவைக்கும் ஊக்கமூட்டுகிற காரியங்கள்:

முதலாம் நிரூபம் எழுதப்பட்டு குறுகிய நாட்களுக்குள்ளாகவே இரண்டாம் நிரூபத்தை எழுதினார். இதின் குறிக்கோள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை முதல் நிருபத்தை வாசித்த சிலர் இதைக் குறித்து குழப்பமடைந்திருந்தனர். அவருடைய வருகைக்கு முன்பாக நடைபெறும் காரியங்களை இந்நிருபம் அறிவிப்பதோடு, கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருக்கவும் அவர்களை உருவாக்கவும், பாடுகளை சகிக்கும்படி உற்சாகப்படுத்தவும் செய்கிறது.

**பாடம் 33: முதலாம் மற்றும் இரண்டாம் தீமோத்தேயு**

முதலாம் தீமோத்தேயு, இரண்டாம் தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய 3 கடிதங்களும் போதக நிருபங்களாக அறியப்படுகின்றன. ஏனெனில் ஒரு முதிர்ந்த போதகரால் இளைய மனிதனுக்கு வழங்கப்பட்ட
புத்திகள். அந்த இளைய மனிதனால் போதக ஊழியத்தில் மற்றவர் பயிற்சிபெற வேண்டி எழுதப்பட்டது.

தீமோத்தேயுவின் தகப்பன் கிரேக்கன், தாய் யூத பெண் அநேகமாக இவர் தன்னுடைய 15ம் வயதில், தன் சொந்த ஊரான லீஸ்தீராவில் பவுல் அவர்களை சந்திக்க வந்தபோது இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். (அப். 16:1—3, 1 தீமோ. 1:2) 7 ஆண்டுகளுக்கு பிறகு இவர் பவுலின் ஊழியத்தில் உடன் ஊழியராக மாறினான். முதலாம் தீமோத்தேயு – முதல்முறை தனது சிறைவாசத்திற்க பின்பு பவுல் எபேசுக்கு சென்றார். அவர் விட்டு செல்லம் நேரம் வந்தபோது, தீமோத்தேயுவை அவ்வேலைக்கு பொறுப்பேற்கச் செய்தார். தீமோத்தேயு பயந்த மற்றும் எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய நபரானதால், அவர் தனிமையில் கசப்பான சோதனைக்குள் விடப்பட்டதைப்போல் உணர்ந்தார். பவுல் கொரிந்துவில் இரந்து இவரை உற்சாகப்படுத்தவும், நடைமுறை பயிற்சிச்கான புத்திமதிகளை வழங்கவும் இந்த கடிதத்தை எழுதுகிறார். திறவுகோல் வசனம் 3:15 ஜெபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், கள்ள போதர்களுக்கு எதிரான எச்சரிப்பைப் பற்றியும் கூறவும் தீமோத்தேயு அறிவுறுத்தப்பட்டார். சபை ஊழியர்களுக்கும் ஒரு நல்ல திறமை வாய்ந்த ஊழியனுக்கும் வேண்டிய தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் தீமோத்தேயு — இது பவுலின் கடைசி நிரூபமாகும். இது பவுல் ரோம சிறையில் இருந்தபொழுது தான் பிரியும் நேரம் சமீபமாகிவிட்டது என்று உணர்ந்தபோது எழுதப்பட்டதாகும். அவர் துரோவா பட்டணத்தில் திடீரென்று கைது செய்யப்பட்டதால் தனக்கு வேண்டிய புத்தகங்களையும் எழதுவதற்கு தோல் காகிதங்களையும் மேல்

அங்கிகளையும் எடுப்பதற்கு நேரம் இல்லாமற்போயிற்று (4:13) அவர் தனிமையில் (4:1012) தான் கொல்லப்பட போவதை எதிர்நோக்கி இருந்தார். மாற்குவை அழைத்து வரும்படியாகவும் தான் விட்டு வந்த பொருட்களை கொண்டு வரும்படியாகவும் தீமோத்தேயுவை அவசரப்படுத்தி இக்கடிதத்தை எழுதினார்.

அடிப்படை நோக்கம் பாடுகள், சேவை, விசுவாச துரோகம் மற்றும் வேத வாக்கியங்கள் ஆகியவை ஆகும்.

**பாடம் 34: தீத்து மற்றும் பிலேமோன்**

தீத்து என்பவர் ஒரு தூய்மையான புறஜாதியாலும் பவுலினால் இரட்சிக்கப்பட்டவர்களில் ஒருவராகவும் இரந்தார் (1:4) கொரிந்து சபையில் உள்ள பிரச்சனைகளை கண்டறிய முயற்சிக்கும் ஒரு கடினமான வேலையை பவுல் தீத்துவிடம் ஒப்படைத்தார். 2 கொரி. 7:6—7) தீத்துவினுடைய திறமைகளை குறித்து பவுல் பெரும் நம்பிக்கையுடையவராய் இருந்தார். ஆகவே தான் பிற்காலத்தில்அவர் கிரேத்தா தீவில் கடினமான சபையின் வாழ்க்கயில் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கும்படி விடப்பட்டார் (1:5) தீத்து ''பிரச்சனைகளை சமாளிக்கக்கூடியவர்'', சிக்கலான சூழ்நிலைகளை கையாளும் திறன் படைத்தவர். அவர் தீமோத்தேயுவை காட்டிலும் திடமானவராகவும் இயல்பானவராகவும் தோன்றினார்.

இந்தக் கடிதம் முழுவதும் நடைமுறை பயிற்சிக்கான அறிவுரைகளாலும் கள்ள உபதேசங்களுக்கு எதிரான எச்சரிக்கை களாலும் நிறைந்திருக்கிறது. இந்நிருபத்தின் பிரதான குறிக்கோள் நற்கிரியைகளை நிலைநாட்டவதை சிறப்பாக வலியுறுத்துவதோடு ஊழியத்தின் கடமைகள் மற்றும் உபதேசங்களோடு தொடர்புடைய ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்குகிறது.

பிலேமோன் ஒரு அழகிய மன்றாட்டு கடிதம். தன்னைவிட்டு ஓடிப்போன அடிமையாகிய ஒருஓம்நசிமுவை மன்னித்து தயவோடு சேர்த்துக் கொள்ளும்படி பிலேமோனை கெஞ்சும் ஒரு கடிதம் ஆகும். பிலேமோன் ஒரு செல்வந்தன் என்று மிகத்தெளிவாக தெரிகிறது. (5,7,22) இவன் பவுலினால் இரட்சிக்கப்பட்டவன் (வ. 19)

ஒகேசிமு ரோமாபுரிக்கு தப்பி ஓடி பவுலுடைய செல்வாக்கின்கீழ் அவர் மூலமாய் இரட்சிக்கப்பட்டவன் (வ. 10) இங்கு ஒநேசிமுவின் குணங்கள் மாறியிருப்பதை குறித்த சாட்சியும் அவரை மன்னிக்கும்படியான ஒரு தயவான விண்ணப்பம் கூறப்பட்டுள்ளது.

**பாடம்: 35 எபிரெயர்:**

இந்த நிருபத்தில் எவ்வித கையெழுத்தும் இல்லை என்றாலும் அநேகர் இது பவுலினால் எழுதப்பட்டது என்று நம்புகின்றனர். அநேகர் இது பிரதானமாக எபிரெய கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாகும். பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தை வெளிக்கொணரும் சிறிஸ்தவ யுகத்தின் மகிமையை காண்பிப்பதே இந்நிருபத்தின் நோக்கமாகும். கிறிஸ்து பூரணமான பலியை செலுத்து ஒரு பூரணமான ஆசரியன். தேவனடைய குமாரன் தூதர்களுக்கும், மேசோக்கும், யோசுவாவுக்கும், ஆரோனுக்கும், மெல்கிசேதேக்குக்கும் மேலானவர் என்பதை முதல் 10 அதிகாரங்கள் காண்பிக்கின்றன. அதிகாரங்கள் 11 முதல் 13 வரை விசுவாச வாழ்க்கை காண்பிக்கிறது.

**பாடம் 36: யாக்கோபு**

இந்நிருபத்தின் ஆசிரியர் எருசலேம் சபைக்கு தலைவராய் இருந்த இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு ஆவார் (அப் 12:17;15:13). இவர் கி.பி.62ல் இரத்த சாட்சியாக மரித்தார்.

யாக்கோபு நிருபம் பரிசுத்த தேசத்திற்கு வெளியே வாழ்ந்த யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது என்பது தெளிவாக தெரிகிறது. ஆனால் அதனுடைய செய்தி அனைத்து கிறறிஸ்தவர்களுடைய வாழ்க்கையிலும் அப்பியாசப்படுத்தக்கூடிய அளவுக்கு மிகத்

தெளிவாகவும் நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்கிறது. இதின் பிரதான குறிக்கோள் நற்கிரியைகளை தன்னில் வெளிப்படுத்தும் நடைமுறைக்கு எற்ற மதம்.

சில பகுதிகள் கிறிஸ்தவர்களின் குறிப்பிட்ட சூழ்நிலைக்கும் பொருந்தும்: பிரச்சினைகளில் இருப்போர்க்கு(1:24) ஐசுவரியம் உடைய கிறிஸ்தவர்களுக்கு (1:9—11;5:1—6). சபையின் அங்கத்தினர்களின் மனப்பான்மை(2:1—9), தலைமைத்துவத்தில் இருப்பவர்களுக்கு(3:1), மற்றும் இருமனமுள்ளவர்களுக்கு (5:19—20) யாக்கோபு தன்னுடைய போதனைகளை விளக்குவதற்கு உயிருள்ள சித்திர மொழியை பயன்படுத்துகிறார். பின்வரும் உதாரணங்களை காண்க: 1:6,11,17,23,26;3:3,வ.7.12;4:14;5:1—2,7.

### பாடம் 37 முதலாம் மற்றும் இரண்டாம் பேதுரு

1 பேதுரு உபத்திரவப்படுத்தப்பட்டதினால் சிதறடிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் ஆகும். ஒரு கட்டுரையை காட்டிலும் மேலாக ஒரு பிரசங்கத்தைப் போல வாசிக்கப்படும் இந்நிருபம் உள்ளத்தில் இருந்து ஜீவனோடு எழுதப்பட்டது. இதின் திறவுகோல் வார்த்தையான “பாடு” என்ற சொல் 15 முறைக்கு மேல் பயன்படுத்தப்பட்டள்ளது.

கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் மகிமையான இரட்சிப்பை குறித்தும் விசுவாசியினுடைய வாழ்க்கை, நிலை மற்றும் கடமைகளை குறித்தும் பேதுரு பேசுகிறார். சமுதாய கடமைகள், நல்ல குடியுரிமைக்குரிய பொதுவான காரியங்கள், விசுவாச குடும்பத்தின் கடமை ஆகியவற்றை விவரிக்கிறர். அவர் கிறிஸ்துவை நம்பிக்கையின் ஆதாரமாகவும்(1:3), பலியான ஆட்குட்டியாகவும் (1:19), மூலைக்கு தலைக்கல்லாகவும்(2:6), பூரணமான முன் மாதிரியாகவும் (2:21), சிறப்பான விதத்தில் பாடுபட்டவராகவும்(2:23), பாவங்களை சுமக்கிறவராகவும்(2:24(, ஆத்மாக்களுக்கு மேய்ப்பராகவும் (2:25), உயர்த்தப்பட்ட தேவனாகவும் (3:12)விளக்குகிறார்.

2 பேதுரு துர்உபதேசங்களுக்கும் பரியாசக்காரர்களுக்கும் எதிரான ஒரு எச்சரிக்கை. தேவனடைய வார்த்தையையும், தெய்வீக வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலின் நிச்சயத்தையும் பெருமளவில் வலியுறுத்துகிறது. 2 தீமோத்தேயுவைப் போல 2 பேதுருவும் முடிவு சமிபமாய் இருக்கிறதென்றும் திருச்சபைக்கு ஆபத்து நிறைந்த நேரம் முன் வைக்கப்ட்டிருக்கிறதென்றும் வலியுறுத்துகிறது.

பேதுருவின் நிருபங்களில் 7 விலையேறப்பெற்ற காரியங்கள் பட்டியல் இடப்பட்டிருக்கின்றன: அக்கினி சோதனை (1:7), கிறிஸ்துவின் இரத்தம் (1:19), ஜீவனுள்ள கல் (2:4), கிறிஸ்து தாமே (2:6), சாந்தமும் அமைதலுள்ள ஆவி (3:4), விசுவாசியின் விசுவாசம் (1:1), மேன்மையான வாக்குதத்தங்கள் (1:4).

### பாடம் 38: முதலாம் இரண்டாம் மூன்றாம் யோவான் மற்றும் யூதா

அப்போஸ்தலனாகிய யோவான் இம்மூன்று நிருபங்களையம் எழுதினார். 1 யோவான்— இதற்கு “நிச்சயங்களின் நிருபம்” என்று தலைப்பிடலாம். இதில் காணப்படும் முக்கியமான வார்த்தைகள்: ஐக்கியம், அறிந்துக் கொள்தல் மற்றும் அன்புகூருதல். விசுவாசிகளுக்கு கிடைக்க கூடிய ஆவிக்குரிய அறிவை அதிகமாக வலியுறுத்துகின்றன. “அறிந்து கொள்ளுதல்” அல்லது அதற்க இணையான வார்த்தைகளை 30 முறைக்கு மேல பயன்படுத்தப்பட்டுள்ளன. மைய கருத்து

1.தேவன் ஜீவனாகவும் ஓளியாகவும் இருக்கிறார் அதி 1.2

2.தேவன் நீதியுள்ளவரும், அன்புள்ளவருமாய் இருக்கிறார். அதி 3,4.

3.உலகத்தோடும், எல்லா பொல்லாத வல்லமையோடும் உள்ள போராடத்தில் ஜெயம் பெறுவதற்குான கொள்கைகள் விசுவாசம் மற்றும் அன்பு. அதி 5.

**2 யோவான்**

துர் உபதேசத்திற்கு எதிராகவும், கள்ள போதகர்களின் ஐக்கியத்திற்கு எதிராகவும் நண்பர்களை எச்சரிக்கும்படி எழுதப்பட்டது (வக 7—11) “அன்ப” என்னும் சொல் 4

முறையும், “சத்தியம்” என்னும் சொல் 5 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**3 யோவான்**

ஒரு திடமான கிறிஸ்தவனும், உபசரிப்புக்கு பெயர்பெற்றவனுமாகிய காயுவுக்கு எழுதப்பட்டது. இந்த நிருபத்தின் காரியம் அவனையும், மற்ற இருவரையும் மையமாக கொண்டிருக்கிறது. அவர்களை சந்திக்கிறபோது யோவான் கடிந்துக் கொள்ளும் தியோத்திரரேப்பு மற்றும் நற்சாட்சி பெற்ற முன் மாதிரியான கிறிஸ்தவனாகிய தேமேத்திரிய.

**யூதா**

இயேசுவுக்கும், யாக்கோபுக்கும் இளைய சகோதரனாகிய யூதாவல் எழுதப்பட்டது. தங்களுடைய கள்ள உபதேசங்களால் பிரிவினை உண்டாக்குகிற “தவறி போன” மனிதர்களால் சபைக்குள்ளே பயமுறுத்தப்படுகிற ஒரு கிறிஸ்தவக் கூட்டத்திற்கு நிருபத்தை யூதா எழுதுகிறார். இப்படிப்பட்ட போதர்களை தடுக்கும்படி அவர்களை திடமுள்ளவர்களாகக்குவதே யூதாவின் நோக்கமாயிருந்தது.

**பாடம் 39—வெளிப்படுத்தின விசேஷம்**

வெளிப்படுத்தின விசேஷம் யோவான் பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்ட போது எழுதிய நிருபம் ஆகும். இது உபத்திர காலத்தில் எழுதப்பட்டது (2:13). மோசம் நேரிட இருந்தது (2:10), ரோம அதிகாரிகளை ஆராதிக்கும் வழக்கத்திற்கு எதிர்த்து நிற்கும்படி கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவசியமாய் காணப்பட்டது.

இப்புத்தகம் புரிந்து கொள்வதற்கு கடினமாக இருக்கிறது. ஆனால் தீமையானவை நியாந்தீர்க்கப்பட்டு கிறிஸ்து தமது நித்திய மகிமையில் ராஜாவாக ஸ்தாபிக்கப்படும்போது அனைத்து தீர்க்க தரிசனங்களின் மாபெரும் நிறைவேறுதலாக சம்பவிக்க போகிற காரியங்களை வர்ணிப்பதினால் இவை மிக மிக முக்கியமானவை. கீழ்ப்படியம் வாசகர்களுக்கு (1:3) ஒரு விசேஷமான வாக்குதத்தத்தை கொடுக்கும் வேதாகமத்தில் உள்ள ஒரே புத்தகம் வெளிப்படுத்தின விசேஷம் ஆகும். மேலும் இதன் பொருளடக்கத்தில் கூடுதலாக நுழைக்கிறவர்களின் மேல் சாபத்தையும் அறிவிக்கிறது. (22:18—19).

**பாடம்: 40 வெளிப்படுத்தின விசேஷத்தின் சுருக்கமான குறிப்பு: புத்தகத்தின் சுருக்க குறிப்பு:**

1.முன்னுரை அதி 1:1—20
2.ஏழு சபைகளுக்கான ஏழு கடிதங்கள் 2:1—3:22
3.பரலோக தரிசனம் 4:1—11
4. 7 முத்திரைகள் 5:1—8:5
5. 7 எக்காளங்கள் 8:6—11:9
6. 7 அடையாளங்கள் 12:2—14:20
7. 7 கலசங்கள் 15:1—16:21
8. அந்தி கிறிஸ்துவின் ஆட்சியும் அழிவும் 17:1—20:15
9. தேவனடைய நகரம் 21:1—22:5
10 முடிவுரை 22:6—21

வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரங்கள் ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களுக்கு முற்றிலும் எதிரான காரியங்களை கொண்டிருக்கிறது.

ஆதியாகமம் சூரியனின் சிருஷ்டிப்பு, உலகத்திற்குள் பாவத்தின் நுழைவு, சாபம் அறிவிக்கப்படுதல், சாத்தானின் வெற்றி மற்றும் “ஜீவ விருட்சத்தை” தவிர ஆகியவற்றை குறித்து பேசுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் சூரியன் தேவைப்படாத ஒரு இடத்தை குறித்து, பாவம் விலக்கப்பட்டதை குறித்தும், சாத்தான் தள்ளப்பட்டதைக் குறித்தும், ஜீவ விருட்சம் அனுமதிக்கப்படுவதை குறித்தும் பேசுகிறது. “ஆகவே கர்த்தராகிய இயேசுவே வாரும்.”